வெளியீடு 6-2-1993 Issued 6-2-1993

817/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 31, 1992-தொகுதி 21 எண். 3

Tuesday, the 31st March 1992 - Volume 21 No. 3


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat,

Madras-600 009

விலை ரூ. 3-00] Price Rs. 3-00

817

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## ஆங்கில வெளியீடு

தொகுதி — 21 எண் — 3

31 மார்ச் 1992

D
V21, 31'M92
M92-21-3

## உள்ளடக்கம்.

31—3—1992.


| | பக்கங்கள். |
|---|---|
| **வினாக்கள்-விடைகள்** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 455—494 |
| **கவன ஈர்ப்பு—** | |
| (அ) கரூர் வட்டம், பள்ளப்பட்டி மருத்துவமனையில் முதுகலைப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் இல்லாதது குறித்து | 494—497 |
| (ஆ) தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் விரல் ஜல்லியை (சுண்ணாம்புக்கல்) எடுப்பதற்குத் தடை இருப்பது குறித்து | 497—501 |
| **அறிக்கை அளித்தல்—** | |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 501 |
| **அறிவிப்பு—** | |
| பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.இ.) | 501—502 |
| **சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)** | |
| பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 | 502 |
| **மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)** | 503—621 |
| (அ) கோரிக்கை எண் 36—பாசனம் | 503—504 |
| (ஆ) கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 504—505 |
| (இ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும். | 505—508 |

| | |
|---|---|
| (க) கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும் | 506—507 |
| (உ) கோரிக்கை எண். 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு | 507—508 |
| (ஊ) கோரிக்கை எண். 56—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 508—509 |
| (எ) கோரிக்கை எண். 57—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 509—510 |
| மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் | 510, 585—612 |
| திரு. எ. ஏகாம்பர ரெட்டி | 510—515 |
| திரு. கே. பி. ராஜு | 515—521 |
| *டாக்டர் தே. குமாரதாஸ் | 521—527 |
| திரு. ஜி. பழனிசாமி | [illegible]—548 |
| *திரு. டி. வேலையா | [illegible]—552 |
| *திரு. ச. புரட்சிமணி | [illegible]—554 |
| திரு. கே. சிங்காரம் | [illegible]54—558 |
| *திரு. எஸ். வி. சண்முகம் | 559—561 |
| திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் | 561—564 |
| *திரு. செ. பெருமாள் | 564—566 |
| திரு. நா. சா. பழனிசாமி | 566—571 |
| திரு. ஆர். ஈஸ்வரன் | 571—576 |
| *திரு. என். ஆர். ராஜேந்திரன் | 576—580 |
| திரு. வெ. நடேசன் பால்ராஜ் | 580—581 |
| திரு. கே. கே. சின்னப்பன் | 581—585 |
| 7. பேரவையில் வைக்கப்பெற்ற ஏடுகள் | [illegible] |


164973

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 18, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு—2023.

1992, மார்ச் 31, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

"பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்".

ஒரு பணியைச் செய்ய முற்படும்போது, அதற்கு வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழிலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தினையும் கருத்திற்கொண்டு எவ்வித ஐயமுமின்றிச் செய்து முடிக்க வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 396. திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு நிதி அமைச்சர்

396—

AIR TRAVEL BY GOVERNMENT OFFICERS.

*1778 THIRU M. SUNDARADOSS :

Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) Whether the Officers of the Government are allowed to travel by Special Classes in the air Services while on tour in this State, in India and Overseas; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்தியாவுக்குள் மட்டும் இத்தகைய பயணங்களில் குறிப்பிட்ட அலுவலர்கள் விசேட வகுப்பில் விமானப் பயணம் மேற்கொள்ளலாம்.

(ஆ) தலைமைச் செயலர், ஆணையர் மற்றும் செயலர் அவர்களுக்கு ஈடான அதிகாரிகள் அரசு செலவில் பயணம் மேற்கொள்ளும்போது இந்தியாவுக்குள் மட்டும் விசேட வகுப்பில் (Executive class) பயணம் செய்யலாம்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நெருக்கடி இந்த அளவுக்கு இருக்கும்போது, டெல்லி போவதற்கோ, அல்லது பாம்பே போன்ற நகரங்களுக்கு போவதற்கோ எக்சிகியூடிவ் கிளாஸ் இல்லாமல், ஆர்டினரி கிளாசாக இருந்தால் நன்றாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்கள் above the rank of Chief Secretary என்று சொல்லுகிறார்கள். எங்களுக்கு முதல் வகுப்புதான் கொடுக்கிறார்கள், 2 டயர் ஏ.சிக்குக் கூட நாங்கள் எலிஜிபிள் இல்லையென்று சொல்லும்போது, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சாதாரண கிளாசில் சென்றால், டெல்லிக்குப் போனால் ஏறத்தாழ 1,200 ரூபாய் குறையும். இதை மனதிற்கொண்டு சாதாரண கிளாசில் போவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகச் சலுகைகள் கொடுப்பது என்கின்ற நிலை வரும்போது வேண்டுமானால் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் கொடுத்த சலுகைகளை எடுக்கும்போது பல்வேறு நிலைமைகளைப் பற்றி நாம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி மத்திய அரசு ஒரு முடிவு செய்து, இதே நிலையில இருக்கிறவர்களுக்கு, ஸ்டாண்டர்டு கிளாசில்தான் போக வேண்டும், எக்சிகியூடிவ் கிளாசில் போகக்கூடாது என்று உத்தரவிடுவார்களானால், அதைப் பின்பற்றி, அதே நிலையில் இருக்கிற நம்முடைய மாநில அதிகாரிகளுக்குப் அதைப் பின்பற்றக்கூடிய வழி ஏற்படும். மத்திய அரசிலே இவர்களுக்கு இணையாக இருக்கும் அதிகாரிகள் எக்சிகியூடிவ் கிளாசிலே போகும்போது, அந்த அளவுக்குத் தாங்கள் போகவில்லை என்றால் தங்களுக்கு மரியாதை இராது என்பது மட்டுமல்லாமல், தங்களுடைய தரமும் குறைத்து மதிப்பிடப்படும் என்று எண்ணுவார்கள். மத்திய அரசு அப்படி ஒரு முடிவெடுக்க வேண்டுமென்ற யோசனை அங்கே இருக்கிறது. அங்கே அந்த உத்தரவு வருமானால், இங்கேயும் நாம் அதைப் பின்பற்றலாம்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்லிமென்ட் உறுப்பினர்கள் எக்சியூட்டி கிளாசில் செல்லுகிறார்கள். அவர்களுடைய நிலைமை வேறு. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 டையர் ஏ.சி.யே எலிஜிபிலிட்டி கிடையாது. நம்முடைய நிதி நிலைமை அந்த அளவுக்கு இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் எக்சிகியூடிவ் கிளாசில் போகிறார்கள், அங்கே இருக்கிற அதிகாரிகளும் எக்சிகியூடிவ் கிளாசில் போகிறார்கள். உண்மைதான்.



நமக்கு அந்த வசதிகள் இல்லை. பண நெருக்கடி இருக்கிற காரணத்தால்தான் பர்ஸ்ட் கிளாசில் சென்று கொண்டிருக்கிறோம், குறிப்பாக முதலமைச்சர் அவர்கள்கூட ஏ.சி. யில்லாமல் வெளியேயிருந்து மக்கள் குறைகளை கேட்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கும் அதிகாரிகள், குறிப்பாக பப்ளிக் அன்டர்டேங்கிங்சில் உள்ள அதிகாரிகள் எல்லாம் டெல்லி சென்றால், ஸ்டார் ஓட்டலில் தங்குகிறார்கள். தமிழ்நாடு ஹவுசுக்கு வருவதில்லை. அமைச்சர்கள் தமிழ்நாடு ஹவுசில் தங்குகிறார்கள். நம்முடைய அதிகாரிகள் ஸ்டார் ஓட்டலில் தங்குவதைப் பார்த்திருக்கிறேன். தாஜ் கோரமண்டல் போன்ற ஓட்டல்களில் தங்கி பல ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்கான பில் போட்டு வாங்குகிறார்கள். இதையெல்லாம் பண நெருக்கடி இருக்கின்ற காலத்தில் கட்டுப்படுத்தி, எல்லோரும் தமிழ்நாடு ஹவுசில் தங்குவதற்கும், எல்லோரும் சாதாரண கிளாசில் போவதற்கும் அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலே குறிப்பிட்டேன். அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் வெளியூரிலே பயணப்படி இவ்வளவு, தினசரிப் படி இவ்வளவு, உணவுப்படி இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாகத்தான் அவர்கள் செலவழிக்க வேண்டுமே தவிர அவர்கள் விருப்பப்படி ஸ்டார் ஓட்டலில் இருந்துகொண்டு, அந்தப் பொறுப்புக்களை எல்லாம் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற சூழ்நிலை இராது. ஆகவே அவர்கள் நம்முடைய தமிழ்நாடு இல்லத்தில் தங்குவார்களானால், அதற்கான விதிகளும் முறைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அது அல்லாமல், வேறு இடத்தில் தங்குவார்களானாலும் கூட, அவர்களுக்கு என்று எவ்வளவு படி ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் படியைத்தான் அவர்கள் வாங்கிக்கொள்ள வேண்டும். சிக்கன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உணர்வு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருப்பதுபோல் இரண்டு மடங்கு எனக்கும் இருக்கிறது என்பதையும், ஆனால் நடைமுறைப்படுத்துகிறபோது சில சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதையும் உணர வேண்டும். அந்தச் சிக்கல்கள் தீர்ந்த நிலையில், மாண்புமிகு உறுப்பினர் மகிழத்தக்க அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.

முற்பகல் 9.35

திரு. வி. சே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்குள்ளும் இந்த மாநிலத் திற்குள்ளும் என்று இருப்பதைப் பார்க்கிறபோது ஏதோ இந்த மாநிலம் இந்தியாவில் இல்லை என்பதைப் போன்ற ஒரு கருத்து தோன்றுகிறது. எனவே, இம்மாநிலத்திற் குள்ளும் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்குள்ளும் என்று இருப்பதுதான் சரியாயிருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. சே. லட்சுமணன் : அதற்கேற்றவாறு மாற்றப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவில், இந்தியா விற்குள்ளும் மாநிலத்திற்குள்ளும் என்று இருக்கிறது. மாநிலத்திற்குள்ளும் என்றால் மாநிலத்திற்குள்ளேயே பயணம் செய்கிறபோது என்பதுதான் அதற்குப் பொருளே தவிர, அது பிரயாணத்தைக் குறிக்கிற சொல்தான். ஆகவே இது கேள்வி இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்; நா[illegible] சொல்கிறபோது இந்தியாவிற்குள் மட்டும் இந்த வகை பயணங்களில் குறிப்பிட்ட அலுவலர்கள் என்று தான் குறிப்பிட்டேன். தலைமைச் செயலாளர், ஆணையர் மற்றும் செயலாளர் போன்றவர்களுக்கு ஈடான அதிகாரிகள் அரசுச் செலவில் பயணம் மேற்கொள்கிறபோது, இந்தியா வில் மட்டும் விசேட வகுப்பில் செல்லலாம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இந்த மாநிலம், பிற மாநிலம் என்று பிரித்துச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞான சேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, இங்கே சில விதிகளுக்குட்பட்டுத்தான் அப்படி செயல்படுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அரசு அதிகாரிகள், குறிப்பாக பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்கள் போன்ற வற்றில் இருப்பவர்கள் ஸ்டார் ஓட்டல்களில்தான் தங்கு கிறார்கள். அவர்கள் விமானங்களில் பயணம் செய்கிற போது. முக்கியமான விஷயம் இருக்கிறபோது வேண்டு மானால் அப்படி பயணம் செய்யலாம், அது இல்லாத



நேரத்தில் அவர்கள் ரயில்தான் செல்லவேண்டு மென்று ஒரு ஆணையை இந்த அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த அதிகாரிகள் எந்தெந்த முறைகளில் பயணம் செய்ய வேண்டுமென்று விதிமுறைகள் சரியாக வகுக்கப்பட்டிருக் கின்றன. நான் முதலிலே குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட இந்த அதிகாரிகள்தான் விமானத்தில் செல்லலாமே தவிர, மற்றவர்கள் எல்லாம் விமானத்தில் செல்ல அனுமதியில்லை. அவர்கள் எல்லாம் ரயிலில்தான் பயணம் செய்யவேண்டும். உதாரணமாக அமைச்சர்கள் போக வேண்டுமென்றால் அமைச்சர்கள் மட்டும் தான் விமானத்தில் போவதற்கு உரியவர்களே தவிர, அவர்களுடைய பி.ஏ.க்கள் கூட, வருகிற அதிகாரிகள் ரயிலில்தான் போகவேண்டும். ரயிலில்தான் திரும்பவேண்டும் என்ற முறைகள் வகுக்கப் பட்டிருக்கின்றன. எக்சிகியூடிவ் கிளாஸ் என்று வெளி நாடுகளுக்குச் செல்லக்கூடிய அளவுக்கு அதிகாரிகளும் மற்றவர்களும் அமைச்சர்களும் பயன்படுத்தி வந்தார்கள். அண்மையில்தான் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் வெளிநாட்டுப் பயணம் மேற் கொள்கிறபோது, செலவு ஏராளமாக ஆகின்ற காரணத்தால், தால், எக்சிகியூடிவ் கிளாசில் போகக்கூடாது, எக்கானமி வகுப்பில்தான் போகவேண்டுமென்று மத்திய அரசைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுப் பயணத்திற்கு அந்த உத்தரவு இப்போது இருக்கிறது. உள்நாட்டுப் பயணத் திற்கு அந்த நிலை வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 397, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

397—

## அரசுப்பணியில் அல்லாத வழக்கறிஞர்கள் இறந்தால் நிதி உதவி அளித்தல்.

*3541—டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசுப் பணியில் அல்லாத வழக்கறிஞர்கள் திடீரென இறந்தால், அவர்களது குடும்பங்களுக்கு நிதி யுதவி அளிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப் படும் ?

[1992 மார்ச் 31

மாண்புமிகு திரு. சே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம். அரசு சில தீர்க்கமான
நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அரசு தீர்க்கமான சில நடவடிக்கை
களை மேற்கொண்டு வருகிறது என்று மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னென்ன
விதங்களில் எல்லாம் உதவி செய்கிறார்கள். பாதிக்கப்
பட்டவர்களுக்கு எந்தவிதமான உதவிகள் அரசு சார்பில்
வழங்கப்பட்டு வருகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பொறுப்பில்
இல்லாத வழக்கறிஞர்கள் திடீரென்று மரித்துவிட்டால்
அவர்களுடைய குடும்பங்களுக்கு இரண்டு வகைகளில்
இரண்டு முறைகளில் இன்றைக்கு நிதியுதவி அரசு செய்து
வருகிறது. ஒன்று, போற்றுதலுக்குரிய முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறபோது, 1987-வது
ஆண்டு தமிழ்நாடு அட்வகேட்ஸ் வெல்பேர் பண்ட்
ஆக்ட் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.
அந்தச் சட்டத்தின்படி ஒருவர் இறந்துவிட்டால், இடை
யில் மரித்துவிட்டால், வழக்கறிஞர்கள் சங்கத்தில் உறுப்
பினராக நான்காண்டுகள் இருந்த ஒருவர் இறந்துவிட்டால்
அவர்களுக்கு ரூ. 30.000 கொடுக்க அதில் முடிவெடுக்கப்
பட்டது. அந்தத் திட்டம் 1991-வது ஆண்டு முதற்
கொண்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் அதிலே சில
திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு பார்
கவுன்சில் கேட்டுக் கொண்டதற்கிணங்க இன்றைக்கு
ஒவ்வொரு வழக்கறிஞரும், வக்காலத்தில் ஒரு ரூபாய்
கட்டி நிதி செலுத்த வேண்டுமென்பதற்குப் பதிலாக
இரண்டு ரூபாயாக அதை ஆக்கி, அந்த ரூ. 30,000-க்கு
பதிலாக ரூ. 60,000 கொடுக்க வேண்டுமென்று அவர்கள்
கேட்டுக் கொண்டதற்கிணங்க இன்றைக்கு அப்படியொரு
சட்டம் கேரளாவில் இருப்பதால் அதை முன்மாதிரியாகக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க
அந்த அடிப்படையில் இந்தக் கூட்டத் தொடரிலேயே
ரூ. 60,000-ஐ அவர்களுக்குக் கொடுக்கின்ற திட்டத்தினை
போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு
வர ஆணையிட்டிருக்கிறார்கள்.



1992 மார்ச் 31]

முற்பகல் 9.40

அடுத்து டில்லியிலே இருக்கின்ற பார் கவுன்சில். அது
1984-வது ஆண்டிலேயிருந்து ஒரு திட்டத்தை அமல்
செய்து வருகிறது. அதாவது ஆண்டு ஒன்றுக்கு ஒரு
வழக்கறிஞர் பத்து ரூபாய் செலுத்திவிட்டால் அந்த
வழக்கறிஞர் மரித்துவிட்டால் அந்தக் குடும்பத்திற்கு
ஐந்தாயிரம் ரூபாயை டில்லியிலே இருக்கிற பார் கவுன்சில்
கொடுக்கும். தமிழ்நாடு பார் கவுன்சில் மூலமாகக்
கொடுக்கும். அதன் மூலம் தமிழ்நாட்டிலேயே இருக்கின்ற
178 வழக்கறிஞர்களுடைய குடும்பங்கள் இதுவரையில்
அந்தத் திட்டத்தினாலே பயன்பெற்றிருக்கின்றன. ஆனால்
தமிழ்நாட்டினுடைய திட்டம் அண்மையிலேதான் ஆரம்
பிக்கப்பட்ட காரணத்தால் அது இது வரையில் வழங்கப்
படவில்லை. ஆனால் அதற்கென நிதி சேர்ந்திருக்கிறது.
14 இலட்சம் ரூபாய் இன்றைக்கு நிதியாக அவர்களுக்குக்
கொடுக்கின்ற வகையிலே சேர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே
20,500 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் இதில்
உறுப்பினர்களாக ஆனவர்கள் 4,500 தான். மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களிடத்திலே
எல்லாம் சொன்னேன் தயவுசெய்து வழக்கறிஞர்களுக்
காக வாதாடுகிறீர்களே, அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 50
ரூபாய்தான் கட்டவேண்டும், பத்து வருடங்களுக்கு
அதிகமாக இருப்பவர்கள் 100 ரூபாய் கட்ட வேண்டும்.
அப்படி கட்டினால்தான் அதனுடைய பயன்வரும் என்று
சொன்னேன். இதுவரையில் 4,500 வழக்கறிஞர்கள்தான்
உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இங்கே 20,500 பேர்
இன்றைக்கு வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். மிகுதி
யாக இருக்கிற வழக்கறிஞர்களும் உறுப்பினர்களானால்,
விரைவிலே சட்டம் வர இருக்கிறது. முப்பதாயிரம்
ரூபாயிலிருந்து அறுபதாயிரம் ரூபாயாக ஆக்க போற்று
தலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்
கிறார்கள். இந்த சட்டமன்றத்திலே 234 உறுப்பினர்களில்
ஏறத்தாழ 60-க்கு மேற்பட்டவர்கள் வழக்கறிஞர்களாக
இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பணியினை செய்ய
வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்
கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அளித்த விளக்கத்திற்கு நன்றி. ஆக சட்டம் போடுகிற
அதே நேரத்தில் இந்த இளநிலை வழக்கறிஞர்கள் எல்லாம்
இதிலே அங்கத்தினர்களாகச் சேரவேண்டும் என்ற நிர்ப்
பந்தத்தையும் சேர்த்து வழங்க அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 22

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 50 ரூபாய்தான் கொடுக்கிற திட்டம். ஐம்பது ரூபாய் கொடுத்தால் அறுபதாயிரம் ரூபாய் வருகிறபோது இதனைக் கட்டாயப்படுத்துவது என்பது, அதுவும் படித்த, கண்ணியம் மிக்க வழக்கறிஞர்களை கட்டாயப்படுத்துவது என்பது உகந்ததல்ல என்பதை நானும் வழக்கறிஞர் என்ற காரணத்தாலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் பணியாற்றுகின்ற காலத்தில் திடீரென்று இறந்துவிட்டால் இந்த நிதி அளிக்கப்படும் என்று கூறினார்கள். செயற்கையாக மரணம் அடைந்தால் இந்த உதவி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இயற்கையாகத் தானே ; இறப்பதிலே என்ன இயற்கையாக, செயற்கையாக? (சிரிப்பு).

திரு. கு. சீனிவாசன் ; அக்சிடென்ட்டில் திடீரென்று இறப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திடீரென்றுதான். இறப்பு இறப்புத்தான்.

வினா எண் 398—திரு. கே. பி. மணிவாசகம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

398—

உடுமலைப்பேட்டை சிறைச்சாலையை விரிவு படுத்துதல்.

* 4772—திரு. கே. பி. மணிவாசகம் ;

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) உடுமலைப்பேட்டை கிளை சிறைச்சாலையை விரிவு படுத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?



1992 மார்ச் 31]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. மணிவாசகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் கூறினார்கள். இருந்த போதிலும், தென்னகத்துனுடைய மான்செஸ்டர் கோவை என்றால், தமிழகத்தினுடைய மான்செஸ்டர் உடுமலைப் பேட்டை எனறே சொல்லலாம். அந்த அளவிற்கு தொழில் வளர்ச்சி மிகுந்த தொகுதி. அங்கே எல்லா கோர்ட்டு களும், சப்-கோர்ட் உட்பட அனைத்து நீதிமன்றங்களும் உள்ளன. ஆனால் சப்-ஜெயிலில் அதிக இட வசதி இல்லாத காரணத்தால், குறிப்பாக பெண் குற்றவாளிகளை தொலைவில் உள்ள கோவைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் அதிக செலவும, அதிக காலமும், நீதி கிடைக்க காலதாமதமும் ஏற்படுகிறது. இதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித அரசு உடுமலைப் பேட்டை சிறைச்சாலையை விரிவுபடுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் உடுமலைப் பேட்டையைச் சேர்ந்தவனதான். எனவே அந்த உடுமலைப் பேட்டை கிளைச் சிறையைப் பற்றி எனக்கு மிக நன்கு தெரியும். நான் படித்த பள்ளி அதன் அருகிலேயே இருக் கிறது. ஆனாலுங்கூட மாண்புமிகு உறுப்பினர் தெரிவித் ததைப் போல அந்தச் சிறைச்சாலையிலே 26 பேர்களை சிறை வைக்கக் கூடிய இட வசதி இருக்கிறது. அதிக மானால் பக்கத்திலே இருக்கிற கோவைக்கு அழைத்துச் செல்லுகிறார்கள். என்றாலுங்கூட அங்கே இருக்கின்ற வசதியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக அண்மையில் நம்முடைய அரசு ரூ. 2,17,000 செலவு செய்திருக்கிறது. இரண்டாவது டாய்லெட் ஃபெசிலிட்டீஸ். அந்த சிறைச் சாலைக்கு சுற்றுச் சுவர் கட்ட 1 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. அதேபோல டாய்லெட் வசதிக்காக 25 ஆயிரம் ரூபாயும் ஆக 2 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் அண்மையிலே உடுமலைப் பேட்டை சப்ஜெயிலுக்கு செய்யப்பட்டு இருக்கிறது. இன்னும் தேவை என்றாலும்கூட, அவசியப்பட்டால் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையோடு செய்யப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 9.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 399. திருமதி ப. சரஸ்வதி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

399—

## வட்ட அலுவலகத்தை மாற்றல்.

* 3372 — திருமதி ப. சரஸ்வதி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாமக்கல் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு பரமத்தி வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் வட்ட அலுவலகம் இன்னும் நாமக்கலில் செயல்படுவதால் அதை பரமத்தி வேலூருக்கு எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பரமத்தி வேலூரில் வருவாய் வட்ட அலுவலகம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. அவை கட்டி முடிந்தவுடன் அலுவலகத்தினுடைய இடம் மாற்றப்படும்.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்க்க வட்ட அலுவலகம் வழங்கிய மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, எந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது, எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, எப்போது கட்டி முடிக்கப்படும், தற்போது தேர்வு செய்துள்ள இடம் மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதா என்பதனை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 42 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அதற்கு வழங்கப்பட்டு இருக்கிறது. மிக விரைவில், 6 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும். பரமத்திக்கும் வேலூருக்கும் இடையிலுள்ள இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறது ; விரைவில் கட்டி முடிக்கப்படும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 400. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

400—

## புதிய தாலுகாக்கள் அமைத்தல்.

*5550— திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .

(அ) எந்தெந்த தாலுகாக்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக அமைக்கப்பட்டன?

(ஆ) மேலும் எந்தெந்த தாலுக்காக்களைப் பிரித்து புதிய தாலுக்காக்கள் உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(இ) எப்போது புதிய தாலுகாக்கள் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பல்லடம் வட்டம் பிரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லிலிருந்து பரமத்தி வேலூர் பிரிக்கப்பட்டு இருக்கிறது. பொதுமக்களினுடைய கோரிக்கைகளை அவ்வப்போது ஆராய்ந்து, அவைகள் நடைமுறைப் படுத்தப்படும்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் 2 மாவட்டங்களை மட்டும சொல்லி முடித்துவிட்டார்கள். அதற்காக ரொம்ப நன்றி. இப்போது தாலுகாக்கள் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தாலுகாவிலும் நீதிமன்றம், அரசு மருத்துவமனை, 'ட்ரெசரி' போன்றவைகள் அனைத்தும் பொதுமக்கள் நலன் கருதி அரசே உடனே செய்துதருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய 'வட்டம்' ஆகப் பிரிக்கப்படும்போது, அங்கே ட்ரெசரி நிச்சயமாக வந்துவிடுகிறது. சில நேரங்களில் காலதாமதம் ஆகிறது. அதேபோலத்தான் மருத்துவமனைகள். அதற்குத் தனி அமைச்சர், தனி இலாகா இருந்தாலும் வட்டம் பிரிக்கப்படுகிற இடங்களில் எல்லாம், பெரும்பாலும் எல்லா

இடங்களிலும் மருத்துவமனைகள் இருக்கின்றன என்று தான் நான் கருதுகிறேன். அது தேவைப்பட்டால் அவ்வப் போது வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி. அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், அந்த நீதிமன்றம், அரசு மருத்துவ மனை, ட்ரெசரி போன்றவைகளில் பணியில் உள்ளவர்களுக்கு குடியிருப்பதற்கு வசதி இல்லாமல் அவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கேள்வி கேட்டு இருக்கிறார்கள். ஆனால், மொத்தமாகச் சொல்ல வேண்டும் என்றால், அரசு அதிகாரிகளுக்கு கூடிய வரையிலும் குடியிருப்புகள் கட்டிக் கொண்டு தான் இருக்கிறோம். பெரும்பாலான அரசு அலுவலர்களுக்கு, அதுவும் பொதுவாக வட்டாட்சியர்கள், கோட்டாட்சியர்கள் —அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக் கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பால கங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பிரிக்கப்படும் தாலுகாக் களுக்கு சாதாரண ''ரிகுயர்மெண்ட்ஸ்' என்னென்ன உள்ளனவோ அத்தகைய தேவைகள் எல்லாம் எங்கள் தொகுதியான சிவகாசி தொகுதியிலே உள்ளன. அங்கே ஏற்கனவே ட்ரெசரி உள்ளது, நீதிமன்றம் உள்ளது, மருத்துவமனை உள்ளது. இத்தனை வசதிகள் இருந்தும், அங்கே அதிக அளவில் ட்ரெசரிக்கு செல்பவர்களும் சிவ காசியிலே தான் உள்ளார்கள். இந்த நிலைமைகள் இருந்தும், ஒருசில காரணங்களுக்காக சாத்தூர் வட்டம் பெரிய வட்டமாக இருந்துகொண்டு சாத்தூருக்குத்தான் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டு இருக் கிறது. எனவே, அது குறித்து, சிவகாசியை தனித் தாலுகாவாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு ஆய்வு செய்யும்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராம சுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தாலுகாவிலிருந்து சங்கராபுரத்தை தனித் தாலுகாவாகப் பிரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகாவை பிரிக்கும்போது தேவைக்கு ஏற்றவாறு மக்களுடைய நலனைப் கருத்திற்கொண்டு வேண்டிய அளவுக்கு பிரிக்கப் படும் என்பதைப் பொதுவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கிக் கொண்டிருக்கிற இரண்டு தாலுகாக்கள்—உதாரணமாக தென்காசி, வி. கே. புதூர் ஆகிய இரண்டு தாலுகாக்கள் தனியாக இயங்கிக் கொண்டிருக்கிற இடத்தில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அவரவர்கள் தொகுதியில் ஏதாவது புதிய தாலுகாக்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கோரிக்கை இருந்து கொண்டுதான் இருக்கும். பேரவைத் தலைவ ருக்கே அப்படி ஒரு கோரிக்கை உண்டு. (சிரிப்பு) எனவே, ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டு இருந்தால் இந்தக் கேள்விக்கே நேரம் சரியாக இருக்கும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : தலைவர் அவர்களே, இது பொதுவான கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கு ஏற்கனவே இதுபற்றித் தெரியும். அதனால் இரண்டு தாலுகாக்களாக இருப்பதால் ஓர்க் பர்டன் அதிகமாக இருக்கிறது. பொதுமக்களுக்கு அது மிகவும் வசதிக் குறைவாக இருப்பதால் மூன்றாகப் பிரித்து— ஏற்கனவே கெசட் நோட்டிபிகேஷன் எல்லாம் கொடுக்கப் பட்டது—ஆலங்குளத்தைத் தனித் தாலுகாவாக இயக்கு வதற்கு அரசு முன்வருமா ? மாண்புமிகு அமைச்சர் அவர் கள் அதற்கு ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 31

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கோரிக்கை விரைவில் நிறை வேறுகிற இடத்தில் இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது பற்றி அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தாலுகாக்களைப் பிரிக்கிறோம். சில குறிப்பிட்ட இடங்களில் நான் தாசில் தார்களுக்கும், ஆர்.டி.ஓ.-க்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. மற்ற இடங்களில் எல்லாம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தாலுகாக்களைப் பிரிக்கும்போது ஏற்கனவே இருக்கிற தாலுகாக்களில் உள்ள அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவது—தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் எப்படி பஞ்சாயத்து யூனியன்களைக் கொண்டு வந்தபோது அங்கெல்லாம் பஞ்சாயத்து யூனியன் ஆபீசர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்களோ, அதைப்போல தாலுகாக்களில் பணியாற்றுகின்ற முக்கியமான அலுவலர் களுக்காவது ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு திட்டம் போட்டு வீடுகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை யெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களை அமைக்கிறபோது பஞ்சாயத்து யூனியன்களில் அலுவலர்கள் எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுத்திருப்ப தாக எனக்குத் தெரியவில்லை. உறுப்பினர் அவர்கள் காமராசர் அவர்கள் காலத்தில் கட்டியதாகச் சொன்னார் கள். எல்லோருக்கும் கட்டிக் கொடுத்ததாக எனக்கு அப்படித் தெரியவில்லை. ஆனால், இதைப் பொறுத்த வரையில் வட்டாட்சியர்களுக்கு மட்டும் இன்று கட்டிக் கொடுக்கப்படுகிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசு யோசித்துக் கொண் டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 401. திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்,



1992 மார்ச் 31]

401—

முக்குலத்தோரை தேவர் இனம் என அறிவித்தல்.

* 4665—திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முக்குலத்தோர் இனங்களான கள்ளர், மறவர், அக முடையார் என்று மூன்று இனத்தவரையும் தேவர் இனம் என அறிவித்து மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேவர் என்பது ஒரு பட்டம்தானே தவிர ஒரு சாதியின் பெயரல்ல ; முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்த கள்ளர், மறவர், அகமுடையார் வகுப்பினர் எல்லோரும் ஒன்றாக இணைந்து முக்குலத்தோரை தேவரினம் என அறிவிக்கும்படி அரசுக்குக் கோரிக்கை வைத்தால் அரசு இதனை நிறைவேற்றும் என இப்பேரவையில் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் அறிவித்துள்ளார்கள். மேலும், இந்தப் பிரிவுகளில் அக முடையார் என்னும் பிரிவினர் முன்னேறிய பிரிவினர் என்று கணக் கிடப்படுவதால் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பிரிவில் சேர்ப்பது குறித்து முடிவெடுப்பதில் சிக்கல் இருப்பதை இரண்டு பிற்பட் டோர் நலக்குழுக்களும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல இதுபோன்ற வினாவுக்கு 18-9-1991 அன்று தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதில் அளிக் கையில் தேவர் என்பது ஒரு பட்டம் தானே தவிர ஒரு சாதியின் பெயரல்ல என்று குறிப்பிட்டு, இந்த மூன்று இனத்தவரும் சேர்ந்து கோரிக்கை வைத்தால் அரசு நிச்சயமாக இதனை நிறைவேற்றும் என்று கூறியுள்ளார். அதன்படி கடந்த 29-10-1991 அன்று மூன்று இனத்தவர்களும் சேர்ந்து அனைத்து சங்கங்களின் கூட் டத்தை மதுரையில் கூட்டி அதன்மூலம் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றி, அரசின் கவனத்திற்கு அதனை அனுப்பியுள்ளார்கள். அந்தக் கருத்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இரண்டு பகுதிகளைக் கொண்ட கேள்வி. கள்ளர், மறவர், அகமுடையார் ஆகிய மூவரை யும் சேர்த்து தேவரினம் என்று அழைக்கப்படுமா என்பது ஒரு

கேள்வி. அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்கப்படுமா என்பது அந்தக் கேள்வியின் மற்றொரு பகுதி. இந்த 3 இனத்தவர்களும் ஒன்றாகச் சேர்ந்து, கோரிக்கை வைத் தால் அரசு அதை ஏற்றுக்கொள்ளும், பரிசீலிக்கும் என்று மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்பொழுது, இந்த 3 பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. ஆகவே, ஒரு அமைப்பு, அப்படிப்பட்ட 3 இனத் தையும் சேர்த்து, ஒரு பெயரிலே அழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த பிற்படுத்தப் பட்டவர்களுக்காக அமைக்கப் பெற்ற இந்தக் குழுவினர், மிக விரிவாக ஆராய்ந்து, சில முடிவுகளை, குறிப்புகளை அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். அப்படி வழங்குகிறபோது, கள்ளர், மறவர் என்கிற பிரிவோடு தங்களைச் சேர்க்கக் கூடாது என்று அகமுடையோர் பிரிவைச் சேர்ந்தவர்கள் பல இடங்களிலே சாட் சியம் அளித்து இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

முற்பகல் 9-55

இன்னும் இதிலே ஒரு முக்கிய நிகழ்ச்சி என்னவென்றால், அவர்களோடு சேர்ந்து நாங்கள் சாட்சியம் அளிக்கமாட்டோம் என்றும் மறுத்திருக்கிறார்கள். அகமுடையோர் என்ற அந்தப் பட்டியலிலே பல பேர்கள், துளுவ வேளாளர் போன்று பல பிரிவு கள், தமிழ்நாட்டினுடைய வடக்கு மாவட்டங்களிலே, அதிலே சேர்ந்திருக்கிறார்கள். மேலும் அகமுடையோர்கள் என்பவர்கள் விவசாயத் தொழிலிலே பெரும்பான்மையாக ஈடுபட்டவர்கள். நீண்டகாலமாக, கள்ளர், மறவர் என்பவர்கள் அப்படிப்பட்ட வர்கள் அல்ல. அவர்கள் அரசர்களிடத்திலே படை வீரர்களாக இருந்து, அதற்குப் பிறகு, அந்தத் தொழில், போனதற்குப் பிறகு அந்த வீர உணர்ச்சிமிக்க அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களைத் தவறான நடவடிக்கைகளிலே ஈடுபட்டதாகக் கூறி குற்றப் பட்டியலிலே வைத்து இருந்தது வெள்ளைக்கார அரசாங்கம். அதற்குப் பிறகு, அந்தக் குற்றப் பட்டியலிலிருந்து, அவர்களை நீக்கியிருக்கிறது. ஆகவே, கள்ளர், மறவர் என்பவர்கள் அக முடையோர்கள் என்பதிலேயிருந்து வேறுபடுகிறார்கள் என்றுதான் திட்டவட்டமாக இங்கே குறிப்புகள் இருக்கின்றன. ஆகவே ஒரு பிரிவைச் சேர்ந்த ஒரு அமைப்பு, தீர்மானம் அனுப்பியிருக்கிறார் கள் என்பது உண்மை. ஆனால், மற்றவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்களா என்பது பிரச்சினை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. கே. ஆர். இராம சாமி அம்பலம்.

<u>திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்</u> : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே மிகப் பின்தங்கிய நிலையிலே இருக்கக்கூடிய இந்த முக்குலத்தோர் சமுதாயத்தை மிக மிகப் பின்தங்கியோர் பட்டியலிலே நீங்கள் சேர்க்க வேண்டும்.





இங்கே அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அகமுடையோர் சமு தாயத்தைச் சேர்ந்தவர்களை அந்தப் பட்டியலிலே சேர்ப்பதற்கு சில பிரச்சினைகள் இருப்பது போலக் கூறினார்கள். ஆனால் கள்ளர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களிலே ஒரு பிரிவின ரைத்தான், சீர்மரபினர் பட்டியலிலே சேர்த்திருக்கிறீர்கள். இன்னும் பாதிக்கு அதிகமானவர்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் மறுபடியும் இதைச் சரியாக பரிசீலனை செய்து, இந்த முக்குலத் தோரை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலேயிருந்து சற்று மாறுபட்ட கேள்வி இது. ஆனாலும் தொடர்புடைய கேள்வி என்பதாலே, இதற்குப் பதில் அளிக்கிறேன். இந்த முக்குலத்தோர் என்கிற பிரிவிலே, பொதுவாக இப்பொழுது சொல்லப்படுகிற கள்ளர், மறவர், அகமுடையோர் என்கிற பிரிவில், கள்ளர், மறவர் என்ப வர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாகவும், சீர்மரபினராகவும் இந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இந்த இரண்டு பிரிவுகளைப் பொறுத்தவரை, இந்த இரண்டாவது பிற்பட்டோர் நலக்குழுவின் அறிக்கையின்படி எடுக்கப்பெற்ற கணக்கு, கள்ளர் 11,68,112 பேர், மறவர் 10,38,807 பேர், அகமுடையோர் 17,41,852 பேர். இந்த கள்ளர், மறவர் என்கிற பிரிவில், அவர்கள் ஒவ்வொரு பகுதியிலே இருக்கிற வாழ்க்கைத் தரத்தையொட்டி, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் சந்தர்வகோட்டை கள்ளர்கள் என்பவர் கள் வாழ்க்கை முறைகளாலே பல காரணங்களினாலே, மிகவும் பின்தங்கியவர்களாக படிப்பிலேயும், சமுதாயத்திலேயும், வாழ்க்கையிலேயும், பொருளாதாரத்திலேயும், ஏழ்மை நிலையி லேயும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களாக , 'டீ-நோட்டிபைட் ' சீர்மரபினர் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தஞ்சையிலே இன்னொரு பகுதியில், அப்படி இருந்தால், அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. அதைப்போல, மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலே அப்படி பிரிக்கப்பட்டு இருக்கிறது. அப்படி பிரிக்கப்பட்டு இருப்பவர்கள் தொகை, மறவர்களைப் பொறுத்த வரையில், 5,29,168. கள்ளர்களைப் பொறுத்தவரையில், 8,00,466. இந்தப் பிரிவிற்குக் காரணமே பல பகுதிகளிலே அவர்கள் அந்தச் சூழ்நிலையிலே வளர்ந்து, மற்றவர்களோடு இணைந்து முன்னேறியிருக்கிறார்கள் என்பதை வைத்துத்தான் இது பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வியை எல்லாம் தீவிரமாகப் பரிசீலித்த பிறகுதான் இந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதையும் எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்கு இருக்கிற காரணத்தினாலே, இதற்குப் பிறகு,—அரசு அதை பரிசீலிப்பதற்குத்தான்—ஒரு குழுவைப் போடுவதைப் பற்றி, அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்று மாண்பு மிகு முதல்வர் அவர்கள் அன்றைக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-00 [1992 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கின்ற போது கள்ளர், மறவர் ஆகிய இந்த இரண்டு வகுப்புகளை மிகப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து இருப்பதாகச் சொன் னார்கள். அதிலேயே மதுரை மாவட்ட மறவர்களுக்கு அந்தச் சலுகை இல்லை என்று கூறப்படுகிறது. கள்ளரிலே கந்தர்வ கோட்டை கள்ளர் தவிர, தஞ்சாவூரிலே இருக்கின்ற கள்ளர்களுக்கு அது கொடுக்கப்படவில்லை. ஆகவே மறவர்களிலே மதுரையில் இருப்பவர்கள், இராமநாதபுரத்திலே சம்பந்தம் செய்கின்ற போது அங்கே இருப்பவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாகவும் இவர்கள் முற்படுத்தப்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கின்றார்களே, இந்த வித்தியாசத்தையாவது அரசு போக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமசுவாமி அவர்கள் கேட்ட கேள்வியையே மீண்டும் மாண்புமிகு ஆண்டித் தேவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதற்குத்தான் இப்போது விரிவாகவே நான் பதில் சொன்னேன். கள்ளர், மறவர் என்கின்ற இந்த இரண்டு பிரிவுகள் எப்படிப் பார்த்து பிரிக் படுகின்றது, அவர்களுடைய சூழ்நிலை என்ன என்பதில் றைக்கு வளர்ந்து வந்திருக்கிற இந்தச் சமுதாயத்தில் கொள்வினை, கொடுப்பினை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பது அவர்கள் பொருளா தாரம் தான். ஜாதி மாத்திரமல்ல. ஒரே ஜாதியிலே கொஞ்சம் வசதி படைத்தவர்களாக வந்துவிட்டால் அவர்கள் தாங்களாகவே மேலே உயர்ந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவைகளை வைத்து கணக்குப் பார்ப்பதிலேதான் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே இந்த இரண்டு குழுக்களுமே— இரண்டு கமிஷன்களுமே—இதைப்பற்றி மிக விரிவாக ஆராய்ந்து இந்தத் தீர்ப்பை—இந்தக் கருத்தை வழங்கியிருக்கிறார்கள். அதை அரசு ஏற்றுக்கொண்டு 1985-ஆம் ஆண்டிலே ஒரு ஆணை பிறப் பித்தது. அதற்குப் பிறகு 1989-ஆம் ஆண்டிலே ஏற்கெனவே நடைமுறையிலிருந்த மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் மற்றும் சீர்மரபினர் பட்டியல்கள் வெளியிடப்பட்டு அத்… யினருக்கு தனியாக 20% இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ஆக… இந்தக் குறைபாடுகள் இப்போது வளர்ந்து வருகின்ற காலத் தில் நமக்குத் தெரிகிறது. ஆகவே இவைகளை ஒட்டித்தான் மறுபரிசீலனை செய்வதற்கு இனிமேல் ஒரு மூன்றாவது குழு அமைக்கப்படுகின்றபோது இவைகள் எல்லாம் கருத்திலே எடுத்துக் கொள்ளப்படும். அன்றைய வளர்ச்சிக்குரிய சூழ்நிலையை ஒட்டி இந்தக் கருத்துக்களிலே முடிவு எடுக்கப்படும். (குறுக்கீடு)



1992 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி. அடுத்து உங்களுடைய கேள்வி இருக்கிறது. (குறுக்கீடு) திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் மறவர்களும், கள்ளர்களும் ராஜாக்களிடம் வேலை பார்த்து வேலை இல்லாததால் வீர உணர்ச்சியில் தவறான வழிகளில் சென்று அதனால் குற்றப் பரம்பரை பட்டியலில் வெள்ளையர்கள் சேர்த்துவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி அல்ல. அரண்மனையில் வேலை செய்தவர்கள் ராஜாக்களுக்குப் பதவிபோன பிற்பாடு இந்த நாட்டு விசுவாசத்தால், ராஜ விசுவாசிகளாக இருந்தவர்களை எல்லாம் வெள்ளைய ஏகாதிபத்தியர்கள் குற்றப் பரம்பரை பட்டியலில் சேர்த்திருக்கிறார்களே தவிர, வேறு அல்ல. ஆகவே இந்தக் குறிப்பு பதிவேட்டில் இருப்பது நாகரிகமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பு இப்போது இல்லை பதிவேட்டில். நீண்டகாலமாக இந்த நாட்டின் வரலாற்றிலே இருக்கிற குறிப்பைத்தான் நான் சொன்னேன். அதனாலேதான் குற்றப் பரம்பரையினர் என்று இருப்பது இன்றைக்கும் இருக்கிறது. இந்தக் குற்றப் பரம்பரையினர் என்று நோட்டீபைடு செய்யப்பட்டு பிறகு டீ-நோட்டீபைடு ஆகி, அவர்களை எல்லாம் சீர் மரபினர் என்று இப்போதும் அந்த பிற்படுத்தப்பட்டவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் வைத்துக்கொண்டுதானே இருக்கிறோம். இந்தச் சீர்மரபினர் யார் என்றால் இவர்கள் எல்லாம் ஒரு காலத்திலே சில தவறுகளைத் தெரிந்தோ, தெரியாமலோ, சூழ்நிலையினாலே செய்தவர்கள் என்பதுதான். அந்த வரலாற்றை யாரும் மறந்துவிட முடியாது. நான் அதனால்தான் எப்படி இந்தச் சீர்மரபினர் வந்தார்கள் என்கின்ற விளக்கத்தைச் சொன்னேன். அரசனிடத்தில் இவர்கள் போர் வீரர்களாக, வீர மறவர்களாக இருந்தவர்கள். இந்த அரசுகள் எல்லாம் போனதற்குப் பிறகு அந்தப் பணி இவர்களுக்குக் கிடைக்காத காரணத்தால், வாழ்க்கையில் இவர்கள் வேறு எந்தத் தொழிலையும் கற்றுக்கொள்ளாமல், அதனாலேதான் இந்த அகமுடையவர்கள் என்பவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் வேறு தொழில்கள் இல்லாத காரணத்தினாலே ஏதோ அந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையில் சில தவறான வழிகளிலே ஈடுபட்டிருக்கக் கூடும். அதை வைத்து வெள்ளைக்காரன், மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி சொல்வதைப் போலவும் செய்திருக்கலாம். இயற்கையாகவும் நடைபெற்றிருக்கலாம். இரண்டும் இப்போது வரலாற்றில் இருக்கின்றன. அந்த வரலாற்றைத்தான் நாம் இப்போது மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 402. திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

402—

சீர்மரபினர்கள் வீடு கட்ட மானியம்.

*4738—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்மரபினர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள மூன்றில் இரண்டு பங்கு செலவுத் தொகையை மானியமாக அரசு வழங்கி வந்த திட்டம் தற்போது கைவிடப்பட்டுவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1981–82 ஆம் ஆண்டிற்குப் பிறகு குறிப்பிட்ட தொகையில் வீடுகள் கட்ட இயலாததால் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. தற்போதுள்ள நிதி நிலையைக் கருத்தில் கொண்டு புதிய திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 403. திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

403—

உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்.

*1340—திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி பனையம்பள்ளியில் ஐந்து ஏக்கர் நிலம் இருந்தும், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையில் /இரண்டாம் பகுதித் திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதி நிலைமைக்கேற்ப கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையம்பள்ளி உயர்நிலைப் பள்ளி எந்த ஆண்டு நடுநிலைப்பள்ளியாக இருந்து உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. இதிலே எவ்வளவு மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். அதிலே இவ்வளவு நாள் கட்டிடம் கட்டப்படாமல் இருந்ததற்கு அரசிடம் வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த பனையம்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி 1-8-1988-ல் துவங்கப்பட்ட பள்ளியாகும். இப்பள்ளியின் மொத்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 252 ஆகும். இப்பள்ளிக்குச் சொந்தமாக 4 ஏக்கர் 29 சென்ட் நிலம் உள்ளது. இப்பள்ளிக்கு என சொந்தமாகக் கட்டிடம் ஏதும் இல்லாத காரணத்தால், இப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டிடத்திலேயே இயங்கி வருகிறது. இதுவரையிலும் கட்டாமல் இருந்ததற்குக் காரணம் பணம் இல்லை என்ற நிலைமைதானே தவிர, வேறு இல்லை. ஆகவே இருக்கிற நிதி நிலைமைக்கு ஏற்ப இந்தப் பனையம்பள்ளியினுடைய கட்டிடத் தேவையை அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அனைத்திந்திய அண்ணா தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. பின்பு தி.மு. கழக ஆட்சி வந்த காரணத்தினால் இந்தப் பள்ளியைக் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். ஆகவே மீண்டும் இப்போது நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் வருகிற 1992–93 ஆம் ஆண்டில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ? அதோடு மட்டுமல்லாமல் இது மிகவும் வறட்சியான பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். குடிநீருக்கேகூட தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிற நிலைமை. அதற்கு வேண்டிய 25 ஆயிரம் ரூபாயைக்கூட நான்தான் பொது மக்களைச் சந்தித்து ஊர். ஊராகச் சென்று 25 ஆயிரம் ரூபாயை வசூல் செய்து கட்டினேன்,

நிலம் வறட்சியாக இருந்தபோதிலும் 5 ஏக்கர் நிலத்தை பொது மக்கள் அவர்களின் சார்பாகக் கொடுத்தார்கள். ஆகவே தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலாவது அந்தப் பள்ளிக்கான கட்டிடம் கட்டுவதற்கு உதவுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் தொகுதி மக்களுமே புரட்சித் தலைவி அவர்களை ஆதரித்து ஓட்டுப்போட்டிருக்கிற காரணத்தால் இருக்கின்ற குறைவான நிதி வசதியை வைத்துக் கொண்டு எல்லாத் தொகுதி மக்களையுமே நாங்கள் திருப்திப் படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த வரை யறைக்கு உள்ளேதான் மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்களின் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டியதாக இருக்கிறது. அவருடைய கோரிக்கை அனுதாபத்திற்கும் பரிசீலனைக்கும் உரிய ஒன்றுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 404. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

404—

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்.

*3125—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி தொகுதியில் குலசேகரன்புதூர், வடக்கு தாமரைக்குளம் ஆகிய இரு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய யங்கள் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி தொகுதியில் குலசேகரன்புதூர், வடக்கு தாமரைக்குளம் ஆகிய இரு இடங்களில் புதியதாக ஆரம்ப சுகா தார நிலையங்கள் துவக்க அரசிடம் ஏதும் செயற்குறிப்பு பரிசீல னையில் இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு தாமரைக்குளம் பகுதியில் இட்டத் தட்ட 8 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஊராட்சி யில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை என்ற காரணத்தினால் சுமார் 8 கிலோ மீட்டர் தாண்டி கொட்டாரம் என்ற ஊரில்



போய் மக்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும் அந்த ஊரில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காக தேவையான இடத்தை மக்கள் அரசுக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார் கள். எனவே இந்த நிதி ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2 ஊரும் சேர்ந்திருக்கிற அகஸ்தீஸ் வரம் என்ற ஊராட்சி ஒன்றியம் ஏறத்தாழ 1 லட்சத்து 26 ஆயிரத்து 800 ஜனத்தொகை கொண்டதாகும். அரசினுடைய கொள்கைப்படி 30 ஆயிரம்பேர் இருக்கக்கூடிய ஒரு ஊருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவில் ஒரு நிலை வைத்திருக் கிறோம். அங்கு ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கிற காரணத்தால் அதிகமாக தேவையில்லை, இது போதும் என்ற வகையிலேதான் இந்த இடத்திலே நான் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. நிதிநிலைமையையும் மனதிலே வைத்து கொண்டு இந்த ஆண்டு இந்த இரண்டையும் எடுத்துக் கொள்ள வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 405. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

405—

அரசுக்குச் சொந்தமான கப்பல்கள்.

*7482— திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமாக கப்பல்கள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், கப்பல்கள் லாபத்தில் இயங்குகின்றனவா அல்லது நஷ்டத்தில் இயங்குகின்றனவா ?

(இ) புதிதாக கப்பல் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான கப்பல்கள் லாபத்தில் இயங்குகின்றன.

(இ) புதிதாக கப்பல் வாங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய் வில் உள்ளது.

முற்பகல் 10-10

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கப்பல்கள் யாவும் லாபத்தில் இயங்குவதாகச் சொன்னார்கள். மொத்தம் எத்தனை கப்பல்கள் இருக்கின்றன ? அதே நேரத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் கப்பல் பேர ஊழல் என்றெல்லாம் இங்கே செய்திகள் நான் பார்த்தேன். படித்தேன். அதுகுறித்து ஏதாவது ஊழல் புகார் இருக்கிறதா ? இருந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு லாபத்தில் ஓடுகிறது என்று கேட்டார்கள். 1989-90ல் ரூ. 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் லாபம் ஈட்டியது. 1990-91ல் ஒப்பற்ற தலைவியான தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் ரூ. 7 கோடியே 86 இலட்சம் லாபம் ஈட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல அங்கே ஊழல் நடைபெற்றிருக்கிறது என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழகத்தில் இருக்கும் கப்பல்கள் எல்லாம் கார்கோ என்று சொல்லப்படுகின்ற சரக்குக் கப்பல்கள் தானா ? அவைகளில் எத்தனை நம் இந்தியாவிற்குள்ளே போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கின்றன ? எத்தனை கப்பல்கள் வெளி நாட்டுக்குப் போகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திலே 3 கப்பல்கள் இருக்கின்றன. மின் சாரத் துறைக்காக நிலக்கரிகளை ஏற்றி வருவதற்காக கூடுதலாக 7 கப்பல்களை வாடகைக்கு நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே மொத்தமாக 10 கப்பல்களை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். வேறு நாட்டிலேயிருந்து மின் துறைக்காக தூத்துக்குடி, சென்னை போன்ற பல்வேறு பகுதிகளுக்கு நிலக்கரியை கொண்டு வந்து இறக்குவதற்காக நாங்கள் அந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். புதிதாக கப்பல்கள் வாங்கப்படுமா என்று சகோதரர் மாண்புமிகு சிங்காரம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு இப்போது 3 கப்பல்களைத் தான் வைத்துக்கொண்டிருக்கிறது, பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தில் 7 கப்பல்களை வாடகைக்கு எடுப்பதால், வாடகை நாள்தோறும்





உயர்ந்து கொண்டிருக்கிற காரணத்தால், இரண்டு கப்பல்கள் 40,000 டன் கொள்ளளவு கொண்ட கப்பல்களை வாங்குவதற்கும் 65,000 டன் கொள்ளளவு கொண்ட கப்பல் ஒன்று-அது தானாக கரிகளை இறக்குவது போன்ற ஆட்டோமேட்டிக் சிஸ்டத்துடன் கூடிய கப்பல் ஒன்றை—வாங்குவதற்கு அரசின் கோப்பு ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 406. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

406—

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடி.

* 2257— டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடித் தொகை 90 நாட்களுக்குள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

தள்ளுபடித் தொகையை துரிதமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டபோதெல்லாம் அதிக நிதி உதவியை ரிபேட்டுக்குக் கொடுத்து எந்த வருடமும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது அரசு 1991-92 ஆம் ஆண்டுக்கு 51 கோடி வழங்கியுள்ளது. அது மட்டுமல்லாமல் 1992-93 ஆம் ஆண்டுக்கு பட்ஜெட்டில் [illegible]2 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த மாதிரி நிதி ஒதுக்கீடு கொடுத்தும் குறிப்பாக இந்த நிதி ஒதுக்கீடு மார்ச் கடைசியில் தான் அதிகமாக பிரைமரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடைக்கிறது. இதனால் ஒவ்வொரு பிரைமரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் வருடத்திற்கு 10 இலட்சத்திற்கு மேல் வட்டியாக பேங்கிற்கு கட்டவேண்டியுள்ளது. ஆகவே தொடர்ந்து

கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை கொடுக்கவும் இந்த
வட்டி விகிதத்தைக் குறைக்கவும் மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்களது அரசு 3 மாதத்திற்கு ஒரு முறை
இந்த ரிபேட் தொகையை கூட்டுறவுச் சங்கங்களுக்கு
கிடைக்க வழிவகை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளுபடி காலங்களில்
அறிவித்த பிறகு சங்கங்கள் கோரிக்கைகளை உரிய முறையில்
தயாரித்து சம்பந்தப்பட்ட கைத்தறி ஆய்வாளர் கோரிக்
களைப் பரிசீலித்து தக்க சான்றிதழ்களோடு உதவி
இயக்குநருக்கு அனுப்பப்படுகின்றன. உதவி இயக்குநர்
அலுவலகத்தில் இக்கோரிக்கைகள் சிலவற்றை நேரடியாகவே
விசாரணை செய்தும் மற்ற கோரிக்கைகளை எல்லாம்
பரிசீலித்தும் அவைகள் இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப
இவைகளுக்கு ஏறத்தாழ 75 நாட்கள் தேவைப்படுகின்றன.
பின்னர் கைத்தறி இயக்குநர்
இவைகளைப் பரிசீலித்து இவ்விரண்டு அலுவலகத்தில்
நாட்கள் தேவைப்படுகின்றன. நடைமுறைக்கு 90
வாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலும் பிரதம நெச
விலையில் மாநில அரசு மத்திய அரசின் பொதுத்துறையின்
யைச் சேர்த்து வழங்குகிறது. தள்ளுபடி பங்குத் தொகை
பட்ட பின்னர் உரிய சான்றுகள் மத்திய மானியம் வழங்கப்
படுகிறது. அதன் பின்னர் மத்திய அரசுக்கு அனுப்ப
பெற்ற பின்னர் அத்தனை அரசினுடைய மானியம்
ஏறத்தாழ 90 நாட்கள் நடவடிக்கைகளும் முடிய
மாண்புமிகு தேவைப்படுகின்றன என்பதை
உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தர
ராஜ், கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இண்டரஸ்டு சப்சிடிக்கு மட்டும்
வருடந்தோறும் 3 கோடி ரூபாய் மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்குகிறார்கள். டாக்டர்
10 கோடி ரூபாய் இண்டரஸ்டு சப்சிடிக்கு ஒதுக்கப்ப
பட்டுள்ளது. ஆகவே இந்த இண்டரஸ்டு சப்சிடி இந்த ஆண்டு
கல்சர் செக்டாருக்கு 4 சதவீத வட்டி கொடுப்பது போல அ
கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த கோ-ஆப்பரேட்டிவ்
வங்கிக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தம் இல்லாத
கேள்வி. தனிக் கேள்வி போடவும். திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.



திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குத் தனியாக கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும்.

வினா எண். 407. திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையிலில்லை.

வினா எண். 408. திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

408—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 257—திருமதி செ. சுந்தராம்பாள் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் தொகுதி நங்கவள்ளி ஒன்றியத்தில் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி மற்றும் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் பூலாம்பட்டியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பாதுகாப்பான குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நங்கவள்ளி ஒன்றியத்திலுள்ள ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி பேரூராட்சி மற்றும் 2,016 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் களப் பணிகள் துவங்கப்படும்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணிகள் தொடங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியிலுள்ள நங்கவள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி ஆதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் மேட்டுப் பாங்கான பகுதியில் இருப்பதால் அங்கே குடிநீர் கிடைக்காமல் மக்கள் பெரிதும் அவதிப் படுகிறார்கள். தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக

விளங்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தங்களுக்கு கூடிய விரைவில் காவிரி நீர் கிடைக்கும் என்று பெண்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எந்த ஆண்டு செயல்படத் தொடங்கும்? எத்தனை ஆண்டுக்குள் திட்டம் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு துவக்குவதற்கு எல்லாவிதமான ஏற்பாடு களையும் செய்து வருகிறது. இந்தத் திட்டம் 1995 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இந்த மேட்டூர் தொகுதி மட்டும் அடங்கிய திட்டமா ? அல்லது இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு—அங்கே ஓமலூரில் ஏரோட்ராம் கட்டப் பட்டு அனேகமாக இந்த ஆண்டே திறக்கப்பட இருக் கிறது. எனவே, இந்தத் திட்டம் ஓமலூர் தொகுதி, தாரமங்கலம் தொகுதி, மேட்டூர் தொகுதி அடக்கிய திட்டமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல இந்தத் திட்டத்தை ஓமலூர் பகுதிக்கும் விஸ்தரித்து ஆய்வு நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 409, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

409—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*3772—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதி, சிக்கதாசம்பாளையம் பஞ்சாயத்து கரட்டுமேடு பகுதியை மையப்பகுதியாக





வைத்து ஆறு கிராமப் பஞ்சாயத்துகளுக்கு பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிக்கதாசம்பாளையம் ஊராட்சி மற்றும் 16 ஊராட்சி களுக்கு குடிநீர் வழங்குவதற்குரிய திட்டம் திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதலுக்குப் பின்னர் களப் பணிகள் துவக்கப் படும்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத் தினுடைய பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாது காக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் இல்லாத என்னுடைய தொகுதியிலுள்ள இரும்பறை, மூடுதுறை, இருப்பு நத்தம் ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க ஜீவநதியான பவானி என் தொகுதியின் வழியாகச் செல்வதால் இந்த வருடம் மேற்கொள்ள் இருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா, நீங்கள் கேட்டு இருப்பது சிக்கதாசம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்தான். மற்ற ஊர்கள் அதில் வருகிறதா ? (குறுக்கீடு) உங்கள் தொகுதியில் இருக்கலாம். இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அந்த ஊர்கள் வரு கிறதா ? (குறுக்கீடு) அப்படி இல்லை என்றால் அமைச்ச ரிடம் பதில் இருக்காது. இந்த சிக்கதாசம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைந்த ஊர்களாக இருந் தால் அமைச்சரிடம் பதில் இருக்கும்.

செல்வி எல். சுலோசனா : அரசு இந்த வருடம் மேற் கொள்ள இருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியில் மேற்படி கிராமங்களைச் சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமங்களை இந்தத் திட்டத்தில் சேர்ப்பதற்கு இயலவில்லை என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 410, திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

410—

ஆத்தூரில் தொழில் பயிற்சி நிலையம்.

* 4871—திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.ஆர்.டி.பி., ஐ.யு.டி.பி., மூலமாக கடன் வழங்கி தொழில் நடத்த ஒவ்வொரு தொகுதியிலும் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒரு தாலுகா வாக இருப்பதால் அங்கு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தற்போது திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. மற்றும் ஐ.யு.டி.பி., மூலம் கடன் பெற வசதி இருப்பினும் தொழிற் பயிற்சி பெற எங்கள் ஆத்தூர் பகுதியில் வசதி இல்லாததால் தொழில் துவங்க ஆர்வம் உள்ளவர்கள்கூட முன்வரத் தயங்குகிறார்கள். மேலும் ஆத்தூர் பகுதியில் 200-க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைகளும் மற்றும் விவசாயிகள் பயன்படுத்தும் டிராக்டர்களும், லாரிகளும் அதிக அளவில் உள்ளதால் அந்தப் பகுதியில் இது தொடர்பான தொழிற் பயிற்சி கல்வி பெற அவசியத் தேவையாக இருப்பதால், தனியார்களாவது துவங்க அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பிலே ஒரு தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், தொடரா இனச் செலவாக 55 இலட்சம் ரூபாயும் தொடரினச் செலவாக 5 இலட்சம் ரூபாயும் ஆக, 60 இலட்சம் ரூபாய் செலவாகும். அரசினுடைய நிதிநிலையைக் கருத்திலே கொண்டு, இப்போது அரசின் சார்பிலே தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கிற கருத்துரு எதுவும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தனியார் துறையிலே ஆரம்பிக்க வேண்டுமென்றால், இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு பரிசீலித்து முடிவினைப் பின்னர் அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 411. திரு. எம். கே. பாலன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

411—

தாடண்டர் நகர் அருகிலுள்ள குடிசை வாழ் மக்களுக்கு மாற்று இடம் ஒதுக்குதல்.

*4382—திரு. எம். கே. பாலன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதாப்பேட்டை கால்வாய் ஓரம் தாடண்டர் நகர் பக்கத்தில் உள்ள குடிசைப் பகுதிகளை அகற்றி, அவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆற்றோரங்களில் வாழும் குடிசைப்பகுதி மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்தும் திட்டத்திற்கு மான்யம் கோரி மைய அரசுக்கு பிரேரணை அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டம் மைய அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் ஒப்புதல் கிடைக்கப்பெற்று நிறைவேற்றப்படும் தருவாயில், சைதாப்பேட்டை கால்வாய் தாடண்டர் நகர் அருகில் அமைந்துள்ள குடிசைப் பகுதி மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கால்வாய் ஓரமாக அமைந்து இருக்கின்ற குடிசைப் பகுதிகளின்

உள்ளவர்கள் புரட்சித் தலைவியின்மீது அன்பு கொண்டவர்களாக இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு வீட்டிலும் என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி யினுடைய படங்களை நான் தேர்தல் நேரத்திலே பார்த்த காரணத்தால், அங்கே வாழ்கின்ற மக்களுக்கு சாலை வசதி, விளக்கு வசதி, ரோடு வசதி, கக்கூஸ் மற்றும் பாத்ரூம் வசதி போன்ற எந்த வசதியும் இல்லாமல் கஷ்டமான சூழ்நிலையிலே அவர்கள் அங்கே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு என்னுடைய தொகுதியில்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எம். கே. பாலன், நீங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களிடம் கேட்க வேண்டிய கேள்வியை இந்த அமைச்சரிடம் கேட்கக் கூடாது. நீங்கள் இங்கே கேட்டிருப்பது, குடிசைப் பகுதிகளை அகற்றி மாற்று இடம் ஒதுக்கப்படுமா என்பது தான். லைட் வசதி மற்ற வசதிகள் செய்யவேண்டியது எல்லாம் நீங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டியது.

<u>திரு. எம். கே. பாலன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க முடியாத அந்த இடத்திலே குடிசைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகையால் அந்த இடத்திலே மிகப் பெரிய தீ விபத்து 26-7-1991 அன்று ஏற்பட்ட காரணத் தால் 36 வீடுகள் எரிந்து சாம்பல் ஆயின. அந்த இடம் நான்கு பக்கங்களுக்கும் ஓடி தப்பிக்க முடியாத இடமாக இருக்கின்ற காரணத்தால், ஒரு பெண் குழந்தை இறந்து விட்டது. ஒரு வயதான பாட்டிக்குக்கூட அதிக காயம் ஏற்பட்டது. ஆகையால் அந்த பகுதியிலே வாழ்ந்த கொண்டி ருக்கிற குடிசை மக்களுக்கு என்னுடைய தொகுதியிலே கட்டிக் கொண்டிருக்கிற, வெங்கடாபுரத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மற்ற எல்லா அமைச்சர்களுக்கும் கேள்வி கேட்டுவிட்டு கடைசியிலே இவருக்கு கேள்வி என்பதையே நீங்கள் விட்டு வைக்கவில்லை.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரை எந்த ஒரு சாலகட்டத்திலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களுடைய பெயரிலே கொண்டிருக்கிற அன்பின் காரணத் தாலும் பாசத்தின் காரணத்தாலும் சென்னையில் இருக் கின்ற அத்தனை தொகுதிகளிலும் வெற்றி பெறக்கூடிய



நிலைமையை உருவாக்கித் தந்தவர்கள் அந்த ஏழையெளிய மக்கள். அந்த அடிப்படையிலே போற்றுதலுக்குரிய முதல்வர் அவர்களுடைய அரசு ஆட்சேபனைக்குரிய பகுதி என்று எடுத்துக்கொண்டு சுமார் 55 ஆயிரம் குடும்பங்கள் மாற்று இடங்களில் குடியமர்த்தப்படவேண்டுமென்று வாரி யத்திற்கு பிரேரணை அனுப்பியிருக்கிறது. அந்த வகையிலே 37,879 குடும்பங்களை பள்ளிக்கரணை, எழில் நகர், இளங்கோ நகர் மற்றும் கொரட்டூர் ஆகிய பகுதிகளில் ரூபாய் 56 கோடியே 88 இலட்சம் செலவிலே, திட்ட மதிப்பீட்டிலே மேம்படுத்தப்பட்ட மனைகளில் அவர்களைக் குடியமர்த்துவதற்காக மத்திய அரசு மற்றும் மாநில அரசு மானிய உதவிகளுடனும் அட்கோ கடன் உதவியுடனும் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதம் உள்ள குடும்பங்களுக்குத் தேவையான மாற்று இடம் தேர்ந்தெடுக்க குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை யெடுத்து வருகிறது. மேற்காணும் செயற்குறிப்பு மத்திய அரசில் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, குடும்பம் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வீதம் ரூபாய் 15 கோடியே 15 இலட்சம் மானியம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளபட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்து, மானியம் கிடைத்தவுடன் சைதாப்பேட்டை கால்வாய் ஓரம் தாடண்டர்நகர் ஓரம் அமைந்துள்ள குடிசைப் பகுதி மாற்று இடங்களில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

<u>திரு. எம். கே பாலன்:</u> மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலே குடிசை மாற்று வாரிய வீடுகள் வெங்கடாபுரத்திலே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய தொகுதியிலே வாழ்ந்து கொண்டு இருக்கிற குடிசைப் பகுதி மக்களுக்கு இந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற குடிசை மக்களுக்கு அங்கே மாற்றிக் கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை அரசினுடைய செயற்குறிப்பில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண். 412, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

[1992 மார்ச் 31

412—

## கல்வித் தகுதியுள்ள பிறவிக் குருடர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு.

*1336—டாக்டர் சு. மணிமேகலை;
மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா:

கணவன் மனைவி இருவருமே பிறவிக் குருடர்களாக
இருந்து கல்வித் தகுதியும் பெற்றிருப்பார்களேயானால்
அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பளிக்க முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே ஒரு சதவீத இட ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது,

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத
தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது
என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள்.
ஆமெனில், எத்தனை பிறவிக் குருடர்கள் இதுவரை வேலை
வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள். அதில்
எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.
எந்தெந்த துறைகளில் பிறவிக் குருடர்களுக்கு முன்னுரிமை
அளிக்கப்பட்டிருக்கிறது ஊனமுற்றவர்களுக்கென தனியாக
இட ஒதுக்கீடு செய்துள்ள அரசு, பிறவிக் குருடர்களுக்கென தனி
இட ஒதுக்கீடு செய்துள்ளதா என மாண்புமிகு அமைச்சரவர்கள்
அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, பிறவிக் குருடர்களுக்காக ஒரு
சதவித இட ஒதுக்கீட்டை அரசு செய்திருக்கிறது. வேலைவாய்ப்பு
அலுவலகத்தில் இதுவரை 2,850 பேர் பதிவு செய்து வைத்திருக்
கிறார்கள். அதில் 1990 இலிருந்து 1991 வரை 43 பேருக்கு,
பார்வை அற்றவர்கள் 43 பேர் காது கேளாதோர் 79 பேர், கை
கால் ஊனமுற்றோர் 1,354 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்
பட்டிருக்கிறது. இதில் ஏறக்குறைய 484 பேர் மாண்புமிகு தமிழக
முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றதற்குப்
பின்னால் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைத்
தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, சமூகத்தில் இருக்கிற கண்பார்வையற்றவர்கள்
எத்தனை பேர், கண்பார்வையற்றவர்களுக்காக இருக்கின்ற
பள்ளிகள் எத்தனை என்பதை அமைச்சர் மூலமாக அறிய
விரும்புகிறேன்.



1992 மார்ச் 31]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் பார்வையற்றவர்கள்
1.92 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இதில் அரசு நடத்துகின்ற
பள்ளிகள் 11, அரசினால் உதவி பெற்று நடத்தப்படுகின்ற
பள்ளிகள் 15 என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பிறவியிலே கண் பார்வையற்றவர்கள் மிகவும் பரிதாபத்
திற்கு உரியவர்கள். ஆகவே, அவர்கள் மீது கருணைகூர்ந்து எந்த
வொரு பதவியாக இருந்தாலும் அல்லது எந்தவொரு வேகன்சியாக
இருந்தாலும் அந்த வேலையை அவர்கள் செய்ய முடியும் என்கின்ற
ஒரு சூழ்நிலை இருக்குமேயானால் அந்தக் குருடர்களுக்கு முன்னு
ரிமை வழங்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய
அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்கு பின்னால் வேலை வாய்ப்பில்
இந்தக் கண் பார்வையற்றவர்கள் போட்டிக்கு வருவார்கள் என்று
சொன்னால் முதல் முன்னுரிமையை அவர்களாலே செய்யக் கூடிய
பணிகளாக இருந்தால் அவர்களுக்குத்தான் வழங்க வேண்டு
மென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கணவன், மனைவி இருவரில் ஒருவர் குருடராக இருந்து
கல்வித் தகுதி இருந்தால், குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு
வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த ஒரு வருடத்திற்குள்
அரசு வேலை கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, கண்பார்வை அற்றவர்களில்
கணவன்' மனைவி இருவரில் ஒருவர் திருமணத்தின்போது
கண் பார்வை அற்றவர்களாக இருந்தால் அரசு அவர்களுக்குத்
திருமண உதவித் தொகையாக 500 ரூபாயும், ஆண்டு தேசிய
சேமிப்புப் பத்திரம் ரூ. 5,500ம் பாராட்டுப் பத்திரமும்
அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதேபோல வேலை
அலுவலகங்களின் மூலமாகப் பதிவு செய்து, அவர்கள் அந்தத்
தேர்வுக்குச் செல்கிறபோது, அப்படிப்பட்டவர்கள் செய்யக்கூடிய

வேலை எதுவாக இருந்தாலும், அவர்கள் அந்தப் பணிக்குச் சரியானவர்களாக இருந்தால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம், பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 413, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

413—

பச்சைமலையில் பெரும் பழப் பண்ணை அமைத்தல்

*5564.—திரு. கே. கந்தசாமி :
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், பச்சை மலையில் பெரும் பழப் பண்ணை (Giant Orchard) அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் தொகுதியில் உள்ள பச்சைமலையில் அரசுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அதிக அளவில் பழங்கள் விளைவிக்கவும் மலைவாழ் மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் விளைவிக்கும் பழங்களை பெரும் பழப் பண்ணையில் விற்பதற்கும், அதே சமயம் அவர்களுக்கு நல்ல விலையும் கிடைக்க வாய்ப்பு இருப்பதால், பச்சைமலையில், அடுத்த நிதி ஆண்டிலாவது பெரும் பழப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, 1992—97-ல் ரூ. 55 இலட்சம் தேவை என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போது அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 414, திரு. வி. பி. சந்திரசேகர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

414—

கஞ்சம்பட்டியில் கால்நடை மருத்துவமனை

*6135—திரு. வி.பி. சந்திரசேகர் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, கஞ்சம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொள்ளாச்சித் தொகுதியிலே, பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கஞ்சம்பட்டியில், அதைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்துமே, விவசாயிகள் நிறைந்த பகுதி. அங்கே கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. அந்தக் கால்நடைகள் நோய் வாய்ப்படுகிறபோது, அவற்றை பொள்ளாச்சிக்கோ, உடுமலைப் பேட்டைக்கோ கொண்டு செல்கிற நிலை இருக்கிற காரணத்தினால், கஞ்சம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம், கஞ்சம்பட்டி கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகின்றது. கால்நடை மருந்தகத்திற்குத் தினந்தோறும் சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, பொதுவாக கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவ மனைகளாக உயர்த்தப்படுகிறது. அப்படி, கஞ்சம்பட்டி கிராமத்தில், சிகிச்சை பெறும் கால்நடைகளின் எண்ணிக்கை, நாற்பதுக்கும்

குறைவாக உள்ளதால், தற்போது அதனைக் கால்நடை மருத்துவ மனையாகத் தரம் உயர்த்தும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆண்டுக்காலமாக கஞ்சம்பட்டி கிராமத்தில் ஒரு மருந்தகம் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு எனக்குக் கிடைத்த தகவலின்படி, தினமும் அங்கே ஐம்பதுக்கும் மேற்பட்ட கால்நடைகள் அந்த மருந்தகத்திலே வந்து பயனடைந்து செல்கின்றன. அப்படி இருக்கும்போது அந்த நிலையை மாற்றி, அந்தப் பகுதிக்கு அதை மருத்துவ மனையாக மாற்றுகிற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனி வருங்காலங்களில், தினந்தோறும் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், கஞ்சம்பட்டி மருந்தகத்தை, கால்நடை மருத்துவ மனையாகத் தரம் உயர்த்துவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 415 திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

415—

## நகர்ப்புற மீனவர்களின் கடன் தள்ளுபடி

*4360—திரு. எஸ். டேனியல்ராஜ்.:

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிராமப்புற மீனவர்களின் கடன்கள் தள்ளுபடி செய்யப் பட்டதுபோல் நகர்ப்புற மீனவர்களின் கடன் தள்ளுபடி செய் வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீனவர்களின் காவல் தெய்வமாக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில், மீனவர்களின் துயர் அறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டபோது, கிராமப்புற மீனவர்களையும் அந்தப் பட்டியலிலே சேர்த்து, அவர்களுடைய கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதேபோன்று, நகரத்திலே வாழ்கின்ற



மீனவர்களையும், அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை யிலிருந்து, 10 ஆயிரம் ரூபாயாவது கடன் தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கிராமப்புற மீனவர்களுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதைப் போல, நகர்ப்புற மீன வர்களின் கடன்களையும், மீனவர்களின் துயர் அறிந்து, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று குறிப்பிட்டிருந்தேன். அதுவே போதுமென்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. குப்பன்.

திரு. க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1960-ஆம் ஆண்டு முதல் குறிப்பாக 500 ரூபாய் அன்றைக்குக் கடன் வாங்கியவர்கள், 1992-ஆம் ஆண்டுவரை. . . . . . .

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடன் தள்ளுபடி பரி சீலிக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டார். அது வேண்டாம் என்பதற்குக் கேள்வி கேட்கப் போகிறீர்களா? நகர்ப்புற மீன வர்களுடைய கடனையும் தள்ளுபடி செய்ய இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். அதிலே வேறு ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால் கேளுங்கள்.

திரு. க. குப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடனும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப் படுகிறது என்று சொல்கிறாரே தவிர அந்தக் கடனுக்குக் கடன் வட்டியாக. இது வரை 500 ரூபாய்க்கு 5,000-க்கு மேல் கட்டி இன்றைக்கு மீனவர்கள் கடன்காரர்களாக இருந்து வருகிறார்கள். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிலே, அவர்களுக்குக் கடன் இருக்கின்றபடியால் எந்தத் தொகையையும் பெறமுடியாது இருக்கிறார்கள் என்பதை நான் மெத்தப் பணிவோடு மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருக்கின்ற காரணத்தால் கேட்கிறேன். அந்தச் சங்கங்களில் இதுவரையில் கடன் இருக்கிறது, கடன் இருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டிருக்கி றார்கள். இன்றைக்கு அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய பரிசீலனை செய்வதாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயாவது இதற்கு ஒரு நல்ல முடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு நல்ல முடிவை எதிர்பார்க்கிறார்கள். நிச்சயமாக ஒரு நல்ல முடிவைத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரைவிலே எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, சென்னையைப் பொறுத்தவரை, 16 மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் நிவாரணம் ரூ. 19,32,365.30 காசு ஆகும். அது தேவையென மத்திய கூட்டுறவு வங்கியும், சென்னை மண்டல மீன்துறை உதவி இயக்குநர், ரூ. 25,68,747.11 காசு கடன் நிவாரணம் தேவையெனவும், ஆக மொத்தம் ரூ. 45,01,112.41 தேவை எனக் கோரியுள்ளார். பொதுவாக, மீனவர்கள் வாங்கிய கடன்கள் என்று குறிப்பிடும் போது, மீனவர்கள் வாங்கிய வலை, இயந்திர சாதனங்கள், விசைப் படகுகள் பெறுவதற்காகப் பெற்ற கடன்கள் இதில் அடங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

407—

சிவகிரியில் அரசு நூற்பாலை.

*3362 திருமதி கவி நிலவு தர்மராஜ்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா? :

நெசவாளர்களை அதிகம் கொண்ட மொடக்குறிச்சி தொகுதி சிவகிரியில் ஓர் அரசு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகிரியில் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கும் கருத்து ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்ததால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. கவன ஈர்ப்பு

(அ) கரூர் வட்டம், பள்ளப்பட்டி மருத்துவமனையில் முதுகலைப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் இல்லாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.



திருமதி கே. மரியம்உல் ஆசியா கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திருமதி கே. மரியம்உல் ஆசியா.

திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''கரூர் வட்டம், பள்ளப்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் முதுகலைப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் இல்லாதது குறித்து'' மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை

கரூர் வட்ட பள்ளப்பட்டியில் உள்ள அரசு பொது மருத்துவ மனைக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர் பணியிடங்கள் மூன்று. அதில் இரண்டு பெண் மருத்துவரும், ஒரு ஆண் மருத்துவரும் பணிபுரிந்து வருகின்றார்கள். ஆண் மருத்துவர் கண் சிகிச்சையியலில் பட்டயப் படிப்பு படித்தவர். இம்மூன்று மருத்துவர்கள் தவிர, குழந்தை சிகிச்சையியல் பட்டயப் படிப்பு படித்த ஒரு ஆண் மருத்துவர் ஒதுக்குப் பணியில் (Reserve Duty) பணிபுரிந்து வருகின்றார்.

எனவே, அம்மருத்துவ மனையில் சிறப்பியல் முதுகலைப் பட்டயப் படிப்பு படித்த இருவர் பணிபுரிந்து வருவதால், தற்போது அங்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் ஏதும் இல்லை.

திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளப்பட்டியில் இருக்கின்ற ஹாஜி வாக்ஃப் அரசு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. அரவக்குறிச்சி தொகுதி முழுவதற்கும் இந்த அரசு மருத்துவ மனைதான் இருக்கின்றது. மேலும் இந்த அரசு மருத்துவ மனைக்கு அருகில் உள்ள அரவக்குறிச்சி பகுதியிலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள 84 கிராமங்களில் இருந்தும் மக்கள் சிகிச்சைக்காக வருகின்றார்கள் [illegible]8-ல் இரண்டு ஆப்பரேஷன் தியேட்டர்களும், அதனுடன் இணைந்த ஸ்டெர்லைசேஷன் ப்ரிபரேட்டரி ரூம் ஒன்றும் திறக்கப்பட்டது. அப்படித் திறக்கப்பட்டும் அவைகள் இன்றுவரையில் பயன்படுத்தாமல் இருக்கின்றன. காரணம், அங்கு அறுவை சிகிச்சைக்காகத் தனி மருத்துவர்கள் இல்லை மேலும், டி. ஜி. ஓ. படித்த மருத்துவர்கள் இல்லை. அதன்

காரணமாக அங்குள்ள மக்கள் அறுவை சிகிச்சைக்காக கரூர் அல்லது திண்டுக்கல்லுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இத்தகைய ஒரு பிரிவு திறக்கப்பட்டும் இன்றுவரை தகுந்த டாக்டர்கள் இல்லாத காரணத்தால் அவைகள் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன......

__மாண்புமிகு பேரவைத் தலைவர் ;__ கேள்வியாகக் கேளுங்கள்.

__திருமதி கே. மரியம்உல் ஆசியா:__ எனவே, அதற்குத் தகுந்த, மருத்துவர்களை அமர்த்த வேண்டும் என்றும், மேலும் அரசு மருத்துவமனையைச் சுற்றி மதில் சுவர் இல்லாததால் ஆடு மாடு, பன்றிகளின் தொல்லைகள் அங்கே அதிகமாக இருக்கின்றன. அதனைத் தடுப்பதற்கு அங்கு மதிற்சுவர் எழுப்ப, வேண்டும் என்றும், மேலும் அங்கே 20 படுக்கைகள்தான் இருக்கின்றன. அந்த 20 படுக்கைகள் போதவில்லை....

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ உங்களுடைய உரையே போதும் என்று நினைக்கிறீர்களா அல்லது பதில் வேண்டும் என்று நினைக்கிறீர்களா? உங்கள் உரையே போதும் என்று நினைத்தால் உட்காருங்கள். பதில் வேண்டுமென்றால் கேள்வி கேளுங்கள்.

__திருமதி கே. மரியம்உல் ஆசியா :__ ஆகவே, அங்கு 40 படுக்கையாக அதிகரிக்க வேண்டும் என்றும், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்ய முன்வருவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

__மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 4 மருத்துவர்கள் இருக்கிறார்கள். 32 படுக்கைகள் இருப்பதாக எனக்குத் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். 32 படுக்கைகளுக்கு 4 மருத்துவர்கள் போதும். அங்கே இருக்கின்ற பிரச்சினையே தியேட்டர் இருக்கிறது. அங்கே சர்ஜன் இல்லை என்ற நிலையைச் சொல்லியிருக்கிறார்கள், ஏற்கனவே, அங்கே கண் சிகிச்சை பிரிவிலே பட்டம் பெற்ற பட்டயப் படிப்பு பெற்றவர் ஒருவரும், குழந்தைகள் மருத்துவத்திலே பட்டயப் படிப்பு பெற்ற ஒருவர் அங்கே பணியாற்றுகிறார்கள், இருந்தாலும் அந்த தியேட்டரைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு மருத்துவர்கள் அங்கே நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சுவரைப் பொறுத்தவரையில், அங்கே அந்த மருத்துவ மனையினுடைய மேம்பாட்டிற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதன் மூலமாகக் கட்டித் தருவதாக்



எங்களுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும்கூட அவர்களோடு பேசி விரைவாக அந்தச் சுற்றுப்புறச் சுவரைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கத்தினுடைய நிதிநிலையைக் கருதி சுற்றுப் புறச் சுவர்களுக்கு அரசாங்கம் செலவழிப்பது என்பது கடினம் என்பதை ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். படுக்கைகள் 32 ஆக இருக்கின்ற காரணத்தினால், வட்ட மருத்துவமனை மற்றும் நான்-தாலுகா ஹாஸ்பிடலிலே 32 படுக்கைகள் என்ற கொள்கை நியதியிலே வைத்திருக்கிறோம். எனவே அது போதும் என்று கருதுகிறேன்.

__(ஆ) தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் விரல் ஜல்லியை (சுண்ணாம்புக்கல்) எடுப்பதற்குத் தடை இருப்பது குறித்து.__

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். டேனியல்ராஜ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். டேனியல்ராஜ்.

__திரு. எஸ். டேனியல்ராஜ் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் இருக்கும் விரல் ஜல்லிய (சுண்ணாம்புக்கல்) எடுப்பதற்கு அரசு தடை செய்துள்ளது குறித்து'' மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

__மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

__அறிக்கை__

மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள 21 தீவுகளில் 17 தீவுகள் இராமநாதபுரம் மாவட்டத்திலும், 4 தீவுகள் சிதம்பரனார் மாவட்டத்திலும் அமைந்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 17 தீவுகளில் வெகு நீண்ட காலமாகவே பவழப்பாறை அகழ்ந்தெடுத்து செல்வது அனுமதிக்கப்படுவதில்லை. இத்தீவுகளில் சிறந்த தாவர வகைகள் உள்ளதாலும், பவழப்பாறைகள் நன்கு அமைந்துள்ளதாலும், கடல் அலைகளினால் இத்தீவுகளில் மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. ஆனால் சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடி கடலோர எல்லையில் அமைந்துள்ள 4 தீவுகளில் உள்ள பெரிய தொழில்

நிறுவனங்களான ஸ்பிக், தமிழ்நாடு ஆல்கலி கெமிக்கல்ஸ், சன்
பேப்பர் மில்ஸ் மற்றும் சங்கர் சிமெண்ட் ஆகிய நிறுவனங்
களின் ஆதரவினால், பவழப்பாறைகள் வெகுகாலமாகவே
எந்தவித கட்டுப்பாடுமின்றி அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.
இந்த 21 தீவுகளில் உள்ள சுற்றுச் சூழல் பாதுகாக்கப்
பட வேண்டியதின் அத்தியாவசியத்தை மத்திய, மாநில
அரசுகள் உணர்ந்து மன்னார் வளைகுடா தேசிய உயிரினப்
பூங்கா உருவாக்கியும் இத்தீவுகளை மேம்பாடு செய்யவும்
இத்தீவுகளில் உள்ள அபூர்வமான இனங்கள் பாதுகாக்கப்
படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பவழப்பாறை என்பது வெறும் சுண்ணாம்புப் பாறை அல்ல.
இது 'சீலெண்டரேடா' என்ற ஒருவகை விலங்கினங்களால்
சுரக்கப்படும் சுண்ணாம்புத் திரவம். பல்லாயிரக்கணக்கான
ஆண்டுகளாக கெட்டித்து உருவான ஒன்றாகும். பழைய
பவழப்பாறை அடிப்பகுதியில் இருந்தால்தான் இவற்றின்
மேல் புதிய பவழ வகைகள் உருப்பெற்று வளர முடியும்.
இந்தப் பவழப்பாறைகள் இல்லாவிட்டால், பல நூறு
வகையான பவழ வகைகள் வளர வழியின்றி அழியும்.

மேலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக உருவான இப்
பவழப்பாறைகள் இத்தீவுகளில் உள்ள விதவிதமான கடல்
மீன் வகைகள், செம்மீன் முதலியவைகளுக்கு இனப் பெருக்
கம் செய்யும் உறைவிடமாக உள்ளது. இங்குள்ள தீவுகள்
அனைத்தும் (21 தீவுகள்) தமிழ்நாடு வனச் சட்டம் 1882
பிரிவுக் கூறு 26-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்த 21 தீவுகளை தேசிய பூங்காவாக அறிவிக்கை செய்
யும் நோக்கம் வன உயிரின பாதுகாப்புச் சட்டம் 1972-ன்
கீழ் தமிழ்நாடு அரசால் ஆணையிட்டு மேல் நடவடிக்கை
கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு சில இடைத்தரகர்களின் தூண்டுதலால் சில நடுத்
தர குடிவாழ் மக்கள் இன்னமும் இப்பவழப்பாறைகளை
வெட்டி எடுத்து சேகரித்து எடுத்துச் செல்கிறார்கள். மற்ற
மீனவர்கள் எந்தவிதமான தொந்தரவுமின்றி தங்களது
அன்றாட மீன்பிடி பணிகளைச் செய்து வருகிறார்கள்.

சிதம்பரனார் மாவட்ட ஆட்சி நிர்வாகம், பவழப்பாறை
களை வெட்டி எடுத்துச் செல்பவர்களுடன் பலமுறை கூட்
டங்கள் மூலம் பேச்சு வார்த்தை நடத்தி உள்ளது.
மேலும், சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் சமீபத்
தில் ஒரு பொது அறிவிப்பின் மூலம் பவழப் பாறைகள்
வெட்டி சேகரம் செய்யப்படுவது தடுக்கப்பட்டுள்ளது என்றும்
இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கடனுதவி பெற்று
மாற்றுத் தொழில் செய்ய மாவட்ட நிர்வாகத்தினரை அணுகு
மாறும் பத்திரிகைச் செய்தியின் மூலம் தெரிவித்துள்ளார்.





வனத்துறையும், பவழப்பாறை சேகரம் செய்பவர்களுக்கு
மாற்றுப் பணிகளின் மூலம் வருவாய் கிடைக்கும் வழிமுறை
களை ஆய்வு செய்து வருகின்றது. பவழப்பாறைகள் பாது
காக்கப்பட வேண்டியதின் நோக்கத்தினை அவர்களுக்கு
கற்பித்தும், மாவட்ட ஆட்சி நிர்வாகத்திடம் தொடர்பு
கொண்டு அவர்களுக்கு மாற்றுப் பணிகள் துவங்க கடன் வசதி
பெற்றுத் தரவும் வனத்துறையால் உதவி செய்யப்படுகிறது.

பவழப் பாறைகள் வெட்டிச் செல்வதால் ஏற்படும் பாதிப்
புகளைச் சுட்டிக்காட்டி சமீபத்திய முன்னணிச் செய்திப்
பத்திரிகைகள் மற்றும் வார இதழ்களில் பல செய்திகள்
வெளியிடப்பட்டுள்ளது.

இந்த 4 தீவுகளில், 1 தீவு கடலுக்குள் மறைந்துவிட்டது.
இத்தீவு சிறிய அலைகள் ஏற்படும்போது மட்டுமே கண்
பார்வைக்குத் தென்படுகிறது. இது மட்டுமின்றி மீதமுள்ள
பகுதிகள் கடலுக்குள் மூழ்கி வருவதால் மூன்று தீவுகளின்
அதன் உண்மையான பரப்பு குறைவுபட்டுள்ளது. இச்சூழ்
நிலையில் பவழப்பாறைகள் எடுத்துச் செல்வதை கட்டுப்
பாட்டிற்குள் கொண்டு வரவில்லையென்றால் சிதம்பரனார்
மாவட்டத்திலுள்ள 4 தீவுகளும் கடலில் மூழ்குவதோடு
விலை மதிக்க முடியாத சுற்றுச் சூழல் மற்றும் அரிய உயிரினங்கள்
பல வெகுவாக பாதிக்கப்பட்டு அறவே அழிந்துவிடும்.

இப்பவழப் பாறைகளை வெட்டி அப்புறப்படுத்தும் பணி
யில் ஈடுபட்டுள்வர்களுக்கு மாற்றுத் தொழில் துவங்க
கடனுதவி வழங்க மாவட்ட ஆட்சியர் மூலமாக நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்
கள் வனத் துறையின் பல்வேறு நடவடிக்கைகளினை உப
யோகித்து இவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாவண்ணம்
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>திரு. எஸ். டேனியல்ராஜ்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விரல் ஜல்லியை பவழப்பாறை என்று குறிப்
பிட்டு உள்ளார்கள். விரல் ஜல்லி சுண்ணாம்புக் கல்லே
தவிர, பவழப்பாறை இடையாது என்பதையும் இந்தத்
தீவுகளிலே தேசியப் பூங்கா அமைக்க இருக்கின்றோம். இதன்
காரணமாக தீவுகள் அழிந்துபோகும் என்றெல்லாம் அறிக்கை
யிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த விரல்
ஜல்லியைப் பொறுத்த மட்டிலே தீவுகளிலே இருந்து அரை
கிலோ மீட்டருக்கு அப்பால், 5 கிலோ மீட்டர் சுற்றித் தான்
இந்த விரல் ஜல்லி தானாகவே வளர்ந்து தானாகவே
ஒடிந்து கடலில் விழுந்து கிடைக்கின்றது. இந்த விரல்
ஜல்லியை 250 ஆண்டு காலமாக சுமார் 5 ஆயிரம் தொழி
லாளர்கள் எடுத்து ஜீவனம் செய்து வருகிறார்கள். எனவே
அரசைப் பொறுத்தமட்டிலே தேசியப் பூங்கா அமைப்பது

முக்கியமாக இருந்தால் தேசியப் பூங்கா அமைக்க வேண்டு
மென்றால்கூட தூத்துக்குடியிலேயிருந்து கிட்டத்தட்ட 10
கிலோ மீட்டர்கள் சென்றுதான் நல்ல தண்ணீரைக் கொண்டு
இந்தப் பூங்காவை அமைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே
தேசியப் பூங்கா அமைப்பது முக்கியமா அல்லது 5 ஆயிரம்
தொழிலாளர்களுடைய பசிப்பட்டினியைப் போக்குவது முக்
கியமா என்பதை அரசு ஆராய்ந்து நல்ல தீர்ப்பு வழங்குமா
என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்பு
கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் இந்தத் தீவிலேயிருக்கிற
பவழப்பாறை என்கிற இடத்தில் சிறந்த உயிரினங்களை அங்கே
பாதுகாக்கின்ற வகையில் அது வெட்டியெடுக்கப்படு
கிறது என்பதும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது
சுண்ணாம்பிற்காகப் பயன்படுத்தப்படுகிறது. சிறு ஜல்லிகள்
என்று சொல்லப்படுகின்ற சங்கு போன்ற நிலையிலே என்று
குறிப்பிட்டார்கள். இந்தத் தீவு அழிந்து கொண்டிருக்கின்ற
காரணத்தினாலே அதிலே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற
உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையிலே
மத்திய மாநில அரசு, அதுவும் ஒப்பற்ற டாக்டர் புரட்சித்
தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித்
தலைவி அவர்கள் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக நட
வடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்
அங்கே பணியாற்றிக்கொண்டிருந்த நீண்ட நெடுங்காலமாக
இருந்த அந்த 5 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைகள்
தருவதற்கும், அவர்களுக்கு கடனுதவி வழங்க வேண்டும்
என்பதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு
செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்த நடவடிக்கை மேற்
கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களைப் பாதுகாப்பதற்காக
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எஸ். டேனியல்ராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்தக் கடல் கரைகளில் இருக்கின்ற இந்த
விரல் ஜல்லியை அரசே கொள்முதல் செய்தால் அரசுக்கு
வருமானம் கிடைக்கும். அதே போன்று அங்கே 250 ஆண்டு
காலமாக தொழில் செய்து கொண்டிருக்கிற 5 ஆயிரம் தொழி
லாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுத்ததுபோல் இருக்கும்
என்பதை அரசு உணர்ந்து மீண்டும் இந்தத் தொழிலைச் செய்
வதற்கு அரசு அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
குறிப்பிட்டது போல, இதிலே தொழில் செய்கிறவர்கள்



ஏறத்தாழ இதில் 5,000 பேர்கள் என்று குறிப்பிட்டார்கள்.
இன்றைக்கு அவர்கள் குறைந்துகொண்டே இருக்கிறார்கள்.
500 பேர்கள் கூட இப்போது கிடையாது. ஆகவே குறிப்பிட்ட
எண்ணிக்கை குறைந்துகொண்டு இருப்பதற்குக் காரணம் அந்தத்
தொழிலைச் செய்வதிலே லாபம் இல்லை என்று அவர்கள்
கருதிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படை
யிலே மட்டுமல்லாமல், கடலில் வாழ்ந்து கொண்டிருக்கிற
உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய
அரசினுடைய முக்கியமான குறிக்கோளாக இருந்து வரு
கிறது. இயற்கையாகவே வளர்ந்து வருகின்ற, மீன்கள் பல்வேறு
இன மீன்களை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கிற அந்த
தீவுகள் போன்றவைகளை அழித்துவிடக்கூடாது என்பதற்காக அரசு
நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தினால், மீண்டும்
அந்த சுண்ணாம்புக் கற்களை எடுப்பதற்கு அரசே
நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று உறுப்பினர் அவர்கள்
குறிப்பிட்டார்கள். அதை மாற்றியமைக்க வேண்டும் என்பது
தான் அரசினுடைய கருத்தாக இருக்கின்ற காரணத்தினால்
அவர்களுக்கு மாற்றுத் தொழில்கள் தருவதற்கும், அவர்களுக்கு
தேவையான அளவுக்குக் கடன் உதவிகளை வழங்குவதற்கும்
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசின் மூலமாக நடவடிக்கை
மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஒத்து
ழைப்பை மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் நல்குவார்கள் என்பதை மகிழ்ச்சிடன் தெரி
வித்துக்கொள்கிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்.

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

முற்பகல் 10.45

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைமுன் வைக்கப்
பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு.
எ. ஏகாம்பர ரெட்டி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்
குழுவின் தலைவர்.

<u>திரு. எ. ஏகாம்பர ரெட்டி :</u> மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின்
1991-92-ஆம் ஆண்டிற்கான 5-வது மற்றும் 6-வது அறிக்கை
களை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அறிவிப்பு.

### பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1992(ஆ.இ.).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அரசினர் சட்ட முன்
வடிவு அறிமுகம் செய்தல்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### 5. சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல்.

**பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1992.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேஜையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறபோது எதிர்ப்பு இருந்து, அதன் பின்பு வாக்கெடுப்பில் நிறைவேறியது என்று சொல்கிற நேரத்தில் கரவொலி எழுப்பினால் போதும், எதிர்ப்பே இல்லாமல் நிறைவேறுவதற்கு வேண்டாம்,



### 6. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும், வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 36—பாசனம்.

(ஆ) கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டிடங்கள்.

(இ) கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும்.

(ஈ) கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

(உ) கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

(ஊ) கோரிக்கை எண் 56—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

(எ) கோரிக்கை எண் 57— சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 36—பாசனம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பாசனம் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 135,14,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1157—திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'To discuss the need to construct the Madachel Kelvai at Neiyyur left bank channel in Kanyakumari district'. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''பாசனம் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 135,14,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1155—டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பாசனம் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 135,14,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1217—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைபூண்டி, வளவனாறு இரு கரைகளும் மழைக் காலங்களில் அரித்துச் சென்று விட்டதால் உப்பு தண்ணீர் விவசாய நிலங்களில் உட்புகுந்து நிலத்தின் தன்மையை பாதித்துவிடுவதால் ஆற்றின் இரு கரைகளையும் கட்டித் தரும் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பாசனம் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 135,14,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பொதுப்பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 37-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 6,83,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1248—திரு. சி. சுவாமிநாதன்.



திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதுக்கோட்டையில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி கொண்டு இருக்கும் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தமாக கட்டிடம கட்டி கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 37-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,83,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1240—டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 37-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,83,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் பற்றிய 38-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 50,51,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1264—திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொதுப் பணித்துறையில் பணியாற்றும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

[திரு. ஆர். சிங்காரம்] [1992 மார்ச் 31

''பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் பற்றிய 38-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,51,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1263—டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் பற்றிய 38-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,51,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சாலைகளும் பாலங்களும் பற்றிய 39-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 205,45,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1320—திரு. சா. பன்னீர் செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டிவனம் வட்டம், கூட்டேரிப்பட்டு கிராமத்திலிருந்து ஆலகிராமம், தென் புத்தூர், மொழியனூர் வழியாக நெடி கிராமம் வரை செல்லும் பேருந்து தடச் சாலையை கிராமச் சாலைகள் திட்டத்தில் தார்ச் சாலையாக அமைக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சாலைகளும் பாலங்களும் பற்றிய 39-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 205,45,42,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



1992 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1274—டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சாலைகளும் பாலங்களும் பற்றிய 39-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 205,45,42,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1355—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி—மன்னார்குடி தார்சாலை, அதிகமான போக்குவரத்துச் சாலையாக இருப்பதால் குறுகிய தார் சாலையாக இருப்பதாலும் திருத்துறைப்பூண்டி—மன்னார்குடி சாலைகள் இருபுறமும் அகலப்படுத்தும் அவசியத்தைக் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''சாலைகளும் பாலங்களும் பற்றிய 39-ஆம் எண் மானிய கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 205,45,42,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொது பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 99,71,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 1398— திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் நீர் வளம் குறைவாக உள்ளதால் சொட்டு நீர்ப் பாசனம் முறையை

[திரு. சி. ஞானசேகரன்] [1992 மார்ச் 31

எல்லா கிராமத்திலும் உருவாக்க வேண்டியதின் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,71,92,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1385—டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,71,92,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 56—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 50,38,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1399—திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,38,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1400—டாக்டர் தே. குமாரதாஸ்.



1992 மார்ச் 31]

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,38,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 57—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

''சாலைகள்—பாலங்கள் பற்றிய 57 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 53,73,13,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்,''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1422—திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் உள்ள மாநில போக்குவரத்து நெடுஞ்சாலைகளைப் புதுப்பிக்க நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 57 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 53,73,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1431—திரு ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நகரம், ஒரு வழிப்பாதையாக இருப்பதால் மிகவும் நெருக்கடியாக உள்ளதாலும், குறுகிய பாதையாக இருப்பதால் பல்வேறு விபத்துக்கு உள்ளாவதாலும் இதை மாற்று வழிப்பாதையாக வேதாரண்யம்—வேளாங்கண்ணி

[திரு. ஜி. பழனிசாமி] [1992 மார்ச் 31

பாதையில் முள்ளியாற்றுப் பாலம் கட்டும் அவசியத்தை
குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்
னத் மொழிகிறேன் :

''சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
பற்றிய 57 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்
பெறுகின்ற ரூ. 53,73,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும்
வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்
கப்படுகின்றன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்
சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால்
கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை நெடுஞ்சாலைத்
துறை ஆகிய துறைகளைப் பற்றிய கொள்கை விளக்கக்
குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஏற்கனவே மாண்புமிகு
உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதில் தமிழில்
உள்ள குறிப்புகளை நான் இந்த அவையில் படித்ததாகக்
கருதி, அவை நடவடிக்கைக் குறிப்பில் @ ஏற்றுக்கொள்ள வேண்
டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் தெரிவிக்
கின்ற மேலான யோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டு,
பின்னாலே அரசின் சார்பிலே அளிக்க வேண்டிய விளக்கங்
களையும் முடிவுகளையும் இறுதியாகச் சொல்லக் கடமை
பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. ஏகாம்பர
ரெட்டி.

முற்பகல் 10-55

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, கோரிக்கை எண் 36— பாசனம், எண்
37— பொதுப் பணிகள், கட்டிடங்கள், எண் 39—சாலைகளும்
பாலங்களும் என்ற மானியக் கோரிக்கைகளின் மீது நான்
சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக
சில கருத்துக்களைக் கூற முன் வந்துள்ளேன்.

நமது மாநிலத்திலே 13 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவு
கொண்ட நிலம் இருக்கிறது. அதிலே 6 மில்லியன் ஹெக்
டேர்தான் பயிரிடப்படுகிற பகுதி. அதாவது 46 சதவீதம்

@ 169 முதல் 239 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்
I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.



1992 மார்ச் 31] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

ஆகும். நீர்ப்பாசன வசதி படைத்தது 3 மில்லியன் ஹெக்
டேர் மட்டும்தான். அதுவும் அதிலே 46 சதவீதம்தான் வரு
கிறது. வேளாண்மை தேசியக் குழு 1976 வது ஆண்டில்
நமக்கு 1992—93 ஆம் ஆண்டுக்கு 4,465 ஹெக்டேர் மட்டும்
தான் பாசன ஆதாரம் இருப்பதாக தெரிவித்து இருக்கிறார்
கள். நமக்கு ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்குதான் விவ
சாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய நிலமாக இருக்கிறது என்று
அதாவது பாசன ஆதாரம் இருக்கிறது என்று அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பொதுப்பணித்
துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தில், எல்லாத் தரப்
பிலிருந்தும் உறுப்பினர்கள் பேசுவதற்கு ஆர்வத்தோடு பெயர்
கொடுத்திருக்கிறார்கள். எல்லோரும் பேசியே ஆகவேண்டு
மென்று வற்புறுத்துகிறார்கள். எனவே பேசுகின்ற மாண்புமிகு
உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ்
உட்பட, பத்துப் பத்து நிமிடத்திற்குள் முடித்தே ஆகவேண்டும்.
பத்து நிமிடத்தில் குறுக்கீடுகள் இருந்த காரணத்தால் உங்களுக்கு
வாய்ப்புப் போனாலும் சரி, அந்தப் பத்து நிமிடத்திற்குப் பிறகு
அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டு விடுவார் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். திரு எ. ஏகாம்பர ரெட்டி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மீதமுள்ள விவசாய நிலத்தை
பாசன ஆதாரத்திற்குள் கொண்டுவருவதற்கு நமது அரசு
வேளாண்மை தேசியக் குழுவை வற்புறுத்தி, மீதமுள்ள பகுதிகளை
விவசாயப் பகுதிகளாக ஆக்குவதற்கு அரசு முன்வர வேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். 1991—92 ஆம்
ஆண்டுக்கான நமது திட்டத்தில், சிறிய மற்றும் நடுத்தர பாசனத்
திட்டத்திற்கு 45 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 1992—
93 ஆம் ஆண்டுக்கு ரூ. 46.22 கோடி ஒதுக்கியிருக்கிறோம்.
ஆனால் சிறுபாசனத் திட்டத்திற்கு 1991—92 ஆம் ஆண்டுக்கு
ரூ. 14 கோடியும், 1992—93-க்கு 17.17 கோடி ரூபாயும்தான்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவான ஒதுக்கீடு
என்பது எனது அபிப்பிராயம். ஈரோப்பியன் எக்கானமி கம்யூ
னிட்டி திட்டத்தின் கீழ் ,அவர்கள் உதவியுடன் நமக்கு இருக்கக்
கூடிய ஏரிகளை நவீனப்படுத்துவதற்கு உத்தேசித்து, அந்தத் திட்
டத்தின் கீழ் ஏரிகளை நவீனப்படுத்தப்படுகின்றன. அதிலே 250
ஏக்கருக்கு மேல் உள்ள நிலங்களை மட்டும் எடுத்துக் கொண்டிருக்
கிறார்கள். அப்படி எடுக்கும்போது 250 ஏக்கருக்குக் கீழே உள்ள
ஏரிகள் எல்லாம் விடுபட்டுப் போக நேரிடும். ஆகவே இந்த
ஆண்டு எடுத்துக் கொள்ளும் திட்டம் 150 ஏரிகள், 50 ஆயிரம்
ஏக்கர் பரப்புள்ள நிலங்கள், 80 சிறிய ஏரிகளும், 5,000 ஏக்கர்
பரப்புள்ள நிலங்களும் எடுத்துக் கொள்ளப்பட திட்டம் இருக்கி
றது. இதை மிகவும் அதிகப் படுத்தி செயல்படுத்தினால் அர
சாங்கத்திற்கு பணம் அதிகம் செலவாகாது. இது ஈரோப்பியன்

[திரு. எ. ஏகாம்பர ரெட்டி] [1992 மார்ச் 31

எக்கானமி கம்யூனிட்டித் திட்டத்தின் கீழ் வருகின்ற காரணத்தால்
ஏரிகள் அதிகமாக இருக்கிற செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட
டத்தில் இந்தவாய்ப்பை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இந்த வாய்ப்புக் கூட அந்த ஏரியாவில்
உள்ள ஆயக்கட்டுக்காரர்களை இணைத்து ஃபார்மர்ஸ் சொசைட்
டியாக ஆர்கனைஸ் செய்து, அந்த சொஸைட்டிக்குக் கொடுத்தால்
பணி தரமாகவும் இருக்கும். பணிகள் உரிய காலத்தில் பூர்த்தி
செய்யப்படுவதற்கும் வாய்ப்பு இருக்கும் என்று உங்கள் மூலமாக
அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே
அந்தப் பணிகளையெல்லாம் அந்த ஆயக்கட்டுக்காரர்களைக்
கொண்ட சொசைட்டியிடம் ஒப்படைத்தால் உரிய நேரத்தில்
தரமான வேலைகள் நடக்கும் என்ற எனது அபிப்பிராயத்தைத்
தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு இந்த
ஆண்டு ஒதுக்கிய பணம் 19 கோடி ரூபாய். இது மிகவும் குறைவு
என்பது என் அபிப்பிராயம். மைய அரசு 70 சதவீதம் கொடுக்
கிறது. நாம் 30 சதவீதம்தான் போடுகிறோம். அந்தக் காரணத்
தால் மைய அரசிடம் இருந்து அதிகமாகப் பெற்றுவந்து இதை
நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறப்புசிறு
பாசனத் திட்டத்தின் மூலமாக 75 புராஜக்ட்கள் நடப்பு ஆண்டில்
வருகின்றன. 19 புராஜக்ட்தான் 1992—93 க்கு திட்டம் வகுத்து
வருகிறது. அது மிகவும் கம்மி. அதையும் கூடுதலாக்க
வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்தில் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும் போது அவர் வகுத்த திட்டத்தில்
ஆர்.எல்.ஈ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.ஈ.பி. திட்டத்தின் கீழ் எங்கள்
ஏரியாவில் சில ஏரிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

முற்பகல் 11.00

தி.மு.க அரசு வந்தவுடனே அப்ரப்டாக அப்படியே நிறுத்தி
விட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்
மதிகெட்டான் ஓடை. அந்த ஆண்டிலே 25 இலட்சம்
ரூபாய் எஸ்டிமேட் போட்டு அதிலே 15 இலட்சம்
ரூபாயை செலவு செய்துவிட்டு பத்து இலட்சம் ரூபாயை
செலவு செய்ய முடியாமல் அதை விட்டுவிட்டார்கள்.
இப்போது இந்த அரசு வந்தவுடனே எஸ்டிமேட் போடச்
சொல்லி, இப்பபாது 40 இலட்சம் ரூபாய் என்று போடப்பட்டிருக்
கிறது. அந்த ஆண்டிலே 25 இலட்சம் ரூபாய்க்கு முடிக்கக்
கூடிய வேலையில் ரூபாய் 10 இலட்சம் பேலன்ஸ் வைத்துவிட்டு,
இப்போது அந்த பத்துக்கு நாற்பது இலட்சம் என்று ஆகிறது.
இப்படி அரசாங்கப் பணம் எந்த விதத்தில் துர்விநியோகம் ஆகிறது
என்பதைத் தெரிவித்துக் கொண்டு உடனடியாக இந்தத்
திட்டத்தை சிறப்பு சிறு பாசனத்தில் எடுத்துக் கொண்டு பூர்த்தி
செய்யும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல சில ஏரிகள் எங்களுடைய பகுதியிலே இருக்கின்
றன. ஆனால் ஆதற்கான 'எட்-ஒர்க்ஸ்' ஆந்திரப் பிரதேசத்தில்
இருக்கிறது. ஏரிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. பெனிஃபி



1992 மார்ச் 31] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

ஷரிஸ் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். ஆகவே ஆந்திரப் பிரதேசத்
தினுடைய ஒப்புதலைப் பெற்றுத்தான் செய்ய வேண்டியிருக்கிறது.
இன்டர் ஸ்டேட் இர்ரிகேஷன் கான்ஃபரன்ஸ் வரும்போது மாண்பு
மிகு அமைச்சர் அவர்களை அங்கே அனுப்பி அவர்களுடைய
கன்கரன்சை வாங்கி அந்த ஏரிகளை செப்பனிட வேண்டும்.
அந்த ஏரிகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. ஹெட் ஒர்க்ஸ்
ஆந்திர பிரதேசத்தில் இருக்கின்ற காரணத்தால் அந்த ஏரிகள்
செப்பனிடப்படாமல் இருக்கின்றன. ஆகவே தயவுசெய்து
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கான்ஃபரன்சுக்கு விஜயம்
செய்து கன்கரன்ஸ் வாங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
உங்கள் மூலமாக இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளுக்காக 1991—92 ஆம் ஆண்டுக்கு ரூ. 200
கோடி. 1992—93 ஆம் ஆண்டுக்கு ரூ. 114 கோடி. இது
மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனாலும் கூட மொத்தம் கணக்குப்
பார்த்தால், நேஷனல் ஹைவேஸ், ஸ்டேட் ஹைவேஸ்
மேஜர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ், அதர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ்,
சுகர்கேன் ரோட் டெவலப்மெண்ட் இதையெல்லாம் சேர்த்தால்
50,085 கி.மீ. ஆகிறது. ஆனால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து
யூனியன் ரோடுகளையும் கணக்கு போட்டுப் பார்த்தால் 1,02,510
கி.மீ. ஆகிறது. இரண்டு மடங்கை விட அதிகமாக ஆகிறது.
ஆனாலும்கூட அதற்கு ஒதுக்கும் பணம் மிகவும் குறைவாக
இருக்கிறது. ஆனால் எங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி
புரட்சித் தலைவி முதலமைச்சருடைய தன்னிறைவுத் திட்டத்தின்
கீழ் ஒரு பிளாக்குக்கு ஒரு கோடி ரூபாய் என்ற திட்டம் ஓரள
விற்கு எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. கிராமப்புறங்களில்
உள்ள ரோடுகள் எல்லாம் தார் போடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி
தந்ததற்கு இந்த நேரத்திலே நன்றி கூறிக் கொள்கிறேன்.

மெயின் ரோட்ஸ், ஹைவேஸ் ரோட்ஸ், கவர்ன்மெண்ட்
ரோட்ஸ் எல்லாம் ஒரு வண்டி போனாலும் இன்னொரு வண்டி
போக முடியாத அளவிற்கு ரொம்ப மோசமாக இருக்கின்றன.
அப்படிப்பட்ட பேட்-ஸ்ட்ரெட்ச் ரோடுகளை ஸ்பெஷல் ஸ்கீமில்
போட்டு, ஐந்தாண்டுத் திட்டத்திலே போட்டு அதற்கு 150
கோடி ரூபாய் ஒதுக்கி ஒவ்வொரு ஆண்டும் 30 கோடி ரூபாய்
செலவு செய்ய வேண்டும் என்பது மகிழ்ச்சிக்குரியது. இந்தத்
திட்டம் மகிழ்ச்சிக்குரியது, என்னுடைய பாராட்டு.

என்னுடைய பகுதியில் இருக்கக்கூடிய சோளிங்கர்-திருத்
தணி ரோடு, பள்ளிப்பட்டு-ஆர்.கே. பட்டு ரோடு, நகரி ரோடு
ஆகியவை ரொம்ப மோசமாக இருக்கின்றன. ஹைவேசுக்கு
மெயின்டெனன்ஸுக்கு கொடுக்கும் பணம் என்ன ஆகிறது
என்று தெரியவில்லை. அது ரொம்ப மோசமாக இருக்கின்றது.
அதை சீர்படுத்த ஸ்பெஷல் ஸ்கீமிலே சேர்த்து ஹைவேஸ்
கவர்ன்மெண்ட் ரோடுகளுக்கு கொடுக்கக்கூடிய அந்த 150
கோடி ரூபாயில்—இந்த ஆண்டுக்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கி

யிருக்கிறார்கள்—20 கோடி ரூபாயில் நான் சொன்ன சோளிங்கர்-
திருத்தணி ரோடு, பள்ளிப்பட்டு-ஆர்.கே. பட்டு ரோடு, நகரி
ரோடு ஆகிய மூன்றையும் சேர்த்து பராமரிப்புச் செய்ய வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரண நிதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 கோடி
ரூபாயிலே இரண்டு கோடி ரூபாயை அரசு சாலைகளுக்கு ஏற்
கெனவே ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில்
எங்கே வேலை செய்தார்கள் என்றே தெரியவில்லை. வெள்ள
நிவாரணபணியே செய்யவில்லை என்று மக்கள் நினைக்கிறார்கள்.
அந்த அளவிற்கு இல்லாமல், எந்த நிதியை ஒதுக்கினாலும் நல்ல
விதமாக பயன்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான்
கேட்டுக்கொள்கிறேன்.

தேசீய நெடுஞ்சாலைக்கு எட்டாவது ஐந்தாண்டு திட்டத்
திற்கு 1,120 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகவும்,
நம்முடைய மாநில அரசு சிபாரசு செய்திருப்பதாகவும் அதற்கு
திருப்பது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியது, தெரிவித்
சென்னை-திருப்பதி ரோடு இன்டர்ஸ்டேட் இந்த நேரத்திலே
அந்த இன்டர்ஸ்டேட் ரோடு நம்முடைய ரோடாக இருக்கிறது
ஆந்திர மாநிலத்திற்கு போகிறது. அந்த மாநிலத்தில் இருந்து
ஹைவேஸோடு சேர்த்தால் நன்றாக இருக்கும். ரோடை நேஷனல்
பக்தர்களுக்கும் உபயோகமாக இருக்கும், பயணிகளுக்கும்,
நேஷனல் ஹைவேஸோடு சேர்க்கும்படி ஆகவே, அதை
கேட்டுக்கொள்கிறேன்.

சென்ட்ரல் ஸ்பான்சார்ட் ஸ்கீமில் ரூரல் ரோட்ஸ் வருகிறது
ஆயிரத்திற்கு மேல் 1,500-க்குள் ஜனத்தொகை உள்ள ஊர்களில்
உள்ள ரோடுகள் சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஸ்கீமாக செய்யப்
படுகிறது. ஆனாலும் கூட எத்தனையோ ரோடுகள் இன்னும்
செய்யப்படாமல் இருக்கின்றன. 1,500 மக்கள் தொகைக்குள்ளே
உள்ள ரோடுகள் இன்னும் செய்யப்படாமல் இருக்கின்றன. அந்த
ரோடுகளை உடனடியாக ஐந்தாண்டு திட்டத்திலே
நிறைவேற்றும்படிகேட்டுக் கொள்கிறேன். ஆனால் ஒரு மகிழ்ச்சி
யான செய்தி. சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்த
ரோடுகளையெல்லாம் சேர்த்து 1992—93-க்குள் முடிப்பதாக
ஒரு திட்டம் இருக்கிறது.

முற்பகல் 11-05

அதேபோல ஸ்பெஷல் காம்போனன்ட் பிளான்—அரிசனங்
களுக்கு 10 பெர்சென்ட் கொடுத்து, அரிசன காலனி ரோடு
போடும் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை கூட தன்
னிறைவுத் திட்டத்தின் கீழ் முடிப்பதாகக்கண்டேன். அது மிக
வும் மகிழ்ச்சி. 1992—93 ஆம் ஆண்டு முடிவதற்குள் அந்த
ரூரல் ரோட்ஸ் புரோகிராம்—ஸ்பெஷல் காம்போனன்ட் பிளான
-அரிசன காலனிக்கு போடக்கூடிய இணைப்புச் சாலை திட்டத்தை
உடனடியாக பூர்த்தி செய்து 1992—93 ஆம் ஆண்டிற்குள் அதை
பூர்த்தி செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்
கிறேன்.



செங்கல்பட்டு ஜில்லாவிலே கணக்கு சொன்னால், செங்கல்
பட்டு ஜில்லா என்றாலே 'ஏரிகள் ஜில்லா' என்றுதான் பெயர்.
அந்த ஜில்லாவிலே என்னுடைய கணக்குப்படி 1,000 ஏரிகள்
இருக்கின்றன. மைனர் இரிகேஷன் சோர்சஸ் 2,590 இருக்கின்
றன. எக்ஸ்-ஜமீன் சோர்சஸில் மேஜர் 69, மைனர் 842 இருக்
கின்றன. சேனல் 46-லிருந்து 67 வரை இருக்கின்றன. இவற்
றில் அதிகமாக இருக்குமே தவிர குறைவாக இருக்காது. இப்படி
இருந்தும்கூட எத்தனையோ ஏரிகள் பராமரிப்பு இல்லாமல்
இருக்கின்றன. பொதுவாகப் பார்க்கபோனால், ஏரிக்கரை மேலே
தான் வேலிக்காத்தான் போன்றவை இருக்கின்றன. அவற்றைச்
சுத்தம் பண்ண முடியாமல் இருக்கின்றன. அதையெல்லாம் சுத்தப்
படுத்தினால், ஏரி பண்டு—ஏரிக்கரையை அகலப்படுத்தினால்
ஸ்டோரேஜுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. எனவே; அந்த
ஏரிகளை எல்லாம் பராமரிப்பு செய்ய வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஈரோப்பியன் எக்கானமிக்
கம்யூனிட்டியினுடைய அசிஸ்டன்ஸ் இருப்பதால், அதை 1995-
க்குள் முடிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதால் எல்லா
ஏரிகளையுமே நவீனமயமாக்க வேண்டுமென்று உங்கள் மூலம்
அமைச்சர் அவர்களைக் கேட்டு (மணி அடிக்கப்பெற்றது) வாய்ப்
புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்று இந்த பொதுப் பணித்துறை மானிய
கோரிக்கை மீது எனது கருத்துக்களைச் சொல்ல அனுமதித்த
தமிழகத்தின் முதல்வர் டாக்டர் இதய தெய்வம் அவர்களுக்கு
எனது நன்றியைத் தெரிவித்து என்னுடைய கருத்துக்களை இந்த
நேரத்திலே நான் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த
பொதுப்பணித் துறையானது அனைத்துத் துறைகளோடும்-
சம்பந்தப்பட்ட துறை என்பதாலும், அனைத்துத் துறைகளும்
சேர்ந்து செயல்படுகின்றன என்பதாலும் இந்தத் துறை முக்கியப்
பங்கு வகிக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டு இருக்கின்றேன். பொதுவாக, பொதுப் பணித்துறை என்
றாலே, பொது வேலைகளைப் பராமரிக்கின்ற துறை என்றும்,
பொதுவான அரசு கட்டடங்களாகட்டும், சாலைகளாகட்டும்
அல்லது அரசு பொதுப் பணிகளைப் செய்கின்ற பணிகளாகட்டும்
அவை அனைத்தையும் செய்கின்ற துறை இந்த பொதுப்பணித்
துறை. அந்தத் துறையின் சார்பாக இன்று முக்கியமான பங்கு
வகிப்பது சாலைகள் ஆகும். அந்த சாலைகளை, குறிப்பாக
நமது புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு நிறையவே
செய்து இருக்கிறார்கள். நிறைய திட்டங்களைப் போட்டு இருக்
கிறார்கள். நான் பார்த்தேன், சாலைகளுக்கென்றே கிட்டத்
தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல் திட்டங்களைப் போட்டு,
அந்தத் திட்டங்களின் வாயிலாக அமைச்சர் பெருமக்கள் இன்று

[திரு. கே. பி. இராஜு] [1992 மார்ச் 31

அருமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தா
லும் எனக்கு இருக்கிற ஒரே ஒரு குறை, உங்களுடைய திட்டங்கள்
நிறைய இருந்தாலும்—எனக்கு என்னவோ தெரியவில்லை,
கோவை மாவட்டத்தை மட்டும் அமைச்சர் பெருமகனார் கண்
விழித்துப் பார்ப்பது கிடையாது. ஏனென்று கேட்டால், நான்
பட்ஜெட்டிலே கூட பார்த்தேன். எங்கள் மாவட்டம் தான்
நிறைய வரி வசூல் பண்ணி கொடுக்கிறது; எங்கள் மாவட்டம்
தான் நிறைய வரி கொடுக்கிறது. வருமானம் உள்ள மாவட்டம்
எங்கள் மாவட்டம் தான். ஆனால், அமைச்சர் என்னவோ
எங்கள் மாவட்டத்தின் மேல் கண் திறக்கமாட்டேன் என்கிறார்.
எந்தத் திட்டத்தை எடுத்தாலும், தென் ஆற்காடு, வட ஆற்காடு,
கன்னியாகுமரி, ராமநாதபுரம் அந்தமாநிரி இடங்களுக்குத்
தான் திட்டங்கள் போடுகிறார்களே தவிர, எங்கள் கோவை
மாவட்டத்திற்கு வரும் வரும் என்று பார்க்கிறேன், ஒரு
திட்டத்தையும் காணோம். ஆகவே இந்த நிதியாண்டிலே
யாவது.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, திட்டங்கள் அரசு போடுகின்ற
நேரத்திலே தமிழகம் முழுவதும் ஒரே சீராக நிதி ஒதுக்கீடு செய்வது
என்பது இயலாத காரியம். பொதுவாக, மொத்தமாக நிதி
களை அரசு ஒதுக்குகின்ற நேரத்திலே, ஒரு நேரத்திலே வளர்ச்சி
பெற்ற மாவட்டங்களிலே பணிகள் கொஞ்சம் குறைவாகவும்,
வளர்ச்சி பெறாத பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலே பணிகள்
கொஞ்சம் அதிகமாகவும், அங்கே இருக்கின்ற நிலைமைகளை
அனுசரித்துத் தான் திட்டங்கள் எடுக்கப்படுகின்றன.

கோவைக்கு 13 கோடி ரூபாய் அளவிலே இன்றைக்கு ஒரு
புறவழிச்சாலை அமைப்பதற்கென ஒரு திட்டம் வைத்து
இருக்கிறோம். டி.யு.டி.பி.-லே 6 கோடி ரூபாய்க்கு மேம்
பாலம் கட்டிக்கொண்டு இருக்கின்றோம். திருப்பூர் நகரத்திற்கு
ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாயிலே இன்றைக்கு சாலை போடுவ
தற்கு ஏற்பாடு செய்து இருக்கின்றோம். ஆகவே, கோவை
மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே பல்வேறு பணிகளை,
இன்றைக்கு எடுப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து இருக்கின்
றோம். இதைவிட மோசமான பகுதிகள் என்று வருகின்ற நேரத்
திலே அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துவிட்டு,
கோவை மாவட்டம் கொஞ்சம் வளர்ந்துவிட்ட மாவட்டம் என்
கின்ற காரணத்தினாலே கொஞ்சம் ஒதுக்கீடுகளில் ஏதாவது குறை
இருக்கலாமே தவிர, எந்த மாவட்டத்தையும் புறக்கணிப்பது இந்த
அரசின் எண்ணம் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 மார்ச் 31] [திரு. எஸ். கண்ணப்பன்]

கோவை மாவட்ட விவசாயிகளுக்குத்தான் புரட்சித் தலைவி
அவர்கள்— இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனி
சாமி கூட பாராட்டினாரே— உயிர்த் தண்ணீர் பிரச்சினையாக
இருந்தாலும் சரி, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி
இன்றைக்கு விவசாயிகளை கணக்கிலே எடுத்துக்கொண்டு
கோவை மாவட்ட மக்களினுடைய வயிற்றிலே பால் வார்த்து
இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த
கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-10

திரு. கே. பி. ராஜு: துணைத் தலைவர் அவர்களே,
அதிலே மாறுபட்ட கருதது எனக்கு இல்லை. உயிர்த் தண்ணீர்
வேண்டுமென்று நாங்கள் எல்லோரும் போய் அம்மா அவர்களிடம்
சொன்னோம். அவர்கள் உடனே கொடுத்தார்கள். எங்கள்
மாவட்டத்தில் போர்வெல்கள் எல்லாம் ட்ரை ஆகிவிட்டன.
தண்ணீர் வேண்டுமென்று கேட்டோம். உடனே போர்வெல்
சாங்ஷன் பண்ணிக் கொடுத்தார்கள். அதிலே மாற்றுக் கருத்தை
நான் சொல்லவில்லை. நான் சொல்வது நாங்கள் நிறைய
சம்பாதித்துக் கொடுக்கிறோம். இன்னும் கொஞ்சம் கொடுத்
துப் பாருங்களேன். இன்னும் சம்பாதித்துத் தருவோம் சும்மா
இருக்கிற மாவட்டத்திற்கு ஏன் கொண்டுபோய் கொடுக்கிறீர்
கள்? ஒரு வீட்டில் நான்கைந்து பேர் இருக்கிறோம். ஒருவன்
பாடுபடுகிறான். அவன் பாடுபட்டு எல்லோரும் நன்றாக வரு
மானம் பண்ணிக்கொண்டிருக்கும்போது அவரை இன்னும் கொஞ்
சம் என்கரேஜ் பண்ண வேண்டும். அதை விட்டு சும்மா ஊர்
சுற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கு. ஏன் செலவு பண்ணுகிறீர்
கள் என்பது தான் என்னுடைய கேள்வி. எங்களுக்கு கொடுத்ததை
இல்லையென்று சொல்லவில்லை. இன்னும் கொஞ்சம்
அதிகமாகக் கொடுங்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிலே திருப்
பூருக்கு—அமைச்சர் சொன்னார்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மற்ற மாவட்
டங்கள் எல்லாம் ஊர் சுற்றுகிற மாவட்டங்கள் என்பதைப் போல
சொல்லக் கூடாது. உங்கள் மாவட்டத்தை எப்படி வேண்டு
மானாலும் புகழ்ந்து பேசிக் கொள்ளுங்கள். ஆனால் மற்ற
மாவட்டங்களைக் குறைசொல்ல வேண்டாம்.

திரு. கே. பி. ராஜு: துணைத் தலைவர் அவர்களே,
உதாரணத்துக்கு ஒரு வார்த்தை சொன்னேன். நான் என்ன
சொல்கிறேன் என்றால் மற்ற மாவட்டங்களுக்குக் கொடுப்பதை
விட எங்களுக்கு அதிகமாகக் கொடுத்தால் நாங்கள் இன்னும்
சம்பாதித்துக் கொடுப்போம். இந்தியாவில் 4,000 கோடி அந்நிய
செலாவணி வருகிறது என்றால் 1,000 கோடி ரூபாய் திருப்பூர்
[illegible] [illegible] தருகிறோம். ஆனால் [illegible]

ளுக்கு ஏதாவது கொடுக்கிறீர்களா ? அதுதான் நான் சொல்வது
எங்களை இன்னும் கொஞ்சம் பாருங்கள். நாவலர் பெருமக
னார் அவர்கள் பட்ஜெட்டை படிக்கிறபோது பார்த்தேன். தென்
னாற்காடு, வடாற்காடு, செங்கல்பட்டு என்று வருகிறது. மற்ற
எல்லா மாவட்டங்களையும் நாவலர் அவர்கள் சொல்லி
கொண்டே வருகிறார்—கோவை என்று வருமா என்று பார்த்
தேன். ஒன்றுகூட வரவில்லை. ஏன், கோவையில் ரோடு இல்
லையா ? கோவையில் குடிதண்ணீர் பிரச்சினை இல்லையா ?
என்ன சொல்கிறேன் என்றால் எங்களுக்கும் கொஞ்சம்
கொடுங்கள் நாங்கள் இன்னும் நிறைய சம்பாதித்து தருவோம்.
(குறுக்கீடு) நான் என்ன உங்கள் மாவட்டத்தையா சொன்னேன்.
இவர் வேறு எழுந்து விட்டார். உட்காருங்கள். நமக்குள்ளே
சண்டை வேண்டாம் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் மாண்பு
மிகு உறுப்பினர்களைப் போன்ற திறமைசாலிகள் ஏராளமாக
இருக்கிற காரணத்தால் அது ஏற்கெனவே சிறப்பாக வளர்ந்து
இருக்கிறது. வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தவரையில் கணக்
கிட்டு பார்ப்போமானால் கோவை மாவட்டத்தை மற்ற
மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது சிறந்த நிலையில்
தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.பி. ராஜு : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, புரட்சித் தலைவர் காலத்திலிருந்து இதே பதிலைத்
தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே தான் நாங்கள்
சொல்கிறோம். எங்கள் மாவட்டத்தை இன்னும் கொஞ்சம்
பாருங்கள் என்று சொல்கிறோம். கரிகால் சோழன் காலத்தில்
குளம் வெட்டியிருக்கிறார்கள்—அமைச்சர் அவர்களுக்கு நான்
சொல்கிறேன். அந்த குறிச்சிக் குளம், நீரோடை, நொய்யல் ஆறு
என்பதெல்லாம் சரித்திரப் புகழ் பெற்றவை. அதிலே நொய்யல்
ஆற்றில் இன்றைக்கு என்க்ரோச்மெண்ட் அதிகமாக இருந்து
கொண்டிருக்கிறது. தண்ணீர் வருகிறபோது அந்த குளங்களைத்
தூர் எடுத்து வைத்தால் நிலத்தடி தண்ணீர் உயரும். இன்றைக்கு
நாம் அம்மா அவர்களிடம் 10 கோடி, 20 கோடி என்று கேட்
கிறோம். குடிதண்ணீர் பிரச்சினை என்று எல்லா எம்.எல்.ஏ-க்
களும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணமே
நிலத்தடி நீர் இல்லாமல் இருப்பதுதான். நொய்யல் ஆற்றில்
தண்ணீர் வருகிறபோது குளங்களில் தண்ணீரைச் சேமித்து வைத்
தால், நிலத்தடி தண்ணீரை 50, 60 கி.மீ. தூரத்திற்கு, பொள்
ளாச்சி வரையில் கிணறுகளில் தண்ணீர் இருக்கும். குடிதண்ணீர்
பிரச்சினையும் இருந்திருக்காது. ஆகவே, தூர் எடுத்து குளங்
களை செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



குறிச்சிக் குளம் என்று பிரசித்தி பெற்ற குளம் இருக்கிறது.
அதற்கு தண்ணீர் வந்து கிட்டத்தட்ட 10 வருடம் ஆகிறது.
ஆகவே, அந்தக் குளத்தை தூர் எடுத்து வைத்தால் தண்ணீர்
வரும். அப்போது நிலத்தடி தண்ணீர் கிடைத்து எல்லா விவசாயி
களுக்கும் பயன்படும். குடிதண்ணீருக்கும் பயன்படும்.

அதைப்போல நொய்யல் ஆறு என்பது சரித்திரப் புகழ்பெற்ற
ஆறு. இந்த நொய்யல் ஆற்றில் இரண்டு பக்கமும் கரைகளை
உடைத்து அவரவர்கள் ஆக்கிரமிப்பு பண்ணிக் கொண்டிருக்
கிறார்கள். அதையெல்லாம் அகற்றி மழைக்காலத்தில் நொய்
யல் ஆற்றில் நீர் வருவதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது) இன்னும் பேசவே இல்லை. ஒரு நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறுக்கீடுகளில்
உங்கள் நேரம் போய் விட்டது.

திரு. கே. பி. ராஜு : நான்கு நிமிடங்கள் தான் ஆகியிருக்
கிறது. ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். பரம்பிக் குளம்-
ஆழியாறு என்பது முக்கியமான திட்டம். நாம் எத்தனையோ
கோடி கோடியாகத் திட்டம் போடுகிறோம். ஆனால், இதற்கு
நிரந்தர தீர்வு காண 120 கோடி ரூபாய்—ஐந்து வருடம், மூன்று
வருடத்தில், வருடத்திற்கு 20 கோடி போட்டாலும்—120 கோடி
ரூபாயில் செய்யலாம். நீராறு திட்டம் என்பது மேற்குத்தொடர்ச்சி
மலையில் நிறைய மழை பெய்து அந்தத் தண்ணீர் எல்லாம்
கேரளாவிற்குப் போய்க் கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரை
எல்லாம் பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்திலே சேர்த்தால்
நல்லது. அந்தத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை
உடனடியாக நிறைவேற்றினால் விவசாயிகளுக்கும் தண்ணீர்
கிடைக்கும். குடிதண்ணீர் பிரச்சினையும் தீரும் என்பதை
இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். அதற்கு 120 கோடி
ரூபாய்க்கு அப்போது திட்டம் போட்டிருக்கிறார்கள். இப்போது
5 கோடி, 10 கோடி அதிகமாகலாம்.

முற்பகல் 11-15

அதேமாதிரி கோவை, பேரூர் தொகுதியிலே சாவடிக்கு மேல்
புறத்திலே மலைப்பகுதிகள் இருக்கின்றன. எல்லாம் மலைப்பகுதி.
அந்த மலைப் பகுதியிலேயிருந்து, ஆற்றிலேயிருந்து வருகிற
தண்ணீர் எல்லாம் கேரளாவிற்குப் போய் விடுகிறது. ஆனால்,
இங்கே தென்னை மரங்கள் எல்லாம் காய்ந்து, குடிநீரும் இல்லா
மல், ஜனங்கள், சாவடிக்கு மேற்கே அந்தப் பகுதியிலே இருக்கிற
மக்கள் கஷ்டப்படுகிறார்கள். மதுக்கரைப் பகுதியிலே இருப்ப
வர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அங்கே ஒரு
நீர்த் தேக்கத்தைக் கட்டினால், அந்தப் பகுதியினுடைய விவசாயி
கள் நன்றாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்
துக் கொள்கிறேன்.

[திரு. கே. பி. ராஜூ] [1992 மார்ச் 31

அதேமாதிரி அத்திக்கடவு குடிநீர்ப் பிரச்சினை. இது உள் ளாட்சித் துறை அமைச்சரிடம் வந்தாலும், மின்சாரம் உங்களிடம் வருகிறது. இது ஒரு பெரிய திட்டம். இதைச் சாதாரண திட்டம் என்று சொல்லக் கூடாது. அதிலே கிட்டத்தட்ட 48, 50 டவுன் பஞ்சாயத்துக்கள், பேரூராட்சிகளின் மற்றுங்களின் கீழ் உள்ள விவசாயிகளுடைய பிரச்சினையை, குடிநீர்ப் பிரச்சி னையை, இது தீர்க்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை விரை வில் முடித்தால் நன்றாக இருக்கும்.

அதற்கு மேலே, பாண்டியாறு - புன்னம்புழா திட்டம். இது ஆண்டாண்டுக் காலமாக, 1957-லேயிருந்து, எங்கள் முன்னோர் கள் காலத்திலேயிருந்து பேசப்பட்டு வருகிற திட்டம். காங்கிரஸ் காரர்கள் பேசிப் பேசி, அவர்கள் விட்டுவிட்டார்கள். இப்போது நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த பாண்டியாறு - புன்னம்புழா திட்டம் என்பது ஒரு பெரிய திட்டம். கூடலூரிலே தேவாலா என்ற இடத்திலே பெரிய நீர்வீழ்ச்சி இருக்கிறது. அந்த நீர்வீழ்ச்சி அநியாயமாக கடலிலே போய் கலந்து கொண் டிருக்கிறது. நம் நாட்டிலே உற்பத்தியாகிற நீர் வீழ்ச்சி, கட விலே வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. சோழியாறு என்கிற இடத்திலே போய், கேரளாவிலே கலந்து கொண்டிருக்கிறது. இது ரொம்ப கால திட்டம். இதைப்பற்றி கேரள சர்க்காரோடு நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் பேசினால் நல்லது. பாண்டி யாறு - புன்னம்புழா திட்டம் என்பது அவ்வளவு பெரிய திட்டம். எந்தக் காலத்திலும் வற்றாத நீர் வீழ்ச்சி. அந்த வற்றாத நீர் வீழ்ச்சியிலே அணையைக் கட்டிக் கொண்டு வந்தால், அவினாசி, திருப்பூர், மேட்டுப்பாளையம், பவானிசாகர், கோயம்புத்தூர் போன்ற எல்லாப் பகுதிகளும் செழிப்பு அடையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இது அருமையான திட்டம். இந்த அருமையான திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடித்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பில்டிங்கிலே இப்பொழுது data போடுகிறார்கள். கட்டிடம் கட்டும் தொழிலாளர்களுக்கு பொதுப் பணித் துறை 25 ரூபாய், 30 ரூபாய்தான் அலவுன்ஸ் பண்ணுகிறார்கள். எந்த டிபார்ட்மென்டிலே போய்க் கேட்டாலும், பொதுப் பணித்துறை என்னென்ன நிர்ணயிக்கிறதோ, அதைத்தான் பார்முலாவாக வைத்து, செய்து கொண்டிருக்கிறார்கள். அதனாலே, இவர்க ளுடைய கூலியை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த data போடுகிறபோது—இந்தக் காலத்தில் 65 ரூபாய், 70 ரூபாய் ஒரு மேசனுக்கு— நாம் 25 ரூபாய் 30 ரூபாய்தான் என்று போட்டுக் கொடுக்கிறோம். எனவே இதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள், data போடுகிறபோது கொஞ்சம் அதிகமாகப் போட்டால்தான்



1992 மார்ச் 31] [திரு. கே. பி. ராஜூ]

மற்ற டிபார்ட்மென்டிலே இருப்பவர்கள் தருவார்கள். உள்ளாட் சித் துறையிலே போய்க் கேட்டால், பொதுப்பணித் துறையிலே என்ன சொல்கிறார்களோ, அதைத்தான் நாங்கள் நிர்ணயிக்கி றோம் என்று சொல்கிறார்கள். ஹவுசிங் போர்டிலே போய்க் கேட்டால், பி. டபிள்யூ. டி. என்ன நிர்ணயிக்கிறார்களோ, அதைத் தான் நிர்ணயிக்கிறோம் என்று சொல்கிறார்கள். மற்ற எந்த டிபார்ட்மென்டிலே போய்க் கேட்டாலும், பொதுப் பணித் துறை யினர் என்ன நிர்ணயிக்கிறார்களோ, அதைத்தான் நாங்கள் நிர்ணயிப்போம், அதைத்தான் நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். அந்த வகையிலே, இந்த dataவை எல்லாம் உயர்த்திக் கொடுத்து, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பொதுப் பணித் துறையின் சார்பாக பேசுவ தற்கு எனக்கு வாய்ப்பினை தந்த, துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கோரிக்கை எண்கள் 36, 37, 38, 39, 55, 56 மற்றும் 57 ஆகியவைகளின் மேல் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினைக் கூறிக் கொண்டு, ஒரு சில கருத்துக்களை உங்கள் முன்னாலே எடுத்து வைக்கலாம் என்று கருதுகிறேன்.

இன்றையதினம், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த பட் ஜெட்டில் கிட்டத்தட்ட 10 சதவீதம் ஒரே அமைச்சரின் கீழ் வருகிற நேரத்திலே, அவர்களுடைய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். இன்றைக்கு அவர்கள் கோரியிருக்கிற மொத்தத் தொகை, கிட்டத்தட்ட 601 கோடியே 29 லட்சத்து ஆயிரம் ரூபாய். ஆகவே, இவ்வளவு பெரிய ஒரு கோரிக்கையிலே ஆளுக்கு 10 நிமிடம் என்று சொல்வது குறுகிய நேரமாக இருக்கும். இருந்தாலும், மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்கள் சிறிது கருணை கூர்ந்து சில நிமிடங்களை அதிகரித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, சில கருத்துக்களை நான் இங்கே கூற முன் வருகிறேன்.

பொதுவாக அரசினுடைய கொள்கை என்று எடுத்துக்கொள் கிற நேரத்திலே, எல்லா மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலே டி.இ.இ. அலுவலகங்களும், இ.இ. அலுவலகங்களும் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையினை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்

டத்தினுடைய தலைநகரில் இந்தக் குறைபாடு இருப்பதாக என்னுடைய கவனத்திற்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களே கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதைப்போல, எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோரிக்கையினை நீங்கள் ஏற்று— இதுபோன்று பிற மாவட்டங்களினுடைய தலைநகரங்களிலே இந்தக் குறை இருக்கும் என்று சொன்னால்—அவற்றை நிவர்த்தி செய்து தந்திட வேண்டும் என்ற கோரிக்கையினை நான் முதலாவதாக வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-20

அதே போல எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரைக் கும் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்ற 'ஆர். ஆர்.' ரூரல் ரோட்சினுடைய உ. ச. அலுவலகம் அங்கே செயல்பட்டு வருகிறது. அதை அங்கிருந்து மாற்றி வேறு பகுதிக்கு கொண்டு செல்வதற் கான ஒரு திட்டம் இருப்பதாக அறிகிறேன். அதற்கான காரணத் தில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், குறைந்த பட்சம் ரூ. 2 கோடிக்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு டர்ன் ஓவர் ஆகவேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் நாங்கள் மாற்றி விடுவோம் என்று அரசு ஒரு கொள்கை எடுத்திருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் அங்கே உள்ள சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்த சூழ்நிலை யில் கிராமப்புறச் சாலைகள் முன்னேறாத சூழ்நிலையில் அரசு பணம் ஒதுக்கீடு அதிகமாக செய்யாத சூழ்நிலையில்தான் அங்கே பண வரவில்லை. எனவே நீங்கள் ரூ. 2 கோடிக்கு வேலை கொடுத்தாலும், ஆண்டு ஒன்றுக்கு அங்கே 10 ரூ. கோடிக்கு வேலை செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். பணம் இல்லாத காரணத்தினாலேதான் அங்கே பணி நடக்கவில்லை. ஆக பணம் இல்லை. பணத் தட்டுப்பாட்டினால் அரசினுடைய திட்டத்திற்கேற்ப செயல்படவில்லை என்ற காரணத்தை மாத்திரம் காட்டி, அங்கிருந்து மாற்றுவது என்று சொன்னால், அது ஒரு ஒர வஞ்சனையான முடிவாகத்தான் இருக்கும் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, நீங்கள் அதிகமான பணத்தை அதற்கு முதலீடு செய்கின்ற விதத்தில் அதிகமான பணத்தை எங்களுக்குத்தர வேண்டுமென்றும், எனவே அங்கிருக்கின்ற ம. ஈ. அலுவலகத்தை மாற்றக் கூடாது என்றும் எனது தாழ்மையான வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டமும் வளர்ச்சி அடைவதற்காக புதிய புதிய அலுவலகங் களை அந்தந்த மாவட்டத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று மாவட்டத்தைச் சார்ந்த நண்பர்கள் துடித்துக் கொண்டிருக்கிற காலக்கட்டத்தில், இருக்கின்ற ஒன்றை இழந்துநிற்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. எனவே நீங்கள் அதிலே கருணை கூர்ந்து எங்களுக்கு அதிக பண ஒதுக்கீடு செய்து, அந்த நிர்வாகத்தை அங்கே நிலைநாட்டிட வேண்டுமென்று மிகப்பணிவுடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்தபடியாக, சேனல்களைப் பொறுத்தவரைக்கும், கன்னியா குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, பட்டணங் கால், கோதையாறு இடங்களின் கீழ் பல சேனல்கள் இருக்கின் றன. அதிலே சிற்றாறு, பட்டணங்கால் பகுதியினுடைய பெரும் பகுதி எங்களுடைய தொகுதிக்கு உட்பட்ட அந்தப் பகுதியிலே இருக்கின்ற சேனல். இது பாரதப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டம். ஆனால் என்றைக்கு அந்தத் திட் டம் முடிவடைந்து விட்டதோ, அதற்குப் பிறகு இதுவரைக்கும் அந்தச் சேனலை செப்பனிட்டதாகவோ, தூர் எடுத்ததாகவோ, பராமரித்ததாகவோ, சிமெண்ட் தளங்கள் அமைத்ததாகவோ சொல்லமுடியவில்லை என்பதனை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதிலே வருகின்ற தண்ணீர் கடைமடைப் பகுதிகளுக்கு வந்து சேர்வதை இடையி லேயே அது வேஸ்டாக போய்க் கொண்டிருக்கிற சூழ்நிலையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். எனவே அந்தச் சேனலை செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அந்தப் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, கோதை யாறு போன்ற இப்படிப்பட்ட நீர் கொள்ளிடங்கள்—அந்த அணைகள் எல்லாம்—இதுவரை தூர் எடுக்கப்பட்டதாகவே தெரியவில்லை. எனவே அந்த அணையினுடைய ஏரிகளை கேச்மெண்ட் ஏரியா முழுவதுமாக தூர் எடுத்துத்தர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்திலே விளத் துறை லிப்ட் இரிகேஷன் என்ற ஒரு லிப்ட் இரிகேஷன் செயல்பட்டு வந்தது. மிகப் பிரமாதமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிரிடுகின்ற விதத்தில் அந்த லிப்ட் இரிகேஷன் செயல் பட்டு வந்தது. ஆனால் அது கிட்டத்தட்ட 10, 15 ஆண்டுகளாக செயல்படாமல் இருக்கின்றது. அதற்கு சேனல்கள் இருக்கின் றன. சரியாக இருக்கின்றன. லிப்ட் பண்ணக் கூடிய பம்ப் மாத்திரம் டேமேஜ் ஆகிவிட்ட காரணத்தினாலே அந்தத் திட்டமே பழுதடைந்திருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் பல கோடி ரூபாய் செலவு செய்து பொதுப் பணித் துறையை மேற்கொண்டிருக்கிற அமைச்சரவர்கள் இதை கவனத்திலே கொண்டு அந்த லிப்ட் இரிகேஷனை செப்பனிட்டுத் தருவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அந்தப் பகுதியில் சிற்றாறு, பட்டணங்காலில், செம்முதல் பகுதியில் கிள்ளியூர் ஊற்று வாய்க்கால் என்கிற அந்தப் பகுதியில் கடலிலே தண்ணீர் வந்து ஆண்டு முழுவதும், எந்த வழியாக இருந்தாலும், தண்ணீர் அதிலே ஊற்றெடுத்து, தண்ணீர் கடலிலே போய்க் கலந்து கொண்டிருக்கிறது. அதை பிளாக் செய்தோ, அல்லது சிற்றாறு பட்டணங்காலில் தண்ணீரை பம்ப் செய்தோ, செம்முதல் என்ற அந்தப் பகுதியிலிருந்து கிளைச் சேனலை அமைத்துத் தருவீர்கள் என்று சொன்னால், கிட்டத் தட்ட 1,000-க்கும் அதிகமான [illegible] புதிதாக விவசாயம்

செய்வதற்கான சாத்தியக் கூறு இருக்கிறது. அதன்மூலம் 19 குளங்களும் நிரம்புவதற்கு வாய்ப்பு உள்ளது. இதை நான் அன்று கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். சிறு விவசாயிகள் மூலம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அந்த லிப்ட் இரிகேஷனுக்கு நீங்கள் பிக்ஸ் பண்ணிக் கொடுத்தால் போதும். அதற்கான பராமரிப்புச் செலவு, கரெண்ட் செலவு ஆகியவற்றை அந்த சிறு விவசாயிகளே கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே அந்த லிப்ட் இரிகேஷனைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல் நெய்யாறு, இடதுகரை சேனலைப் பொறுத்தவரைக்கும் கேரள அரசின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வர வேண்டிய தண்ணீர் முழுவதையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். எப்படி நாம் காவிரியில் நம்முடைய ஜீவாதார உரிமையைக் காப்பாற்ற வேண்டி குரல் கொடுக்கிறோமோ, அதே போல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கேரள மாநிலத்திலிருந்து வர வேண்டிய தண்ணீரைப் பெறுவதற்கு நாம் தாங்கள் காட்டாமல் அங்கேயுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி, அரசு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெற வேண்டிய தண்ணீரைப் பெற்றுத் தந்திட வேண்டும். இன்னும் அதில் ஒரு குறைபாடு இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அவர்கள் தருகின்ற தண்ணீரை ஒட்டுமொத்தமாக தருவார்கள் என்று சொன்னால், அது கூட நம்முடைய சேனலில் முழுமையாக வருவதற்கு வாய்ப்பில்லை. காரணம் பராமரிப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அதையும் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நம்முடைய மாநிலத்தில் கன்னியாகுமரி மாவட்டம் ஒரு சிறு வித்தியாசமான சூழ்நிலையில் இருப்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய மாவட்டம் திருவாங்கூர் மாவட்டத்தோடு தாய் தமிழகத்தில் 1956-ல் இணைந்தது. ஆனால் அது எந்த செட்டப்போடு இணைந்ததோ அதோடு நிற்கிறது. அங்குள்ள பள்ளிகள் எல்லாம் போர்டின் கன்ட்ரோலிலோ அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் — யூனியன் கன்ட்ரோலில் நேரிடையாக அரசு பள்ளிகளாக அவை வரவில்லை. இவைகளைப் பராமரிக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு என்று பொதுப் பணித் துறையில் பண ஒதுக்கீடு செய்யாத ஒரு சூழ்நிலை பல ஆண்டுக்காலமாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே இதை ஊராட்சி ஒன்றியமும் பராமரிக்கவில்லை; அரசாங்கமும் பராமரிக்காத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளும் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்தப் பள்ளிகளை எல்லாம் பொதுப் பணித்



துறை தத்து எடுத்து அந்தப் பள்ளிகளை பராமரிக்க வேண்டுமென்ற மேலான கோரிக்கையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோல பல ஆண்டுகளாக எங்களுடைய மாவட்டத்தில் கிழக்கு கடற்கரை பகுதிகளை இணைக்கின்ற விதத்தில் கணபதியான் கடவு பாலம் என்ற பாலத்தை கட்ட வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது. அதற்கு பலமுறை எஸ்டிமேட் எடுத்தாகிவிட்டது. அப்படி எடுக்கின்ற நேரத்தில் எல்லாம் இறுதி காலக் கட்டத்தில் அது ஓமிஷன் ஆகிற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்தப் பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால் நாமக்கல்லிலிருந்து திருவனந்தபுரம் செல்லுகிற போக்குவரத்துகளில் பெரும் பகுதி இந்தப் பாலத்தின் வழியாகச் செல்ல முடியும். எனவே கணபதியான் கடவு பாலத்தை நீங்கள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விளவங்கோடு தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் கடையால் என்ற ஒரு பகுதியில் தெப்பக்கடவு என்ற பாலம் கட்டவேண்டுமென்று சொல்லி அந்தப் பகுதி மக்கள் நீண்ட காலமாக ஒரு கோரிக்கை வைத்து வருகிறார்கள். 4, 5 தினங்களுக்கு முன்னால்கூட ஒரு போராட்டத்தை நடத்தி 450 பேர்கள் ஆண்களும் பெண்களுமாக அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று போராட்டம் நடத்தி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே அந்த விளவங்கோடு தாலுக்காவில் தெப்பக்கடவு பாலத்தை அமைத்துத் தருவதற்கு முன் வரவேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கடல் அரிப்பைத் தடுக்கின்ற விதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடற்கரை பகுதியில் தடுப்புச்சுவர் - பெரிய கற்களைப் போட்டு - தடுப்புச் சுவர் எடுத்து வருகிறார்கள். அதிலே மிக முக்கியமாக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது எல்லாம் கடல் கொந்தளிப்பு நேரங்களில் — ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில்— எல்லாம் மீன் பிடிக்க போக முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் தூண்டில் வளைவு என்ற ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அமைத்துத் தந்தால் அதன் மூலம் எங்களுக்கு ஆண்டு முழுவதும் மீன் பிடிக்கச் செல்ல முடியும். அந்தக் கடல் அரிப்பிலிருந்து ஊரையும்

காப்பாற்ற முடியும் என்று சொல்லுகிறார்கள். அதிலே உங்களுக்கு பொருளாதார செலவும் அதிகமாக வராது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. காரணம் நீங்கள் பல கோடி ரூபாய் செலவழித்து கற்களை வரவழைத்து அந்தத் தடுப்புச் சுவரை கரை ஓரமாக கட்டி வருகிறீர்கள். அதே கற்களை வைத்துத்தான் தூண்டில் வளைவு கட்டித்தந்தால் நல்லது என்று சொல்லுகிறார்கள். அதனால் இப்போது உங்களுக்கு எவ்வளவு செலவு ஆகிறதோ அதே செலவுதான் ஆகுமே தவிர புதிதாக ஒன்றும் இல்லை. அதை நேராக கட்டுவதற்கு பதிலாக தூண்டில் வளைவு வைத்து - யு பிராக்கெட் வைத்து கட்டித்தந்தால் போதும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. எனவே இதை நீங்கள் கட்டிக் கொடுப்பீர்கள் என்று சொன்னால் பல ஆயிரக்கணக்கான மீனவ நண்பர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும். எனவே நீங்கள் கருணை உள்ளத்தோடு இதைக் கட்டித்தந்தது இந்த இணையம், புக்கந்துறை, ராமன் துறையை சேர்ந்த பகுதிகளில் வாழ்கிற லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்வுக்கு ஒளி ஏற்றுகின்ற விதத்தில் இதை அமைத்துத்தர முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக தமிழ்நாடு எரி சக்தி நிறுவனத்தின் சார்பில் அங்கே ஒரு கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே கிட்டத்தட்ட 700 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்த 700 பேர்களுமே 4, 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே பணியிலே நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் நியமிக்கப்பட்டபோது அவர்களுக்கு சம்பளமாக கொடுத்தது 7 ரூபாய்தான். இப்போது இந்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்கு 20 ரூபாய் சம்பளமாக கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களை பணியிலே நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அதிகமாக வலியுறுத்தி வருகிறார்கள். எந்த நேரத்திலே வீட்டுக்கு அனுப்பிவிடுவார்களோ என்ற அச்ச உணர்வோடு தினமும் வருகிறார்கள். எனவே அந்த கூட்டுறவுச் சங்கங்களிலே பொதுப் பணித் துறையிலே பணியாற்றி வருகிற, மிக ஏழ்மையான சூழ் நிலையில் வாழ்கிற அந்த 700 பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு நமது பொதுப்பணித் துறையில் பணியாற்றி வருகிற பொறியியல் வல்லுநர்கள், டிப்ளமோ ஹோல்டர்ஸ், சிவில் என்ஜினியர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் பணி நிரந்தரம் இல்லாத சூழ்நிலையில் அவர்கள் வாழ்வு இருண்டு கிடக்கிறது. அவர்கள் ஒளி மயமான எதிர்காலத்தை எதிர் நோக்குகிற அதே நேரத்தில் அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அவர்கள் எதிர்



164973

நோக்கி இருக்கிறார்கள். உங்களுடைய மேலான உத்திரவின் அடிப்படையிலே அவர்கள் பணியிலே நிரந்தரம் செய்யப்பட்டால் அவர்கள் வாழ்வு ஏற்றம் பெறும், என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இன்னும் ஒரே ஒரு பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய பொதுப்பணித் துறையிலே பல லட்சம் ரூபாய்களுக்கு மெஷினரிஸ் வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால் கான்டிராக்டுகள் கொடுக்கிற சூழ்நிலையில் அந்த இயந்திரங்கள் பழுதடைந்த நிலைமையில் இருப்பதாக எனக்கு தகவல் தெரிவித்தார்கள். எனவே நாம் முடிந்த அளவுக்கு அந்தப் பணிகளை நமது நிர்வாக இயக்குநர்களை வைத்து, பொறியியல் வல்லுநர்களை வைத்து வேலைகளைச் செய்வோம் என்று சொன்னால் வாங்கப்பட்ட இயந்திரங்கள் கூட பழுதடைந்து போகாமல் பாதுகாக்க முடியும். எனவே நீங்கள் வாங்கிய பல கோடி ரூபாய் பெருமானமுள்ள இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற விதத்தில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-30

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே வந்து இருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகள் பாசனம், கட்டிடங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், கட்டிடப் பணிகள் பிரிவுகள் இதுபோன்ற ஒரு முக்கியமான பொதுப் பணித்துறையினுடைய மானிய கோரிக்கைகள் மீது பேசுவதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வருகிறேன்.

குறிப்பாக இந்தத் துறைகள் வருமானம் இல்லாத துறைகள். செலவினங்கள் மட்டும் செய்கின்ற ஒரு துறை. மட்டுமல்ல, பொதுவாக வெள்ளையன் ஆட்சிக் காலத்திலிருந்து மாற்றம் இல்லாமல் அப்படியே செயல்பட்டுக்கொண்டிருக்கிற துறை என்று சொன்னால் அனேகமாக நமது பொதுப்பணித் துறைதான். இந்தத் துறையில் சில மாற்றங்களைக் கொண்டு வருவதோடு பல்வேறு இடையூறுகளைச் சந்திக்கின்ற ஒரு துறை என்று சொன்னால் அது இந்த பொதுப்பணித் துறைதான். பொதுவாக இன்றைக்கு இருக்கக்கூடிய நாட்டு மக்களுடைய

D
V211, 31'N92 N92-21-3

[திரு. ஜி. பழனிசாமி] [1992 மார்ச் 31

நலன்களைப் பெரிதும் பேணிக் காப்பதிலே இந்தத் துறை என்பது மிக அவசியமாகிறது. நாட்டு மக்களுடைய நீர் வளத்தை பாதுகாத்து மக்களுடைய வாழ்வுக்கு பிரதான மாக, முன்னோடியாகத் திகழ்கிற துறை என்று சொன்னால் அது இந்தப் பொதுப்பணித் துறைதான். சிறிதளவு கலனம் குறைவாக இருந்தால்கூட மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகும். இந்தத் துறையில் இன்றைக்குக்கூட தமிழகத்திலே பல ஆண்டு காலமாக நமக்கு மிகப்பெரிய இன்னல்களுக்கும், சோதனைகளுக்கும் உள்ளாகி இருக்கக் கூடிய காவிரி நதிநீர்ப் பிரச்சினை.

அனேகமாக 25-6-1991 ஆம் ஆண்டு காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டு இன்றைய தினம் நமக்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக் கிறது. இன்றைக்கு தொடர்ந்து மத்திய அரசு அதிலே பல்வேறு பிரச்சினைகளை பரிசீலனை செய்து காவிரி நதி நீர்ப் பிரச்சினையை தீர்த்து நீர் வழங்குவதற்கு உண்டான முயற்சிகளில் இதுவரையில் மத்திய அரசு கவனம் செலுத்த வில்லை. இதற்கு மாறாக தமிழகத்தில் இருக்கக்கூடிய காவிரி நதி நீர்ப் பிரச்சினையையும் தமிழ்நாட்டு மக்களையும் வஞ்சிக்கின்ற முறையில் மத்திய அரசில் இருக்கிற காங்கிரஸ்கட்சி ஆட்சி இன்றைக்கு புறக்கணித்துக் கொண்டிருக்கிறது. ஆகையினால் தான் இதை.....

திரு. ஆர். சிங்காரம் : பாயின்ட் ஆப் ஆர்டர். வஞ்சிக்கிறது என்று சொல்லுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் ?

திரு. ஜி. பழனிசாமி : இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் வரவில்லை. (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, தவறான முறையில் சொல்கிறார். காவிரி பிரச்சினை குறித்து தமிழக அரசு அதனுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சி தலைவி அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி— அதனுடைய தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர் களும், நாங்களும் ஒட்டுமொத்தமாக அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு முகமாக நின்று இன்று மத்திய அரசு தொடங்கினாலும் அதை தட்டிக் கேட்கின்ற அளவுக்கு அத்தனை பேரும் ஒரே குரல் கொடுத்தோம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதை நீங்கள் சொல்லவேண்டும். (குறுக்கீடு)



1992 மார்ச் 31]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மத்திய அரசு வஞ்சிக்கிறது என்று சொல்லுகிறார், அது என்ன பேச்சு ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தவிர, பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன சொல்கிறார், அதற்கு வாருங்கள். என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம் : நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுகிறார் ; வஞ்சிக்கிறது என்று சொல்லு கிறார், அது என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவருடைய கருத்து. எந்த வகையில் வஞ்சிக்கிறது என்று சொல்லுகிறார் என்பதைக் கேட்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. எச். எம். ராஜு : உண்மைக்கு மாறாகச் சொல்லக் கூடாது, அதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. திரு. ஜி. பழனிசாமி பேசுங்கள். (குறுக்கீடு) குறுக்கீடாகவே போய்க் கொண்டிருந்தால் இன்றைக்கு முடிக்க முடியாது. (குறுக்கீடு) வஞ்சிக்கப் படுகிறது அது தவறு என்று சொல்லுகிறார், அதற்குரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டுப் போகிறார், இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே, நான் சொல்லுவது என்பது ஜனாதிபதி அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களை அழைத்து ஆலோசனை நடத்தி னார்கள். பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மாநில முதலமைச்சர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்களுக்கு எந்த ஒரு தீர்வும் காவிரி நதி நீர்ப் பிரச்சினை யில் தீர்க்கப்படவில்லை. அதற்கு மாறாக கர்நாடகத் திற்கு சாதகமாகவே மத்திய அரசு தொடர்ந்து செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

திருமதி ரமணி நல்லதம்பி : இப்படிக் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசும் போது அதற்கு மறுப்புச் சொல்லலாம். (குறுக்கீடு) இப்போது நடந்து இருப்பது கர்நாடகத்திற்குச் சாதகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார், அதற்கு நீங்கள் மறுப்புச் சொல்ல லாம். உட்காருங்கள்.

முற்பகல் 11-35

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டியது எதுவும் இல்லை. (குறுக்கீடு) அவர் சொன்னது தவறான தகவல். இது தான் சரி என்று நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, அவர்கள் திட்டவட்டமாக எதிலும் சொல்வதில்லை. காவிரிப் பிரச்சினையிலே அவர்கள் கோழைத்தனமாகச் சொல்கிறார்கள். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இந்தப் பிரச்சினையில் இரட்டை வேடம் போடுவது போன்று இருக்கிறது. கர்நாடக அரசு தண்ணீர் வழங்காததைக் கண்டிக்கிறபோது........

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள் என்று சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு சந்தர்ப்பம் வருகிறபோது நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) அதாவது ஒரு உறுப்பினரைக் குறிப்பிட்டு ஏதாவது சொன்னால்தான் வருமே தவிர, ஒரு பாலிசி டெசிஷன் பற்றிச் சொல்லும்போது அதிலே ஒன்றும் தவறுகிடையாது. உட்காருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்கு நதிநீர்ப் பிரச்சினையிலே .

திரு. ஆர். சிங்காரம் : பாய்ன்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதிலே வராது. நீங்கள் பேசுகிறபோது பதில் சொல்லலாம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி நண்பர்கள்கூட இங்கே கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறார்கள். தமிழகத்திலே



மாண்புமிகு மரியாதைக்குரிய வாழப்பாடி அவர்கள்மத்தியிலே மந்திரி பதவியை ராஜிநாமா செய்ததாகவும்........
(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி, நீங்கள், ராஜிநாமா செய்ததைப் பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டு இருந்தால், நன்றாக இருக்காது. அதற்காக, நீங்கள் கட்சிப் பிரச்சினைகள், நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் பேசுவது சரியல்ல. நீங்கள் காவிரிப் பிரச்சினையோடு உங்களுடைய கருத்துக்களை நிறுத்துங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ராஜிநாமா பற்றியெல்லாம் பேசுகிறார். கர்நாடகத்திலே உள்ள சி.பி.ஐ. கட்சி இதில் என்ன செய்தது ? ஆகவே, அவர் சொன்னதையெல்லாம் அலவ் பண்ணக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே அதுகூடாது என்று சொல்லியிருக்கிறேனே. நீங்கள் பேசும்போது சொல்லலாம். (குறுக்கீடு) நீங்களும் அவருமே பேசிக்கொண்டிருக்கிறீர்கள். விவாதத்திற்குப் போக வேண்டாம் என்றால் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியைப் பற்றிப் பேசியதற்கு நீங்கள் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் அனுமதிக்கலாம். இல்லையென்றால் அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) திரு. மா. சுந்தரதாஸ் உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நமக்கு சட்டத்தின் ரீதியாக, நியாயத்தின் ரீதியாக தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பின்னாலும்கூட, நியாயம் கிடைக்காத ஒரு சூழ்நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. தமிழகம் முழுமையும் தஞ்சை மாவட்ட காவிரிப் பாசனப் பகுதிகளில் விவசாயிகள் கொந்தளிப்பாடு இருக்கிறார்கள். குறிப்பாக, அந்தப் பிரச்சினையில் மத்திய அரசு உடனடியாக தீர்வு காணுவதற்கு, தமிழகத்திலே இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கூட்டி மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனி சாமி உட்காருங்கள். திரு. மா. சுந்தரதாஸ், இதிலே என்ன பிரச்சினை (குறுக்கீடு) எதன்கீழ் பேசவேண்டு மென்று சொல்கிறீர்கள் ? எந்த முறையில் நீங்கள் எழுப்புகிறீர்கள் என்பதைத் தயவுசெய்து சொல்லுங்கள். பாயின்ட் ஆப் ஆர்டரா ?

திரு. மா. சுந்தரதாஸ் : பாயின்ட் ஆப் கிளாரிபி கேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்றால் அவர் யீல்டு ஆனால்தானே அனுமதிக்க முடியும் ? அவரே யீல்டு ஆகவில்லை என்கிற போது நான் என்ன செய்ய முடியும் ? (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் நான் அவரை உட்காரச் சொல்லிவிட்டு உங்களுக்கு அனுமதி கொடுக்கலாம். (குறுக்கீடு) இப்படியே விவாதம் போவதாக இருந்தால் நீங்கள் இரண்டு உறுப்பினர்களைக் குறைத்துக்கொண்டு எனக்கு இந்த அவையை நடத்த அனுமதியுங்கள். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் நீங்கள் இப்போது பேசுங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) நீஙகள் பேசியதை பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல் கிறீர்கள். நான் நீங்கள் பேசியதை பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகும் ஒரு உறுப்பினரைப் பேச விடாமலேயே இருப்பது என்பது அவை மரபு அல்ல.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தையோ பிரதம மந்திரியையோ இந்த அவையிலே குற்றம் கூறி பேசுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. நேரிடையாக அவர் ஒரு குற்றம் சுமத்துகிறார். அதை நீங்கள் எப்படி அனுமதிக்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினையைப் பற்றி அவர் பேசுகிறபோது, இந்தப் பிரச்சினையில் நமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்,

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அது நியாயம் கிடையாது. அதை ஏற்றுக்கொள்ள முடியாது. I am sorry to tell you. We will not accept it. He cannot charge the Prime Minister.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படிப் பேசினால் ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேச முடியாமல் போய்விடும். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினையில் நமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று பேசுவதற்கு அவருக்கு உரிமை உண்டு. (குறுக்கீடு) பிரச்சினை தமிழ்நாட்டுப் பிரச்சினை. தமிழ்நாட்டுப் பிரச்சினையில் நமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று அவர் சொல்கிறார். (குறுக்கீடு) அவர் அதைத்தான் பேசுகிறார். நீங்கள் உட்காருங்கள். நான் அவரைப் பேசச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) ஒரு உறுப்பினர் தமிழ்நாட்டுப் பிரச்சினையில் நமக்கு நியாயம் கிடைக்க வில்லை என்று பேசுகிறபோது....(குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயம் கிடைக்கவில்லை என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. கர்நாடகத்திற்குச் சாதகமாக நடக்கிறது என்று சொல் கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவருடைய கருத்து. அந்தக் கருத்துக்கு நீங்கள் மறுப்புச் சொல்லலாம். (குறுக்கீடு) அது தவறான கருத்து என்று நீங்கள் சொல் லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்

முற்பகல் 11-40

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தவறான கருத்து அவைக் குறிப்பிலே ஏறக் கூடாது என்று சொல் கிறேன். தவறான கருத்து அவைக் குறிப்பிலே இருப்பது சரியல்ல. மத்திய அரசாங்கத்தின் மீது, குறிப்பாகப் பிரதமரின் மீது நம்முடைய மாநிலத்திற்கு எதிராக, இன்னொரு மாநிலத்திற்குச் சாதகமாகச் செயல்பட்டார் அல்லது அவர்களுக்குச் சாதகமாக இருந்தார் என்று குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அவர்கள் இதுகுறித்துப் பேச வேண்டுமென்றால் பேச வேண்டிய இடம் மக்கள் சபை இருக்கிறது ; அங்கே பேசலாம் ; மாநிலங்கள் அவை இருக்கிறது ; அங்கே பேசலாம் ; அங்கேயெல்லாம் விட்டுவிட்டு - அங்கே அவர்கள் வேறு விதமாக அவர்களுடைய கட்சிக்காரர்கள் வேறு குரலிலே பேசுகிறார்கள். இங்கே வந்து நம்முடைய பிரதமர் நம்முடைய மாநிலத்திற்கு எதிராக, கர்நாடகத் திற்குச் சாதகமாகச் செயல்படுகிறார் என்று சொல்வது பிரச்சினை தீர்வதற்குக் கூடப் பயன்படாது. வேண்டு மென்றே குற்றம் சுமத்துவதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது. அவற்றை அவைக் குறிப்பிலேயிருந்து அகற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பி
லேயிருந்து நீக்குவது என்பதைப் பொறுத்த வரையில் ஆளுநரை
யோ அல்லது ஜனாதிபதியையோ குறிப்பிடுகிறபொழுது இத்த
கைய குற்றச்சாட்டுகள் கூடாது என்று இருக்கிறது. மத்தி
அரசாங்கத்தின் மீது........

திருமதி ரமணி நல்லதம்பி : பிரதமரைச் சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பிரதமரைப்
பற்றிச் சொல்லவில்லை. மத்திய அரசைப் பற்றிச்
சொல்கிறபொழுது........

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அவையில்
இல்லாதவரைப் பற்றிப் பேசலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசைப்
பற்றிச் சொல்கிறபொழுது, அவர் பேசியதில் தனிப்பட்ட
பிரதமரைப் பற்றிப் பேசவில்லை. (குறுக்கீடு) நான் அதை
அவைக் குறிப்பிலேயிருந்து பார்க்கிறேன். அவைக் குறிப்
பிலேயிருந்து உங்களுக்குப் படித்தே காட்டுகிறேன். அதை
அவரையே நான் திரும்பச் சொல்லச் சொல்கிறேன்.
பிரதமரைப் பற்றித் தனிப்பட்ட முறையில் அவர் சொல்ல
வில்லை. தனிப்பட்ட குற்றச்சாட்டாக இருந்தால் நான்
அதை அனுமதித்திருக்க மாட்டேன். மத்திய அரசாங்கத்
தின் மீது தமிழ்நாட்டுப் பிரச்சினை ஒன்றுக்காக அவர்
சொல்கிறபொழுது அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க
வேண்டுமென்பதற்கு என்ன விதி இருக்கிறது என்பதை
எதிர்க்கட்சித் தலைவர் சொன்னால் கேட்டுக் கொள்கிறேன்.
(குறுக்கீடு) தனிப்பட்ட முறையில் ஒருவர்மீது குற்றச்சாட்டு
என்று இருந்தால், நீங்கள் சொல்வது அவையில் இல்லாத
ஒருவரைப் பற்றிப் பேசுகிறபொழுது இருக்கக் கூடாது
என்பது. பாரதப் பிரதமர் என்பவர் மத்திய அரசாங்கத்
தின் தலைவர்.

திருமதி ரமணி நல்லதம்பி : மத்திய அரசாங்கத்
தினுடைய தலைவர் என்றால் குற்றம் சுமத்தலாம் என்று
பொருளா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி பிரச்சினையைப்
பற்றிப் பேசுகின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு



உறுப்பினர்கள் மிகவும் கவனத்தோடு பேசுவது நல்லது
என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.
காவேரிப் பிரச்சினை என்பது இன்றைக்கு நம்முடைய
உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு உரிமை இருக்கின்ற
நேரத்திலே, இன்றைக்கு அந்தப் பிரச்சினைக்கு நமக்குப்
பங்கம் வந்து விடாத அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர்கள்
பேச வேண்டும். அதே நேரத்திலே நம்முடைய
மாநிலத்திற்கு இருக்கின்ற பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டு
கின்றபோது அந்தப் பிரச்சினைகளையும் நாம் மன
பலத்தோடு ஏற்றுக் கொள்ளுகின்ற அந்த மனப் பக்கு
வத்தைப் பெற்றாக வேண்டும் என்ற அந்த உணர்வோடு
இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப்
பிரச்சினையை இதோடு விட்டு இந்தப் பிரச்சினைக்குத்
தீர்வு காண்கின்ற பொறுப்பினை இன்றைக்கு மாண்புமிகு
நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், இன்றைக்கு
அந்தப் பிரச்சினைக்கு உரிய விளக்கங்களையெல்லாம் நான்
பேசுகின்ற நேரத்திலே தெரிவிக்கிறேன் என்பதைச் சொல்லி,
மற்றக் கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி
அவர்கள் பேசவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் யாரையும் குற்றம் சொல்ல வேண்டும்
என்பதற்காக இல்லை. தமிழ்நாட்டினுடைய உரிமைக்காக
நான் சொல்கிறேன். உரிமைக்காக நான் பேசுகிறேன்.
இது தமிழ்நாட்டினுடைய உரிமைப் பிரச்சினை. காவிரி
நதியினுடைய பிரச்சினை. நான் ஒன்றை குறிப்பாக
இந்தச் சந்தர்ப்பத்திலே நம்முடைய பேரவைத் தலைவரவர்
களுடைய கவனத்திற்கும், அமைச்சருடைய கவனத்திற்கும்
ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே உணவு தானிய உற்பத்தி 14 இலட்சம்
டன் உற்பத்தி செய்ய வேண்டுமென்று அரசினுடைய
கணக்கு நிர்ணயித்திருந்தபோதும் கூட, காவேரி பாயக்
கூடிய பாசனப் பகுதியில்தான் தஞ்சை, காயிதே மில்லத்
மாவட்டத்திலேதான் 11 இலட்சம் டன் நெல் கொள்முதல்
செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்தினுடைய உணவு தானிய
உற்பத்தி. தமிழ்நாட்டு மக்களை அடுத்த மாநிலத்தில்
கையேந்தாமல் பாதுகாப்பது என்பது தஞ்சை மாவட்டத்
தினுடைய உயிர்நாடியான பிரச்சினை. இந்தப் பிரச்சினை
இல்லை என்று சொன்னால் எதுவுமே இல்லை என்கிற
நிலை இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் அந்தப்
பிரச்சினையில் காலம் தாழ்த்துவது என்பது சரியல்ல.
தொடர்ந்து நமது மாநில அரசும் தமிழகத்திலே இருக்கிற,
நல்லெண்ணம் கொண்டிருக்கிற அனைத்து அரசியல் கட்சி

களும் சேர்ந்து இந்தப் பிரச்சினைக்கு விரைவிலே தீர்வு காண வேண்டும். இல்லையென்று சொன்னால் இது காலம் கடந்து இராமர் வனவாசம் சென்றது போன்று ஆகிவிடக் கூடாது என்று சொல்லி இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல; அங்கே காவிரி நதிநீர் பிரச்சினை எழுந்தபோது கர்னாடகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்கள் பலபேர் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உயிரை இழந்திருக்கிறார்கள். உடைமையை இழந்திருக்கிறார்கள். வீடுகளை இழந்திருக்கிறார்கள். கடைகளை இழந்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் நிர்க்கதியாக நிற்கிறார்கள். நம்முடைய மாநில அரசு, கர்னாடகத்திலே இருக்கக்கூடிய தமிழக மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் வழங்கி, வந்த மக்களை பாதுகாத்து இருக்கிறது. ஆனால், கர்னாடகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு எந்தவொரு பாதுகாப்பும், இன்றைய தேதி வரையிலும் வழங்கவில்லை. இது மிகப்பெரிய அநியாயம். ஆகையால்தான், கர்னாடக அரசு வழங்குவதாகக் கூறினார்களே அதை வழங்கவில்லை; அந்த மாநில அரசு அவர்களுக்கு பாதுகாப்புத் தருவதாகக் கூறினார்கள்; இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (குறுக்கீடு)

முற்பகல் 11-45

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்; எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலைத் தொடர்ந்து தருவதே தன்னுடைய பணியாக அவர் கொண்டிருக்கிறார். என்றையதினம் இந்த வன்முறை வெடித்ததோ அன்றையதினமே நான் பிரதமரைச் சந்தித்து இருக்கிறேன். அன்றையதினமே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பிரதமரோடு தொலைபேசியிலே தொடர்பு கொண்டிருக்கிறார்கள். நான் சந்தித்த அன்று மாலையே மத்திய ரிசர்வ் போலீஸை மத்திய அரசாங்கம் கர்னாடகத்திற்கு அனுப்பியது. ஆக, எந்தப் பாதுகாப்பும் கொடுக்கவில்லை; எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவது முறையல்ல. மீண்டும் மீண்டும் இந்தப் பிரச்சினையிலே தீர்வு வரக் கூடாது; பிரச்சினை உயிரோடு இருக்க வேண்டும் என்று முன்பிருந்தவர் நினைத்ததுபோல, அவர் நினைக்கிறார்.



அதைத்தான் அவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாரே தவிர அவர் சொல்கிற தகவல்கள் தவறான தகவல்கள். மத்திய அரசாங்கம் பல நடவடிக்கை எடுத்திருக்கிறது. நேற்றயைதினம் கூட பிரதமர் அவர்கள், எம்.பி.-க்கு எழுதிய கடிதம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அங்கே இருக்கிற அடிபட்டவர்களுக்கெல்லாம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று பிரதமராலேயே அறிவுறுத்தப்பட்டு அவர்கள் நஷ்ட ஈடு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர் அதை வழங்க வேண்டாம் என்று நினைக்கிறார்போல் இருக்கிறது. அதைத்தான் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார். தவறான தகவல்களை உறுப்பினர் தொடர்ந்து தருவதற்கு நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி உங்களுடைய நேரம் முடிந்து வெகுநேரம் ஆகிவிட்டது. வேகமாகப் பேசி, ஒன்றிரண்டு நிமிடங்களுக்குள் முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை ஒரு பிரச்சினைக்குள்ளேயே திரும்பத் திரும்பப் போய்க் கொண்டிருந்தால்........

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் 'டைமை' வீணாக்கக்கூடாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு உறுப்பினரே ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டு, எங்களுக்கும் ஆளுங்கட்சிக்கும் பேசுவதற்கு வாய்ப்பைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கர்னாடகத்திலே அவருடைய கட்சியின் நிலை என்ன? சொல்ல ரெடியாக இருக்கிறீர்களா? That he has to tell in this House அவருடைய கட்சியின் நிலை என்ன? பழனிசாமி அவர்கள் தெளிவாக விளக்க வேண்டும். அல்ல

இந்தியக் கட்சியாக இருக்கிற அவருடைய கட்சியின் நிலை,
கர்னாடகத்திலே என்ன என்பதைச் சொல்வதற்கு அவர்
ரெடியாக இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனி
சாமி, நான் முதலிலேயே சொன்னேன். குறுக்கீடு வருவது
போல பேசினால் அது உங்களுடைய நேரத்திலேதான்
சேரும். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த அவையிலே மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித்
தலைவர் கூட, அன்றைய தினத்திலே கர்னாடகத்திற்குச்
சென்று, பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக பார்த்து
வந்திருக்கிறார்கள். அந்தக் கொடுமைகளை ஆராய்ந்து
வந்து இந்த சபையிலே அறிவித்திருக்கிறார்கள். பத்திரி
கையிலே ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்பதிலே
நியாயமில்லையா ? இதைக் கேட்கக் கூடாதா ? இது
வரையிலும் அந்த அரசு வழங்கவில்லை ; அதைக் கேட்கக்
கூடாதா ? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து
உட்காருங்கள், திரு. மா. சுந்தரதாஸ், இது தவறான
முறை. எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நடவடிக்கையே
எடுக்கப்படவில்லை என்று சொல்வது அபாண்டம். அன்றே
நான் கூறியிருக்கிறேன், என்ன நடவடிக்கை எடுக்கப்
பட்டிருக்கிறது என்று. ஆனால், விரிவாக நான் அதைச்
சொன்னால், எதிர்க்கட்சித் தலைவரே உங்களுடைய
சட்டசபையிலே பேசிவிட்டார் ; அனைத்தையும் செய்
திருக்கிறோம் என்று பேசிவிட்டார் ; நீங்கள் ஏன் இவ்வாறு
பேசிக் கொண்டிருக்கிறீர்கள் ! என்று நாளையே
அங்கே அதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதாலே
நான் அதைச் சொல்லவில்லை. நிச்சயமாக நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மேற்கொண்டு எடுக்கப்
பட வேண்டும் என்பதுதான் ... நம்முடைய கோரிக்கை.
அதைக் கெடுப்பதற்கு என்னென்னவெல்லாம் பேச
வேண்டுமோ, அதை நண்பர் பேசிக் கொண்டிருக்கிறார்.
அவ்வாறு பேச வேண்டாமென்றுதான் நான் கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனி
சாமி, தயவுசெய்து இந்தப் பிரச்சினையில் மிகவும் உள்ளே
போய்ப் பேசினீர்கள் என்றால், அது நமக்குப் பாதக
மாகக்கூட வரும் ; நீங்கள் முதலிலே சொன்னபடி, இது





நமக்குச் சாதகமாக இல்லை ; நமக்குப் பாதகமாக இருக்
கிறது என்று ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறீர்கள்.
அந்த அளவோடு நிறுத்துவது நல்லது. (குறுக்கீடு) இல்லை.
அந்த அளவோடு நிறுத்துவது நல்லது ; சீக்கிரம் முடி
யுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : நான் சொல்வது என்பது
பாதகமாக சொல்லவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு,
கர்னாடக அரசோ, மத்திய அரசோ அங்கு நிவாரணம்
வழங்கவில்லை என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் வழங்கப்
பட்டது என்றுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் வழங்கப்
பட்டது என்று சொல்கிறார். நீங்கள் வழங்கப்படவே
யில்லை என்று சொல்கிறீர்கள்.

திரு. ஜி. பழனிசாமி : அப்படி என்று சொன்னால்,
நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா ?
நம்முடைய அரசுக்குத் தெரியாதா ? (குறுக்கீடுகள்)

டாக்டர் தே. குமாரதாஸ் : யாருக்கு வழங்கினீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமார
தாஸ் உட்காருங்கள். அது உங்களுக்கு சம்பந்தம்
இல்லாதது. அவர் பேசுகிறார். அவர் பேசியதற்கு எதிர்க்
கட்சித் தலைவர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) டாக்டர்
குமாரதாஸ் நீங்கள் நடந்துகொள்வது சரியல்ல ; உட்
காருங்கள். (குறுக்கீடு) தயவு செய்து நீங்கள் உட்காருங்கள்
நான் திரு. ஜி பழனிசாமியைப் பேச அழைக்கிறபோது
டாக்டர் குமாரதாஸ் எழுந்திருக்கக்கூடாது. திரு. ஜி.
பழனிசாமி பேசுங்கள் ; சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு)
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் 11.50

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆதாரத்தோடு
நான் பேசுகிறேன் என்று கேட்கிறார். நான் பாதிக்கப்
பட்ட பகுதிகளிலே சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன்.
காடு காடாக, தோட்டம் தோட்டமாக, பாதிக்கப்பட்ட
குடிசைகள், பாதிக்கப்பட்ட சாலைகள் அனைத்தையும்
பார்வையிட்டு வந்து நான் பேசுகின்றேன். அந்த ஆதாரத்தை
வைத்துக் கொண்டுதான் பேசுகின்றேன். நான் அங்கே
இருந்த நாட்களிலே பலபேருக்கு வழங்கப்பட்டதை நான்

நேரிலே பார்வையிட்டு, அவர்களுடைய குறைகள் என்ன என்பதைக் கேட்டுக் கொண்டு, பக்கத்திலே அதிகாரிகளை வைத்துக் கொண்டு ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காசோலைகள் வழங்கப்பட்டபோது அதைப் பார்த்ததாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் கேட்க விரும்புகின்ற கேள்வி, இந்த நஷ்டயீட்டை நிர்ணயம் செய்தது யார்? நானே டெல்லிக்குச் சென்று, பிரதமர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் கலந்து கொண்டு, இங்கே நான் தமிழ்நாட்டிற்குத் துரோகம் செய்துவிட்டேன் என்ற அவப் பெயரையும் அபாண்டப் பழியையும் நான் சுமந்து கொண்டு, பிரதமர் அவர்கள் மீது நான் வைத்திருந்த மரியாதையின் காரணமாக அவர் கூட்டிய கூட்டத்தில் கலந்து கொண்டு, மற்ற மாநில முதலமைச்சர்களோடு, கர்நாடக முதலமைச்சரோடு பேசுவதற்கு நான் சம்மதித்தேன் பிரதமர் அவர்கள் முன்னிலையில். அந்தக் கூட்டத்திற்கு நான் ஒப்புக்கொண்டேன் என்பதற்காக, இங்கே, தமிழகத்தில் என்மீது அபாண்டப் பழிகள் சுமத்தப்பட்டன. நான் தமிழகத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டேன். துரோகம் செய்துவிட்டேன் என்றெல்லாம் சொன்னார்கள். அங்கே நான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது மீண்டும், மீண்டும் வலியுறுத்திய, மிகப் பிரதானமான ஒரே விஷயம், ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியை நியமனம் செய்ய வேண்டும். அந்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிதான் பாதிக்கப்பட்ட கர்நாடகத் தமிழர்களின் நஷ்டங்களையெல்லாம் மதிப்பீடு செய்ய வேண்டும். அதன்படி அந்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிதான் யார் யாருக்கு எவ்வளவு நஷ்டயீடு வழங்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு கர்நாடக முதல்வரும் ஒப்புக் கொள்ளவில்லை. பிரதமர் அவர்களும் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே இந்த நஷ்டயீட்டை யார் நிர்ணயம் செய்தது? எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள்? யார் யாருக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் இங்கே சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, கொடுத்தது போதுமானது இல்லை என்று நான் இங்கே பேசியிருக்கிறேன். இன்னும் கொடுக்க வேண்டும். முறையாக அவற்றை விசாரிக்க வேண்டும். அதற்கான நீதிபதி விசாரணை நடத்த வேண்டும் என்பதையெல்லாம் நான் ஒப்புக்கொண்டிருக்கிறேன். ஆனால் எதையுமே செய்யவில்லை. பிரதமர் எதையுமே கேட்கவில்லை என்ற தொனி நமக்கு நன்மை பயக்காது. அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழகத்தில் நான் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். அப்போது எடுக்கப்பட்ட முடிவு, நிறைவேற்றப்பட்ட தீர்மானம், 'ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியை, அதுவும் சிட்டிங் சுப்ரீம் கோர்ட் நீதிபதியை நியமனம் செய்ய வேண்டும். அவர்தான் கர்நாடகத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டங்களை மதிப்பீடு செய்ய வேண்டும். அவர்தான் நஷ்டயீடு நிர்ணயிக்க வேண்டும்' என்றெல்லாம் அன்று தீர்மானம் நிறைவேற்றினோமே, அதை மத்திய அரசாங்கம் இதுவரை செய்திருக்கிறதா, அதைச் செயல்படுத்த கர்நாடக அரசு முன்வந்திருக்கிறதா என்றால் இல்லை. அப்படியிருக்கின்றபோது, நஷ்டயீடு வழங்கப்பட்டது என்று அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே எப்படிச் சொல்லியிருக்கிறார் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போதும் சொல்வது என்னவென்றால், நான் முதன் முறையாக பேசியபோதும் சொல்லியிருக்கிறேன். அங்கேயிருந்தும் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். முழுமையாக, போதுமான அளவுக்கு அவர்களுக்கு நஷ்டயீடு கொடுத்ததாக நான் சொல்லவில்லை. ஆனால் நஷ்டயீடு என்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவுக்கு தரப்பட்டிருக்கிறது என்பது உண்மை. அதை நேரிடையாக நான் பார்த்துவிட்டு வந்ததைச் சொல்கின்றேன். ஒவ்வொரு தாலுக்கா தலைநகரங்களிலும் நான் உட்கார்ந்து கொண்டி

ருந்தபோது வந்த செய்திகளைத்தான் சொல்கிறேன். ஓரளவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது போதுமானது என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஆனால் இங்கேகூட தமிழகத்தில் இந்த ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காலத்தில் மறைந்த முன்னாள் தமர் இராஜீவ் காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட பிரபிறகு, இங்கே வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. பலவிதமான சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டன. நிறைய பேர்கள் நஷ்டப்பட்டார்கள். எனவே, அவற்றை எல்லாம் கணக்கிடுவதற்கு, நஷ்டத்தை மதிப்பீடு செய்வதற்கு, யார், யாருக்கு எவ்வளவு நஷ்டயீடு வழங்கப்பட வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்கு, இங்கேயுள்ள சென்னை உயர்நீதி மன்றமே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று சொல்லி, அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பெயரையும் குறிப்பிட்டு, அவர்தான் இந்த மதிப்பீட்டைச் செய்ய வேண்டும், நஷ்டயீட்டை வழங்க வேண்டும் என்று நிர்ணயம் செய்து, அதன்படி இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படிச் செய்யாமல், நாங்களாக யாரோ நான்கு பேரை அழைத்து, ஒருவருக்கு 1,000, 2,000 என்று கொடுத்து விட்டு சில அரசியல் கட்சித் தலைவர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் 4, 5 காசோலைகளை வழங்கிவிட்டு, நஷ்டயீடு வழங்கப்பட்டது என்று சொன்னால் யாரும் ஏற்றுக் கொள்வார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) 1,25,000 பேர்கள் அங்கிருந்து பாதிக்கப்பட்டு உடமைகளை இழந்து, உயிருக்குப் பயந்து, இங்கு ஓடி வந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தமிழக அரசாங்கம் தான் உணவும், உடையும், அன்றாடத் தேவைகளையும் அளித்து அவர்களைக் காப்பாற்றி வந்து இருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த ஒரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் பேர்களுக்கும் நஷ்டயீடு வழங்கப்பட்டு விட்டதா? எந்த அளவுக்கு வழங்கப்பட்டு விட்டது? அந்த நஷ்டயீட்டை நிர்ணயம் செய்தது யார்? வழங்கியது யார்? அந்த அதிகாரத்தை யார் அவர்களுக்குக் கொடுத்தது? இவற்றிற்கெல்லாம் பதில் சொல்லாமல், இவற்றிற்கெல்லாம் விளக்கம் கூறமுடியாமல் தமிழகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுப்பதை விட்டுவிட்டு, அங்கே இருந்து ஓடிவந்த கர்நாடகம் தமிழர்களுக்காக இங்கே உரிமைக்குரல் எழுப்பி அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும், ஒரு சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் நியமிக்கப்பட வேண்டும் என்று கூறுவதை



விட்டுவிட்டு, கர்நாடக அரசு செய்த கண்துடைப்புக் காரியங்களுக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே நியாயம் கற்பிப்பது எனக்கு உண்மையிலேயே மிகுந்த வேதனையை அளிக்கிறது என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பலமுறை குறிப்பிட்டு இருக்கிறேன். இந்த அவையிலே பேசியிருக்கிறேன். நீதிபதி விசாரணை நடத்த வேண்டும் என்று தெளிவாகப் பேசியிருக்கிறேன். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. கண்துடைப்பை நான் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஆனால் அவர்கள் பேசியது, அவர்கள் பேசும் போது என்ன பேசினார்கள் என்றால், எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. (குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் இது சரியல்ல.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, எந்தவிதமான பாதுகாப்பும் தரப்படவில்லை என்பதைத்தான் நான் ஆட்சேபித்தேன். பாதுகாப்புக் கொடுப்பதற்கு நான் அன்றையதினமே நேரடியாக பிரதமரிடத்திலே பேசினேன். அன்றையதினம் முதல்வர் அவர்களும் தொலைபேசியிலே பிரதமரோடு தொடர்புகொண்டு பேசினார். சொன்ன அன்று மாலையிலே 6 பட்டாலியன்கள், சி. ஆர். பி. அனுப்புவதாகச் சொன்னார்கள். அப்படியே அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது போல அன்றைய தினமே வன்முறைச் சம்பவங்கள் வெடித்து அன்றைய தினமே இவர் கேட்டுக்கொண்டதின் பேரிலே 6 பட்டாலியன்கள், மத்திய ரிசர்வ் போலீஸ் அனுப்பப்பட்டார்கள் என்றால் அதன் பிறகு

தொடர்ந்து இன்னும் 3 வார காலத்திற்கு, இன்னும் ஒரு மாத காலத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் மாண்டியா பகுதியிலேயும் மைசூர் பகுதியிலேயும் நடைபெற்று இருந்தனவே அவை எல்லாம் எப்படி நடைபெற்றது? அப்படியானால் அனுப்பப்பட்ட ரிசர்வ் போலீஸின் சக்தி—ஸ்ட்ரெந்த் போதவில்லை, அவர்களால் அங்கே நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதைத்தானே இது காட்டுகிறது?

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது மைசூர் மாவட்டத்திலே நடைபெற்ற வன்முறை பற்றிச் சொல்கிறேன். பெங்களூருக்கு நான் போகவில்லை. மைசூரிலே நடைபெற்ற அன்றே, வன்முறை நடைபெற்ற அன்றே . . . . (குறுக்கீடு) நான் பதில் சொல்ல வேண்டாம் என்றால் நான் பதில் சொல்லவில்லை. உட்கார்ந்து விடுகிறேன். அதிலே ஒன்றும் இல்லை. சொல்வது நல்லதற்காகத்தான் சொல்கிறேன். இதிலே உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டுதான் நான் பேச விரும்புகிறேனே தவிர உணர்ச்சிகளை நான் பெரிதாக்க விரும்பவில்லை. எவ்வளவு விரைவிலே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமோ அப்படி தீர்வு வரவேண்டுமென்று விரும்பி நான் பேசுகிறேன். அன்று மாலை நான் சொல்வது, என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால் டிசம்பர் 26-ஆம் தேதி மதியம் நான் அவரைச் சந்தித்தேன். சந்தித்த அன்று மாலையே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதமர் இடத்திலே தொலைபேசியிலே தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்பு கொண்டதற்குப் பின்னாலே அன்று மாலையே அறிவிப்புகள் வந்து 6 பட்டாலியன்கள் அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த மத்திய ரிசர்வ் போலீஸ் மைசூர் மாவட்டத்திற்கும், மாண்டியா மாவட்டத்திற்கும் வந்ததற்குப் பின்னாலே நான் அங்கே வன்முறை அடங்கியது. அதுமட்டுமல்லாமல் அந்த மத்திய அரசு ரிசர்வ் போலீஸுக்கு எதிராக ஒரு இயக்கமே நடைபெற்றுக்கொண்டு இருந்தது. நான் சென்ற நாளிலேகூட போலீஸார் அராஜகத்தை எதிர்த்துப் பலரும் அருகே போராட்டம் நடத்திக்கொண்டு இருந்தார்கள். நான் ஊருக்குள்ளே நுழையும் போது 'அங்கே போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, நீங்கள் போகாதீர்கள்' என்றுகூட எனக்கு அறிவுறுத்தப்பட்டது. அதையும் மீறி நான் நஞ்சன் கூடுக்குள்ளே போனேன். நான் போகும்போது அருகே போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஊர்வலம் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. அந்த அளவுக்கு மத்திய ரிசர்வ் போலீஸ் எடுத்த நடவடிக்கைக்கு எதிராக அங்கே இருக்கிற மக்களே கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்கே வன்முறை அடங்கியது. அந்த கட்டத்திலே, அடங்கியதை கண்கூடாக நானே பார்க்க



முடிந்தது. இந்தப் பிரச்சினைக்கு சீக்கிரமாக விரைவிலே ஒரு தீர்வு வரவேண்டும் என்றுதான் நாங்களும் விரும்புகிறோம். இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு வரவேண்டும்.

அதேபோல, ஏற்பட்டுவிட்ட இழப்புக்களை தனியார் யாராக இருந்தாலும் முழுமையாக இவ்வளவு என்று மதிப்பிட முடியாது. எனவே, அதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டும், நீதிபதி விசாரணை வேண்டும் என்பதை நானும் ஏற்றுக்கொண்டு இருக்கிறேன். இந்த அவையிலேயே பேசியிருக்கிறேன். சர்வகட்சிக் கூட்டத்திலேயும் அதற்கு நான் ஒப்புக்கொண்டு இருக்கிறேன். அதிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை. இங்கே கருத்து வேறுபாடு வரும். காரணம் அவர்கள் பேசிய தொனி தானே தவிர வேறு அல்ல என்பதை மீண்டும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பது எனக்குத் தெரியாது. எனவே நான் குறிப்புகளையெல்லாம் எடுத்துக் கொண்டு தயாராக வரவில்லை. எனவே, எந்தெந்தத் தேதியில் நான் பிரதமருக்குப் போன் செய்தேன், மீண்டும் எந்தெந்தத் தேதிகளில் மீண்டும் மீண்டும் பேசினேன், எந்தெந்த தேதிகளில் கடிதங்கள் எழுதினேன், எந்தெந்தத் தேதிகளில் 'டெலக்ஸ்' செய்தி அனுப்பினேன், யார் யாருடன் டெல்லியில் எந்தெந்தத் தேதிகளில் தொடர்பு கொண்டேன், இதுபோன்ற குறிப்புகளையெல்லாம் நான் இங்கே எடுத்துக் கொண்டு வரவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் என்னால் தெளிவாகச் சொல்லமுடியும். இந்தப் பிரச்சினை வெடித்த பிறகு நான் உடனேயே, இதை மத்திய அமைச்சர்களின் கவனத்திற்கும், மத்திய உள்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், பிரதமர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்ற பின்பும், மீண்டும் மீண்டும், ராணுவத்தை கர்நாடகாவிற்கு அனுப்புங்கள் என்று நான் பலமுறைகள் கோரிக்கை விடுத்த பின்பும் கூட மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

நண்பகல் 12-00

மத்திய ரிசர்வ் போலீஸின் 6 பட்டாலியன்கள் அனுப்பப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார். நான் மறுக்கவில்லை. ஆனால் எந்தத் தேதியில் அனுப்பப்பட்டது? நான் இராணுவத்தை அனுப்புங்கள் என்ற கோரிக்கையை விடுத்ததற்கு முன்பா, பின்னரா என்றால் அந்த விவரங்கள் தற்சமயம் என்னிடத்தில் இல்லை. மீண்டும் இந்தப் பொருள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமானால் அப்பொழுது நான் விரிவாகச் சொல்ல, விளக்கமாகச் சொல்லத் தயாராக இருக்கிறேன். (மேசையைத்

தட்டும் ஒலி) ஆனால் எடுத்த நடவடிக்கை போதாது என்பதுதான் நம்முடைய வாதம். அங்கே 6 பட்டாலியன்கள் மத்திய ரிசர்வ் போலீஸ் அனுப்பப்பட்ட பிறகு நிலைமை கட்டுக்குள் அடங்கியது என்று சொல்வது உண்மையான தகவல் அல்ல. தொடர்ந்து, விட்டு விட்டு பல்வேறு பகுதிகளில் கர்நாடகாவில் கலவரங்கள் மூண்டுகொண்டேயிருந்தன. அங்கே பலருடைய வீடுகள் எரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மக்கள் அங்கே கொடுமைப் படுத்தப்பட்டார்கள். நிறைய சாவுகளும் நடந்திருக்கிறது. ஆனால் அவற்றை கர்நாடகா போலீஸ் மூடி மறைக்கிறது. அந்தத் தகவல்களை வேண்டுமென்றே பத்திரிகைகளில் இருட்டடிப்பு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நடந்த உண்மை. இராணுவத்தை அன்றைய தினமே, நான் கேட்டுக்கொண்ட அன்று பிரதமர் அங்கு அனுப்பியிருப்பார்களேயானால் நிலைமை உண்மையிலேயே கட்டுக்குள் அடங்கி இருந்திருக்கும், கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முடிந்திருக்கும். எனக்கு நன்றாகவே தெரியும். மைசூர் மாவட்டத்தில் மட்டும் ஊரடங்கு உத்தரவை அறிவித்த பின்னரும் அங்கே போதிய காவல் துறையினர் இல்லாததால், போதிய மத்திய ரிசர்வ் போலீஸ் துறையின் பட்டாலியன்கள் இல்லாததால் ஊரடங்கு உத்தரவை அவர்களால் அமல்படுத்த முடியவில்லை. அறிவித்தார்களே தவிர அமலில் இருக்கவில்லை. எனவே பல்வேறு பகுதிகள் பற்றி எரிந்துகொண்டிருந்த நிலைமை அன்று ஏற்பட்டது. நாங்கள் கோரிக்கை விடுத்த பின்னர் இராணுவத்தை அனுப்பியிருந்தால் 1,25,000 பேர் அங்கிருந்து ஓடி—அகதிகளாக—தங்களுடைய சொந்த நாட்டிலேயே அகதிகளாக வந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது என்பதை மட்டும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நம்முடைய தமிழ்நாட்டு அரசுக்குத் தெரியாமல் எப்படி செய்திருக்க முடியும் என்பதைச் சொல்லத்தான் வந்தேனே தவிர வேறு ஒன்றும் அல்ல. அதே நேரத்தில் இன்றைக்கு தென்னிந்திய நதிகளை இணைப்பதற்கு நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், தமிழ்நாடு அரசும் தொடர்ந்து வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, அச்சன் கோயில், பம்பை போன்ற நதிகளை எல்லாம் இணைப்பதன்மூலம் தொடர்ந்து வறட்சி வெள்ளங்களிலிருந்து பாதுகாக்க முடியும். தமிழ்நாட்டினுடைய உணவு தானிய உற்பத்தியை மேலும் மேலும் பெருக்குவதற்கு ஒரு நல்ல



வாய்ப்பு இந்த நீரினால் கிடைக்கும் என்றும் கருதுகிறேன். அதே நேரத்தில் தமிழ்நாட்டிலுள்ள நீரினுடைய கட்டுப் பாடு நல்லபடியாக இருந்த காரணத்தினால் மேட்டூரில் இருக்கக்கூடிய தண்ணீர் தமிழ்நாடு அரசு மூலமாக தஞ்சை மற்றும் காயிதேமில்லத் மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் ஜூன் மாதம் தண்ணீரை திறப்போம் என்று அறிவித்த உடன் இந்த மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அதே நேரத்தில் அங்கே மராமத்துப் பணிகள் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே விவசாயிகள் மிக உற்சாகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் சொல்கிறேன். காவிரி நதிநீர் பிரச்சினையில் தீர்வு கண்டால் நாம் உணவு தானிய உற்பத்தியிலே தன்னிறைவு காண முடியும். அரசு இன்னும் கொஞ்சம் கூட நடவடிக்கை எடுத்து கால்வாய், ஆறுகளை தூர் எடுத்து அதேபோன்று நெய்வேலி காட்டாமணக்கு போன்றவற்றை அகற்றி பல ஆண்டுகளாக தூர்ந்திருக்கிறதை உடனடியாக சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறன்.

அதேபோன்று இன்றைக்கு பாலங்களை எடுத்துக் கொண்டால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தஞ்சை, காயிதேமில்லத் போன்ற மாவட்டங்களில் நேரடி கொள்முதல் இருக்கிற காரணத்தினால் அங்கே இருக்கிற ரோடுகளில், கிராமங்களில் இருக்கிற ரோடுகளில் ஏராளமான போக்குவரத்து வாகனங்கள் சென்ற காரணத்தினால் ரோடுகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. தமிழ் நாட்டிலே 14 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அதில் 11 இலட்சம் டன்கள் தஞ்சை மற்றும் காயிதேமில்லத் மாவட்டங்களில் மட்டும் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால் இரண்டு மாவட்டங்களிலும் பரந்திருக்கின்ற நான் சார்ந்திருக்கிற திருத்துறைப்பூண்டி தொகுதியில் மட்டும் 3க்கு 1 பங்கு உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அங்கே உள்ள ரோடுகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. ஆகவே, ரோடுகளை எல்லாம் செப்பனிட ஒரு சிறப்புத் திட்டமாக இதனை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதேபோன்று கிராமப்புற சாலைகள் மிகவும் சீரழிந்து இருக்கின்றன.

அனேகமாக இன்றைக்கு நரிமணம், புவனகிரி போன்ற இடங்களில் பெட்ரோல் எடுக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கும் ராயல்டி

தொகையை வாங்கி சாலைகளைச் செப்பனிட அரசு முயற்சி எடுக்க வேண்டும். அங்கே நல்ல கேஸ் கிடைக்கிறது. அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம். கோவில் களப்பால் போன்ற இடங்களில் கிடைக்கும் கேஸைக் கொண்டு 5 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க முடியுமென்று சொன்னார்கள். அதையெல்லாம் அரசு உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அடுத்து சேது சமுத்திர சாலைத் திட்டத்தில் 166 கிலோமீட்டர் இன்றைக்கு எடுத்துக்கொள்வதாகக் குறிப்பில் இருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள். இப்போது 5 நிமிடம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்கள் பேச வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சேது சமுத்திர சாலைத் திட்டத்தில் பாலங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும். முத்துப்பேட்டையில் இருக்கக்கூடிய கிளை நதி வாய்க்கால்களில் செடிகளை எல்லாம் அகற்றி சீரமைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அந்த சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நீர்ப்பாசனத் திட்டங்களைச் செப்பனிட அரசு முயல வேண்டுமென்று கேட்டு நான் பேசுவதற்கு அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா.

*திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப் பணிகள், சாலைகளும் பாலங்களும் போன்ற மானியக் கோரிக்கைகள்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய வாய்ப்பினை எங்களுக்கு நல்கிய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினையும் சிரம் தாழ்ந்த வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய தென் கோடியில் உள்ள திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் தொன்மை வாய்ந்த மாவட்டமாகும். இந்த மாவட்டம் 1790-ல் வெள்ளையர்



களால் ஆரம்பிக்கப்பட்டதாகும். ஆரம்பிக்கப்பட்டு 200 ஆண்டுகள் முடிந்துவிட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரித்து, கலையையும் பண்பாட்டையும் வளர்த்து, '' தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனாள் பவர்க்கு '' என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப செங்கோல் ஓச்சி வரும் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்கிவரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திருநெல்வேலிக்கு வந்து அந்த மாவட்டத்தினுடைய 200-ம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துக் கொண்டு அம்மாவட்ட மக்களின் ஆவலை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே தன்னுடைய சொந்த செல்வாக்கினால், தகுதியால் ஆட்சி செய்கிற ஒரே முதலமைச்சர் நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவிதான் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். மோசமான நிதிப் பற்றாக் குறையிலும், ''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு '' என்ற பொய்யாமொழிப் புலவன் குறளுக்கேற்ப இருக்கிற நிதியைக் கொண்டு எல்லோரும் எல்லாமும் பெற வேண்டுமென்கிற அசைக்க முடியாத நியாய உணர்வோடு, மனிதநேயத்துடன் கூடிய சமூக உணர்வோடு இன்று செம்மையாக ஆட்சி செய்து வருபவர் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

காந்திக்கு அகிம்சையில் நம்பிக்கை; நேருவுக்கு தொழில்மயத்தில் நம்பிக்கை; அன்னை இந்திராவுக்கு ஒருமைப்பாட்டில் நம்பிக்கை; பேரறிஞர் அண்ணாவுக்கு மற்றவரை மதிப்பதில் நம்பிக்கை; புரட்சித் தலைவருக்கு நம்பியவரைக் காப்பதில் நம்பிக்கை. இப்படி எத்தனையோ தலைவர்கள் வெவ்வேறு பண்பில் சிறந்து விளங்கினார்கள். ஆனால் அத்தனைப் பண்புகளையும் ஒருங்கே பெற்றவர்தான் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி என்பதைப் பூரிப்புடன் எண்ணிப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நெல்லை மாவட்டம் தொழில் ரீதியாக வளர்ச்சி பெறாத மாவட்டம். சிதம்பரனார் மாவட்டம் பிரிந்த பிறகு சொல்லிக்கொள்கிற அளவிற்கு பெரிய தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டம். விவசாயத்தைப் பொறுத்தவரையிலும் பெரும்பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம். இன்றையதினம் அங்கே பரவலாக இருக்கிற பெரிய பிரச்சினை குடிநீர் பிரச்சினைதான் '' காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ் கண்டதோர்

[திரு. டி. வேலையா] [1992 மார்ச் 31

வைகைப் பொருணை நதி'' என்ற சிறப்பைப் பெற்ற பொருணை நதி என்கிற தாமிரபரணி இங்கே ஓடினாலும், அது மாவட்டத்தினுடைய முழுத் தேவையையும் பூர்த்தி செய்யவில்லை. கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை கிழக்காகத் திருப்ப கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். பண்ட மாற்றாக, நாம் அவர்களுக்கு அரிசி போன்றவைகளைக் கொடுக்கலாம். கொஞ்ச நாட்களுக்கு முன்னால் திருச்செந்தூர் வந்த கேரள முதல்வர் மாண்புமிகு கருணாகரன் அவர்கள் அந்தக் கருத்தை ஒப்புக்கொண்டதாக பத்திரிகைச் செய்தியில் கண்டேன். இதை அரசு தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, நீர் ஆதாரங்களைப் பெருக்கி வருகிற கோடைக்காலத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் நிரந்தர அடிப்படையில் நீர் வழங்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

என்னுடைய தொகுதியில் மாவட்டத் தலைநகரமான திருநெல்வேலி அமைந்துள்ளது. இது பழம்பெரும் நகரமாகும். ஆனால் மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப வளர்ச்சி பெறாத நகரமாக இருக்கிறது. இங்கே ஓடுகின்ற பைம்புனல் தாமிரபரணி ஆற்றில் நீராடி அரசியலில் வளர்த்தவர்கள், அரசியலில் வளர்ந்தவர்கள் நமது மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலரைப் போன்றவர்கள். ஆனால் இன்றையதினம் போதிய அளவு தண்ணீர் அங்கே இல்லை. அதை மேம்படுத்தத் தீவிர ஆய்வு நடத்தி, மானூர் ஒன்றியம் போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வசதிகளைச் செய்துகொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகள் பிரச்சினை பெரும் பிரச்சினை. இந்த நகருக்குள் சுமார் 1 கிலோ மீட்டர் அளவே தேசிய நெடுஞ்சாலை உள்ளது. சுமார் 4 கிலோ மீட்டர் அளவே மாநில நெடுஞ்சாலை உள்ளது. மற்ற சாலைகள் எல்லாம் நகர்மன்ற சாலைகள்தான். இந்தச் சாலைகளின் வழியாக போக்குவரத்து அதிகமாக உள்ளதால் நெரிசலாக உள்ளது. நகர்மன்றத்தால் இந்தச் சாலைகளைப் பராமரிக்க முடியவில்லை. ரோடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. எடுத்துக்காட்டாக திருநெல்வேலியிலிருந்து சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம், பாபநாசம் போன்ற இடங்களுக்குச் செல்லும் தெற்கு மவுண்ட் ரோடு என்னும் சாலை மிகவும் மோசமாக உள்ளது. இதை மாநில நெடுஞ்சாலையாக மாற்றி செம்மைப்படுத்தக் கேட்டுக்



1992 மார்ச் 31] [திரு. டி. வேலையா]

கொள்கிறேன். பெண்கட்குக் கல்வி வேண்டும், உலகினைப் பேணுவதற்கே'' என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாட்டுக்கேற்ப, பெண் கல்வியையும், அதன் மேன்மையையும் கருத்திற்கொண்டு செயல்படுபவர் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். திருநெல்வேலி நகரில் கல்லணை பெண்கள் மேல்நிலைப் பள்ளி போதிய இடவசதியும், கழிப்பிட வசதியும் இல்லாமல் மிகவும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறது. 500 மாணவிகள் இருக்கும்போது உள்ள அந்தக் கட்டிடம்தான் இப்போது 2,500 மாணவிகள் இருக்கும் போதும் உள்ளது. மாணவிகள் திறந்த வெளியில் உட்கார்ந்து படிப்பது பார்ப்பதற்கு கஷ்டமாக உள்ளது. எனவே போதிய கட்டிடம், கழிப்பிட வசதிகள் போன்றவற்றை செய்துகொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். இப்பள்ளியின் அருகில் ஒரு பாசனக் கால்வாய் ஓடுகிறது. மழைக்காலங்களில் இதன் நீர் பள்ளிக்குள் வந்துவிடுகிறது. ஒவ்வொரு முறையும் தற்காலிகமாக எதையாவது செய்து தடுக்கிறார்கள். ஆகவே இந்தக் கால்வாயைச் சீரமைத்து பள்ளிக்குத் தொல்லையில்லாத நிரந்தர தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலி—பேட்டையில் நகராட்சிப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி உள்ளது. இப்பகுதியில் சுமார் 15 ஆயிரம் பேர் பொதுமக்கள் வாழ்கிறார்கள். சுற்றுப்புற கிராமங்கள் ஏராளம் உள்ளன. இங்குள்ள பெண் குழந்தைகளின் நலன் கருதி, இப்பள்ளியை உடனடியாக மேல்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலியிலிருந்து சென்னை, நாகர்கோவில், தூத்துக்குடி, பாபநாசம், தென்காசி போன்ற எல்லா திசைகளிலும் உள்ள ஊர்களுக்கும் பேருந்துகள், லாரிகள் போன்ற போக்குவரத்துகள் உள்ளன. தூத்துக்குடியிலிருந்து துறைமுகம் போன்ற பகுதியிலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு கேரள மாநிலம் செல்லும் எல்லா வாகனங்களும் இந்நகரின் வழியாகத்தான் செல்லுகின்றன. எனவே திருநெல்வேலி சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. இந்த நெரிசலைக் குறைக்க, திருநெல்வேலி டவுனில் ஒரு பேருந்து நிலையம் அமைத்து, சேரன் மகாதேவி, அம்பாசமுத்திரம், பாபநாசம், சுடையும், தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பேருந்துகளை டவுனிலிருந்து திருப்பிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) . . .

[திரு. டி. வேலையா] [1992 மார்ச் 31

சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு 14 மணி நேரம் பயணம் தேவைப்படுகிறது. இதனாலேயே அங்கு அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் அதிகம் வருவதில்லை. பயண நேரத்தைக் குறைத்து, நெரிசலையும், விபத்துக்களையும் தவிர்க்கும் வகையில், சென்னையிலிருந்து திருநெல்வேலி வரை நான்கு வழிப்பாதை ரோடு அமைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சமாதியில் அவருடைய கொள்கைக்கும் மனித நேயத்திற்கும் தொடர்பில்லாத மாறுபட்ட திரு. கருணாநிதியின் பெயர் உள்ளது. நமது அரசு, புரட்சித் தலைவர் சமாதியை விரைவில் புதிய முறையில் உருவாக்கி, கருணாநிதியின் பெயரை அதிலிருந்து நீக்கக் கேட்டுக் கொள்கிறேன். அறிஞர் அண்ணா நினைவிடத்தில் உள்ளதைப்போல, புரட்சித் தலைவர் நினைவிடத்திலும் அவருடைய பேச்சுக்களையும், பாடல்களையும் ஒலிபரப்பவும், அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி - ஒளி காட்சியாக அமைக்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

சாலை விபத்துக்களைத் தடுக்க முக்கிய சாலைகளில் "டிவைடர்கள்" அமைக்கவேண்டும். மேலும் எனது தொகுதியில் பல இடங்களில் சாலைகள் இருந்தும் பாலங்கள் இல்லை. சாலைகள் ஒரு துறையிலும், வாய்க்கால்கள் இன்னொரு துறையிலும் உள்ளதால் இந்தக் குறைகள் நீண்ட நாட்களாக இருந்து வருகின்றன. இவைகளையெல்லாம் நமது அரசு கவனித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12 15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. புரட்சிமணி.

* திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள தொழுதூர் பொறிமதகு திட்டத்திற்காக ரூ. 5.13 கோடியை ஒதுக்கியதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சார்பாகவும் என் தொகுதி மக்கள் சார்பாகவும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 மார்ச் 31] [திரு. ச. புரட்சிமணி]

எனது தொகுதியில் உள்ள வெலிங்டன் ஏரி மிகப் பெரிய ஏரி. இந்த வெலிங்டன் ஏரியை பல பெரிய பணக்காரர்கள் கைவசம் வைத்துக் கொண்டுள்ளார்கள். அதை அப்புறப்படுத்துவதோடு அந்த ஏரியை மராமத்து பணி செய்ய இந்த ஆண்டிலேயே நிதி ஒதுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நான் கடந்த கூட்டத் தொடரில் பேசியபோது விருத்தாசலம் முதல் தொழுதூர் வரை செல்லும் நெடுஞ்சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று பேசினேன். ஆனால் அந்தப் பணி இதுவரையில் நடைபெறவில்லை. ஆகவே இந்த ஆண்டிலேயாவது அதைச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். பெண்ணாடம் நகரில் பேருந்து நிலையம் ஒன்று அமைத்துத்தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தையும், திருச்சி மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் சம்பேரி என்ற கிராமத்திலே வெள்ளாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட வேண்டுமாய் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள புல்லூர் முதல் கீரனூர் வரை உள்ள ஓடையின் நடுவே பாலம் ஒன்று கட்டுமாறு மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கொடுக்கூர் முதல் பெரம்பலூர் வரை உள்ள கிராமங்கள் சுதந்திரம் பெற்ற காலத்திலேயிருந்து இதுவரை பேருந்தே செல்லாத கிராமங்கள் ஆகும். ஆதலால் அந்த கிராமங்களுக்கு பேருந்து செல்ல சாலை வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாளையம் முதல் கொரக்கை வரை உள்ள இரண்டு பாலங்கள் அமைத்து, சாலை போட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள திட்டக்குடி முதல் சீகூர் அகரம் வரை வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் சரிவர இதுவரை கட்டி முடிக்காமல் இருக்கிறது. அந்த பாலத்தை விரைவில் கட்டி முடிக்க தாங்கள் ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதுவரை, வருகை தரா எனது மங்களூர் தொகுதியில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வருகை தந்து அப்பாலத்தை திறந்து வைக்க வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ச. புரட்சிமணி] [1992 மார்ச் 31

நெடுஞ்சாலைத் துறையில் 20 ஆண்டுகளாக ஆயிரத்திற்கு மேற்பட்ட ரிக்கார்ட் கிளார்க்குகள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரையும் ஜூனியர் அசிஸ்டெண்ட்டாக பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:— திரு. கே. சிங்காரம்

திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு நல்கியமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொது மக்களுக்காக பல்வேறுபட்ட துறைகள் செயல்பட்டாலும் கூட அனைத்து வழிகளிலும் செயல்படுகிற ஒரு துறையாக, இந்தப் பொதுப்பணித் துறை விளங்கி வருகிறது. பொதுப் பணிகளை கவனிக்காமல், பொதுமக்களுடைய குறைகளை பொது மக்களுடைய முன்னேற்றங்களை, கவனிக்காமல் தன்னுடைய பணிகளை மட்டும், தன்னுடைய குடும்பம், உற்றார், உறவினர் பணிகளை மட்டும் கவனத்திலே கொண்டு, பொதுப்பணித் துறையை தன் பணித் துறையாக, தன் சொந்தப் பணி துறையாக இதற்கு முந்தைய அரசின் முதல்வர் செயல்படுத்தி வந்த நிலையை மாற்றி இன்றைக்கு 24 மணி நேரமும் பொதுப் பணிக்காக, பொது மக்களின் முன்னேற்றத்திற்காக செயலாற்றி வருகிற மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடுமையான நிதி நெருக்கடி இருக்கின்ற இந்த நேரத்திலும் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளுக்காக ரூ. 602 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதிலே இருந்தே பொது மக்களின்பால், பொது மக்கள் முன்னேற்றத்தின்பால் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எந்த வகையில் நாட்டம் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூறி இந்த பொதுப்பணித் துறையின் மானியத்தை வரவேற்றுப் பேசுகிறேன்.

தமிழகத்திலே நல்ல பல திட்டங்களை அறிவித்து அவைகளை செயல்படுத்தி வருகிற புரட்சித் தலைவி அவர்கள் தொழில் துறையின் மூலமாக, பொதுப்பணித துறையின் மூலமாக மற்றும் பல்வேறு துறைகளின் மூலமாக பல கோடி ரூபாய்க்கான திட்டங்களை தர்மபுரி மாவட்டத்திற்கு அள்ளித் தந்து, பின் தங்கிய மாவட்டத்தை முன்னேறிய மாவட்டமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே ரூ. 250 கோடி மதிப்பீட்டிலே தர்மபுரி மாவட்ட மக்களுடைய குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்கும் வகையில் ஒகேனக்கல் குடிநீர் திட்டப் பணிக்காக விரைவான ஆய்வினை மேற்கொள்ள நிதிநிலை



1992 மார்ச் 31] (திரு கே. சிங்காரம்)

அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தத் திட்டப் பணிகளுக்கென ஆய்வினை மேற்கொள்ளும் சமயத்தில் இந்தத் திட்டத்தின் மூலம் மின்சார உற்பத்தியும், கிருஷ்ணா நதித் திட்டம் குடிநீருக்கு மட்டுமல்லாமல் பாசன வசதிக்கும் பயன்படும் வகையிலே ஆந்திர அரசு செயல்படுத்தி வருவதுபோல இந்த ஒகனேக்கல் திட்டமும் குடிநீருக்கு மட்டுமல்லாமல் பாசன வசதிக்கும் பயன்படுத்த முடியுமா என்பதனையும் கண்டு அறிய வேண்டுகிறேன்.

பிற்பகல் 12.20

மேலும் பழங்குடியினர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பகுதி 2 திட்டத்தில் பல்வேறு வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படுகின்ற பணம் போதுமானதாக இல்லாத காரணத்தினால், இப்பணிகளைச் செய்கின்ற ஒப்பந்தக்காரர்கள் வேலையின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவதில்லை. எனவே, பழங்குடியினர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு அதிகப்படியான போதுமான பணம் ஒதுக்கிடுமாறு வேண்டுகிறேன். மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்காடு மலை, பச்சை மலை, ஜவ்வாதுமலை, கொல்லி மலை, கல்வராயன்மலை மற்றும் என்னுடைய தொகுதியிலுள்ள சித்தேரி மலை ஆகியவை பயன்பெற்று வருகின்றன. மொரப்பூர் மற்றும் தர்மபுரி தொகுதிகளை உள்ளடக்கிய வத்தல்மலை இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இதன் காரணமாக, அந்த மலைப்பகுதியிலே வாழ்கின்ற மக்கள் சாலைகள் முதற்கொண்டு எந்தவகையான வசதியும் பெற முடியாமல் அவதிப்படுகின்றனர். எனவே, வத்தல் மலையை பழங்குடியினர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேர்த்து அந்த மலைப் பகுதிக்கு சாலை வசதி செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மலைப் பகுதிகளில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும் சமயத்தில் வனத் துறையினரால் அனுமதி மறுக்கப்படுகின்றது. அப்படியே சில அனுமதிகள் தந்தாலும்கூட, அது காலம் கடந்து தரப்படுவதால் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட முடியாமல் போவதால் பழங்குடி மக்கள் அவதிப்படுகின்றனர். எனவே, வனத் துறையிடம் விரைவாக அனுமதி பெறுவதற்கு நெடுஞ்சாலைத் துறை சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பழங்குடியினர் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சித்தேரி, நொச்சிக்குட்டை, தும்பல், பாலக்குட்டை சாலைகளை பகுதி-2 திட்டத்தில் நிறைவேற்றிட வேண்டுகிறேன். தும்பல் - பாலக்குட்டை சாலை நிறைவேற்றப்பட்டால், சேலம் வட்டம், ஆத்தூர் வட்டம், அரூர் வட்டம், செங்கம் வட்டம், கள்ளக்குறிச்சி வட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல் ஒசூர் முதல் தர்மபுரி வரையிலான சாலை பலத்த மழை காரணமாக மிகுந்த சேதம் அடைந்து உள்ளது. அதனைச் சீர்ப்படுத்த வேண்டு கிறேன். மேலும் தர்மபுரி மாவட்டத்தில் இரயில்வே போக்குவரத்துக்கு மொரப்பூர் ஒரு மைய இடமாக அமைந்துள்ள காரணத்தினால் மொரப்பூரிலே நீண்ட நெடுங் காலமாகக் கேட்கப்பட்டு வருகின்ற இரயில்வே மேம் பாலம் ஒன்று கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மொரப்பூர் தொகுதி மக்களால் நீண்ட நெடுங்காலமாகக் கேட்கப்பட்டு வருகின்ற மிக முக்கிய மான பொதியன்பள்ளம் அணைக்கட்டு திட்டத்தை நிறை வேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனி சாமி, பொதுப்பணித் துறை அமைச்சரை, பேசுகின்றவர் களின் பேச்சைக் கேட்கவிட வேண்டும்.

திரு. கே. சிங்காரம் : 10-2-1992 அன்று வினாக்கள்-விடை கள் நேரத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி குறிப்பிடுகிறபோது சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டின் ஏற்பளிப்பு பட்டியலில் இந்தத் திட்டம் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். 1992-93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வரும் ஆண்டில் சிறப்பு பாசன திட்டத்தின் கீழ் 3.5 கோடி ரூபாய் செலவில் 19 புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. எனவே, பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் இந்த 19 திட்டங்கள் பட்டியலில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மொரப்பூர் மற்றும் ஓமலூர் தொகுதி மக்கள் பாசன வசதி பெறக்கூடிய வகையிலே, இரண்டு தொகுதிகளையும் உள்ளடக்கக் கூடிய வேப்பாடியாறு அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

மேலும் ஒப்பந்த வேலைகளின் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு அடிப்படையாக உள்ள ஆர்.எம்.ஆர். என்று சொல்லக்கூடிய Road Metal Rate அந்த ரேட்டுக்கான கல் மற்றும் மணற் குவாரிகளை மேற்படி குவாரிகளின் திறன் முடிந்தவுடன் வேறு குவாரிகளை நிர்ணயித்து ஆர்.எம். ஆர். அனுமதி வழங்கிட வேண்டுகிறேன். தற்போதுள்ள ஆர்.எம்.ஆர்.-ல் குறிப்பிட்டுள்ள குவாரிகள் எல்லாம் பெரும் பகுதி பட்டியலில் தான் உள்ளதே தவிர நீண்ட காலமாக குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனைச் சீர்படுத்தித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியிலே அச்சம்பட்டி ஏரி, கோரையாற்று அணைக்கட்டுத்





திட்டம், கடத்தூர் குட்டிரெட்டிப்பட்டி சாலையில் ஒரு பாலம், குறிஞ்சிப்பட்டி சாலையில் ஒரு பாலம், கே.ஈச்சம்பட்டி அருகில் தென் பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு பாலம் ஆகியவற்றை பகுதி 2 திட்டத்தின் மூலம் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

'சிவனுக்குக் கண் கொடுத்தார், கண்ணப்பர்' என்று புரா ணத்திலே படித்து இருக்கிறேன். சிவனுக்குக் கண்ணை மட்டும் தான் இந்த கண்ணப்பர் கொடுத்தார். ஆனால், புரட்சித் தலை விக்காக தங்களுடைய உயிரையே கொடுக்கின்ற இலட்சோப இலட்சம் தொண்டர்களில் ஒருவராக விளங்கி வருகின்ற நம்மு டைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித்தருமாறு கேட்டு இந்த மானியத்திலே பேசுகின்ற ஒரு வாய்ப்பினை நல்கிய நம் முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர் களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. எஸ். வி. சண்முகம்.

பிற்பகல் 12-25

*திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலி லேயே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலத்தில் உள்ள பாசன ஆதாரங்களைப் பற்றியும், நீர்நிலைகளைப் பற்றியும், நல்ல விவரங்களோடு கூடிய கொள்கை விளக்கக் குறிப்பு களைத் தந்துள்ளார். தமிழகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற பணிகளைப் பற்றியும், நடைபெறவிருக்கும் பணி களைப் பற்றியும் விரிவான விவரங்களைத் தந்து, நம்முடைய மனக்கண் முன்னால் ஒரு வரைபடத்தையே நிறுத்தி இருக்கிறார் கள். அந்த மாவட்டம் புறக்கணிப்பு, இந்த மாவட்டம் புறக் கணிப்பு என்று இல்லாமல், எங்கெங்கும் பரவலான திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அணைக் கட்டுகளில் தண்ணீர் திறந்து விடப்பட்ட தேதியைக் கூட அவர்கள் ஆதாரத்தோடு, புள்ளிவிவரம் தந்து இருக்கின்றார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் வழக்கமாக இந்த அரசை ஆதரிக்கிற என்னுடைய நிலைக்கு ஆதாரம் சேர்ப்பதற்காக நான் இதைச் சொல்வதாகக் கருத வேண்டாம். இதற்கு முன்பிருந்த அரசினுடைய நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன்றைய நிலைமைகளை சொல்லாமல் இருக்க முடியாது. முன்பிருந்த அரசு எங்களுடைய மதுரை மாவட்டத்தில் மஞ்சளாறு அணையி லிருந்து மதுரை நகருக்கு தண்ணீர் கொண்டு வருவதாக அறிவிப் பைச் செய்தது. அதிகாரிகள் எல்லாம் மஞ்சளாறு அணையில்

இருக்கிற தண்ணீர் நாற்பது ஏக்கருக்கு கூட போதாது. அது மதுரைக்கு போகவே போகாது. அதைச் செய்யாதீர்கள். இருக்கிற பாசனத்தைக் கெடுக்காதீர்கள் என்று சொன்ன போது, 'நீ மந்திரியா ? நான் மந்திரியா ?' என்று அதிகாரி களை மிரட்டி தண்ணீர் திறந்து விட்டு மஞ்சளாற்றிலிருந்து தேவதானம்பட்டிக்கு வருவதற்குள்ளாக மணல் உறிஞ்சி, மீன் குஞ்சுகள் எல்லாம் கருவாடான கதை எல்லாம் அப்போது நடந் தது. ஒரு பத்திரிகையில் கூட அந்த மந்திரியை மூட மந்திரி என்று எழுதினார்கள்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் அமைச்சர் எனப்படு வோர் விரிவான பார்வையும், சிந்தனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அத்தகைய பார்வை இந்த அரசுக்கு இருக் கிறது என்பதை இந்த கொள்கை விளக்கக் குறிப்பின் வாயிலாக அறிய முடிகிறது. நம்முடைய மாநிலத்தில் நீர் ஆதாரம் அரிதாக உள்ளது என்றும், அண்டை மாநிலங்களில் நீர் வளம் வீணாகி வருகிறது என்றும், கேரளாவில் உற்பத்தியாகி கடலில் போகும் ஆறுகளைத் தமிழகத்திற்கு திருப்ப வேண்டுமென்றும், நம்முடைய கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு அதைப்புற்றி நாம் ஆழமாக புரிந்து கொள்கிறோம் என்பது வேறு விஷயம். அந்த பாசன விஷயங்களைப் பொறுத்தவரையில் வழக்கமாக நான் அணுகி வந்த முறைகளிலிருந்து— இருக்கிறக் குளங்களை ஆழப்படுத்துவது, சிறு சிறு நீர்த் தேக்கங்களைக் கட்டுவது என்பதிலிருந்து வேறுபட்டு, ஒரு பெரிய யோசனையை இந்த அரசு முன் வைத்திருக்கிறது.

கடலில் விழுகிற கேரள ஆற்றுத் தண்ணீரை தமிழகத்திற்கு திருப்ப வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது. என்னைப் பொறுத்தவரை யல், இதுவரையில் எந்த அரசாங்கமும் அணுகாத ஒரு அணுகு முறையை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. இன்னும் சொல் லப்போனால் மக்களுடைய உணர்வுகளை இந்த கொள்கைக் குறிப்பு கோடிட்டு காட்டியிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங் களைப் பற்றியெல்லாம் எதிர்காலத்தில் நாம் சிந்தித்தாக வேண் டும். இத்தகைய பெரிய திட்டங்களைப் பற்றியெல்லாம் நாம் சிந்திக்க மறந்தோமானால் எதிர்காலத்தில் நமக்கு சொட்டு நீர்ப் பாசனம்தான் மிஞ்சும். நம்முடைய நாட்டில் பல பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் வறட்சி நிலை வேகமாக பரவி வருகிறது. அதைத் தடுக்க பெரும் திட்டங்களை நாம் உருவாக்கியாக வேண்டும். இந்த மாநிலத்தின் பாசன ஆதாரங்களைப் பெருக்குவதில் எவ்வளவு அழுத்தமாக, எவ்வளவு நம்பிக்கையோடு இருக்கிறது என்பதை காவிரிப் பிரச்சி னையில் இந்த அரசின் முதலமைச்சர் அவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு— பொதுப்பணித்துறை அமைச்சர் அமர்ந்திருக்கிற இடத்தில் வேறு யாரும் போய் அவருக்கு இடையூறு செய்யக்கூடாது என்று அப் போதே சொல்லியிருக்கிறேன்.



திரு. எஸ். வி. சண்முகம் : காவிரி நீரைப் பெறுவதில் கூட இந்த அரசு தன்னுடைய தோழமைக் கட்சியாக இருக்கிற மத்திய அரசைக் கூட நிர்ப்பந்திக்கிற முறையில் இருந்து, அரசியல் உறவு மாறாமல், மாநிலத்தின் நலம், பாசன வசதி, மக்களுடைய உரிமை என்பதில் இந்த அரசு குறியாக இருக்கிறது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அணுகுமுறையிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இப்போது கூட நடைபெற்ற விவாதத்தை வைத்து, ஏதோ, மோதல், பிளவு என்று எல்லாம் எழுதலாம். ஒரு மாநில அரசு தன்னுடைய உரிமைகளைக் கேட்பது என்பது மோதலாகாது. அதைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர் கள் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், ஜீவனான தண்ணீர்ப் பிரச்சினையில், ஒரு அரசு எப்படி இருக்க வேண்டுமோ, அந்த நடைமுறை பிறழாமல் இந்த அரசு இருக்கிறது. ஆகவே, இவை எல்லாம் மத்திய மாநில உறவுகளிலே அணுகுமுறைகளிலே வரக்கூடிய விவாதங்களே தவிர, அது பிளவுக்கு வழி வகுக்காது. அப்படி யாரும் நினைத்து விடக்கூடாது.

பிற்பகல் 12-30

நம்முடைய நாட்டில், ஆழமான பாசன ஆதாரங்கள் இருக்கின்றன. ஒரு பகுதியிலே வறட்சி வந்து, பெரிய கொடு மைக்கு ஆளாகிக் கொண்டிருக்கும்போது, இன்னொரு பகுதியிலே வெள்ளச் சேதாரம் வந்து, நாட்டையே அழித்துக் கொண்டிருக் கிறது. வறட்சிக்குப் பல கோடி ரூபாயை செலவு செய்து கொண் டிருப்போம், அப்போது, வெள்ளத்திற்கும் பல கோடி செலவு செய்ய வேண்டியதாக இருக்கும். ஆகவே, பெரிய திட்டங்களை எல்லாம் உருவாக்குவதுதான் எதிர்காலத்தில் நம்முடைய மாநிலத்திலிருந்து வறட்சியைப் போக்குவதற்கு உதவும். ஆகவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் கேரளக் கடலிலே விழுகின்ற ஆற்று நீரை தெற்கே திருப்ப வேண்டும் என்று இந்த அரசுக்கு வந்திருக்கிற உணர்வு, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கொள்கைக் குறிப்பிலே இடம் பெற் றிருக்கிற அந்த உணர்வு, இந்தச் சட்டமன்றத்தினுடைய தீர்மான மாக, இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, நம்முடைய கருத்தை நமக்குச் சாதகமாக திருப்புகின்ற தீர்மானமாக இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விளைச்சலைத் தர நிலமும், பாய்ந்து வளப்படுத்த நதி நீரும், பாடுபட பல கோடி மக்களும் இந்திய நாட்டில் ஏராளம். ஆகவே, வெண்ணெய் இருக்கிறது, உருக்கிச் சாப்பிட முடியுமா என்பது தான் கேள்வி. அதைத்தான் நம்முடைய அரசு—இங்கே வறட்சி இருக்கிறது, எனவே கடலிலே விழுகிற தண்ணீரைத் திருப்பு என்று கேட்பது நம்முடைய உரிமை,—தொடர்ந்து செய்ய வேண் டும். அதற்கு தமிழகம் கட்சி வேறுபாடின்றி ஒத்துழைக்கும் என்பதுதான் எங்களுடைய நிலை. (மணியடிக்கப்பெற்றது)

கேரளக் கடலிலே விழுகின்ற நீரை, தமிழ்நாட்டிற்குத் திருப்பு
வதன் மூலமாக, தமிழகம் செழிப்பதற்கு ஏராளமான வாய்ப்புக்
கள் இருக்கின்றன. எங்களுடைய மதுரை மாநகரத்திலே ஒரு
விழாவைக் கொண்டாடுகிறோம். புட்டு திருவிழா என்று பெயர்.
நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கும் அது தெரியும் என்பதால்,
சற்று அனுமதிப்பார் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எனக்குத் தெரிந்த
தால்தான், அது வேண்டாம் என்று சொல்கிறேன். சீக்கிரம்
முடியுங்கள். புட்டுத் திருவிழா பற்றி எல்லாம் இப்போது பேசிக்
கொண்டிருப்பதற்கு நேரம் இல்லை.

திரு. எஸ். வி. சண்முகம் : வைகையிலே வெள்ளப்
பெருக்கு ஏற்பட்டு, நகரத்தின் உள்ளே தண்ணீர் நுழையும்
போது, பாண்டிய மன்னன், அதை அடைப்பதற்கு வீட்டுக்கு
ஒருவர் வரவேண்டும் என்று கட்டளையிட்ட நேரத்திலே, ஒரு
புட்டு விற்கிற கிழவி, தனக்குப் பிள்ளை இல்லையே,
மன்னனுடைய கட்டளையை எப்படி நிறைவேற்றுவது என்று
இருந்தபோது, சிவபெருமானே வந்து, 'புட்டு தா, நான் மண்
சுமக்கிறேன்' என்று சொல்லி, வேலை செய்த நேரத்தில்,
சற்று அசந்தபோது, மன்னன் பாண்டியன் அடித்த அடி
எல்லோர் முதுகிலும் விழுந்ததால்தான் இந்தக் கோடு என்று ஒரு
கதை இருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம்
வெள்ளப் பெருக்கு, மதுரை நகரத்திலே நுழைந்ததா
புட்டுக்கு மண் சுமந்த கதை வந்தது, புட்டு திருவிழாவும் நடத்து
கிறோம். அந்த புட்டுத் திருவிழா நடத்துகிற கரையில், வைகை
என்பது இன்றைக்கு பாழடைந்து போய், தண்ணீரே இல்லாத
ஒரு காடாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், வைகை
ஆறு என்பது விறகு உற்பத்தியாகின்ற கருவேல மரங்கள் இருக்
கின்ற காடாக இன்றைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. இதைத்
தடுப்பதற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்
முன்மொழிந்திருக்கிற கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கடலிலே
விழுகின்ற தண்ணீர் திருப்பப்படுமானால், வைகை செழிக்கும்.
வைகை வளம் பெற்ற ஆறாக மாறும்போது, பசும்பொன், இராம
நாதபுரம், காமராஜர், மதுரை ஆகிய 4 மாவட்டங்களும்
செழிக்கும். காவிரியின் உபரி நீரை புதுக்கோட்டைக்குத் திருப்
பினால், புதுக்கோட்டை செழிக்கும். தெற்கே செழிக்கும்
போது, தமிழ்நாடே வளரும். அத்தகைய மாற்றத்திற்கு
வழிவகுக்கக்கூடிய ஒரு நல்ல கொள்கைத் தீர்மானத்தை
முன்மொழிந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது..
இன்று முடியாது. ஒரே ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம் : நெடுஞ்சாலைத் துறையிலே
10 ஆயிரம் என்.எம்.ஆர்.-கள் வேலை பார்த்தார்கள்,
முந்தைய தி.மு.க. அரசு அவர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்பி





விட்டது. 240 நாட்களுக்கு வேலை செய்தால், அவர்களை நிரந்
தரம் பண்ண வேண்டும் என்பது சட்டம். ஆனால் நிரந்தரம்
பண்ணுவதற்கு மாறாக, அவர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்பி
யிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம், 240 நாட்களுக்கு மேலே
வேலை செய்த ஆதாரங்களை எல்லாம் நீதிமன்றத்திலே கொடுத்
திருக்கிறார்கள். ஆகவே 10,000 குடும்பங்கள் வாழ்வதற்கு வழி
வகுக்கக் கூடிய ஒரு காரியத்தை இந்த அரசு செய்ய வேண்டும்.
முந்தைய தி.மு.க. அரசால் வஞ்சிக்கப்பட்ட 10,000 குடும்பங்
களுக்கு இந்த அரசு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல் எங்களுடைய மதுரை மாநகரத்தில் தேவர் சிலைக்
குக் கீழே—இங்கே இருக்கக்கூடிய அண்ணா சிலைக்குக் கீழே
இருப்பது போல—ஒரு மும்முகப்பு கொண்ட ஒரு சுரங்கப்பாதை
கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மிகப் பெரிய சாலைப் போக்குவரத்துக்கு இடை
யூறாக இருக்கிற மதுரை கோட்சுக்கு அருகாமையில் இருக்கிற
ரயில்வே கேட்டிற்கு மேலே ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமென
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இந்த நூற்றாண்டில் மதுரை ரிசர்வ் லைனில்
இருக்கக்கூடிய காவலர் குடியிருப்பில் ட்ரை லெட்ரீன்—எடுப்பு
கக்கூஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதை 'ஃபிளஷ் அவுட்
டாக' மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எதிலும்
'நியூ அப்ரோச், நியூ திங்கிங், நியூ ஸ்டைல் ஆஃப் ஃபங்ஷன்'
என்று இருக்கின்ற இந்த அரசு பாசனத் துறையிலே மிகப் பெரிய
மாற்றங்களைச் செய்து தர வேண்டுமென இன்றைக்குத் திட்ட
மிட்டிருக்கிறது. அதற்குக் கடலிலே விழுகின்ற ஆறுகளைத்
தெற்கே திருப்பவேண்டுமென்ற கோரிக்கைக்கு இங்கே இருக்கக்
கூடிய காங்கிரஸ் கட்சியும் உறுதுணையாக நிற்கவேண்டுமென்று
கேட்டுக்கொண்டு, காவிரிப் பிரச்சினை, இத்தகைய ஆறுகள்
பிரச்சினையில் கட்சி மன மாச்சரியம் வித்தியாசம் இல்லாமல்
பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்
கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். எம். எஸ்.
அபுல்ஹசன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றையதினம் 1992—93-ஆம் ஆண்டிற்
கான வரவு-செலவுத் திட்டத்தில் பொதுப்பணித் துறை மானியக்
கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர்
அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்] [1992 மார்ச் 31

'' யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம் '' என்பதற்கும், '' யாமறிந்த புலவர்களிலே கம்பனைப்போல், வள்ளுவனைப்போல், இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே கண்டதும் இல்லை '' என்ற பாரதியின் பாட்டுக்கு ஏற்பவும், '' யாம் அறிந்த முதல்வர்களிலே பெருந் தலைவர் காமராஜரைப்போல், பேரறிஞர் அண்ணாவைப் போல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரைப் போல் '', இன்றைய தினம் தமிழகத்தை ஆண்டுவரும் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்து, தமிழக மக்களுக்கு சேவை செய்வதில் முன்னோடியாக இருக்கி றார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. தமிழ் நாட்டி லுள்ள சாலைகளை மேம்படுத்தும் முகத்தான் 1992-93-ஆம் ஆண்டிற்கான திட்டம் குறித்து, கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் என்னுடைய மாவட்டமாகிய நாகை காயிதே மில்லத் மாவட்டத் தினுடைய சாலைகளை மேம்பாடு செய்யும் பொருட்டு அத் திட்டத்தை தனியாரிடமும் கொடுத்து, எங்கள் மாவட்டத்து சாலைகளை தமிழகத்திலே ஒரு முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டதில் எனக்கும், மாண்புமிகு சக உறுப்பினர்களுக்கும் பெரு மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் எங்கள் மாவட்ட மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற நிதியாண்டில் இதே மானிய கோரிக்கையின் மீது 26-9-1991-ஆம் ஆண்டு பேசும்போது, மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கவனத்திற்கும், சொல்லாற் றல், செயலாற்றல், கடின உழைப்பு இவை மூன்றும் ஒருங்கே அமைந்த, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்கும் எங்கள் தொகுதியான மயிலாடுதுறை போக்குவரத்துக்கு ஒரு புதிய பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துக் கூறினேன்.

மேலும், எனக்கு இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்புகள் கிடைத்தபோதெல்லாம் மாயிலாடுதுறையில் அரசு மருத்துவ மனைக்கு அருகாமையில் காவிரியின் குறுக்கே இருக்கும் நடை பாதை பாலத்தை போக்குவரத்துக்குரிய பாலமாக கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று கூறியதோடு, இதன் காரணமாக மயிலாடுதுறையில் போக்குவரத்து நெரிசல் 50 சதவீதம் குறையும் என்றும் கூறியிருக்கிறேன். எனவே, சொல் வதைச் செய்து முடிக்கும் செயல் திறன் படைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு



1992 மார்ச் 31] [திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்]

பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நடைபாதைப் பாலத்தை போக்குவரத்துப் பாலமாக மாற்றி, அங்கே 'பை-பாஸ்' சாலை ஒன்றை உருவாக்கி மயிலாடுதுறை மக்களின் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று எங்கள் தொகுதி மக்கள் சார்பில் வேண்டுகிறேன்.

மயிலாடுதுறையில் தற்போது போக்குவரத்துக்கு என்று இருக் கும் பாலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட குறுகிய பாலம். பழுதடைந்த பாலம்தான் இருக்கிறது. இதுவரை அப் பாலம் அகலப்படுத்தப்படவோ, சீர்செய்யப்படவோ இல்லை. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்பாலத்தை புதுப்பித்துத் தரும்படி வேண்டுகிறேன்.

நாகை- காயிதே மில்லத்· மாவட்டத்தில் தற்போது அடித்த புயல் வெள்ளத்தின் காரணமாக மயிலாடுதுறை நகரில் உள் சாலைகள் மிகவும் சேதம் அடைந்துள்ளன. அவைகளை சீர் செய்து கொடுக்கும்படி அன்புடன் வேண்டுகிறேன். 1969-ல் மயிலாடுதுறையில் துவங்கப்பட்ட பொதுப்பணித்துறையின் காவிரி சீரமைப்புக் கோட்டம் எண்ணற்ற பல திட்டங்களை நிறைவேற்றி அதன் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாகப் பயன்பெற்று வந்தார்கள். ஆகவே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அக்கோட்டத்தை வேறு எங்கும் மாற்றம் செய்து விடாமல் அது மயிலாடுதுறையி லேயே நிரந்தரமாக இருந்து விவசாய பெருங்குடி மக்களுக்கு மேலும் பல உதவிகளை செய்து கொடுக்க வேண்டும் என்ற கருத்தை விவசாய பெருங்குடி மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

எனது தொகுதியான மயிலாடுதுறையில் முடிகொண்டநல்லூர் ஊராட்சி உள்ளது. அது கொள்ளிடக் கரை ஓரம் அமைந்துள்ளது. அங்கே புரசங்காடு, சீப்புலியூர் போன்ற கிராமங்கள் இருக் கின்றன. முடிகொண்டநல்லூர் ஊருக்கு நேர் கொள்ளிடத்தில் நடந்தால் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஓமலூர், புலியூர் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊருக்கு நெய்வேலி, பாண்டி, சென்னை போன்ற ஊர்களிலிருந்து பேருந்துகள் வந்துக் கொண்டிருக்கின்றன. இப்போது ஓமலூர்புலியூர் வந்திறங்கும் பயணிகள் கொள்ளிடத்தைக் கடந்து கரடு முரடான பாதை யில் 6 கிலோ மீட்டர் நடந்து வந்து மணல்மேடு பேருந்து நிலை யத்தை அடைந்து அங்கிருந்து மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருச்சி போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக இன்றையதினம் மக்கள் பெரிதும் அவதிப்படு கிறார்கள். மேலும் மயிலாடுதுறையில் உள்ள சர்க்கரை ஆலைக்கு தென்னாற்காடு மாவட்டம், ஓமலூர் புலியூர், காட்டுமன்னார் கோயில், சேத்தியாதோப்பு, நெய்வேலி ஆகிய ஊர்களிலிருந்து கரும்புகள் வருகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

என் தொகுதியிலுள்ள முடிகொண்ட நல்லூருக்கும் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஓமலூர்புலியூருக்கும் இடையே கொள்ளிடத்தின் குறுக்கே ஒரு பெரிய பாலம் ஒன்றை அமைத்துக் கொடுத்தால் அது இரண்டு மாவட்டங்களுக்கும் பயன்படுவதோடு அரசின் எல்லாத் துறைகளுக்கும் நன்மை பயக்கும் என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பாலத்தை உடன் கட்டித்தர வேண்டுகிறேன். என் தொகுதியான மயிலாடுதுறையில் உள்ள மேம்பாலத்தோடு, மேலமருத்தாநல்லூர் கிராமத்தில் இருக்கும் பாசன வாய்க்கால்கள் மற்றும் வடிகால் வாய்க்கால்களைச் சீரமைத்துக் கொடுக்கும்படி வேண்டுகிறேன். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் தொகுதி மக்களுக்கு இந்த அரசின் மேல் உள்ள அன்பை பிரிக்க முடியாத அளவுக்கு நல்ல பல திட்டங்களை செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம். மயிலாடுதுறையில் பழங்காவேரி என்ற காவிரி இருக்கிறது. இந்த காவிரிக்கு தண்ணீரே வருவது இல்லை. அதனால் அதற்கு மூவலூர்காவிலே நதியிலிருந்து ஒரு ரெகுலேட்டர் போட்டு அதற்கு 15 லட்சம் ரூபாய் செலவிலே ஒரு திட்டம் இருக்கிறது. அதை நிறைவேற்றிக் கொடுத்தால் காவிரியில் பாசனத்திற்கும் அதிகமான தண்ணீர் வந்து சேரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. செ. பெருமாள்.

<u>*திரு. செ. பெருமாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம் மற்றும் சாலைகளும் பாலங்களும் ஆகிய மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே சாலைகளும் பாலங்களும் அதிகமாக தேவைப்படுகிற காரணத்தாலே பல கோரிக்கைகளை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர இருக்கிறேன். ஏனென்று கேட்டால் என்னுடைய தொகுதியானது மலைப்பகுதியாக இருக்கிற தொகுதி. நமது நாட்டிலே சுமார் 80 விழுக்காடு மக்கள் கிராமங்களிலே வாழுகிறார்கள். அக்கிராமங்களுக்கு எல்லாம் சாலைகள் தான் போக்குவரத்திற்கு ஒரே சாத்தியமான சாதனமாக இருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியிலே மக்கள் பயன்பெறும் வகையிலே முதல் கட்டமாக ஏற்காடு மலையிலே 1989 ஆம் ஆண்டு நம்முடைய தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் எதிர்க் கட்சியாக இங்கே இருந்தபோது தி.மு.கழகத்தினர் ஆட்சி நடத்தினார்கள். அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது அந்தப் பகுதி மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. ஏனென்று கேட்டால் மலைவாழ் மக்கள்



மேம்பாடு திட்டத்தின் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு சாலைகள் வருவது நல்லதாக இருக்கும் என்று மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு நான் அன்று ஒரு விண்ணப்பத்தை அமைச்சரிடத்திலே கொடுத்து அந்த அமைச்சர் இன்னும் செய்யவில்லை. இரண்டு ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது எங்களுடைய கட்சி எதிர்க் கட்சியாக இருந்த காரணத்தினாலே செய்யவில்லை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அனைவரும் நீங்கள் அன்று எதிர்க் கட்சியாக இருந்தீர்கள்; உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. இன்று நீங்கள் ஆளும் கட்சியாக இருக்கிறீர்கள், நீங்கள் உங்கள் அமைச்சரிடம் தெரிவித்து எங்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக இன்று ஏற்காட்டிலே கொட்டச்சேட்டிற்கும் மாரமங்கலத்திற்கும் சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அந்தச் சாலை 1990 ஆம் ஆண்டு சாங்க்ஷன் ஆனதாக ஏட்டிலே குறிப்பிட்டிருக்கிறது. இதுவரை செய்யவில்லை. ஏனென்று கேட்டால் இது மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின் கீழே இருப்பதால் 1993 ஆம் ஆண்டுதான் எடுப்போம் என்று நேற்று செக்ரட்டரி அவர்கள் சொன்னார்கள் அந்த மக்கள் பயன்பெறும் வகையிலே இந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்கள் மிக விரைவிலே நிவர்த்தி செய்வதற்கு ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியிலே பேளூருக்கும் ஆமாரபாளையத்திற்கும் இடையே ஒரு வசிஷ்ட நதி ஓடுகிறது. அந்த நதியின் குறுக்கே பாலம் கட்டினால், அதாவது தரைப் பாலம் கட்டினால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற பள்ளி மாணவர்களும், பொது மக்களும் பயன் பெறுவார்கள். அதைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதிக்கு ஒரு தரைப்பாலம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதே போல என்னுடைய தொகுதியிலே செக்கலிட்பட்டியிலிருந்து மெட்டுக்கல் செல்லும் பாதை குறுக்கே ஒரு பாலம் கட்டித் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

என்னுடைய தொகுதியிலே வீராணத்திற்கும் டி. பெருமாள் பாளையத்திற்கும் குறுக்கே ஒரு ஆறு செல்வதால் அந்த ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்டித் தருமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

அதே போல வீரன்பாளையத்திற்கும் ஏழுகுளிக்குமிடையே ஒரு தரைப்பாலம் கட்டித் தருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

சாலைகள் பராமரிப்புகளுக்கு 1991—92 ஆம் ஆண்டுக்கு 200.35 கோடியும், 1992—93 ஆம் ஆண்டுக்கு 314.51 கோடியும் ஒதுக்கியிருக்கிறீர்கள்.. என்னுடைய தொகுதியிலே மிக

அதிகமாக பழங்குடியினர் வாழ்கின்றார்கள். அதே போன்று மலை வாழ் பகுதியாகவும் இருப்பதால் அமைச்சர் அவர்கள் இந்தச் சாலை வசதிகளைச் செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியிலே கரியக்கோவில் நீர்த்தேக்கத் திட்டமும், ஆனைமடுவுத் திட்டமும் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. தற்போது பெய்த மழையினால் ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டத்தினுடைய அணையானது நிரம்பி அதிகமாகத் தண்ணீர் வந்த காரணத்தினால் பாலங்கள் அடித்துச் சென்றுவிட்டன. இப்போது அந்தப் பாலமானது தகர்க்கப்பட்டதனால் பொது மக்கள் அவதிப்படுகிறார்கள். எனவே அதன் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்டித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக ,தமிழக மக்களின் காவல் தெய்வமாக ஆட்சி புரியும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மக்களுடைய நலனைக் கருதி, குறிப்பாக விவசாயிகளுடைய நலனைக் கருதி காவேரி நீர்ப் பிரச்சினையை மிக விரைவிலே தீர்த்து வைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்த போது அவர்கள் தீர்த்து வைக்காத குறைகளை இப்போது நம்முடைய தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் தீர்த்து வைத்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

பிற்பகல் 12-50

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி. 10 நிமிடங்கள் மட்டும்.

திரு நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில் சம்பந்தப்பட்ட பாசனம், கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் துறை மீது ஒருசில கருத்துக்களை உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் முன்வைக்க அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாசனத்திலே இன்று 1.85 மில்லியன் எக்டேர் இயற்கைப் பாசனமாகவும், 1.15 மில்லியன் எக்டேர் இறைவைப் பாசனமாகவும் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது. அதிலே இயற்கைப் பாசனத்தை சரியான முறையில் கொடுக்கின்ற பணியைத்தான் பொதுப்பணித் துறை இன்று செயல்படுத்தி வருகிறது.



ஆனால் அந்த இறைவைப் பாசனத்திலே இருக்கின்ற 1.15 மில்லியன் எக்டேர் பாசனத்திற்காக 15 இலட்சம் இறைவைக் கிணறுகளை விவசாயப் பெருமக்களே ஒரு கிணற்றுக்கு அதனுடைய மோட்டார் உட்பட 50 ஆயிரம் ரூபாய் என்று கணக்கிட்டாலும் கூட 7,500 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்து அந்த இறைவைப் பாசனத்தை இன்று தமிழகத்திலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த இறைவைப் பாசனத்திலே அந்த 7,500 கோடி ரூபாயை விவசாயிகளே முதலீடு செய்து அரசின் உதவி அதிகம் பெறாமல் முதலீடு செய்து இருக்கின்ற காரணத்தால் தான் அந்த இறைவைப் பாசனத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை நாங்கள் இதுகாறும் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே அந்த இறைவைப் பாசனத்தின் மூலமாக இன்று தண்ணீர் மிகச் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டு இன்று உற்பத்தியை அது பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. தண்ணீர் போல செலவிடுகிறான் என்று சொல்வார்கள். இன்று தண்ணீரே கூட தாராளமாக செலவழிக்க முடியாத ஒரு வளமாக இன்று நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கிறது. அந்தத் தண்ணீரை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்துகின்ற பணியை பொதுப்பணித்துறை திறம்பட நீர் நிர்வாக முறையாகச் செயல்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த கங்கையைக் கொண்டுவருவதற்குப் பகீரதன் தவம் இருந்தான் என்று சொல்லுவார்கள். அந்த பகீரதன் கங்கையைக் கொண்டு வந்ததால் அதற்குப் பகீரதப் பிரயத்தனம் என்று சொல்லுவார்கள். ஆனால் தென்னாட்டு கங்கையான காவிரியை, தமிழகத்திலே ஓடிக்கொண்டு இருக்கிற காவிரியினுடைய உரிமையைப் பாதுகாப்பதிலே இன்று பகீரதப் பிரயத்தனத்தோடு நவீன பகீரதையாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த காவேரியினுடைய உரிமையைக் காப்பதிலே அவர்கள் இன்று நமக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நூறு ஆண்டு காலம் வாழ தமிழகத்தை ஆள வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர் வளம் 95 சதவீதத்தை நாம் பயன்படுத்திவிட்டோம். இனி தமிழ்நாட்டுக்கு தண்ணீர் கிடைக்க வேண்டும் என்றால் தீப கற்ப ஆறுகளை மகாநதியிலிருந்து வைகை வரை இணைப்பதையும் மேற்குத் தொடர்ச்சிமலை ஆறு—மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்து கடலில் கலக்கின்ற—நீரைப் பெறுவது தான் ஒரே வழி அதற்கு மத்திய அரசு அந்த நீர் ஆதார வளங்களை எல்லாம் மற்ற கனி வளங்களைப் போல தன்னுடைய பொறுப்பில் எடுத்துக்கொண்டு, வேண்டும் பகுதிக்கு திருப்பி விட வேண்டும்.

இதுவரை இந்தியாவினுடைய ஒருமைப்பாடு பஞ்சாப் தீவிரவாதிகளாலும், காஷ்மீர் தீவிரவாதிகளாலும், அசாம் உல்பா தீவிரவாதிகளாலும் தமிழ் ஈழப் போராளிகளாலும் தான் இந்தியாவினுடைய ஒருமைப்பாடு பாதிக்கப்படும் என்று நினைத்துக் கொண்டு இருந்தோம். ஆனால் இன்று தண்ணீர் பிரச்சினையால் இந்திய நாடு துண்டாடப்படுகின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதைக் காவேரி தாவா பிரச்சினை ஒன்றே நமக்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது. எனவே மத்திய அரசானது இந்தத் தண்ணீர் தாவா பிரச்சினையிலே சரியான முறையில் நடந்து கொண்டு தமிழகத்தினுடைய உரிமையைப் பாதுகாக்கவேண்டும். தமிழகத்திற்கு மீண்டும் நீர் வளத்தைக் கொடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12.55

கோவை மாவட்டத்திலே இருக்கிற மிக முக்கியமான பாசனத் திட்டமான பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டத்திலே 1.40 இலட்சம் ஏக்கர் விரிவாக்கப் பகுதியானது இன்னும் பாசனம் பெறமுடியாமல் கடந்த 10 ஆண்டுக் காலமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டத்திலே 18 மாத இடைவெளியில் நமக்கு 40 மில்லியன் டி. எம். சி. தண்ணீராவது கிடைக்கிறது. அந்தத் தண்ணீரை இந்த 18 மாத இடைவெளியிலே கூட, ஒரு டி. எம். சி. தண்ணீரை 10,000 ஏக்கருக்கு என்று பாசனம் அளித்தால், இந்த 1.40 இலட்சம் ஏக்கருக்கு 3 மணி நேரத்திலே புன்செய்ப் பயிருக்கு பாசனம் அளிக்க முடியும். அந்தச் சிக்கன முறையை பொதுப் பணித் துறை கடைப்பிடித்து உடனடியாக அந்த விரிவாக்கப் பகுதிக்கு தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே வடசெத்தூர் விரிவாக்கப் பகுதியில் தொண்டாம்பட்டி கிளை வாய்க்காலானது வெட்டப்படாமல் நின்று போனதால் 3,667 ஏக்கர் இன்னும் பாசனம் பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அந்த வாய்க்காலையும் வெட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அதோடு, இப்போது இருக்கிற 39,200 ஏரிகளில் 40 ஹெக்டேருக்கு அதிகமான ஆயக்கட்டுக்களைக் கொண்ட 8,900 ஏரிகளைத்தான் பொதுப் பணித் துறை தன்னுடைய கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டுள்ளது. அதில் ஐரோப்பிய பொருளாதார உதவியுடன் மேம்பாடு செய்யப்படுகிறது. மற்றுமுள்ள சிறு ஏரிகளை உள்ளாட்சித் துறையிடம், ஊராட்சி ஒன்றியங்களிடம் விட்டிருக்கிறார்கள். ஒன்றியத்தில் பணம் இல்லாத காரணத்தால் அவை எல்லாம் தூர் எடுக்கப்படாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஏரிகளையும் பொதுப் பணித்துறை பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு ஏரிகளை ஆக்கிரமித்து குடிசைப் போடும் ஒரு சக்தி வாய்ந்த சமூகவிரோத கும்பல் இன்றைக்கு தமிழ் நாட்டிலே பெரிய அளவில் அரசியல் பின்னணியோடு வளர்ந்துள்ளது. பாசன நீரைப் பிடித்து வைக்கும் ஏரிகளை எல்லாம் சிலர் சாகுபடிக்கு எடுத்துக்கொண்டு ஏரிக்கு தண்ணீர் வராமல்கூட தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை மாற்றி தண்ணீர் ஏரிக்கு வர ஏற்பாடு செய்ய வேண்டும். முன்பெல்லாம் குடிமராமத்து என்ற முறை இருந்தது. அது இப்போது இல்லை. இன்றைக்கு விவசாயிகள் அந்தப் பழக்கத்தையே விட்டுவிட்டார்கள். எனவே பொதுப் பணித் துறையானது இந்த ஏரிகளிலே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களிடம் இந்த ஏரிகளைப் பராமரிப்பு செய்யக் கொடுத்து அதற்கு வேண்டிய நிதியையும் அவர்களுக்குக் கொடுத்து ஏரிகளைக் காக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடக அரசு காவிரித் தண்ணீர் பிரச்சினையை, 'நூற்றாண்டு காலமாக தண்ணீருக்காக நடந்துவரும் போராட்டம்' என்ற ஒரு புத்தகத்தை அச்சிட்டு எல்லா தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதிலே தமிழ்நாடு நீரைச் சிக்கனமாக நிர்வகிக்கவில்லை என்று ஒரு பெரிய குறையைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தின் சார்பிலே நம்முடைய தன்னிலை விளக்கத்தை ஒரு புத்தகமாக அச்சடித்து கர்நாடக சட்டமன்றப்பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு எல்லாம் அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுப்பணித் துறையிலே இருக்கிற பொறியாளர் மத்தியில் இருக்கிற குறைகளை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதுநிலைப் பள்ளியில் கல்வியிலே தேர்ச்சி பெற்று, முதன்மையாக வரும் மாணவர்களே பொறியியல் துறையிலே வருகிறார்கள். அவர்களுக்கு பொதுப் பணித் துறையிலே 20 ஆண்டுக் காலம் பதவி உயர்வு கிடைக்காமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. மற்றவர்கள் எல்லாம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி உயர்வு பெறுகின்றபோது பொறியியல் துறையில் இருக்கிற பொறியாளர்கள் பதவி உயர்வு பெற முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதன் மூலமாக அரசுக்கு ஒன்றும் கூடுதல் செலவு வரப்போவதில்லை. ஏனென்றால் அவர்கள் அந்தக் காலத்தில் அவர்களுடைய ஊதிய விகிதத்தில், பதவி உயர்வு பெறுகிறபோது வருகிற ஊதியம் அளவுக்கு உயர்ந்து விடுகிறது. எனவே, அவர்கள் சிறப்பாகப் பணியாற்ற அவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து, உற்சாகப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அவர்களுக்கு இப்போது சம்பளம் போன்
றவை 'ட்ரஷரி' மூலமாக கொடுக்கிறார்கள். ட்ரஷரி மூல
மாக அவர்கள் சம்பளம் பெறுவதிலே அந்தக் கருவூலத்தைச்
சார்ந்த ஊழியர்களுக்கு இவர்களே கையூட்டு கொடுக்க
வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, முன்பு இருந்த
'லெட்டர் ஆப் கிரடிட்' —கடன் மாற்றுச் சான்று முறை
மூலமாகவே சம்பளம் போன்றவற்றை கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இது சென்ற ஆட்சியி
லேதான் மாற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே
குறிப்பிட்டுச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுப் பணித் துறையிலே கட்டப் படுகின்ற அரசுக்
கட்டடங்கள் அத்தனையும் பொதுப் பணித்துறை பணியாளர்கள்
மூலமாகக் கட்டுவது தான் சிறப்புடையதாக இருக்கும்.
எம். எம். டி. ஏ. போன்ற அமைப்புகள், அவர்கள் பொதுப்
பணித் துறை பொறியாளர்களைப் பயன்படுத்தாமல் தனியார்
துறையிலே இருக்கிற பொறியாளர்களை கட்டுமானப் பணி
களுக்குக் கேட்டுப் பெறுவதால் 12 சதவிகிதம் முதல் 15
சதவிகிதத்திற்கு மேல் அவர்களுக்கு கூடுதல் செலவு ஆகிறது
என்று சொல்கிறார்கள். எனவே, பொதுப் பணித் துறை
பொறியாளர் மூலமாகவே எல்லா அரசு கட்டிடங்களையும்
கட்டுகின்ற முறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

அதோடு சாலைகளும் பாலங்களும் என்ற வகையிலே
சாலைகளும் மிக முக்கியமான, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி
சிக்கு அவசியமானவைகளாகும். என்னுடைய தொகுதியி
லுள்ள ஒரு முக்கியமான பிரச்சினையை இங்கே மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பு
கிறேன். சாலைகளை நல்லமுறையிலே காப்பதற்கும்,
அவற்றை நல்ல முறையில் பராமரிப்பதற்கும் நடவடிக்கை
எடுக்கப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில்
தென்னை நார் கழிவு தொழிற்சாலை இருப்பதால் அத
னுடைய கழிவுகளையெல்லாம் அந்தச் சாலைகளினுடைய
டிச்சிலே கொட்டி அங்கே இருக்கின்ற சாலையோர மரங்
களை தீவைத்து அழித்து விடுகிறார்கள். சாலையில் தண்
ணீர் போக வழியில்லாமல் தார்ச் சாலைகள் அங்கே கெட்டு
விடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, தென்னை நார்
கழிவை அங்கே கொட்டுவதற்கு நீங்கள் தடை விதித்து அங்
கேயுள்ள சாலைகளைப் பராமரிக்க வேண்டும். (மணியடிக்
கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்துக்
கொள்ளுங்கள்.



திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே பல
சாலைகள் மோசமாக இருக்கின்றன. கேரள எல்லையை
யொட்டி இருக்கிற காரணத்தினால், கேரள எல்லைக்குச்
செல்கின்ற ஜமீன்சாலியாபுரம் என்ற இடத்திலிருந்து கேரள
எல்லைக்குச் செல்கின்ற ஒரு முக்கியமான சாலை, 2½ கிலோ
மீட்டர் தூரத்திற்கு அந்தச் சாலையில் தார் போடப்படாமல்,
பராமரிக்கப்படாமல் போக்குவரத்திற்கே லாயக்கற்ற
முறையிலே இருந்துகொண்டு இருக்கிறது. அந்தச் சாலையை
உடனடியாக சீர்செய்வதன் மூலம் போக்குவரத்திற்கு வசதி
ஏற்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்திலே நான்
சொல்லி, இந்தத் துறையின் கீழே பேசுவதற்கு வாய்ப்
பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு
நன்றியைக் கூறி, விடை பெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர்.
ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பாலங்கள், சாலைகள், ஏரிகள் பொதுப்
பணி மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு
அளித்தமைக்காக நன்றி கூறி, தமிழ் நாட்டிலே இருக்கக்
கூடிய பெரிய ஏரிகளிலெல்லாம் பல ஆண்டுகளாக அதில்
மராமத்து வேலைகள் செய்யாத நிலையில் தண்ணீரினுடைய
கொள்ளளவு குறைவாக இருக்கிறது. அதனால் அங்கே
இருக்கக்கூடிய விவசாயிகள் தண்ணீரினுடைய அளவு
குறைவாக இருக்கின்ற காரணத்தினால், சுமார் 500 ஏக்கருக்கு
மேல் பரப்பளவுள்ள பெரிய பெரிய ஏரிகளையெல்லாம் மராமத்து
செய்து, புல்டோசர் மூலமாக அந்த ஏரிகளில் வேலை செய்
தால் தண்ணீர் அந்த ஏரிகளில் கூடுதலாகப் பெருக்குவதற்கு
வாய்ப்பு ஏற்படும். அதே நேரத்தில் இப்போது ஐரோப்பிய
நிதி உதவித் திட்டத்தின் மூலமாக 250 ஏக்கருக்கு மேல்
500 ஏக்கருக்கு உட்பட்ட குளங்களை, ஏரிகளை மட்டும்
சீரமைக்க அந்தத் திட்டத்தின் மூலம் எடுக்கப்படுகின்றன.
500 ஏக்கருக்கு மேல் சுமார் ஆயிரம் ஏக்கர் வரை இருக்கக்
கூடிய பெரிய ஏரிகளையும் இந்தத் திட்டத்தின் மூலமாக
எடுத்தால் அது விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.
அதே நேரத்தில் அந்த ஐரோப்பிய நிதி உதவித்
திட்டத்தின் மூலமாக கல் கட்டுவதற்குப் பதிலாக,
கான்கிரீட் ........ மணல், கல் சிமிண்ட் கலவை
தயார் செய்து குளங்களுக்கும் கால்வாய்களுக்கும் கட்டப்படு
கின்றன. அதில் பல்வேறு தவறுகள் நடக்கின்றன. நானே
என்னுடைய தொகுதியிலுள்ள 3, 4 இடங்களைப் பார்வை
யிடுகின்ற போது அந்த சிமிண்ட் கற்கள் அப்படியே உடையக்
கூடிய நிலைமையில் அதற்குப் போடப்பட்ட கலவை சரி

யில்லாத நிலைமை இருந்தது. ஆகவே, அந்த சிமின்ட் கலவைக்குப் பதிலாக கருங்கல்லை அந்தத் திட்டத்தில் உபயோகப்படுத்தினால் அந்தத் திட்டம் செம்மையாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்தில் குளத்தில் இருக்கக்கூடிய மடைகள் கருங்கல் இல்லாமல் பழுதடைந்து இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய பொதுப் பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அந்த ஏரிகளைப் பார்வையிட்டு அந்த மடை, கருங்கல் சரியாக இருந்தால் தான் ஏரியில் நீர் பெருகக்கூடிய நேரத்தில் உடைப்பு ஏற்படாதபடி அந்தக் கருங்கல்லை மேலே தூக்கிவிட்டால் ஏரிகளில் இருக்கக்கூடிய தண்ணீர் கீழே போவதற்கு வாய்ப்பாக இருக்கும். இல்லாவிட்டால் உடைப்பு ஏற்பட்டு பல லட்சம் ரூபாய் அரசாங்கத்துக்கு செலவு ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும். அதே நேரத்தில் அந்தந்த ஏரிகளுக்கு வரக்கூடிய கால்வாய்கள் பழுதடைந்து இருக்கின்றன. அந்தக் கால்வாய்களையும் செம்மைப்படுத்த வேண்டும். செம்மைப் படுத்தினால்தான் நேரடியாக அந்தக் கால்வாய்களின் மூலம் குளங்களுக்கு வரக்கூடிய தண்ணீர் சீராக வருவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

அதே போல, ரோடுகளைப் பொறுத்தவரையில் மதுரையிலே இருந்து தென்காசிக்குப் போகக்கூடிய சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. திருமங்கலத்திலேயிருந்து திருசெங்கோயில் வரையில் வண்டியே போக முடியாத சூழ்நிலையில் ரோடுகள் மோசமாக குண்டும் குழியுமாக இருக்கின்றன. அந்தச் சாலைகளை நீங்கள் தேசிய நெடுஞ்சாலையாகத் திட்டத்தில் எடுத்தால் நலமாக இருக்கும். இப்பொழுது எல்லா அமைச்சர்களுமே அந்தப் பகுதியிலே போகின்றீர்கள் நாங்களும் வருகிறோம். அடிக்கொரு தடவை வருகிறோம். இராஜபாளையத்தைக் கடந்து கிருஷ்ணன் கோயிலுக்கு இந்தப் பக்கம், திருமங்கலம் வரைக்கும் மோசமான சூழ்நிலை இருக்கிறது. அந்த வேலைகளைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

நீண்ட நாட்களாக என்னுடைய தொகுதியில் 5, 6 பாலங்கள் இருக்கின்றன. அந்தப் பாலங்களெல்லாம், ஒரு கிராமத்தை விட்டு இன்னொரு கிராமத்திற்குப் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், நாடு சுதந்திரம் அடைந்து கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட மழைபெய்தால் காட்டாறுகளினால், ஒரு கிராமத்திலே யிருந்து இன்னொரு கிராமத்திற்குப் போக முடியாத சூழ் நிலை இருக்கிறது.



சுப்லாபுரத்திலிருந்து இராமலிங்கபுரம் இருக்கிறது, அந்தப் பகுதியிலேயெல்லாம் ஒரு இடத்திலே காட்டாற்று வெள்ளம் வரும்பொழுது, ஒரு குழந்தையைத் தண்ணீரிலேயே இழுத்துக் கொண்டு போய்விட்டது. காப்பாற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட பாலங்களையெல்லாம் நீங்கள் உடனடியாக முன்னுரிமை கொடுத்து எடுக்க வேண்டும்.

காமராஜர் மாவட்டத்திற்கும், நெல்லை மாவட்டத்திற்கும் செங்கத்தியா பாலம் என்ற ஒன்று இருக்கிறது. அது கூட மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு நான் நேரடியாக எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறேன். ஒரு மாவட்டத்திலேயிருந்து இன்னொரு மாவட்டத்திற்குத் தொடர்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பாலங்களையெல்லாம் நீங்கள் எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் இப்பொழுது தார் ரோட்டை உடனடியாக உடைத்து அதற்குப் பிறகு மெட்டல் போட்டு, அதற்குமேல் தார் போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த ஒன்றரை இஞ்ச் மெட்டல் போடும்பொழுதும், ரோடு போடும்பொழுதும், ஒரு மாதத்திற்குத் தாக்குப் பிடிக்கவில்லை. ரோடுகள் எல்லாம் அப்படியே மோசமான நிலைமையிலே இருக்கின்றன. உடனடியாக அந்த வேலைகள் செம்மையாகச் செய்யப்பட வேண்டும். அப்படி அந்த வேலைகள் சரியாக இருந்தால்தான் மீண்டும் தார் போடுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அதே நேரத்திலே, பப்ளிக்கிலே வந்து ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு யூனிட் மெட்டல் இருக்க வேண்டும், எந்த அளவிற்குத் தார் இருக்க வேண்டும் என்றெல்லாம் வெளிப்படையாகத் தெரியவேண்டும். அப்படி இருந்தால்தான் பப்ளிக்கிலே பொதுமக்கள் அதைக் கண்காணிக்க முடியும். அந்தச் சாலைகளும் செம்மையாக இருக்க முடியும்.

கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாகச் சுமார் 70 கோடி ரூபாய் வரைக்கும் வருவாய் வருகின்றது. அந்த விவசாயிகளுக்குக் கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக அங்கே இருக்கக்கூடிய சாலைகளை நீங்கள் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் மூன்று சாலைகள் சொல்லியிருக்கிறேன். சிவகிரியிலிருந்து மேற்குக் கோம்பையாறு வரைக்கும், புளியங்குடியிலிருந்து மேற்கு பாரஸ்ட் வரைக்கும் உள்ளாற்றிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலைவரைக்கும்

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1992 மார்ச் 31

மூன்று சாலைகளை நீங்கள் கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் இருக் கிறது. எனவே வாசுதேவநல்லூரில் இருந்து மேற்குத் தொடர்ச்சி மலை தேவிபட்டணத்திலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலைவரையிலும், உள்ள ரோடுகளை மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக நீங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் இருக்கின்றன. சில ஊராட்சி ஒன்றியங்களில் நிதி நிலைமை சரியாக இல்லாத காரணத்தால் அந்தச் சாலைகளுக்கெல்லாம் நீங்கள் ஒரு மாற்று வழி எப்படியாவது ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த ஊராட்சிகளிலிருந்து இன்னொரு கிராமத்திற்குப் போக முடியாத நிலைமை. பஸ்கள் போக முடியாத நிலைமை, பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களை மாற்றுவதற்கு நீங்கள் ஸ்பெஷலாக நிதி இல்லாத ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண் டுமென்று நான் மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியைப்பற்றி ஏற்கனவே போன ஆண்டு பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையிலே உங்கள் கவனத்திற்குச் சொல்லியிருக்கிறேன். போன இந்த வினாவிலே கூட நீங்கள் எனக்குப் பதில் அளித்தீர்கள். என்னுடைய தொகுதியில் உள்ளாறு அணை நீர்த் தேக்கத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்குச் சுமார் 16,68 கோடியில் மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்து அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை வருகிற நிதியாண்டிலேயாவது முன்னுரிமை கொடுத்து எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்களையும் பொதுப் பணித்துறை அமைச்சரவர் களையும் மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

செண்பகவல்லி அணைத் திட்டம் இருக்கிறது. பல ஆண்டுகளாக உடைப்பு ஏற்பட்டு அதற்காகத் தமிழக அரசு 10 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாயிலே மதிப்பீடு செய்து அந்த உடைப்பை அடைப்பதற்காக முன் பணமாகக் கேரள அரசுக்கு 5 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட் டிருக்கிறது. கேரள அரசிடம் பேச்சு வார்த்தை நடத்தி அந்த உடைப்பை துரிதமாக அடைப்பதற்கு மாண் மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.



1992 மார்ச் 31] [திரு. ஆர். ஈஸ்வரன்]

என்னுடைய பகுதியில் ஒரு வாரமாக, அங்கே அடிக்கடி மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் விடுதலைப் புலி இயக்கம் சுமார் 20 பேர் 30 பேர் அந்தப் பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் அங்கே இருக்கக்கூடிய தென்னந்தோப்புக்களிலும் இரவு நேரங் களில் போய் அந்த தென்னங்காய்களையெல்லாம் வெட்டு கிறார்கள். அதே நேரத்தில் மேற்கே இருக்கக்கூடிய கிணறுகளில் தங்கி இருக்கக்கூடிய நபர்களிடம் போய் அங்கே என்ன பொருள் வைத்திருக்கிறீர்கள், பீடி, சிகரெட் இருக்கிறதா, டீசல், எண்ணெய் இருக்கிறதா என்று தொடர்ச்சியாக 10 தினங்களாக அந்தப் பகுதியில் ஒரே பரபரப்பாக இருக்கிறது.

பிற்பகல் 1.10.

ஆகையினால், அங்கு மேற்கு வயல்களுக்குச் செல்லக் கூடிய பொது மக்கள் மிகவும் பீதி அடைந்து கொண்டிருக்கிறார்கள். நான், சனி, ஞாயிறு இரண்டு நாட்களில் ஊருக்குச் சென்ற நேரத்தில் அந்தப் பகுதி மக்கள் இந்தப் பிரச்சினையை என்னிடம் நேரிலே சொன்னார்கள். வாசுதேவ நல்லூர், புளியங்குடி, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பகல் நேரங்களிலும், இரவு நேரங்களிலும் இந்தப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாகவே இருக்கிறது. நான் காவல்துறை அதிகாரிகளுக்கும் இது சம்பந்தமாக நேரடியாகச் சொல்லி இருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குத் துரிதமாக ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது).

அதே நேரத்தில், இப்பொழுது நிதிப் பற்றாக்குறை மிகவும் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். காமராஜர் மாவட்டத்திற்கு ஏதோ 28 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நிதிப் பற்றாக் குறை இருக்கிற காரணத்தினால், நாம் நிதி வருவதற்கு ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் இந்த அணைத் திட்டங்களுக்கு உங்களுடைய காலத்தில் செய்தால் தான், நிரந்தரமான பெயர் இருக்கும். என்னுடைய மாவட்டத்திலே என்னுடைய தொகுதியில் மட்டும் 3 அணைத் திட்டங்கள் இருக்கின்றன. இந்த மூன்று அணைத் திட்டங்களுக்கும் சுமார் 30 கோடி ரூபாய்தான் மொத்தத்திலே செலவாகும். இது நீண்டகாலமாகப் பிரச் சினையாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. என். ஆர். ராஜேந்திரன்.

*திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறைகள் மீதான மானியக் கோரிக்கையின் மீது பேசும் வாய்ப்பளித்த தற்கு நன்றி கூறி, என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நடைபெற்றுவரும் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இந்தியாவிலேயுள்ள மாநில அரசுகளுக்கு வழிகாட்டும் அரசு என்பதை, நடைமுறை செயல்கள் மூலம், அதாவது அவசியமான புதியக் கட்டிடங்கள் கட்டுதல், புதிய நீர்த் தேக்கங்கள் அமைத்து நீரைத் தேக்கி, நிலத்தடி நீரைப் பெருக்கி, நீர் வீண் விரயம் ஆவதைக் கட்டுப்படுத்தும் விதத்தில், ஆழ்குழாய் பம்புசெட்டுகள் மூலம், தண்ணீரை தேவைகளுக்கு எடுத்துக் கொள்வதுபோன்ற செயல்களாலும், எங்கெல்லாம் தொடர்ந்து விபத்துக்களும், வாகன நெரிசல்களும் ஏற்படுகிறதோ, அவற்றை ஆராய்ந்து அதை இருவழிப் பாதையாக மாற்றவும், அகலப்படுத்தவும், மற்றும் பழுதடைந்த பாலங்களை எதிர்காலத்தில் ஏற்பட விருக்கும் அபாயங்களைத் தவிர்க்கும் பொருட்டு, அதைப் புதிதாகக் கட்டும் பொருட்டும் எடுக்கிற உடனடி நடவடிக்கை களை தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள்; நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசின் புதியத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள 'ஈஸ்ட் கோஸ்ட் ரோடு', எம். கே. டி. என்று சொல்லப்படும் மெட் ராஸ், கும்பகோணம், தஞ்சாவூர் ரோடும், டி. சி. எச். என்று சொல்லப்படும் திருச்சி—சிதம்பரம் ஹைவேஸ் ரோடும் எங்கள் தொகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ள சாலை என்ற விதத் தில் பாராட்டவும் நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக் கிறேன்.

எம். கே. டி. ரோட்டுடன், சேத்தியாத்தோப்பு என்ற இடத்தில் இணைகிற காட்டுமன்னார் கோவில்—சேத்தியாத் தோப்பு சாலை மிக உயரமானதாகவும், குறுகலான ரோடா கவும் இருக்கிறது. இது வீராண ஏரியின் கிழக்குக் கரை யாகவும் உள்ளது. சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக் கால், ஏரியில் எழுந்த அலைகளின் சீற்றத்தால், போக்கு வரத்துக்கள் நிறைந்த அந்தக் கிழக்குக் கரை, உடையும்



அபாயம் ஏற்பட்டு, மரங்களாலும், மண் மூட்டைகளாலும் தற்காலிகமாக அந்தச் சாலை உடையாமல் அடைக்கப்பட் டுள்ளது. அந்தக் கரைக்கு 'ரிவிட்மென்ட்' கட்ட வேண்டிய அவசியமும், அவசரமும் உள்ளது. வீராணம் ஏரி, தமி ழகத்தின் பெரிய ஏரி என்று சொல்வதைவிட, பெரிய அணைக் கட்டு என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். ஆங்கிலேயர்கள் 19ஆம் நூற்றாண்டில், கங்கைகொண்ட சோழபுரத்தில், தென்னிந்தியாவின் அலெக்ஸாண்டர் என்று போற்றப்பட்ட இராசேந்திரச் சோழனால் கட்டப்பட்ட அரண் மனைக் கற்களைக் கொண்டு, லோயர் அணைக்கட்டை ஏற் படுத்திய போதிலும், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வெட்டிய — பராந்தக சோழன் என்ற சோழ மன்னனால் வெட்டப்பட்ட — வீராணம் ஏரிதான், உண்மையான பயன ளிக்கும் அணைக்கட்டாக விளங்குகிறது. இந்த ஏரியின் கரைகளை வலுப்படுத்தினால்தான் பயனுள்ளதாக இருக்கும். இதை, அடுத்த நிதியாண்டிலாவது உலக வங்கியின் உதவி யோடு செய்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏரியை ஆழப்படுத்தி, ஏரியின் நடுவில் சிங்கப்பூரில் சிறந்த சுற்றுலா மையமாக விளங்கிக் கொண்டிருக்கிற ஒரு தீவினைப் போல அதை ஏற்படுத்தி, சுற்றுலா மையமாக அமைத்து, படகுத் துறை அமைத்து, படகுப் போக்குவரத்தை ஏற்படுத்தினால் சிறந்த சுற்றுலா மையமாக விளங்கும். இது, அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் வாய்ப்பாக இருக்கும்.

மேலும், வேடந்தாங்கலுக்கு வருகிற அனைத்துப் பறவை களும் இங்கு வருகின்றன. அவை அமர்கிற கடம்பை மரங்கள் மக்களால் அழிக்கப்பட்டு, மக்களின் ஆக்கிரமிப் புகளும் அங்கு அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இதனால் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஏரிகளையும் அளந்து ஆக்கிரமிப்புக்களை அகற்றி, ஏரிகளுக்குக் கரைகளையும், கரைகளைச் சுற்றி மரங்களையும் நடும் திட்டம் அமைத்தால் நிலத்தடி நீர் செழிக்கும், நாடும் வளம் பெரும். மேலும், சிதம்பரம் நகரிலிருந்து அண்ணாமலை நகருக்கும், அதைச் சுற்றியுள்ள 50க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் செல்லும் மக்கள் ரெயில் பாதையைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. அடிக்கடி ரெயில்வே கேட் மூடப்பட்டுவிடுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு காலதாமதம் ஏற்படுகிறது. சுமார் 7,000 க்கும் மேற்பட்டோர் கல்வி பயிலும் உலகப் புகழ் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அங்கே இருக் கிறது. இந்தப் பல்கலைக் கழகம் பல ஆராய்ச்சி வல்லுநர் களையும், அறிஞர்களையும் உருவாக்கியதோடு, பல அரசியல் தலைவர்களையும் உருவாக்கியுள்ளது. ஆகவே, அங்கே ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. என். ஆர். ராஜேந்திரன்] [1992 மார்ச் 31

பிற்பகல் 1.15

எனது தொகுதியில் சுமார் 35 பாசன வாய்க்கால்கள் உள்ளன. அவற்றில் 5 முக்கியமான வாய்க்கால்கள் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவை களை சீர்படுத்திட அதிகாரிகளை நெருங்கியபோது நிதி உதவி வாங்கித் தாருங்கள், செய்கிறோம் என்று சொல் லுகிறார்கள். மிக அவசியமான வாய்க்கால்கள் அவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறேன்.

மேலும், குமராட்சி ஒன்றியத்தில் நாஞ்சலுக்குச் செல் கின்ற கான்சாகிப் பொதுப் பணித் துறை வாய்க்காலில் போக்குவரத்துப் பாலம் அமைக்க வேண்டும். அங்கு போடப் பட்டுள்ள மூங்கில் பாலத்தில் வெள்ளப் பெருக்குக் காலங் களில் ஒருவர் உயிர் இழந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. இது அந்த ஊர் மக்களின் நெடு நாளைய கோரிக்கையாகும். மேலும், காட்டுமன்னார்கோவில், வீரா நந்தபுரம் அரசு மருத்துவமனை பழைய வாடகைக் கட்டி டத்தில் இயங்கி வருகிறது. போதிய வசதி இல்லாமல் இருக்கிறது. அதற்குப் புதிய கட்டிடம் தேவைப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காட்டுமன்னார் கோயில் அரசு மருத்துவமனை முக்கிய மான ஒன்று. அங்கு போதிய கட்டிட வசதிகள் இல்லை அங்கு புதிய கட்டிடம் அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், காட்டுமன்னார்கோயிலில் காவல் துறை அலுவ லகமும், வட்டாட்சியர் அலுவலகமும் ஒரே கட்டிடத்தில் இயங்கி வருவதால், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கிறேன். கஞ்சங்கொல்லை, கொண்டையிருப்பு, சிறுகாட்டூர், குச்சிப்பாளையம் கிராம மக்களின் நீண்ட நாளைய விருப்பத்தின் பேரில், கேட்டதும் கொடுக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேருந்து தந்தார்கள். சாலை சரியில்லாத காரணத்தால் ஒரு நாளோடு பஸ் போவது நின்று விட்டது. மீண்டும் மக்கள் என்னை நோக்கிப் படையெடுத் துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அன்புத் தொல்லை யிலிருந்து என்னைக் காக்க வேண்டுகிறேன்.

இறுதியாக, மரபுவழி சாரா எரிசக்தி துறையின் முழு நிதி உதவியுடன் நான்கு கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு 'ஊர்ஜா கிராமத் திட்டத்தில்' தமிழக அரசு செயல்படுத்து வதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் இருஞ்ணபரமாத்மன்



1992 மார்ச் 31] [திரு. என். ஆர். ராஜேந்திரன்]

பி. ஆர். அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நினைவுறுத்திக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நன்றி கூறி வாய்ப்புக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. வெ. நடேசன் பால்ராஜ்.

<u>திரு. வெ. நடேசன் பால்ராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானி யத்தில் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு ஒரு முறை நன்றி கூறுகிறேன்.

நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர் களுடைய ஆட்சி வந்த 9 மாத காலத்திற்குள் எங்கு சென் றாலும், எந்த இடத்திற்குச் சென்றாலும், நமக்கு நன்றாகச் செய்கிறார்கள், நமக்கு நல்லது செய்கிறார்கள். நம்முடைய குறைகளைக் கேட்கிறார்கள் என்கிற நல்ல வார்த்தைகளை நாங்கள் காதுகளிலே கேட்கிறோம். தண்ணீருக்காக போராடுகிறோம். கேரளத்திலே அநாவசியமாக செல்லு கின்ற தண்ணீரைத் திருப்பி தமிழகத்திற்கு விடவேண்டுமென்று நாம் வாதாடுகிறோம். இந்த நிலையில் எங்களுடைய தொகுதி நாங்குநேரியிலே நிறையத் திட்டங்களைப் போடு வதில் சில காலதாமதம் ஆன காரணத்தினால் நிறையத் தண்ணீர் கடலுக்குச் சென்று விடுகிறது. பச்சையார் திட்டம் என்று முன்பு அடிக்கல் எல்லாம் நாட்டப்பட்டு, ஒன்றுமே நடக்காத முறையிலே, இப்போது வடக்கு பச்சையார் என்ற திட்டம் போட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் தேர்தல் நேரங்களிலே பச்சையாறையும் கொடும்புலியாறையும், கொண்டுவருவேன் என்று, இரண்டு வருடங்களுக்குள் கொண்டு வருவேன் என்ற வாக்குறுதியை அந்தத் தொகுதி மக்களுக்கு அளித்தேன்.

அது எப்படி அளித்தேன் என்றால் எப்படியும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நல்ல காரியங் களை உடனடியாகச் செய்வதிலே அவர்கள் முயன்றுக்கொண் டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையைப் பெற்றிருக்கிறேன். அந்த நம்பிக்கையினால்தான் உறுதியளித்தேன். வந்த உடனேயே கொடும்புலி ஆற்றுக்கு ரூ. 1·6 கோடியே 24 லட்சம் கொடுத்து முதல் தவணையாக ரூ. 50 லட்சம் கொடுத்து அந்தப் பணியை ஆரம்பிக்க அதற்கு ஒரு உத்தரவு போட்டி ருக்கின்ற என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த மன்றத்தின் வாயிலாக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 31

பிற்பகல் 1.20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அவையில் அமைதி காக்க கேட்டுக் கொள் கிறேன்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதோடு மணிமுத்தாறு டேம்- லே 3, 4 முறை தண்ணீர் அதிகமாகி தாமிரபரணி ஆற்றிலே திறந்துவிட்டு அது கடலிலே சென்றடைந்திருக்கிறது. அதற்குச் சரியான திட்டங்களைத் நாம் போடுவோமானால் சாத்தான்குளம், திருச்செந்தூர் பகுதிகளிலே அந்த குளங் களிலே, கிணற்றிலே நல்ல நீர் பெருகி, நல்ல குடி நீர் வரும் என்பதிலே எந்த ஐயப்பாடும் இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். இதைப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனித்து தேசிய திட்டத்தின் கீழ் தாமிரபரணி ஆற்றிலே வெள்ளமாக செல்வதை வீணாவதைத் தடுக்கவேண்டும். சாத்தான்குளம் வைரம்தருவை, புத்தம்தருவை, படுக்கப்புத்துத்தருவை, சுண்டத்தொட்டதருவை போன்றஇடங்களுக்கு நீங்கள் அதை அனுப்புவீர்களேயானால் அங்கே பல லட்சக்கணக்கான கிணறுகளிலே உப்பாக மாறி இருக்கின்ற அந்தக் கிணறுகள் எல்லாம் நல்ல தண்ணீர் உள்ள கிணறுகளாக மாறும் என் பதிலே எந்த ஐயப்பாடும் இல்லை.

நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எல்லா பஸ்களும் எல்லா இடத்திற்கும் ஓடும் என்று சொன் னார்கள். ஓடுவதற்கு பஸ்ஸூம் தயாராக இருக்கிறது, ஆனால் எங்களுடைய தொகுதியிலே பெரும்பகுதியிலே ரோடு வசதி இல்லை. அந்தப் பதிலைத்தான் அவர்கள் தரு கிறார்கள். அருள்கூர்ந்து அன்பு கூர்ந்து எங்களுடைய தொகுதிக்கு உடனடியாக அதிகாரிகளை அனுப்பி அந்த சாலை வசதிகளை நல்ல முறையிலே நீங்கள் அமைத்துத் தரவேண் டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஏரவாடிக்கு அருகிலே இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. ஒன்று கிழக்காடி யூனியன், இன்னொன்று நாங்குநேரி யூனியன். இந்த இரண்டு யூனியன்களும் போட்டிபோட்டுக்கொண்டு பாலம் அமைக்காமல் பல ஆண்டுகள் அங்கே அந்த மக்கள் தத் தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதை உடனடியாக அரசினுடைய பொறுப்பிலே எடுத்துக்கொண்டு, இந்த யூனி யனும் இல்லை, அந்த யூனியனும் இல்லை, நாங்களே செய் கிறோம் என்று சொல்லி நீங்கள் செய்து தரவேண்டும் என்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.





இந்த பச்சையாறு, இந்த பச்சையாறு தண்ணீரை நீங்கள் உடனடியாக கொண்டுவருவீர்களேயானால் பல லட்சம் மக்கள் உடனடியாகப் பயன்பெறுவார்கள். அதாவது நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு 'ஈஸ்வரி'-யைப் போன்றவர்கள் போலவும், நீங்களோ ஒரு 'கண்ணப்பன்', கண்ணையே தானம் செய்த, ஒரு அமைச்சர் அந்தப் பெயருடையவர்கள், உடனடியாக இந்த பக்தனுடைய கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும். கடந்த முறை தண்ணீர் வராத ஒரு குளத்திற்குக் கூட நம்முடைய உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கடந்த சட்மன்றக் கூட்டத்திலே பேசிய உடனேயே 'அம்மா' எழுத்து மூலமாக ஒரு பேப்பரிலே ஆர்டர் கொடுத்து அந்த அணையை அனுமதித்தீர்கள். அது போலவே, என்னுடைய இதய தெய்வம் ஆணையிடவேண்டும். இப்போது இந்த மன்றத்திலே இங்கேயில்லையே, எங்கு இருக் கின்றார்களோ, மேலே இருந்தாலும்கூட அவர்களுக்கு எட்டி. அவர்கள் ஒரு எழுத்துமூலமாக ஆணை வரும் என்பதிலே நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பச்சையாறு, பசியைத் தீர்க்கும் பச்சையாறு, பச்சை ஆறு ஏழை மக்களின் குறைகளை தீர்ப்பது. ஆகவே இந்த தண்ணீர் எல்லாம் வீணாகி கடலுக்கே சென்று கொண்டிருக் கிறது. உடனடியாக நீங்கள் பரிவு காட்டி தேசிய திட்டத்திலேயாவது அதை உடனடியாக நீங்கள் நிவர்த்தி செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 1.25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. கே. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வர் அவர்களுக்கு நன்றியினைக் கூறி கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

நம்முடைய தமிழக அரசானது, நம்முடைய தமிழகத்தை பசுமைப் புரட்சியாக ஆக்குவதற்கு பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களை அறிவித்திருக்கிறது. அதற்காக நான் தமிழக அரசைப் பாராட்டுவதோடு, நம்முடைய கிராமப் பகுதி களிலே இருக்கின்ற மக்கள் மேற்பரப்பு நீரைப் பயன்படுத்தி நடுத்தர, சிறு விவசாயு மக்கள் பயன்படுகின்ற அளவிற்கு

[திரு. கே. கே. சின்னப்பன்] [1992 மார்ச் 31]

இன்றைய தினம் 310 கோடி ரூபாய்க்கு திட்டம் அளிக்கப் பட்டுள்ளது. மேலும் ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத் தின் மூலம் ஏரிகளை நவீனமாக்கும் திட்டமும் வரவேற்கத் தக்கது. மேலும், நம்முடைய நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கின்ற சில பகுதிகள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன என்பதை அறிந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர் களும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர் களும், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகப்படியான நிதியை ஒதுக்கி, அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்காக திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர் களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் சார்பில் சுமார் 800 கிலோமீட்டர் அளவிற்கு சாலைகளை மேம்படுத் துவதற்காக 45 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தயாரித் திருக்கிறார்கள். இன்றைய தினம் அதற்காக 3 கோடியே 12 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அறி வித்திருக்கிறார்கள். இருந்தாலும், 800 கிலோ மீட்டர் சாலையை இந்த நிதியின் மூலம் இந்த ஆண்டு முடிக்கப்பட முடியுமா என்ற ஐயப்பாடு உள்ளது. எனவே, இதற்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கி, அந்தச் சாலைகளை எல்லாம் விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்தும் வகையில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே உள்ள ஒருசில குன்ற பாடுகளையும், செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்தும் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் கீழ் அமைந்துள்ள நம்முடைய அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று ஒருசில கருத்துக்களைக் கூற விரும் புகிறேன். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் 1980 ஆம் ஆண்டில் சித்தமல்லி நீர்த் தேக்கம் என்ற ஒரு திட்டத்தினை ஜெயங்கொண்டம் தொகு தியிலே ஆரம்பித்தார்கள். அந்தத் திட்டம் இப்போதுதான் முடிவுற்று, இந்த ஆண்டு அந்தத் திட்டம் செயல்படுகின்ற ஒரு சூழ்நிலை வந்திருந்தாலும், மேற்படி நீர்த் தேக்கத்திற்கு நீர் வராது—மழை பெய்தால்தான் வரக்கூடிய ஒரு சூழ் நிலை இருக்கிறது—என்கிற நிலைமை இருக்கிற காரணத்தால் அந்த சித்தமல்லி நீர்த் தேக்கத்திற்கு அருகிலுள்ள மருதை யாற்று தண்ணீர் கொள்ளிடத்தில் கடலில் சென்று, கடலில் கலந்துவிடுகிறது. அதாவது என்கிற காரணத் தால் அந்த மருதையாற்று தண்ணீரை சித்தமல்லி நீர்த் தேக்கத்திற்கு கொண்டு வந்து அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் பயன்படுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1992 மார்ச் 31] [திரு. கே. கே. சின்னப்பன்]

மேலும் புவியியல் துறையினர் மருதையாற்று தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்படாது என்று 20 ஆண்டுகளுக்கு முன் பாக ஒரு அறிக்கை கொடுத்ததாக குறிப்பிடுகிறார்கள். ஆனால் இன்றைய தினம் மருதையாற்று தண்ணீரை இரு பக்கங்களிலும் உள்ள விவசாயிகள் பம்ப் செட்டின் மூலம் இறைத்து நல்ல முறையில் பயன்படுத்தி விவசாயமும் நடை பெறுகிறது. எனவே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்ட அந்த சித்தமல்லி நீர்த் தேக்கத்திற்கு அந்த மருதையாற்று தண்ணீரைத் திருப்பிவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியிலே நிலக்கரி சுரங்கம் ஆரம் பிக்கப்பட இருக்கிற காரணத்தால் அதிலே கிடைக்கின்ற உபரி நீரை அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் பயன் படுகின்ற வகையில் அங்கே பொன்னேரி என்ற ஒரு ஏரி உள்ளது. அது ராஜேந்திர சோழனால் வெட்டப்பட்டு, சோழகங்கம் என்று அழைக்கப்படும் அந்த பொன்னேரி ஏரி பல ஆண்டுகளாக சீர் செய்யப்படாத காரணத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் இரு போக சாகுபடி செய்து கொண்டிருந்தவர்கள் இன்றைய தினம் ஒரு போகம் சாகுபடி செய்கிறார்கள். அந்த பொன்னேரி ஏரியை எப்படியாவது நவீன திட்டத்தின் கீழ மாற்றி அந்தப் பகுதியிலே நிலக்கரி சுரங்கத்தின் மூலம் கிடைக்கின்ற நீரை அந்தப் பொன்னேரி ஏரியிலே கொடுத்து, அதற்கு அருகிலேயே இருக்கின்ற கச்சேரிப்புளி என்ற ஓடை திட்டத்தை கடந்த ஆண்டிலே செயல்படுத்துவதற்கு முயற்சி செய்தபோது அந்தப் பகுதியிலே மழை வந்தால்தான் தண்ணீர் கிடைக்கும் என்ற சூழ்நிலை இருந்ததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் இன்றைய தினம் அந்தப் பொன்னேரி பகுதியிலே நிலக்கரி சுரங்கம் வர இருக்கிற காரணத்தினால் அதிலே கிடைக்கிற உபரி நீரை கச்சேரிபுளி ஓடை திட்டத்தின்கீழ் அங்கே தேக்கி அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்தும் வகையில் நம்முடைய அரசு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமை யில் இருக்கிற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

மேலும் இந்தப் பகுதியிலே இந்த நிலக்கரிச் சுரங்கம் வருகிறபோது, சென்னை தஞ்சாவூர் நெடுஞ்சாலையிலுள்ள லோயர் அணைக்கட்டு என்ற இடத்தில் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பாலம் ஒன்று உள்ளது. அந்தப் பாலம் மிகவும் சீர்கெட்ட நிலையில் இடிந்து விழக்கூடிய

சூழ்நிலையில் இருக்கிறது. அப்படி அந்தப் பாலம் இடிந்து
விழுமானால் தென் மாவட்டங்களுக்கு மிகவும் விரைவாகச்
செல்லக்கூடிய போக்குவரத்து நிலைமைகளில் தடங்கல் வரக்
கூடிய நிலைமை ஏற்படும்.

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனு
மதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.
உறுப்பினர் அவர்கள் வேகமாக முடிக்கவேண்டும்.

திரு. கே. கே. சின்னப்பன் : அதற்கு மாற்றுத் திட்டமான
மதனத்தூர் — நீலத்தநல்லூர் பாலம் கட்டப்படவேண்டு
மென்று கடந்த இருபதாண்டுகளாக சொல்லப்பட்டு வருகி
கின்றது. அப்போது 11 லட்ச ரூபாய்க்கு மதிப்பீடு செய்
யப்பட்ட அந்தப் பாலம், இப்போது 11 கோடி ரூபாயைத்
தாண்டிச் சென்று விட்டது. எனவே, அந்தப் பாலத்தை
விரைவில் கட்டித் தந்து, தஞ்சை மற்றும் தென் மாவட்ட
டங்களுக்கு துரிதமாகச் செல்வதற்கு இந்த அரசு நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.
அந்தப் பாலத்தை அமைப்பதற்கு பல்வேறு வகையான நிதி
நெருக்கடிகள் இருந்தபோதிலும், தனியார் மூலமாக சாலை
களைச் செப்பனிடுகிற பணியும், பாலங்களைக் கட்டுகின்ற
பணிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொண்
ருப்பதைப்போல, இந்த நீலத்தநல்லூர் — மதனத்தூர்
பாலத்தையும் தனியார் மூலமாவது கட்டிமுடிக்க
ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அப்படித் தனியார் மூலம் கட்டினால், அவர்கள்
சுங்கவரி வசூலித்துக் கொள்வதற்கும் அந்தப்
பகுதியில் உள்ள நாங்கள் எல்லாம் தயாராக இருக்கிறோம்
என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். மேலும் கடந்த முறை
ஏற்பட்ட வெள்ளத்தினால் எங்களுடைய பகுதியில் இருக்கும்
பொன்னாற்று வாய்க்கால் பாசனம் எல்லாம் மிகவும் பாதிக்
கப்பட்டது. மழைவரும்போது, கொள்ளிடத்தில் இருந்து
தண்ணீர் வராமல் ஆண்டாண்டுக் காலமாக பல லட்சம்
ரூபாயை புறம்பு கட்டுவதற்கும் மணல் எடுப்பதற்கும்
செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த வாய்க்
காலில் அதிகமான செலவைச் செய்யாமல், நிரந்தரமாக 5
அல்லது 6 லட்ச ரூபாய் செலவில் ஒரு தடுப்புச் சுவர் ஏற்
படுத்தி, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பய
படுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். கடந்த முறை ஏற்பட்ட வெள்ளத்தில்
அந்தப் பகுதி அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. கொள்ளி
டத்தில் கலக்கின்ற கடைசிப் பகுதியாக இருப்பதால், வடி
கால் ஆக இருக்கக்கூடிய வெட்டாறு போன்ற பல்வேறு
வாய்க்கால்கள் எல்லாம் இன்றைக்கு தனியார்களால் ஆக்கிர



மிப்பு செய்யப்பட்டதன் காரணமாகவும், சரியாக மராமத்துப்
பணிகள் செய்யாததன் காரணமாகவும், வெள்ள காலங்களில்
கொள்ளிடத்திற்கு வெள்ளநீர் செல்லமுடியாத காரணங்களாலும்
அந்தப் பகுதியில் 10 அல்லது 20 கிராமங்கள் நீரில் மூழ்கி
மோசமான நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அதைத் தடுக்
கிற வகையிலும் நிரந்தரமாக கொள்ளிடத்தில் தண்ணீர்
சென்று வடிகாலாகச் செல்வதற்கு இரண்டு வடிகால்களை
வெட்டாற்றிலும், அந்தப் பகுதியில் இருக்கிற கொள்ளிடம்
ஆற்றங்கரையாலும் வடிகால் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் பேச
வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.
ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்
பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சில தலைவர்களை வரலாறு உருவாக்கு
கின்றது. ஆனால் வரலாற்றையே உருவாக்குகின்ற ஒரு
தலைவராக, அந்த வரிசையில் இருக்கின்ற தலைவர்களில்
முதன்மையான தலைவராக இங்கே வீற்றிருக்கின்ற)
(மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் போன்ற சாதாரண
மானவர்களை இந்த சபையிலே அமரவைத்து, பணியாற்ற
அனுமதித்த அந்த தெய்வம் இருக்கும் திசை நோக்கி வணங்கி
என்னுடைய பதிலுரையை இங்கே சொல்லக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

இன்றைக்கு இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்
பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்தார்கள்.
பொதுப் பணித் துறையில் ஆற்ற வேண்டிய பணிகளையும்
நெடுஞ்சாலைத் துறையில் நாம் ஆற்ற வேண்டிய செயல்
களையும், நல்லமுறையில் எடுத்துவைத்தார்கள். இந்த
அவைக்கு வெளியிலும் இருட்டு மனம் படைத்த குருட்டு
மதியாளர்கள் சிலர் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறை
யைப்பற்றி விமர்சிப்பதை நான் பார்க்கிறேன். வீராணம்
ஊழல் பேர்வழிகள், சர்க்காரியா கமிஷனில் சம்பந்தப்
பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு பொதுப் பணி துறையை
விமர்சிக்கிற நேரத்தில் நான் சில விளக்கங்களை
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஒப்பற்ற
தலைவியாக தென்னாட்டின் ஜோன் ஆப் ஆர்க்- ஆக, தமிழகத்
தின் ஜான்சி ராணியாக இருக்கின்ற நம்முடைய ஒப்பற்ற

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 மார்ச் 31

தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலே பல்வேறு அடுக்கடுக்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

பொதுப் பணித்துறையைப் பொறுத்த மட்டில் பல்வேறு பிரச்சினைகள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்றன. மக்களுக்கு நெருக்கமான பல்வேறு பிரச்சினைகளை தாங்கியிருக்கின்ற துறை என்பதாலே இந்தத் துறையினுடைய தேவைகள், கோரிக்கைகள் ஏராளமாக இருந்தாலும், நமக்கு இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பொறுத்து, இந்தத் துறையை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த நெருக்கடியான சூழ்நிலையை கருதி, இந்த ஆண்டு அதிகமான அளவிலே நிதியைத் தந்திருக்கிறார்கள் என்பதை முதலிலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1989—90 ஆம் ஆண்டு பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏறத்தாழ ரூ. 140 கோடி, 1992—93 ஆம் ஆண்டு நம்முடைய ஒப்பற்றத் தலைவி, புரட்சித் தலைவி ஒதுக்கி இருக்கிற தொகை ரூ. 236 கோடி என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). அதைப் போலவே நெடுஞ்சாலைத் துறைக்கு 1989—90 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி ஏறத்தாழ 100 கோடி ரூபாய். ஆனால் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 160 கோடி என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). ஆகவே மக்களுடைய பிரச்சினைகளை, தேவைகளை, உணர்வுகளை, எண்ணங்களை அவர் எவ்வாறு நிறைவேற்ற வேண்டுமென்று முனைப்போடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை நிதி ஒதுக்கீடு செய்திருக்கிற நிலைமையில் இருந்தே நன்கு தெரிந்து கொள்ள முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்ற பிரச்சினை, நம்முடைய காவிரி நீர்ப் பிரச்சினை. பொதுப்பணித் துறையை எடுத்துக்கொண்டாலே காவிரி நீர்ப் பிரச்சினையைத்தான் முதன்மையாக நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி பேசுகின்ற நேரத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் எவ்வளவு தெளிவான ஒரு முடிவினை எடுத்திருக்கிறார்கள் என்பதை கடந்த ஒன்பது மாத காலமாக நாம் பார்த்திக்கிறோம். இன்றைக்கு நம்முடைய மன்றத்திலே பல்வேறு கருத்துக்கள் விமர்சிக்கப்பட்டாலும் கூட,



1992 மார்ச் 31] [திரு. எஸ். கண்ணப்பன்]

1924 ஆம் ஆண்டிலேயிருந்து வருகிற இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே எத்தனை முனைப்பான நடவடிக்கையை எடுத்து, எந்தச் சூழ்நிலையில் இந்தப் பிரச்சினையில் தீர்வு கண்டு வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதை நல்ல உள்ளம் படைத்தவர்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பாண்டியனுக்கு வேண்டியவன், சோழனுக்கு சொந்தக்காரன், நான்தான் சோழ மண்டலத்திற்கு சொந்தக்காரன் என்று சொன்னவர்களெல்லாம் கைவிட்ட காவிரி பிரச்சினையில் தலையிட்டு இந்த காவிரியை மீட்டுத் தந்த காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியை நான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). ஆகவே இந்தப் பிரச்சினையை பொறுத்த மட்டிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிற அடுக்கடுக்கான நடவடிக்கைகளை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தாலே, வழக்குகளை முனைப்பான முறையில் வெகு விரைவிலே முடித்து, நமக்கு விட வேண்டிய தண்ணீரை கர்நாடகம் தருகிற அளவுக்கு முயற்சிகளை எடுக்கிற முகத்தான் பல்வேறு நடவடிக்கைகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக கிருஷ்ணா நதிநீர் பிரச்சினை. சென்னைக்கு குடிநீர் தருகின்ற அந்த திட்டத்தை, நம்முடைய ஒப்பற்ற தலைவர், புரட்சித் தலைவர் அவர்களும், அன்னை இந்திரா காந்தி அவர்களும் அந்த திட்டத்தை துவக்கி வைக்கும் நேரத்தில் அந்த திட்டத்தை செயல்படுத்த முடியுமா என்ற உணர்வு இருந்தது. அதற்குப் பின்னாலே அடுக்கடுக்கான சில இடர்ப்பாடுகளுக்கிடையே இந்த திட்டம் தொய்விலே, கிடப்பிலே இருந்தது. முனைப்பான நடவடிக்கை கடந்த காலங்களிலே எடுக்கவில்லை என்பதையும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலங்களிலே இந்தப் பணி தொய்வாக, கிடப்பிலே போடப்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் 6 வருட காலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏறத்தாழ 24 கோடி ரூபாய்தான். ஆனால் நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி, பொறுப்பேற்றதற்குப் பின்னாலே உடனடியாக சென்னைக்கு குடிநீர் கொண்டுவருகிற அந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஏறத்தாழ 24 கோடி ரூபாயை ஒரே ஆண்டுக்கே ஒதுக்கிய பெருமை நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவியையே சாரும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்குப் பின்னாலே இந்த திட்டத்திலே தொய்வு ஏற்படுகிறபோது ஆந்திர மாநிலத்திற்குச் சென்று ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜனார்த்தன ரெட்டியைச் சந்தித்து எவ்வளவு தூரம் விரைவுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு முனைப்பான நடவடிக்கையை எடுத்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடி

யாது. அதனுடைய விளைவாக நம்முடைய பகுதியில் உள்ள பணிகளையெல்லாம் 1993—94 ஆம் ஆண்டுக்குள்ளே முடித்துவிட வேண்டும் என்று இன்றைக்கு உத்தரவிட்டுள்ளார்கள். இன்றைக்கு அந்தப் பணிகளை வெகு விரைவிலே, ஏறத்தாழ 140 மெஷினரிகளை வைத்து அந்தப் பணிகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த விவரங்களை நம்முடைய நல்ல உள்ளம் படைத்தவர்கள், அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள், இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை இந்த அரசு 9 மாத காலத்திலே கிருஷ்ணா நதிநீர் திட்டத்திலே எடுத்திருக்கிற அந்த வேகமான உணர்வை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலத்திலே இந்தப் பணிகள் கிடப்பிலே போடப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த திட்டம் 1995 ஆம் ஆண்டுக்குள்ளே வர வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் ஆந்திர முதல்வரோடு பேசி இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிச்சயமாக 1995 ஆம் ஆண்டிற்குள் நம்முடைய முதல்வர் அவர்களுடைய மேலான முயற்சியினால் கிருஷ்ணா நதிநீர் நம்முடைய சென்னை நகருக்குக் குடிநீருக்குக் கிடைக்கும் என்ற உறுதியினை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-40

அடுத்தபடியாக இன்றைக்கு நம்முடைய பாசன ஆதாரங்களைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே பாசன ஆதாரங்களைப் பொறுத்தமட்டிலே 95 சதவீதம் பாசன ஆதாரங்களை நாம் பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றோம். ஆகவே, இருக்கின்ற பாசன ஆதாரங்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிகள் இல்லாத நிலையில் இன்றைக்கு புதிய பாசன ஆதாரங்களை எப்படி நாம் நிறைவேற்ற முடியும் என்ற கேள்விக் கணைகளை இங்கே தொடுத்தார்கள். அதற்கான முயற்சி தான் இன்றைக்கு கொள்கை குறிப்பிலே இங்கே சொல்லப்பட்டு இருக்கின்ற மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திசை திருப்பி, தமிழகத்தின் பக்கம் திருப்பி புதிய பாசன ஆதாரங்களை உருவாக்கி இன்றைக்கு தமிழகத்தை ஒரு தலைசிறந்த மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற முயற்சியிலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்வது கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையிலே மண் வளம் இருந்தாலும், பாசன ஆதாரங்களுக்காக நீர்த் தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே தான், மேற்கு நோக்கிப் பாயும் இந்த ஆறுகளைத் திருப்பி கேரள மாநிலத்திலே இருந்து வருகின்ற அந்தத் தண்ணீரை தமது தமிழ் மாநிலத்திற்குக் கொண்டுவந்து அதற்கென பம்பா-



அச்சன்கோயில் திட்டம் என்ற திட்டத்தை வைகையோடு இணைத்து ஏறத்தாழ 4, 5 மாவட்டங்களுக்கு, தென் மாவட்டங்களிலே குடிநீர் வசதியும் அதற்குப் பின்னாலே பாசன வசதியும் பெற வேண்டும் என்ற எண்ணத்திற்காகத்தான் இன்றைக்கு அந்தத் திட்டத்தை நம்மிடத்திலே அறிவித்து இருக்கின்றார்கள். அதன் விளைவாக கேரள மாநிலத்தின் பொதுப்பணித்துறை அமைச்சரோடு, பாசனத்துறை அமைச்சரோடு இன்றைக்கு அமைச்சர் அளவிலே பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் உத்திரவிட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டாண்டுக் காலமாக இருக்கின்ற பிரச்சினைகளை இன்றைக்கு இங்கே நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இப்படித்தானே சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள், இதுவரை என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். ஆனால்; நம்முடைய முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையிலே இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தோடு அந்த உத்தரவினை வழங்கி இருக்கிறார்கள் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தைப் பற்றி இங்கே நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்தமட்டிலே, இன்றைக்கு நம்முடைய பகுதியிலே உற்பத்தியாகி கேரள மாநிலத்திலே அந்தத் தண்ணீர். வீணாகிறது என்பதனை இன்றைக்கு இந்த அரசு உணர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், அதிலே சில பிரச்சினைகள் நமக்கு இருக்கின்றன. 1965 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இன்றைக்கு மின் திட்டத்திற்காக மட்டும்தான் நாம் அதைப் பயன்படுத்த முடியும் என்று கேரள அரசோடு இருக்கின்ற ஒப்பந்தத்தின் காரணமாக, அன்றைக்கு பல்வேறு பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, அந்தப் பேச்சுவார்த்தைகள் எல்லாம் இன்றைக்கு முடிவுறாத நிலையில் இருக்கிறது. இன்றைக்கு 7 டி.எம்.சி. தண்ணீரை நம்முடைய கோவை மாவட்ட மக்களுக்கு திருப்பிவிடுகின்ற திட்டத்தை நம்முடைய அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. ஆனால், அந்த தண்ணீர்ப் பிரச்சினைக்கு இன்னும் ஒரு முடிவு பெறாத நிலையில் இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினாலே தான் பாண்டியாறு - புன்னம்புழா திட்டம் இன்றைக்கு பேச்சுவார்த்தை மூலம் இருந்துகொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பவானி ஆற்றிலிருந்து 10 டி.எம்.சி. தண்ணீரை கேரள அரசு கேட்கிறது. பவானி என்பது நம்முடைய காவிரி நதியினுடைய உபநதி என்ற காரணத்தினாலே, இன்றைக்கு காவிரிப் பிரச்சினை நடுவர் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலேயும், அந்தப் பிரச்சினையோடு இந்தப் பிரச்சினை ஒட்டி இருக்கின்ற காரணத்

தினாலே தான் இந்த பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்திலே நாம் ஒரு முடிவை எடுக்க முடியாமல் இருந்தாலும் எதிர்காலத்திலே, காவிரிப் பிரச்சினை தீர்க்கப்படுகின்ற நேரத்திலே, அதற்கான முடிவு வர இருக்கின்ற நேரத்திலே இந்த பாண்டியாறு புன்னம்புழா திட்டம் குறித்து கேரள அரசோடு பேசி நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு தெளிவான முடிவினை எடுப்பார்கள் என்பதனை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தபடியாக பெரியாறு அணையை பலப்படுத்துகின்ற திட்டம். இன்றைக்கு பெரியாறு அணையை பலப்படுத்த வேண்டுமென்ற முயற்சியிலே இறங்கி, ஏறத்தாழ 152 அடி தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்ற முனைப்போடு இன்றைக்கு பல கோடி ரூபாயை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அனுமதித்து அந்த அணையைப் பலப்படுத்தும் வேலையை ஜூன் மாதத்திற்குள் முடிக்க வேண்டுமென்று கட்டளையிட்டு, இருக்கிறார்கள். வருகின்ற 1992 ஜூன் மாதத்திற்குள் பெரியாறு அணையைப் பலப்படுத்துகின்ற அந்தப் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரள மாநிலத்தோடு நாம் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி 136 அடி தண்ணீர் தான் தேக்கி வைக்க முடியும். அந்தத் தண்ணீரினுடைய அளவை உயர்த்துவதற்கு அந்த அணையினுடைய பாதுகாப்பு சரியில்லை என்று அவர்கள் சொன்ன காரணத்தினாலே தான், அந்த முனைப்பான நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு 152 அடி தண்ணீரை தேக்கி வைக்கின்ற அளவிற்கு அந்த அணையைப் பலப்படுத்தி இருக்கிறோம் என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக கேரள மாநில அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அதற்கான முடிவுகளை எடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

இன்றைக்கு பொதுப்பணித் துறையினுடைய திட்டங்களை தெரிவிக்கிற நேரத்தில் கங்கை-காவிரி இணைப்பு திட்டத்தைப் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்திக் கூறினார்கள். கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு திட்டங்களாக மத்திய அரசு இதனை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஒன்று - இமய மலையில் இருக்கிற நதிகளை இணைக்கிற திட்டம் மற்றொன்று; தீபகற்ப நதிகளை இணைக்கிற திட்டம். மகாநதி, கோதாவரி போன்ற நதிகளை பெண்ணாற்றோடு இணைத்து, அதற்கு பின்னால் காவிரியோடு இணைத்து தண்ணீரைக் கொண்டு வருகிற திட்டம் - இந்தத் திட்டத்தில் பல்வேறு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. என்பதால் ஏற்கனவே 31-1-91-ல் நடைபெற்ற நீர்ப்பாசனத் துறை அமைச்சர்களுடைய மாநாட்டில் ஒப்பந்தப்படி தலைவி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்க



அனுமதியோடு, இந்தத் திட்டத்தை வலியுறுத்தி தமிழக அரசின் சார்பில் பேசினேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இது 4, 5 மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்ற பிரச்சினையாக இருப்பதால் ஒரு சுமுகமான நிலையை மத்திய அரசு இதில் உருவாக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அது சம்பந்தமாக நேசனல் வாட்டர் டெவலப்மெண்ட் ஏஜென்சி என்று சொல்லப்படுகின்ற தேசிய நீர்வளக் குழுமம் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதைப்போல இன்றைக்கு மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் சம்பந்தப்பட்ட ஒரு முடிவை தெரிவித்தார்கள். ஏறத்தாழ 23 டி.எம்.சி. தண்ணீரை நம்முடைய தமிழ்நாட்டுக்கு கேரளாவிலிருந்து திருப்பிவிடலாம்: அதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி, அன்றைக்கு அந்த முடிவைத் தெரிவித்தார்கள். இருந்தாலும் அதற்கு கேரள அரசின் ஒப்புதல் தேவையிருக்கிற காரணத்தால் அவர்களும் இந்த பேச்சு வார்த்தையின்போது இது சம்பந்தமாக பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தேசிய நீர்வளக் குழுமம் இந்தப் பிரச்சினையில் தெளிவான அணுகுமுறையை கையாண்டு கொண்டிருக்கிறது என்பது நமக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முனைப்பான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் இருக்கிற பல்வேறு பாசன ஆதாரங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை வைத்திருந்தாலும்கூட, புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை நாம் அறிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் காவிரி பிரச்சினையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு காவிரியின் வடிகால் பகுதிகளை, கால்வாய்ப் பகுதிகளை எல்லாம் சீரமைக்க வேண்டுமென்று ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியோடு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காவிரி டெல்டா பகுதிகளை நவீனப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு, கால்வாய்களை சீரமைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு, மிகப்பெரிய திட்டத்தை உருவாக்கினோம். மத்திய அரசின் அனுமதியைப்பெற வேண்டுமென்று மத்திய அரசுக்கு அனுப்பி, அதற்குப் பின்னாலே உலக வங்கி நிதியுதவியைப் பெறவேண்டுமென்ற நடவடிக்கையிலே நாங்கள் ஈடுபட்டபோது, காவிரி பிரச்சினை இன்றைக்கு நடுவர் மன்றத் தீர்ப்பின் காரணமாக, அதை செயல்படுத்த முடியாத காலக் கட்டத்தில் இருந்தாலும், அதற்கு மாற்று வழியாக என்ன நடவடிக்கையெடுக்கலாம் என்று முதலமைச்சர்

அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் இரண்டு திட்டங்களை மத்திய அரசுக்கு நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் ஒப்புதலோடு அனுப்பி வைத்திருக்கிறோம்.

அதிலே ஒன்றுதான் காவிரி மாடர்னைசேஷன் என்ற வார்த்தையை மாற்றி— 'நேஷனல் வாட்டர் மேனேஜ்மெண்ட் புரா ஜெக்ட்'— என்று சொல்லப்படுகிற என்.டபிள்யூ.எம். என்ற திட்டத்தின் கீழ் காவிரி டெல்ட்டா சிஸ்டம் என்ற திட்டத்தை இன்றைக்கு 250 கோடி ரூபாய்க்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித்துறைமூலமாக மத்திய அரசுக்கு தந்திருக்கிறார்கள். இன்றைக்கு அந்தத் திட்டத்தை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல் அந்தத் திட்டத்தில் செயல்படுவதற்கு வாய்ப்பு இல்லையென்றால் 'ரிஹேபிலிடேஷன் ஆஃப் காவிரி டெல்ட்டா சிஸ்டம்' என்ற திட்டத்தின் அடிப்படையில் காவிரியை நவீனப்படுத்துகிற என்று சொல்லாமல், அதைச் சீர்படுத்துகிற திட்டமாக ஒரு திட்டத்தை ஏறத்தாழ 500 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்டத்தையும், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு பணம் வழங்குவதிலோ, நிதியுதவி வழங்குவதிலோ, கடன் வழங்குவதிலோ எந்தவித மான சிரமமும் இருக்காது என்ற காரணத்தால் இந்த இரண்டு மாற்று திட்டங்களை காவிரி பகுதியை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய யோசனைப்படி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணி சிறக்குமாயின் இன்றைக்கு இருக்கிற நிலைமையில் தண்ணீரை 'ஆஃப்டிமம் யூடிலைசேஷன் ஆஃப் வாட்டர்' என்று சொல்வார்களே, மிகச் சிக்கனமாக அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துகிற திட்டத்தை— மாடர்னைசேஷன் செய்கிற திட்டம் நிறைவேற்றப்படுமானால் மிக அதிகமான இடங் களுக்கு பாசன ஆதாரத்தைக் கொடுக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பின்னால் சிறிய பாசன நீர்த் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையில் இன்றைக்கு நம் முடைய பொதுப் பணித்துறையில் ஏராளமான கண்மாய்கள் இருக்கின்றன. இந்தக் கண்மாய்களை சீரமைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, European Economic Development Aid என்று சொல்லப்படுகிற, ஐரோப்பிய பொருளாதார திட்டத்தின் கீழே இன்றைக்கு பல்வேறு பணிகளை நாம் எடுத்துக் கொண் டிருக்கிறோம். இந்த ஆண்டு கூட, ஏறத்தாழ 150 ஏரிகளை எடுக்கவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர் கள் உத்தரவிட்டு— அந்தப் பணிகளுக்காக ஏறத்தாழ 75 கோடி ரூபாயை நாம் கேட்டு இருக்கிறோம்— இந்த ஆண்டு ஏறத்தாழ 18 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கப்பட்டு பணிகள் [ ] துகொண்டிருக்கின்றன.



பிற்பகல் 1-50

ஆனால், இந்த 200-லேயிருந்து 500 ஏக்கருக்குக் கீழே இருக்கிற கண்மாய்களுக்கு என்ன பணிகளை செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். பெரிய கண்மாய்களை, பாசனங்களை இன்றைக்கு சீர்படுத்துகின்ற நேரத்திலே European Econcmlc Development Aid என்று சொல்லப்படுகிற ஐரோப்பிய பொருளாதார திட்டத்தின் கீழே, நீங்கள் செயலாற்றுகிற நேரத்திலே, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களின் கீழே இருக்கின்ற, ஏறத்தாழ 35 ஆயிரம் கண்மாய்களுக்கு என்ன பணிகளை இந்த அரசு எடுக்க முடியும் என்று கேட்கிறார்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள். இது உண்மையிலேயே உணரப்பட வேண்டிய, இதற்கு பதில் அளிக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. நாம் சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து, இன்றுவரை, பல்வேறு பணிகளைச் செய்தாலும் கூட, இந்தத் திட்டத்திற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண முடியாமல் இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. பொதுப்பணித்துறை என்று எடுத்துக் கொண்டால், 100 ஏக்கருக்கு மேலே இருக்கிற கண்மாய்களை இன்றைக்கு ஆழப்படுத்துகிறோம். ஆதற்கான நிதி ஆதாரங்களைத் தந்து கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 8,500-க்கு மேற்பட்ட கண்மாய்கள் இன்றைக்கு இருக்கின்றன. அதேபோல் பெரிய கண்மாய்களும் இன்றைக்கு 3,500-க்கு மேலே இருக்கின்றன 500 ஏக்கருக்கு மேலே இருக்கிற கண்மாயை அதிகமாக இருந்தாலும் கொண்டுவர முடியவில்லை. 100 ஏக்கருக்கு கீழே இருந்தாலும் கொண்டுவர முடியவில்லை. ஆகவே, இந்த இரண்டு திட்டங்களையும் எப்படி நாம் நிறைவேற்ற முடியும் என்ற கேள்வியை இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்திருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களும் தந்திருக்கிறார்கள். அதற்காகத்தான், அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான், அதனுடைய முயற்சியின் காரணமாக நாங்கள் ஆய்விலே ஈடுபட்டு இருக்கிறோம். இந்த ஆண்டு, அதற்கான திட்டங்கள் இல்லை என்று சொன்னாலும் கூட, அந்தக் குறைகளைப் போக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதற்கான செயல்முறைகள் வகுக்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பின்னாலே, பொதுப் பணித்துறையின் சார்பிலே கடல் அரிப்புப் பணிகள் என்று சொல்லக்கூடிய, கடல் அரிப்பு தடுப்புப் பணிகளை இன்றைக்கு மேற்கொண்டு இருக்கிறோம். வட சென்னைப் பகுதியிலும் சரி, கன்னியாகுமரி மாவட்டத்திலும் சரி, இன்றைக்கு வெள்ளம் வருகிற நேரத்திலே, புயல் அடிக்கிற நேரத்திலே, கடற்கரை ஓரங்களில் வாழ்கின்ற எண்ணற்ற ஏழை, எளிய மக்களுடைய வீடுகளும், இல்லங்களும், பல்வேறு கோயில்கள் போன்றவைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூட நேரிடையாக அந்த இடத்தைப் பார்வையிட்டு, உடனடியாக கடல் அரிப்

தடுப்புப் பணிகளை நீங்கள் மேற்கொள்ளவேண்டும் என்று பொதுப்
பணித்துறைக்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதற்காக
நாங்கள், ஏறத்தாழ 3 கோடியே 28 லட்சம் ரூபாயில் ஒரு
திட்டத்தை உருவாக்கி, மாண்புமிகு முதல்வருடைய ஒப்புத
லுக்காக அனுப்பி இருக்கிறோம். இந்த ஆண்டு முதற் கட்டமாக
ஒரு திட்டத்திற்கு 58 லட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறார்கள்
(மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், கடல்
அரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று
உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதற்கான திட்டங்கள் தயாரிக்
கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கட்டிடங்களைப் பொறுத்தவரையில், அரசுக்
கட்டிடங்கள், அரசு ஊழியர்கள் குடியிருக்கின்ற வாடகைக் குடி
யிருப்புகள், ஓய்வு இல்லங்கள், இன்னும் பல்வேறு வகையான
கட்டிடங்களை எல்லாம் பொதுப் பணித்துறை பராமரிக்கிறது.
இன்றைக்கு இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பொறுத்தவரையில்,
எல்லாக் கட்டிடங்களையும் பராமரிப்பது என்பது இயலாத நிலை
யிலே நாம் இருக்கிறோம். பள்ளிக் கட்டிடங்களை எடுத்துக்
கொண்டாலும் சரி, மருத்துவமனைகளை எடுத்துக் கொண்டாலும்
சரி, பல்வேறு கட்டிடங்கள், இன்றைக்கு பொதுப் பணித்துறை
யின் கட்டிடங்கள் பராமரிப்புத் துறையின் கீழ் வருகின்றன.
ஆனால், எந்த ஆண்டையும்விட இந்த ஆண்டு, அதிகமான
நிதியை நம்முடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
ஒதுக்கியிருந்தாலும்கூட, இன்றைக்கு நமக்கு இருக்கிற
தேவையின் அடிப்படையிலே, அந்தத் தேவைகள் முழுவதும்
நிறைவேற்றப்படுமா என்றால், அதற்குக் கொஞ்சம் பிரச்
சினைதான். இருந்தாலும், இந்த ஆண்டு, நம்முடைய முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதிகமான நிதியைக் கட்டி
டப் பகுதிக்கு ஒதுக்கித் தந்திருக்கிற காரணத்தாலே, நிச்சயமாக
பெரும்பாலான கட்டிடங்களிலே அடிப்படை வசதிகளை இன்
றைக்கு பராமரித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாநில அரசின் வளர்ச்சிக்கு உட்பட்ட வருவாய்த்
துறையாக இருந்தாலும் சரி, காவல் துறையாக இருந்தாலும் சரி,
சிறைத்துறையாக இருந்தாலும் சரி, நீதித்துறையாக இருந்
தாலும் சரி, வணிகவரித் துறையாக இருந்தாலும் சரி, இப்படி
பல்வேறு துறைகளினுடைய கட்டிடங்களைக் கட்டுகின்ற
பொறுப்பு நம்முடைய பொதுப்பணித் துறைக்கு ஏற்பட்டு
இருக்கிறது. பொதுப்பணித் துறையின் மூலம் கட்டப்படுகின்ற
கட்டிடங்கள்தான் மிக உறுதியானவையாக இருக்கின்றன என்ற
அடிப்படையிலே, இன்றைக்கு எந்தத் துறையாக இருந்தாலும்,
பொதுப்பணித் துறை இடத்திலே அந்தப் பொறுப்பை விட்டு



இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை நம்முடைய பொதுப்பணித் துறை, நம்முடைய புரட்சித் தலைவி காலத்திலே மிகச் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அனைத்துத் துறையிலே இருக்கிற அமைச்சர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதைதான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு, பொதுப் பணித் துறையில், புதிய திட்டங்களைப் பொறுத்தவரையில், நம்முடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் நமக்கு ஒப்புதலைத் தந்திருக்கிறார்கள். அதிலே காமராஜர் மாவட்டம், சாத்தூர் தாலூக்காவில் வைப்பாறு நதியின் குறுக்கே இருக்கங்குடிக்கு அருகில் ஒரு நீர்த் தேக்கம் ஒன்றை அமைப்பதற்காக இன்றைக்கு ரூ. 28 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கிற ரெகுலேட்டர் , தலைமதகுகள், இவைகளை எல்லாம் சீர் செய்வதற்கு ரூ. 2.87 கோடி செலவிலே ஒரு திட்டத்தை இன்றைக்கு தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 1-55

'சிறு நீர்ப் பாசனத் திட்டங்கள்' என்ற ஒரு வார்த்தை வருகின்றது என்று நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழைத்து, இன்றைக்கு அந்த வார்த்தையை மாற்றி, பொதுப்பணித் துறையில் இனிமேல் 'சிறிய பாசன நீர்த் திட்டங்கள்' என்று அறிவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட் தட்டும் ஒலி) ஆகவே அந்தத் திட்டம் இனிமேல் 'சிறிய பாசன நீர்த் திட்டங்கள்' என்று இன்று முதல் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் அழைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது காலம் காலமாக இருந்த பிரச்சினை. இந்த சிறிய பிரச்சினையைக் கூட நம்முடைய முதல்வர் அவர்கள் இன்றைக்கு கருத்திலே எடுத்துக் கொண்டு அறிவிக்கிறார்கள் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு கூர்ந்த மதியோடு இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்ததாக என்றைக்குமே இல்லாத அளவிற்கு சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே தமிழகம் ஒரு வரலாற்றுப் சிறப்பு மிக்க அளவிலே அன்றைய தினம் இயற்கையின் ஒத்துழைப் பால் நம்முடைய தென் மாவட்டங்களில்தான் கொஞ்சம் பாதிப்பு இருந்தது. நான் அதை மறுக்க முடியாது. இருந்தாலும் நம் முடைய பெரும்பாலான பகுதிகளில், குறிப்பாக நம்முடைய காவிரிப் பகுதியிலே வெள்ளம் பெருகி, இன்றைக்குக் கர்நாடகத்துக் காரர்கள் மிகவும் மனமிரங்கவில்லை என்றாலும்கூட, இயற்கையினுடைய ஒத்துழைப்பால், நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்குக் கொடுத்த ஒத்துழைப்பின் காரணமாக, மேட்டூர் அணை

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 மார்ச் 31

வருகின்ற ஜூன் 12—ஆம் தேதியன்று திறக்கப்படும்படி நமது
முதல்வர் அவர்கள் இன்றைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்
(மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை 8 ஆண்டுகால வரலாற்றில்,
8 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தப் பிரச்சினை இருந்தது 8
ஆண்டுகளுக்குப் பிறகு உரிய காலத்திலே மேட்டூர் அணை திறக்கப்
படுகின்றது, நம்முடைய புதிய பொற்காலத்தை உருவாக்குகின்ற
புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் என்பதை நான்
இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத்
தட்டும் ஒலி).

இன்றைக்கு தேசிய நீர் மேலாண்மைப் பணிகள் திட்டத்தின்
கீழ் இங்கே வெள்ளாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள தொழு
தூர் ரெகுலேட்டரின் கீழுள்ள பாசனப் பரப்பு இன்றைக்குச்
சீரமைக்கப்பட உள்ளது. அதற்கு நம்முடைய மாண்புமிகு சட்ட
மன்ற உறுப்பினர் புரட்சிமணி அவர்கள் கூட நன்றி தெரிவித்துப்
பேசினார்கள். அந்தத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 5.13
கோடியை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்
கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்தே நன்னு
டைய கட்சிக்காரர்கள் தொகுதியாக இருந்தாலும் சரி, தம்மு
டைய தோழமைக் கட்சிக்காரர்களுடைய தொகுதியாக இருந்தா
லும், எந்தத் தொகுதியாக இருந்தாலும், மன நிறைவோடு
பணியாற்றுகின்றார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி)
நம்முடைய நல்ல உள்ளம் படைத்த தோழமை கட்சி நண்பர்கள்
ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர். டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் இதேபோன்று சென்றக் கூட்டத்
தொடரிலே பொதுப்பணித் துறை மானியத்திலே நான் பேசு
கின்ற நேரத்திலே, நம்முடைய மரியாதைக்குரிய சட்டமன்ற
மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள்.
தன்னுடைய தொகுதியிலே சிறுமலைத் திட்டத்தை அறிவிக்க
வேண்டுமென்று கேட்ட நேரத்திலே, அதை உடனடியாக
அறிவிக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். அந்த அடிப்
படையிலே இன்றைக்கு அதனுடைய ஆய்வுப் பணிகள் ஒரு
திட்டத்தை எடுக்கின்ற நேரத்திலே அதற்கான ஆய்வுப் பணிகள்
திட்ட மதிப்பீடுகள் எல்லாம் - இன்றைக்கு மாண்புமிகு முதல்வர்
அவர்களின் உத்தரவின் பேரில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.
ஆகவே இன்றைக்கும் சொல்யிருக்கிறார்கள், சிறுமலைத்திட்டம்
நிறைவேற்றப்படுமென்று அறிவிக்கவேண்டுமென்று சொல்லியிருக்
கிறார்கள். ஆகவே அவர்களுடைய அறிவிப்பின்படி சிறுமலைத்
திட்டம் நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை இந்த
நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்
பேரில் இன்றைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே
இதிலிருந்தே நம்முடைய தோழமைக் கட்சி உறுப்பினர்களுக்
கும் எந்த அளவிற்கு உதவிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை
யும் நாம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும்.
(மேசையைத் தட்டும் ஒலி)



1992 மார்ச் 31] [திரு. எஸ். கண்ணப்பன்]

இன்றைக்குப் புதியதாக நீர்ப்பாசன ஆதாரங்களை. மேம்
படுத்துவதற்காக பாசனதாரர்கள் சங்கம் என்று ஒன்றை
அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்
கிறார்கள். காவிரிப் பகுதியில்கூட குடிமராமத்து என்ற ஒரு
நிலைமை இருந்தது. இன்றைக்கு அங்கேயிருக்கின்ற விவசாயிகள்
எல்லாம் ஒன்றாக இணைந்து குடிமராமத்துப் பணியை கிராமங்
களிலே செய்வது வழக்கம். ஆனால் இன்றைக்கு விவசாயிகளிடத்
திலே ஒற்றுமை குறைந்து, விவசாயிகளிடத்திலே அந்த ஒற்றுமை
நலிந்துபோய் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகளை
எடுத்து செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்ற நேரத்திலே,
இன்றைக்கு பாசனதாரர்கள் சங்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை
எடுத்து, எல்லா பகுதிகளிலேயும் ஏறத்தாழ அவர்கள் இன்றைக்கு
ஏக்கருக்கு ரூ. 100 என்று வைத்துக் கொண்டாலும், 300 ஏக்
கருக்கு என்று சொன்னால், ரூ. 30,000 அவர்கள் வசூல் செய்ய
வேண்டும். அதற்குப் பின்னாலே வேளாண்மைப் பயிற்சி
நிலையத்தின் மூலமாக ரூ. 30,000 கொடுத்து ரூ. 60,000
டெபாசிட் செய்து, அதன் மூலம் இன்றைக்கு வருகின்ற வட்டியை
வைத்துக்கொண்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பாசனப்
பகுதிகளுடைய கால்வாய்களை சீரமைக்க வேண்டுமென்பதற்காக
இன்றைக்குப் புதிய திட்டத்தை பாசனதாரர்கள் சங்கம் அமைக்
கின்ற நடவடிக்கையாக அந்தத் திட்டத்தை அறிவிக்கிறார்கள்
இந்த திட்டத்தின் மூலம் எண்ணற்ற ஏழை விவசாய பெருமக்களுக்கு.
நன்மை கிடைக்கும் என்பதோடு இந்த திட்டம் காவிரி பகுதியில்
மட்டும் அல்லாமல் மற்றும் நமது தமிழகத்திலே இருக்கிற
அனைத்து பாசன பகுதிகளையும் பரப்புகளையும் மேம்படுத்து
வதற்காக ஒரு நல்ல முன்னோடியான முயற்சி என்பதை
இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதைத்தவிர
இன்றைக்கு நீர்த்தேக்கங்களில் சுற்றுலா மையங்கள் அமைப்பதற்
காக மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுடைய பொறுப்
பிலே வைத்து இருக்கிற சுற்றுலா துறை மூலமாக பொதுப்
பணித்துறையும் இணைந்து அந்த மையங்களை உருவாக்க
வேண்டுமென்று உத்திரவு இட்டார்கள். அந்த அடிப்படையிலே
முக்கொம்பு, கல்லணை, மணிமுத்தாறு, ஆளியாறு, அமராவதி,
பவானிசாகர் செம்பரம்பாக்கம், பூண்டி போன்ற இடங்களிலே
அந்தப் பணி மேற்கொள்ளப்படும், இந்த ஆண்டு என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-00

சென்னை நகரத்தினுடைய குடிநீர் தேவையைப் பொறுத்த
மட்டில் நான் ஒன்றை சொல்லியாக வேண்டும். சென்ற ஆண்டு
மழை பெய்த நேரங்களிலே நம்முடைய தண்ணீர் எல்லாம்
வீணாகப் போகிறது என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர்
புரட்சி தலைவி அவர்கள் கடலிலே வீணாகச் சேருகின்ற தண்
ணீரை தேவைக்கு அதிகமாக வந்து பெருகிவிட்ட நிலையில்
வெளியேற்றப்படும் தண்ணீரை கடலிலே கலக்கவிடாமல், அந்த

தேக்கி வைத்து சென்னை மாநகருக்கு குடிநீர் திட்டத்தை
உருவாக்க வேண்டுமென்ற அந்த உணர்வோடு 2 ஏரிகளை ஏறக்
குறைய 70 கோடி ரூபாய் செலவிலே (மேசையைத் தட்டும் ஒலி)
அமைக்க வேண்டுமென்று உத்திரவு இட்டுள்ளார்கள். அதனு
டைய நடவடிக்கையாக இன்றைக்கு திருக்கண்டலம் பகுதியிலே
ஒரு ஏரி அமைக்க இருக்கிறோம். அடுத்த ஏரிக்கான இடத்தை
ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அந்த நடவடிக்கையும் இந்த
ஆண்டு மேற் கொள்ளப்படும் என்பதையும் இம்மாமன்றத்திற்கு
நான் தெரிவித்துக்கொள்கிறேன். வறட்சி காலங்களிலே நீர்த்
தேக்கங்களிலிருந்து குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று ஒரு
திட்டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சி தலைவி அவர்கள்
யாரும் அறிவிக்காத ஒரு புதுமையான திட்டத்தை இன்றைக்கு
அறிவித்திருக்கிறார்கள். வறட்சி ஏற்படும் நேரத்திலே அணை
யிலிருந்து தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்துவது போல
(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள்
சென்னை நகர குடிநீர்த் திட்டத்திற்காக ஏரியின் பெயர்களைச்
சொன்னீர்களே அதை மறுபடியும் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: திருக்கண்டலம் என்ற
இடத்திலே ஒரு ஏரி. மற்றொரு ஏரிக்கு இடம் தேர்வு
செய்துக் கொண்டிருக்கிறோம். திருக்கண்டலம் என்ற
இடத்திலே ஏரி அமைப்பதற்காக இன்றைக்கு உத்தரவு வழங்
கியிருக்கிறார்கள். இன்னொரு ஏரி அமைப்பதற்கான இடத்தை
தேர்வு செய்துக் கொண்டிருக்கிறோம். ஆக
இரண்டு ஏரிகள் அமைப்பதற்கு உத்தரவு இட்டிருக்கிறார்கள்.

அடுத்து வறட்சி நேரங்களிலே அணையிலிருந்து தண்ணீரை
பாசனத்திற்குமட்டும் அல்லாமல் குடிநீருக்கும் பயன்படுத்த வேண்
டுமென்ற எண்ணத்தோடு ஒரு புதிய உத்தரவினை தமிழக
அரசின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஒரு புதிய உத்திர
வினை இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி
யிருக்கிறார்கள். அணைகளிலே உள்ள தண்ணீரை பாசனத்
திற்காகத் தான் பயன்படுத்தப்பட வேண்டுமென்று ஒரு
நிலைமை இருந்து வந்தது. நம்முடைய மாண்புமிகு உறுப்
பினர் பழனிசாமி அவர்கள் கூட ஏற்கெனவே மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தார்.
அதுப்போல சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திரசேகர்
போன்றோர் மற்றும் போன்றோர், மாணிக்கவாசகம் போன்
றோர் எல்லாம் உயிர் தண்ணீர் கொடுக்க வேண்டும்,
தென்னை மரங்களுக்கும் என்று கேட்டார்கள். இப்படிப்
பாசன [illegible] போக பல்வேறு பிரச்சினைகளுக்கு தண்ணீர்
கொடுக்கிற நேரத்திலே சில சமயங்களிலே குடி தண்ணீருக்கு
வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. குடிதண்ணீர்
தேவை அடிப்படைத் தேவை என்ற காரணத்தினால், இன்
றைக்கு அந்த திட்டத்தை வறட்சி நேரங்களிலே குடிதண்ணீர்



பற்றாக்குறை ஏற்படும் நேரத்திலே மனிதாபிமான அடிப்படையில், மனித நேயம், மனித நேயம் என்று சொல்லுகிறார்களே, அந்த மனித நேயத்தை எல்லாம் மறந்தவர்களுக்கு ஒரு பாடம் புகட்டுகின்ற விதத்திலே இன்றைக்கு மனிதாபிமான அடிப்படையில் நீர்த் தேக்கங்களிலிருந்து குளம் குட்டைகளுக்கு தண்ணீர் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்திரவு இட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இப்படிப் பல்வேறு திட்டங்கள் பொதுப் பணித் துறையிலே இருந்தாலும், இன்னும் பல்வேறு விவரங்கள் இருந்தாலும் அணைகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை வைத்திருக்கிறார்கள். ஆகவே, பட்டியல் நீண்டு கொண்டே போகும். இன்னும் நெடுஞ்சாலைத் துறை இருக்கிறது. அதற்கு அடுத்து எரிசக்தி நிறுவனத்தை பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்குப் பின்னாலே வெட்டுத் தீர்மானங்களைப் பற்றிச் சொல்ல வேண்டி இருக்கிறது. ஆகவே, பொதுப்பணித் துறையிலே இன்றைக்கு முக்கியமான பாசன ஆதாரங்களை எப்படி மேம்படுத்துவது என்ற அடிப்படையிலேயும் தான் இந்த திட்டங்களையும், எதிர்காலத்திலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன, அதற்கு என்னென்ன ஆதாரங்களை வைத்திருக்கிறோம் என்பதையும், இந்த அரசு எந்த முறையிலே திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது தொலை நோக்குப் பார்வையிலே என்பதைப் பற்றியும் உங்கள் முன்னாலே எடுத்து வைத்தேன்.

நான் அடுத்தபடியாக நெடுஞ்சாலைத் துறைக்கு வருகிறேன். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டிலே இன்றைக்கு நான் ஒன்றை சொல்லியாக வேண்டும். கடந்த இரண்டாண்டுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கேட்பாரற்றுக் கிடந்தது நெடுஞ்சாலைத் துறை இந்த இரண்டாண்டு காலத்தில் எங்கேயாவது நெடுஞ்சாலைத் துறையிலே பணிகள் நடந்ததா என்று சொன்னால் இல்லை. அதை யாரும் மறுக்க முடியாது. நம்முடைய ஒப்பற்ற தலைவர் புரட்சித் தலைவர் அவர்களின் மறைவுக்குப் பின்னலே, கிட்டத்தட்ட 4, 5 ஆண்டுக்காலமாக தமிழகம் நெடுஞ்சாலைத் துறையிலே புறக்கணிக்கப்பட்டது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு பல கோடி ரூபாயை இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நான் எண்ணிப் பார்க்கிறேன். எப்படி இந்த மனம் அவர்களுக்கு வந்தது என்று நான் எண்ணிப் பார்த்தேன். மாற்றாரின் மைந்தனுக்கும் வழங்குகின்ற அந்த வள்ளல் குணம் படைத்தவர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி
உங்களுக்கு முன்னால் இருக்கின்ற அந்தப் பலகை நீண்ட நாள்
உங்களுக்கு இருக்க வேண்டும். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : அந்த எண்ணம்
படைத்த, மனவளம் படைத்த நம்முடைய மாண்புமிகு இதய
தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தனக்கு வாக்
களித்த மக்கள் படுகின்ற அல்லல்களைப் பார்க்கின்றபோது
இன்றைக்கு சாலைகள் தான் இந்த நாட்டினுடைய பொரு
ளாதாரத்தை மேம்படுத்துகின்ற ஒரு பணி என்ற காரணத்
தினாலே அவர் வாரி வழங்கியதிலே எவ்வித ஆச்சரியமும்
இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சாலை
களைப் பொறுத்தமட்டிலே மேம்பாடு செய்தால்தான் பல
இனங்களிலே நமக்கு லாபம் வருகிறது. இன்றைக்கு போக்கு
வரத்துத் துறையை எடுத்துக்கொண்டால் நம்முடைய பஸ்கள்
எல்லாம் மோசமான சாலைகளிலே ஓடுகின்ற நேரத்திலே
பல்வேறு விதமான செலவினங்கள் இன்றைக்கு ஏற்படுகிறது.
டயர் தேய்மானம் ஏற்படுகின்றன, ஸ்பேர் பார்ட்ஸ் தேய்மானம்
ஏற்படுகிறது, டீசல் அதிகமாகச் செலவிடப் படுகிறது.
ஆகவே, ஒரு சாலையை பராமரிக்கின்ற நேரத்திலே
தமிழ் நாட்டினுடைய பொருளாதாரமும்சரி, இந்திய
நாட்டினுடைய பொருளாதாரமும் சரி, பாதுகாக்கப்படுகின்ற
ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே தான் இன்றைக்
நெடுஞ்சாலைத் துறையைத் தன்னுடைய அடிப்படைத் து
யாக தன்னுடைய கையிலே எடுத்துக்கொண்டு மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திராவிட முன்னேற்றக்
கழகத்தின் காலத்திலே கொடுக்கப்பட்டிருந்த அந்த 60
கோடி ரூபாய் அளவிலே இருந்த பணத்தை இன்றைக்கு
128 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்து இருக்கிறார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி) அதனால் தான் இன்றைக்கு
நாம் பெரும்பாலான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்
கிறோம்.

நம்முடைய தமிழ் நாட்டை பொறுத்தமட்டிலே சாலை
யினுடைய அடர்த்தியை நம்முடைய இந்திய நாட்டோடு
ஒப்பிடும்போது நாம் முன்னணியிலே இருக்கிறோம். அந்தச்
சாலையினுடைய அடர்த்தி முன்னணியிலே இருக்கின்ற காரணத்
தினாலே, அந்தச் சாலைகளைப் பராமரிக்கத் தவறுகின்
நேரத்திலே இன்றைக்கு நமக்கு என்னென்ன இடர்பாடுகள் ஏற்ப
கின்றன என்பதை உணர்ந்ததற்குப் பின்னாலே தான் இன்றைக்கு
ஒன்பதாவது நிதிக்குழு என்று சொல்லப்படுகின்ற அந்த நிதிக் குழு
கொடுத்த அடிப்படையிலே, இதுவரை யாரும் முந்தைய ஆட்சிக்
காலங்களிலே அந்தக் நிதிக் குழுவின் பரிந்துரையை ஏற்றதே
கிடையாது. பாதி அளவிற்குத் தான் வழங்கிக் கொண்டி



இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் தான்
ருந்தார்கள். அந்தத் தொகையை வழங்கிக்
அந்த நிதிக் குழுவை மதித்து அந்தத் தொகையை வழங்கிக்
கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெடுஞ்சாலை துறையைப் பொறுத்த மட்டிலே நமக்கு பெரிய
மாவட்ட சாலைகள், இதர மாவட்ட சாலைகள், அதற்குப்
பின்னாலே கிராமச் சாலைகள், அங்காடிச் சாலைகள்,
கரும்பு அபிவிருத்தித் திட்டச் சாலைகள், அதற்குப் பின்னாலே
நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுக்கப்படு
கின்ற சாலைகள், பஸ் ரூட் ஸ்கீம் என்று சொல்லப்படுகின்ற
அந்த வழித்தட மேம்பாட்டுச் சாலைகள் என்று பல்வேறு
பணிகளை நம்முடைய துறையிலே நாம் செய்து கொண்டி
ருக்கிறோம். தேசிய நெடுஞ்சாலை நம்மோடு இருக்கிறது.
தேசிய நெடுஞ்சாலைக்கு மத்திய அரசு நிதி உதவி கொடுத்துக்
கொண்டிருக்கிறது. ஆகவே பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து
நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற சாலைகளை நாம்
பராமரித்துக் கொண்டு இருக்கிறோம். அதிலே முதலிலே
தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தமட்டிலே மத்திய அரசு
நமக்கு நிதி வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு
ஏறத்தாழ சென்ற ஆண்டைவிட, அதற்கு முந்தைய ஆண்டு
களைவிட போன ஆண்டு 11 கோடி ரூபாய் என்று நம்முடைய
திட்டம் இருந்தாலும் கூட இந்த ஆண்டு கிட்டத்தட்ட
14 கோடி ரூபாய்க்கு திட்டம் போட்டிருக்கிறோம் நெடுஞ்
சாலைத் துறையிலே என். எச். என்று சொல்லப்படுகின்ற அந்த
தேசிய நெடுஞ்சாலைத் துறையிலே இன்றைக்கு அதிகமாக 3 கோடி
ரூபாய் திட்டங்களை நாம் போட்டிருக்கிறோம். அதே
போல பராமரிப்புத் துறையிலும் ஏறத்தாழ மொத்தமாக
இரண்டும் சேர்த்து கிட்டத்தட்ட 26 கோடி ரூபாய்க்கு தேசிய
நெடுஞ்சாலைக்காக திட்டங்களை அனுப்பி, மத்திய அரசு
அதற்கான ஒப்புதலை கொடுப்பதற்கான ஏற்பாடுகளை நாம்
செய்திருக்கிறோம்.

நம்முடைய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தமட்டில்
நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஆட்சிப்
பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே புரட்சித்
தலைவி அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். நான்
ஏற்கெனவே கூட சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே
கூட சொன்னேன். அவர் தேர்தல் காலங்களிலே நடைமுறை
களைப் பார்த்தவர்கள். திடீரென்று அவர்கள் ஆட்சிக்கு
வந்துவிடவில்லை. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்;
ஏறத்தாழ ஏழு முறை தமிழகத்தை சுற்றியதற்குப் பின்னாலே
நான் இந்த ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி) அவர் உணர்ந்திருக்கின்ற காரணத்தினாலே நான்
பல்வேறு கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் கூட [illegible]
இருக்கின்ற காரணத்தினாலே தான் உடனடியாக [illegible]

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 மார்ச் 31

உடனேயே இந்த சாலை பணிகளைப் மேம்படுத்த வேண்டும் என்பதற்காக 'பட் ஸ்ட்ரக்ச்சர்ஸ்' என்று சொல்லப்படுகின்ற அந்த மிக மோசமான சாலைகளை தனியாக எடுத்து அதை பராமரிக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார். எத்தனையோ பேர்கள் இருந்தார்கள். இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் அவர்கள் எண்ணத்திலே வரவில்லை. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் அனுபவ பூர்வமாக கண்ட உண்மையை வைத்துக்கொண்டு இன்றைக்கு ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று 150 கோடி ரூபாயிலே 5 ஆண்டுக் காலத்திற்கு ஒரு திட்டத்தை எடுங்கள். வருடத்திற்கு நான் 30 கோடி ரூபாயை ஒதுக்கித் தருகிறேன், என்று சொல்லி சென்ற ஆண்டு 20 கோடி ரூபாயை—ஏனென் றால், குறைந்த காலமாக இருந்த காரணத்தினாலே அவ்வளவு தான் செலவழிக்க முடியும்—ஒதுக்கித் தந்தார்கள். அதற்குப் பின்னாலே இந்த ஆண்டு ஏறத்தாழ 35 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அந்த 5 கோடி ரூபாயை தொழிற்சாலைகள் உள்ள நகரங் களுக்கு சாலைகள் அமைப்பதற்காகவும், 30 கோடி ரூபாயை நெடுஞ்சாலைத் துறையில் பழுதுபட்டு மிக மோசமாக 'பேடு ஸ்ட்ரக்சர்' என்று சொல்லப்படுகின்ற அந்த மோசமான சாலைகளை பராமரிப்பதற்காகவும் இன்றைக்கு தந்து இருக் கிறார்கள்.

பிற்பகல் 2-10

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் மாண்பு மிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். எங்கே பார்த்தாலும் ரோலர்கள் இருக் கின்றன. புதிய அணுகுமுறையை கையாண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு நல்ல உள்ளம் படைத் தவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நெடுஞ் சாலைத் துறையைப் பொறுத்தமட்டில் புதிய அணுகு முறையை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கனவே கையில் வைத்து ஒரு மிஷினை சுற்றுவார்கள், கீழே தீ போட்டு எரிப்பார்கள். இது எல்லாம் பழைய முறை. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகு இன்றைக்கு புதிய முறையை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு நெடுஞ்சாலைத் துறையில் இன்றைக்கு பிளாண்ட் சிஸ்டம் என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு பிளான்ட் வைத்து மிஷின் வைத்து தான் நெடுஞ் சாலைத் துறையில், சாலைகள் போடப்படவேண்டும் என்று தேசிய நெடுஞ்சாலைக்கு இணையாக நம்முடைய தமிழக



1992 மார்ச் 31] [திரு. எஸ். கண்ணப்பன்]

அரசினுடைய நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளும் இருக்க வேண்டும் என்ற காரணத்தாலே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இன்றைக்குக் கூட இங்கே நண்பர்கள் சொன்னார்கள். நம்முடைய வாசுதேவ நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர் கள்கூட சொன்னார்கள். ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் பல்வேறு சாலைகளை நான் சுற்றுப்பயணம் செய்கின்ற நேரத்தில் பார்த்து இருக்கிறேன். 2 நாட்களுக்கு முன்புகூட நான் 6 மாவட்டங்களுக்கு போயிருந்தேன். நான் போகின்ற நேரங்களில் எல்லாம் நெடுஞ்சாலைத் துறை யினுடைய அதிகாரிகள் கூட வருகிறார்கள். அங்கே இருக் கின்ற வேலைகளும் இன்றைக்கு துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. எங்களைப் போன்றவர்கள் அந்தப் பிரச்சினையைப் பார்க்கின்ற நேரத்திலே கருப்பு சல்லி தான் அடிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். தாரை திருடி விடுகிறார்கள் என்று எல்லாம் இங்கே சொன்னார்கள். இந்த அரசில் அது நடக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏன் என்றால் அந்த கையால் சுற்றுகிற முறையில் அவர்கள் செய்தால் தான் தாரை திருட முடியும். பிளாண்டில் வைத்து அந்த தாரை போடுகிற நேரத்தில் அந்த அளவான தாரை ஊற்றினால் தான் மிக்சிங் சரியாக வரும். அங்கே சாலைகள் படிய முடியும் என்ற காரணத் தால் இனிமேல் சடந்த தவறுகள் நடக்காது. கடந்த காலங்களில், கடந்த ஆட்சியில் வேண்டுமானால் இருந்து இருக்கலாம். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே அந்த தவறுகள் நடக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). நாங்கள் வந்ததற்குப் பின்னால், நாங்கள் அனுமதித்ததற்குப் பின்னால் எங்கள் ஆட்சிக் காலத்தில் போட்ட சாலை களை தயவுசெய்து அவர் போய் பார்க்கவேண்டும், நான் நேரடியாக அவரை அழைத்துச் சென்று காண்பிக்க தயாராக இருக்கிறேன் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்றைக்கு ஒப்பந்தப் புள்ளிகளை விடுகின்ற நேரத்தில் பல்வேறு விமர்சனங்களை வெளியே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் ஒரு காலத்தில் பொதுப்பணித் துறையை கெடுத்தவர்கள் எல்லாம் இன்றைக்கு பொதுப் பணித் துறையைப் பற்றி குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்

கிறேன். ஒப்பந்த முறை என்பது சிக்கலான பிரச்சினை
இதில் பல்வேறு கருத்துக்கள்
கின்ற காரணத்தால் இந்த மன்ற உறுப்பினர்களுக்கு இருக்
தெளிவுபடுத்துவது என்னுடைய கடமை என்று
கருதுகிறேன். ஏன் என்றால் அந்த ஒப்பந்தப் புள்ளிகளை நான்
நாம் விடுகின்ற நேரத்தில் அரசின் மீது பல்வேறு குற்றச்
சாட்டுகளை இங்கே சுமத்துகிறார்கள். உள்ளே இருக்
கின்ற நண்பர்களும், வெளியே இருக்கின்றவர்களும் இதை
புரிந்து கொள்ளவேண்டும். பத்திரிகை நண்பர்கள்
எல்லாம் இதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக
இந்தக் கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒப்பந்தப் புள்ளிகளை நாம்
இன்றைக்கு பல்வேறு காண்டிராக்ட்காரர்கள், கோருகின்றோம்.
காரர்கள் அந்த ஒப்பந்தப் புள்ளிகளை இங்கே ஒப்பந்தக்
களில் போய் கேட்கிறார்கள். ஏறத்தாழ 50 அலுவலகங்
ரூபாய்க்கு ஒருவேலை வருகிறது என்று சொன்னால் இலட்சம்
பேர் அந்த வேலையை போய் கேட்கிறார்கள். 15
வர்களுக்கு எல்லாம் ஒப்பந்தப் புள்ளியைக் கேட்கின்ற
றோம். ஆனால் அந்த ஒப்பந்தப் புள்ளிகளில் கொடுக்கி
அனைவருமே பங்கு ஏற்பது இல்லை. அவர்கள்
அந்த ஒப்பந்தத்தில் பங்கு ஏற்பது இல்லை. அந்த டெண்டரில்
இருந்து பேசிக் கொண்டு அரசு கொடுக்கின்ற வெளியே
தொகைக்கு ஈடாக கொஞ்சம் தொகையை அந்தத்
கொண்டு, வெளியே இருந்து செட்டில் செய்து பேசி
கிறார்கள். அப்படி செய்து விட்டு அதிகமான கொள்
போடாமல் இன்றைக்கு ஒப்பந்தப் புள்ளிகளை தொகைக்குப்
போட்டு விடுகிறார்கள். இந்தத் துறையைப் குறைத்துப்
வரையில் நாம் ஒரு குறிப்பிட்டக் காலத்திற்கு பொறுத்த
அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு இருக்க மேல்
It is an expenditure department. முடியாது.
ணார்களே இது வந்து செலவழிக்கின்ற ஏற்கெனவே சொன்
மூடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகை. நம்
கொடுத்து இருக்கிறார்கள் என்றால் நான் பணத்தைக்
ரூபாயை மிச்சம் வைத்து இருக்கிறேன் என்று 50 கோடி
அடுத்த தடவை நான் அமைச்சராக இருக்க சொன்னால்
(மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட முடியாது.
ஒதுக்குகின்ற பணத்தை நாம் செலவழித்து துறை இது.
பொதுப்பணித்துறையை பொறுத்த மட்டில் ஆகவேண்டும்.
சரி, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த இருந்தாலும்
இருந்தாலும் சரி, இன்றைக்கு மக்களுக்கு மட்டில்
[illegible] துறையாக இருக்கின்ற காரணத்தாலும், நன்மை செய்
[illegible] (It is an expenditure department). செலவழிக்
[illegible] இந்த ஒப்பந்தங்களை நாங்கள் [illegible]
[illegible]





நேரத்திலே இன்றைக்கு நாங்கள் சில கவனத்தை மேற்
கொள்கிறோம். அதனால் சிலர் விமர்சிக்கிறார்கள்.
அப்படி போடுகின்ற நேரத்திலே இவர்கள் வெளியே
பேசிக்கொண்டு அதிகமான தொகையை வைத்து இங்கே
போடுகிறார்கள். நாங்கள் ஒப்பந்தப் புள்ளிகளைப் பார்க்
கிறோம். போடுவதற்கு ஆள் இல்லையே என்ன செய்வது
என்று சொல்லி அவர்கள் கேட்கின்ற தொகைக்கு
ஒரு நிர்பந்தத்திற்கு ஆளாகிப் போடுகிறோம். அந்த
ஒப்பந்தத்தை நாங்கள் கையில் வைத்து அதை ஏற்றுக்
கொண்டு உடனடியாக அந்தப் பணியை தொடங்கவேண்டும்
என்ற காரணத்தாலே இன்றைக்கு நாங்கள் ஏற்றுக்கொள்ள
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வெளியிலே
இருந்து வந்தவர்கள் பணமே போடாதவர்கள், முதலீடு
போடாதவர்கள், ஒப்பந்தப் புள்ளிகளை மட்டும் 50
ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு, 50 ஆயிரம் ரூபாய், 60
ஆயிரம் ரூபாய் என்று வாங்கிக்கொண்டு சென்றுவிடு
கிறார்கள்.

பிற்பகல் 2-15

அதைப்போலத்தான் நம்முடைய பாம்பன் பாலம்,
நான் உதாரணமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அந்த டோல் வசூல் செய்கின்ற ஒரு பிரச்சினையிலே
இன்றைக்கு ஒப்பந்தப் புள்ளிகளை நாம் கோரினோம்.
அப்படி கோருகின்ற நேரத்திலே வெளியே இருந்து
கொண்டு 18 பேர்கள் ஷெட்யூல் வாங்கி அன்றைக்கு
அவர்கள் வெளியே வைத்து பேசிக்கொண்டு அரசுக்கு
வரவேண்டிய வருமானத்தை அதிகமாக போடவிடாமல்
கெடுத்துவிட்டார்கள். ஆனால் விதிகளின்படி நாங்கள் அந்த
ஒப்பந்தத்தை ஏற்கவேண்டி இருக்கிறது. நாங்கள் ஏற்கவில்லை
யென்றால் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். இப்படிப்
பட்ட பல்வேறு பிரச்சினைகளை இந்த ஒப்பந்தங்களை நாங்கள்
தேர்வு செய்கின்ற நேரத்திலே, நாங்கள் முடிவுக்குக் கொண்டு
வருகின்ற நேரத்திலே சந்திக்கின்ற காரணத்தினாலே இந்த
நடை முறைகளையெல்லாம் மாற்றவேண்டுமென்று
இன்றைக்குச் சில நடவடிக்கைகளை எடுத்து
இருக்கின்றோம். இதிலே பாதிப்பு திராவிட முன்னேற்றக்
கழகக்காரர்களுக்கு என்பதாலேதான் வெளியிலே ஓலமிட்டுக்
கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
ஆகவே, அவர்கள்தான் அப்படி செய்துகொண்டு இருந்
தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே,
வெளியிலே வைத்துக் கொண்டு பேசுவது; செட்டில்
செய்கின்ற முறைகளெல்லாம் இருந்தன. இன்றைக்கு
எங்களைப் பொறுத்தமட்டிலே இந்த அரசுக்கு ஒரு ரூபாய்
கூட இழப்பு ஏற்படுவதை மாண்புமிகு முதல்வர் அவர்கள்

பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்ந்து
இருக்கிற காரணத்தினாலே (மேசையைத் தட்டும் ஒலி)
மிகச் சிறப்பாக, அந்த ஒப்பந்தப் புள்ளிகளைக் கொடுக்
கின்ற நேரத்திலே, திறமையுள்ளவர்களுக்கு, இந்தத்
தொழில் தெரிந்தவர்களுக்கு, முதலீடு செய்பவர்களுக்கு,
அந்த வேலையை குறித்த காலத்திலே முடித்துக் கொடுப்
பவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று உத்தர
விடப்பட்டு, இன்றைக்கு அதிகமான பணச் செலவு நம்
முடைய அரசாங்கத்திற்கு இல்லாமல், காலக்கெடு நிர்ண
யிக்கப்பட்டு, முடிக்கப்படுகின்றது. இதற்குத்தான் காலக்
கெடு என்று சொன்னேன். ஏனென்றால், ஒரு ஒப்பந்
தத்தைப் போட்டுவிடுவார்கள். 25 சதவீதம் லெஸ்ஸிலே
போடுவார்கள். அந்த வேலையை எடுத்துவிட்டு, டெபாஸிட்
என்று 1 சதவீதம்தான் வைத்திருக்கின்றோம். 50
இலட்சம் ரூபாய்க்கு 50 ஆயிரம் ரூபாய் கட்டிவிட்டு ஓடி
விடுவார். நஷ்டம் ஏற்படுகின்ற காரணத்தினாலே அந்த
வேலை அப்படியே கிடந்துவிடும். இதற்குப் பின்னாலே
மறு டெண்டரை நாங்கள் போடுவதற்கு ஏறத்தாழ
6 மாதகாலமாகும். இந்த 6 மாத காலத்திலே விலைவாசி
ஏற்றத்தின் காரணமாக, அடுத்த ஆண்டு பட்ஜெட்டிலே
வருகின்றபோது ஏறத்தாழ 25 சதவீதம் அதிகமாகி
ஒப்பந்தப் புள்ளியினுடைய மதிப்பு அதிகமாகி அரசுக்கு
நஷ்டம் ஏற்படும். ஆகவேதான், தகுதியில்லாதவர்களுக்கு
வேலை கொடுக்கக்கூடாது என்பதற்காக பல விதிமுறை
களை நாங்கள் கடைபிடித்துக் கொண்டிருக்கிறோம். அவர்
கள் இன்றைக்கு விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எங்களுக்கு அரசினுடைய நலன்தான் முக்கியமே தவிர,
எங்களுடைய முதல்வருக்கு மக்களுடைய நலன்தான்
முக்கியமே தவிர, அப்படிப்பட்ட அரசியல்வாதிகளின்,
விமர்சனங்களைப் பற்றி நாங்கள் கவலைப்படப் போவ
தில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி) உதாரணமாக சொல்லவேண்டுமென்றால், கிருஷ்ணா
நதி குடிநீர் திட்டத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்
தின் காலத்திலே, அவர்கள் டெண்டர் செட்டில் செய்த
கொடுமையை நீங்கள் நன்றாக அறிய வேண்டும். டெ
டெண்டரை செட்டில் செய்வதற்கு 8 மாத காலம் திரு
முதலமைச்சர் வீட்டிலே அந்தத் திட்டம் இருக்கும்.
பொதுப்பணித் துறை அமைச்சர் முதலமைச்சர் வீட்டி
லேயே உட்கார்ந்துகொள்வார். போட்டவர்களெல்
லாம், ஒப்பந்தம் வந்துவிடாதா ; வந்துவிடாதா என்
றெல்லாம் அலைந்துகொண்டிருப்பார்கள். அதெல்லாம்
பழைய கதை. இப்படி பல்வேறு கதைகள் இருக்கின்றன.
நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால்
எங்களைப் பொறுத்தமட்டிலே, கிருஷ்ணா நதி குடிநீர்





திட்டத்தைப் பொறுத்தமட்டிலே நான் ஏற்கனவே
சொன்னதைப்போல 6 ஆண்டுக் காலத்திலே 24 கோடி
ரூபாய் செலவழிக்கப்பட்டதென்றால், இந்த 9 மாத
காலத்திலே ஏறத்தாழ 18 கோடி ரூபாய்க்கு டெண்டர்
செட்டில் செய்து இருக்கிறோம். (மேசையைத் தட்டும்
ஒலி). 9 மாத காலத்திற்குள்ளே என்றால், 3 மாத
காலத்திற்குள்ளே எந்த டெண்டரும் இங்கே நம்முடைய
முதல்வர் அவர்களுடைய அலுவலகத்திற்குச் சென்றால்,
ஒரு குறிப்பிட்ட காலக்கெடு என்று நிர்ணயிக்கப்படுகின்ற
அந்த வேலிடிட்டி டேட் என்று சொல்வார்களே அந்தத்
தேதியிலே இருக்கின்ற டெண்டர்களையெல்லாம் எடுத்து
வையுங்கள், உடனடியாகக் கையெழுத்துப் போடவேண்டு
மென்று எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் கையெழுத்
திட்டு இருக்கின்றவர்களைப் (மேசையைத் தட்டும் ஒலி)
பார்த்து இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.
பொதுப்பணித் துறையிலே ஒப்பந்தங்களிலே முறைகேடு
நடக்கிறது என்று. அந்த ஒப்பந்தங்களை எதிர்பார்த்து
இருந்தவர்கள் இன்றைக்குச் சொல்லிக்கொண்டு இருக்
கிறார்கள், என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிப்பது
என்னுடைய கடமை என்று கருதுகின்றேன். ஆகவே
இந்த விளக்கங்களெல்லாம் இந்த அரசு பொறுப்பேற்றுக்
கொண்டதற்குப் பின்னாலே இந்தத் துறையிலே இருக்கிற
சிக்கல்கள், பிரச்சினைகளையெல்லாம் பத்திரிகை நண்பர்
களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இன்றைக்குத்
தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்த ஒப்பந்த
முறைகளை இன்றையதினம் நாங்கள் பின்பற்றிக்கொண்டு
இருக்கிறோம். எங்களைப் பொறுத்தமட்டிலே தவறான
அணுகுமுறைகளை சட்ட விதிகளுக்கு அப்பாற்பட்ட
அணுகுமுறைகளை ஒப்பந்தத்தில் நாங்கள் கடைப்பிடிக்க
மாட்டோம். நம்முடைய முதல்வர் அவர்கள் அதற்கு
ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள் ; அப்படிப்பட்டவர்கள் அவர்
களுடைய அமைச்சரவையிலே யாரும் பணியாற்ற முடி
யாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே,
நியாயமான முறையில், இந்தத் திட்டங்களை முனைப்
போடு நிறைவேற்றவேண்டுமென்ற, அந்தக் கால கெடு
வுக்குள் முடிக்க வேண்டுமென்ற முறையிலேதான் இன்றைக்கு
இந்த ஒப்பந்தங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றன
என்பதையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் 18

இன்றைக்கு கிராம சாலைகள் ஜனத்தொகை கொண்ட
கோடி ரூபாயை, ஆயிரம் ஜனத்தொகை கொண்ட
கிராமங்களுக்கு சாலை வசதி செய்வதற்காக வழங்கியிருக்
கிறார்கள். அதைப்போல, தேசிய நெடுஞ்சாலைத்
துறையிலே. இன்றைக்கு பார்ட் 2 ஸ்கீம் என்று

சொல்லப்படுகின்ற, பகுதி 2 திட்டத்தின் கீழே, 6 கோடிக்கு
மேலே பாலங்கள் கட்டுவதற்காக, இன்றைக்குத் திட்டங்கள்
வழங்கி இருக்கின்றார்கள். தமிழ்நாடு அர்பன் டெவலப்
மெண்ட் புராஜக்ட் என்று சொல்லப்படுகின்ற தமிழ்நாடு
நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின
இன்றைக்கு நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். 10
நகரங்களை நாம் தேர்வு செய்து, சென்னை, மதுரை,
கோவை திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர்,
திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களில், இந்தச்
சாலை வசதிகளும உள்வட்ட சாலைகளும் அதாவது
இன்னர் ரிங் ரோடு என்று சொல்லப்படுகின்ற அந்த வசதி
களும், மேம்பாலங்களும் கட்டுவதற்காக அந்த நகர்ப்புற
வளர்ச்சித் திட்டத்தின் கீழே இன்றைக்கு நெடுஞ்சாலைத்
துறை எடுத்துக்கொண்டு, உலக வங்கியினுடைய உதவி
யோடு இன்றைக்கு 100 கோடி ரூபாய் அளவிலே ஒரு
திட்டத்தைத் தயாரித்து, 5 ஆண்டுக் காலத்திலே நாம
நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம். இந்தத் திட்டக்
காலத்திலே ரூபாய் மதிப்பு குறைந்து இருக்கிற காரணத்
தினாலே 60 கோடி ரூபாய்க்கு இன்றைக்கு அதிகமான
திட்டங்களை நாம் எடுக்க முடிந்திருக்கிறது. ஆகவே,
அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேதான் இன்றைக்கு,
நம்முடைய திருப்பூருக்குககூட 5 கோடி 17 இலட்சம்
செலவிலே ஒரு மேமபாலமும் (மேசையைத் தட்டும் ஒலி)
இதுபோன்ற திட்டங்களையும் எடுத்து இருக்கின்றோம்.
33 கோடி ரூபாய் செலவிலே இன்றைக்கு 9 புதிய திட்டங்
களை உருவாக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர்
அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான
செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) நான இந்த
நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே இருந்த
ஆண்டுகளில் ஏறத்தாழ 16 கோடி ரூபாய்தான் அவர்கள்
செலவழித்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) இரண்டரை
மணிக்குள் முடித்துவிடுகிறேன். இந்த டி.என்.யு.டி.பி.
என்று சொல்லப்படுகின்ற நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்
திட்டத்தின் கீழே எந்த ஆண்டையும்விட இந்த ஆண்டு
சிறப்பாக, இதற்கு முன்னாலே 16 கோடி ரூபாய்தான்
நாம் செலவழித்திருக்கின்றோம். இந்த ஆண்டு 25 கோடி
ரூபாய்க்கு திட்டங்கள் எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-20

பஸ் ரூட் ஸ்கீம். கிராமங்களிலே வழித்தடங்கள்
செல்லுகின்ற நேரத்திலே நம்முடைய போக்குவரத்துக்
கழகத்திற்குப் பெருவாரியான நஷ்டம் ஏற்படுகிறது என்ற
காரணத்தினாலே அந்தத் திட்டங்களை இன்றைக்கு,



எடுக்கவேண்டுமென்று சொல்லி, கிராமப்புறச் சாலைகளை
மேம்படுத்துவதற்காக ஏறத்தாழ இருபது கோடி ரூபாயை
இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி
அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இன்னொரு திட்டம் இருக்கின்றது. சென்ட்ரல்
ரோடு ஃபண்ட என்று சொல்கின்றார்கள். மைய அரசினுடைய
நிதித் திட்டத்தின் கீழே நாம் சாலைப் பணிகளை மேற்கொள்வ
தற்கும், பாலங்களைக் கட்டுவதற்கும் இன்றைக்குத் திட்டங்களை
எடுத்து இருக்கின்றோம். ஏறத்தாழ 28 கோடி ரூபாய் ஒரு
ஆண்டுக்குத் தரவேண்டுமென்ற ஒரு நிர்ணயம் இருக்கிறது. ஆக,
அந்தத் திட்டத்திற்கும், பல்வேறு வேலைகளை, அவற்றை
யெல்லாம் நான் பட்டியல் போட்டுச் சொன்னால் காலம்
அதிகமாகிவிடும் என்ற காரணத்தினாலே இந்தக் குறிப்பிலே
சொல்லியிருக்கிறோம். பல்வேறு திட்டங்களை இன்றைக்கு
மத்திய அரசினுடைய அனுமதிக்கு அனுப்பியிருக்கிறோம்.

நம்முடைய கிழக்குக் கடற்கரைச் சாலையை நான் சொல்லி
யாக வேண்டும். இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடு, அது
மிகவும் முக்கியமான, துறைமுகங்களையும், தொழிற்சாலை
களையும் இணைக்கின்ற, பெரிய நகரங்களை இணைக்கின்ற
சாலை. அந்தச் சாலையை ஏறத்தாழ 167 கிலோ
மீட்டர்—மொத்த நீளம அது 737 கிலோ மீட்டர்—கன்னியா
குமரிவரை— 167 கிலோமீட்டர் தூரம் இன்றைக்கு
எடுத்து ஏறத்தாழ 75 கோடி ரூபாய் இந்த ஆண்டு
இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டு
11 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்
பட்டு, வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. நான்
காண்டு காலத்திற்குள் அந்த வேலைகளை முடிக்க
வேண்டுமென்று முதல்வரவர்கள் உத்தரவிட்டிருக்கி
றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரி
வித்துக்கொள்கிறேன்.

ஆக, இப்படிப் பல்வேறு பணிகளை இன்றைக்கு நம்முடை
டைய முதல்வரவர்கள் நம்முடைய தமிழகத்தினுடைய
நலன் கருதி பொதுப் பணித்துறையிலும், நெடுஞ்
சாலைத் துறையிலும் ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை
நான் இந்த நேரத்திலே சொல்லக்கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்தத் துறையைப் பொறுத்தமட்டிலே, பொது
மக்களுக்கு மிகவும் அணுக்கமாக, நெருக்கமாக இருக்கின்ற
துறை காரணமாக, இந்தத் துறை மென்மேலும் பல அதன்
பணிகளைச் செய்ய வேண்டுமென்ற அந்த உணர்வோடுதான்
எங்களைப் போன்றவர்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்குத்
தாயாய், தந்தையாய், அன்னையாய் இருந்து

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 மார்ச் 31

எங்களை வழி நடத்திச் செல்கின்ற மாண்புமிகு இதய தெய்
வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே
நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறன். ஆகவே, ஒரு
தலைமை சிறப்பாக இருக்கிற நேரத்திலேதான் அதிலே
பணியாற்றுகின்ற தளபதிகள் ஒழுங்காக பணியாற்ற
முடியும் என்ற வரலாற்றை இன்றைக்கு உருவாக்கிக் கொண்
டிருக்கிறார்கள். அந்த உணர்வோடு, உள்ள சுத்தியோடு
இன்றைக்கு நெஞ்சம் நிறைவோடு, ஒரு சிறந்த கூர்ந்த மதி
படைத்த ஒரு திறமை மிக்க இந்தியத் திருநாட்டிலே இணை
யற்று விளங்குகின்ற ஒரு முதலமைச்சரின் கீழே பணியாற்று
கின்றோமே என்ற அந்தப் பேறு எங்களுக்குக் கிடைத்திருக்
கிறது என்பதையெல்லாம் எண்ணி என்னைப் போன்றவர்
கள் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு வெட்டுத் தீர்மானங்களைப் பற்றி நான்
இந்த நேரத்திலே சொல்ல வேண்டும்.

எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தைப்பற்றிச் சொன்னார்கள்
இன்றைக்குக் காற்றாலையைப் பற்றி நான் இரண்டு
மூன்று வரிகளிலே சொல்லியிருக்கிறேன். இன்றைக்குக்
காற்றாலைகள் மூலம் மின்சக்தியை உருவாக்க வேண்டு
மென்ற எண்ணத்தோடு, டெடா என்று சொல்லப்படுகின்ற
தமிழ்நாடு எனெர்ஜி டெவலப்மென்ட் ஏஜென்சி, இதன்கீழே
வருகின்ற காரணத்தினாலே அதற்கான பல நடவடிக்கைகளை
எடுத்திருக்கின்றோம்.

காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான முதல்
பரிசை மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமிழகத்திற்குத்
தந்திருக்கிறார்கள், என்ற நல்ல செய்தியையும்
நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முப்பந்தல், சுல்தான்பேட், புளியன்குளம், கயத்தாறு
போன்ற பகுதிகளில் காற்றாலைகள் மூலம் இன்றைக்கு மின்
சாரம் தயாரிக்கின்ற பணிகளைத் தொடங்குவதற்கு இருக்
கின்றோம். அதற்கு மத்திய அரசினுடைய ஒப்புதலோடு,
முறைசாரா எரிசக்தி மையத்தினுடைய ஒப்புதலோடு இன்
றைக்குப் பல பணிகளைத் தொடங்கவிருக்கிறோம். ஆக
இன்றைக்கு மின்சாரத் துறையைப் பற்றித் தனியாக விவாதம்
இருக்கிறது. அதனுடைய சாதனையை, சரித்திரத்தை, நம்
முடைய முதல்வரவர்கள் படைத்த சாதனைகளை
யெல்லாம் நான் பின்னாலே சொல்லவிருக்கிறேன். இதிலே
சொல்ல வேண்டியது நெடுஞ்சாலைத் துறையும், பொதுப்
பணி துறையும் இந்த எரி சக்தித் துறையும்தான்.

ஆகவே, எரி சக்தித் துறையைப் பொறுத்தவரையில்
இந்தியாவிலே முதல் பரிசை நாம் வாங்கியிருக்கிறோம். ஓவர்
ஆல் பர்ஃபார்மன்ஸ் என்று சொல்கிறார்களே, அது



[1992 மார்ச் 31] [திரு எஸ். கண்ணப்பன்]

எந்த ஆண்டு என்று சொன்னால், ஓவர் ஆல் பர்ஃபார்மன்ஸ்
என்று சொல்லப்படுகின்ற அந்த நிலைமை சென்ற
ஆண்டு குஜராத் பெற்றிருந்தார்கள். நம்முடைய முதல்
வரவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்த ஆண்டு
நாமும், குஜராத்தும் இணைந்து பெற்றிருக்கிறோம். ஆகவே
கடந்த காலத்தைவிட நாம் முன்னேறியிருக்கிறோம். அடுத்த
ஆண்டு நாமே பெறுவோம் என்ற அந்த உறுதியை இந்த
நேரத்திலே மாண்புமிகு முதல்வரவர்களுடைய அனுமதியின்
பேரிலே இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் இந்தத் துறையைச் செம்மையாகச் செயல்
படுத்த முடியும் என்ற நம்பிக்கையிலே இருக்கிறோம்.
ஆகவே, அதைத் தெரிவிக்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள், இன்றைக்கு வெட்டுத் தீர்மானங்
களைப் பொறுத்தமட்டிலே, இந்தத் துறையின் மேல் கொண்ட
அக்கறையின் காரணமாக, அன்பின் காரணமாகத்தான் ஏறத்
தாழ 310 வெட்டுத் தீர்மானங்களை நம்முடைய மாண்புமிகு
சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றைக்குத் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 2-25

பொதுப்பணித் துறையிலே 151 வெட்டுத் தீர்மானங்களும்,
அதுபோல நெடுஞ்சாலைத் துறையிலே 159 வெட்டுத் தீர்
மானங்களும் தந்திருக்கிறீர்கள். இந்த வெட்டுத் தீர்மானங்
கள் எல்லாம், ஏற்கனவே பல்வேறு கேள்விகளாக
மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே கேட்டிருக்
கிறார்கள். அந்தக் கேள்விகளுக்கு விடை அளிக்கிற விதத்
திலேயும் நான் பல்வேறு பதில்களை இன்றைக்குத்
தந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிங்காரம்
திரு. ராமசுப்பு, திரு. இராசாராமன், திரு. மனோகரன்,
திருமதி ரமணி நல்லதம்பி, திரு. பி. வி. ராஜேந்திரன் போன்றவர்
களெல்லாம் பொதுப்பணித்துறையிலே கேட்டிருக்கிறார்கள்.
கேட்டிருப்பவையெல்லாம் அணை கட்ட வேண்டும்;
சாலைகள் அமைக்க வேண்டும். தூண்டில் வளைவு அமைக்க
வேண்டுமென்று திரு. குமாரதாஸ் அவர்கள் கேட்டார்கள்
அதற்குக் கூட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, அதற்கான
முயற்சிகளிலே பொதுப்பணித் துறை இறங்கி இருக்கிறது.
உங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சி தலைவி
அவர்கள் கனிவோடு பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறார்கள்.,
அந்த மீன்பிடி வலை அமைக்கிற திட்டமும். உங்கள்
பகுதியிலே ஏற்படுத்துவதற்கான அந்த ஆலோசனையை
வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆகவே, இன்றைக்கு அனைத்து வெட்டுத் தீர்மானங்களுக்கும்
நான் பதில் சொல்லவேண்டுமென்றால், நேரம் இல்லை,

மொத்தமாக நீங்கள் கொடுத்திருக்கிற பிரச்சினை நான்
பார்க்கின்ற நேரத்திலே, பெரும்பாலான இது போன்ற
அடிப்படைத் தேவைகளைத்தான் நீங்கள் வெட்டுத் தீர்
மானங்களாகத் தந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா வெட்டுத்
தீர்மானங்களையும் கவனத்திலே கொண்டிருக்கிறீர்கள் என்ற
நம்பிக்கை அவைக்கு இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : ஆகவே, உங்களுடைய
கோரிக்கைகளை, உங்களுடைய உணர்வுகளை இந்த அரசு
புரிந்துகொண்டுதான் இருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள்
இந்தத் துறைக்கு மிகுந்த தன்னம்பிக்கையோடு செயலாற்று
வதற்கு பல்வேறு உத்திரவாதங்களைத் தந்திருக்கிற காரணத்
தினால், உங்களுடைய குறைகளையெல்லாம் அதிக அளவிலே
களையப்படும். ஆகவே, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்
களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்
கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்கள் அனை
வரையும் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி.
வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நாளை முதலாவது, மானியக்
கோரிக்கைகள் மீதான விவாதம், பிற்பகல் ஒரு மணிக்குள்
ளாவது முடியும்படி தாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டு
மென்ற கோரிக்கையை உங்கள் முன் வைக்கிறேன். கார
ணம், மாண்புமிகு உறுப்பினர்கள், பல்வேறு பிரச்சினைகளை
எழுப்புகிறார்கள். ஆனால், அமைச்சர்களுக்கு அனைத்திற்கும்
விரிவாகப் பதில் கூறவேண்டுமானால், அரசின் கொள்கை
முடிவுகளைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டு
மானால், குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் அல்லது 1-1/2 மணி
நேரமாவது தேவைப்படுகிறது. நேற்று விவாதம் முடிவுற்ற
போது, மதியம் 1-3/4 மணி ஆகிவிட்டது. அதனையும்
தாண்டிவிட்டது. அதன்பின்னர்தான் சட்டத் துறை அமைச்
சர் தன்னுடைய பதிலுரையைத் துவக்கினார். அதைப்
போலவே, இன்று மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதி
லுரையைத் துவக்கும்போதே, பிற்பகல் 1-1/2 மணியைத் தாண்டி
விட்டது. எனவே— எனக்கே தெரியும்; இங்கே அவர்க
ளுடைய பதிலுரையில் சேர்த்துக்கொள்ள வேண்டிய அம்சங்
சங்களைப் பற்றி அமைச்சர்கள் ஒவ்வொருவரும் என்னுடன்
விவாதித்துவிட்டு, கலந்தாலோசித்துவிட்டுத்தான் இங்கே
வருகிறார்கள். நேற்றுக்கூட, நேரத்தின் அருமையைக்



கருதி மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் சொல்லக்
கருதிய எத்தனையோ விஷயங்களைச் சொல்ல முடியாமல்
போய்விட்டது. அதைப்போல, இன்றுகூட பொதுப்பணித்
துறை அமைச்சர் அவர்கள் இன்னும் எத்தனையோ அறி
விப்புக்களைச் செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்தும்கூட
நேரம் போதாததால், சொல்ல முடியாமல் போய்விட்டது. எனவே
இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர்களும், சட்டப்
பேரவைத் தலைவரோடு ஒத்துழைக்க வேண்டும். நாளை
முதல், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம், குறைந்த
பட்சம் ஒரு மணிக்குள்ளாக முடித்துக்கொள்ளப்பட வேண்டு
மென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்
சர் அவர்களுடைய இந்த உணர்வைத்தான் ஒவ்வொரு
நாளும் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் தொடங்கு
கின்றபோதே உறுப்பினர்களுக்கு நான் கவனப்படுத்துகிறேன்.
மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணியோடு மானியக்
கோரிக்கைகள் மீதான விவாதம் முடிய வேண்டும் என்கிற
போது, கேள்வி நேரத்தையும் 10-1/2 மணியோடு முடிப்பதற்
கான முயற்சியையும் எடுத்தால் விவாதங்கள் சரியாக நடை
பெறமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் உறுப்பினர்களுக்கு
நினைவுபடுத்துவது இதுதான். எப்படியும் மானியக் கோரிக்
கைகளின் மீது பேசுகின்ற உறுப்பினர்கள் ஒரு மணிக்காவது
முடித்து, ஒரு மணி என்பதே கூட அதிகம்தான்; 12 அல்லது
12-3/4 மணிக்காவது முடித்து, அதற்குப் பிறகு ஒரு மணி
நேரமாவது அமைச்சர்களுக்குப் பதில் அளிக்க வாய்ப்புக்
கொடுத்தால்தான், உறுப்பினர்கள் இங்கே பேசியதனுடைய
பயனை, அமைச்சர்களுடைய பதிலிலே இருந்து பெற முடியும்.
ஆகவேதான், ஒவ்வொருநாளும் சொல்கிறேன். ஆனால் நம்
முடைய உறுப்பினர்கள் ஒவ்வொரு நாளும் அவரவர்களுடைய
போக்கிலே பேசிக்கொண்டு போகிறார்களே தவிர, குறிப்பிட்ட
கால அளவுக்குள் முடிக்காமல் ஒவ்வொருவரும் கால
தாமதப்படுத்துகிறார்கள். அதுபோல, கேள்வி நேரத்தின்
போதும், துணைக் கேள்வி கேட்கிற மாண்புமிகு உறுப்
பினர்கள், சரியாக அந்தக் கேள்விக்குத் தொடர்புடைய
துணைக் கேள்வியைத்தான் கேட்கவேண்டும். விரிவான விளக்கங்
களை அளித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதேபோல, மாண்பு
மிகு அமைச்சர்களும், அந்தக் கேள்விக்குரிய பதிலை மட்டும்
தெரிவித்தால் சரியாக இருக்குமென்று நினைக்கிறேன். சில
நேரங்களிலே பதிலே கூட, நீண்ட விளக்கமாக அமைந்து

விடுகிறது. இந்த இரண்டையும் கேள்வி நேரத்திலே தவிர்க்கக் கேட்டுக்கொள்கிறேன். விவாதத்திலே பங்குகொள்கிற உறுப்பினர்களும் அந்த வகையிலே உங்களுக்கு 10 நிமிடத்திற்கு மேலே நேரம் கிடையாது என்பதை மனதிலே வைத்துக்கொண்டு பேச ஆரம்பிக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

பிற்பகல் 2—30

(அ) கோரிக்கை எண். 36—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 36—பாசனம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



பாசனம் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ 135,14,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது. (மேஜையைத் தட்டும் ஒலி).

(ஆ) கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள் கட்டடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

[illegible]

பொதுப் பணிகள் — கட்டிடங்கள் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 6,83,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

(இ) கோரிக்கை எண். 38— பொதுப் பணிகள் பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர் சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர் சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ்: தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ். : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 50,51,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேஜையைத் தட்டும் ஒலி).

(ஈ) கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 39—சாலைகளும், பாலங்களும். வெட்டுந் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர் செல்வம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. சா. பன்னீர் செல்வம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ்: தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

[1992 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

சாலைகளும், பாலங்களும் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 205,45,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேஜையைத் தட்டும் ஒலி).

(உ) கோரிக்கை எண். 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



1992 மார்ச் 31]

பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 99,71,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேஜையைத் தட்டும் ஒலி).

(ஊ) கோரிக்கை எண். 56—பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 56 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ்

ரூ. 50,38,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(மேஜையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

பிற்பகல் 2.35

(எ) கோரிக்கை எண். 57.

சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 57. சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 57-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 53,73,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (1-4-1992) புதன் கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

17. தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் 1988-89 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1958) 11(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]( தமிழ்).

48. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை [1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

65. கோரிக்கை எண். 36 மற்றும் 37—பாசனம், கட்டிடங்கள் மற்றும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93 (தமிழ், ஆங்கிலம்).

66. பொதுப்பணித் துறையின் கட்டடப் பணிகள் பற்றிய ஆய்வுரை, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

67. கோரிக்கை எண். 39 மற்றும் 57—தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1991-92 ஆம் ஆண்டிற்கான ஆய்வு மற்றும் 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

68. பொதுப் பணித் துறையின் பாசனம் மற்றும் நிலத்தடி நீர் பற்றிய சாதனைத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

69. பொதுப் பணித் துறையின் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை பற்றிய 1991-92 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டச் சாதனை (தமிழ், ஆங்கிலம்).

70. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1991-92.

71. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கை, 1991-92.



56-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## பொதுப் பணித் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1992–93.

**முன்னுரை :**

பொதுப்பணித்துறை, பெரிய நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துதல், நிலத்தடி நீர் ஆய்வு மற்றும் புலனாய்வுகளை மேற்கொள்ளுதல், பாசன ஆதாரங்களைப் பராமரித்தல் மற்றும் இயக்குதல் ஆகியவற்றிற்குப் பொறுப்பு வகிக்கிறது. இத் துறை, அரசு அலுவலகங்கள், அரசுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், வீட்டுவசதி குடியிருப்புகள் முதலியவற்றிற்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கும் பொறுப்பு வகிக்கிறது.

வேளாண்மைப் பணிகளுக்குப் பயன்படும் வகையில், நிலமேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும், நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கீடு செய்து வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதே பாசனத்துறையின் நோக்கமாகும்.

2. பொதுப்பணித்துறையில் பணியாற்றுகிற 11 தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அவர்களின் பணிப்பகிர்வு பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. தலைமைப் பொறியாளர் (பொது மற்றும் நீர்ப் பாசனம்), சென்னை.

2. தலைமைப் பொறியாளர் (சிறிய நீர்ப்பாசனம்), சென்னை.

3. தலைமைப் பொறியாளர் (பெரியாறு-வைகைத் திட்டம்), மதுரை.

4. தலைமைப் பொறியாளர் (தேசிய நீர்மேலாண்மைத் திட்டம்), சென்னை.

5. தலைமைப் பொறியாளர் (கிருஷ்ணாநதி நீர் வழங்கும் திட்டம்), சென்னை.

6. தலைமைப் பொறியாளர் (திட்டமும் வடிவமைப்பும்), சென்னை.

7. தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீர் சக்தி மற்றும் நீரியல் நிறுவனம், பூண்டி.

8. தலைமைப் பொறியாளர் (நிலத்தடி நீர்), சென்னை.

9. தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், பாசன மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம், திருச்சி.

10. தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), சென்னை.

11. தலைமைக் கட்டிடக் கலைஞர், சென்னை.

**3.1. பாசன நிலை :**

தமிழ்நாடு 13 மில்லியன் எக்டேர் பரப்பளவைக் கொண்டு இந்திய மாநிலங்களில் 11-ம் இடம் வகிக்கிறது. இவற்றில் பயிரிடப்படும் பகுதி 6 மில்லியன் எக்டேர் (அல்லது 46 சதவீதம்) ஆகும். பயிரிடப்படும் 6 மில்லியன் எக்டேர் பரப்பளவில் சுமார் 3.0 மில்லியன் எக்டேர் (அல்லது 50 சதவீதம்) கீழே குறிப்பிட்டுள்ள பல்வேறு நீர் ஆதாரங்களில் இருந்து பாசன வசதிகளைப் பெறுகிறது:—

| | | |
|---|---|---|
| அரசு வாய்க்கால்கள் | .. | 0.95 மில்லியன் எக்டேர். |
| ஏரிகள் .. .. | .. | 0.90 மில்லியன் எக்டேர். |
| கிணறுகள், குழாய்க் கிணறுகள் முதலியன | .. | 1.15 மில்லியன் எக்டேர். |

**3.2. தமிழ்நாட்டில் பாசன மேம்பாடு :**

1976 ஆம் ஆண்டு வேளாண்மை தேசியக் குழு, மாநிலத்தின் இறுதிப் பாசன வளவாயில்கள் 1.50 மில்லியன் எக்டேர் என மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் மொத்தம் 1.10 மில்லியன் எக்டேர் பகுதிகளுக்குப் பாசனம் அளிக்கும் வகையில், 23 பாசனத் திட்டங்கள் இயங்கி வந்தன. ஏழாம் திட்டக் காலம் வரை பாசனப் பகுதி 1.453 மில்லியன் எக்டேராக அதிகரித்துள்ளது. 1991–92-ம் ஆண்டில் பாசன வளம் 3,975 எக்டேர் ஆக உருவாக்கப்பட்டுள்ளது. 1992–93-ம் ஆண்டில் 4,465 எக்டேர் பரப்புக்குப் பாசன வளம் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3.3. இம்மாநிலத்தில் கிடைக்கின்ற நில மேற்பரப்பு நீர் வளம், சுமார் 95 சதவீதம் பயன்படுத்தப்பட்டதாகக் கணக்கிடப்படுகிறது. எனவே, நமது மாநிலத்தில் நில மேற்பரப்பு நீர் வளத்தில் சொற்ப அளவு போக ஏறத்தாழ முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டது எனலாம்.

3.4. நமது மாநிலத்தில் நீர் ஆதாரங்கள் அரிதாக உள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றில் தமிழ்நாட்டுடன் ஒப்பிடுகையில் நீர் ஆதாரங்கள் அதிகமாக உள்ளன. தமிழ்நாட்டில் நீர் வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநிலங்களின்



வடிநிலப் பகுதியிலுள்ள உபரி நீரை பெறுவதே ஆகும். எனவே, தமிழ்நாட்டில் நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்காக, அண்டை மாநிலங்களில் அடுத்துள்ள வடிநிலப்பகுதிகளில் கிடைக்கக் கூடிய உபரி நீரைத் திருப்பிவிடுவதைப் பற்றிய கருத்துரு, மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர் வள அமைப்பின் பரிசீலனையில் உள்ளது. தேசிய நீர் வள அமைப்பு, தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர் வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா-அச்சன்கோவில் ஆகிய ஆறுகளில் உபரி நீரை மதுரை, ராமநாதபுரம், காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகள் பயனடையும் வகையில், கிழக்காக திருப்பி விடுதல் ஆகிய பணியை இந்த அமைப்பு மேற்கொண்டுள்ளது. இவ்வரசு, இதுபற்றி கேரள அரசுடனும், மத்திய அரசுடனும் தீவிரமாகப் பரிசீலிக்கக் கருதி உள்ளது.

3.5. தமிழ்நாட்டில் நில மேற்பரப்பு நீர் பெரும்பாலும் முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்டு விட்டதால், இனி பெரிய அல்லது நடுத்தரப் பாசனப் புதிய திட்டங்களுக்கான வாய்ப்பு மிகக் குறைவே. இனி வருங்காலத்தில் நீர் ஆதாரங்களை சிக்கனமாகவும், பயனுள்ள வகையிலும் பயன்படுத்தி, சேமித்த நீரை, புதிய பகுதிகளுக்குப் பாசனம் அளிக்கவும், ஏற்கனவே பாசனம் பெறும் பகுதிகளில் கூடுதலாகப் பயிர் சாகுபடி செய்யவும் பயன்படுத்த முடியும். பாசன அமைப்புகளில் உள்ள கால்வாய்களைச் சீரமைத்து, கற்காரை பூசி, தேவையான இடங்களில் பாசன நீரை ஒழுங்குபடுத்தும் மதகுகளை அமைத்து, நீர் மேலாண்மையைக் கடைப்பிடித்து, கசிவு மற்றும் பூமியில் நீர் ஊறுதல் மூலம் ஏற்படும் இழப்புகளைத் தவிர்த்து, மேலும் சில விளை நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக்கூடும். அதனால், தற்போதைய கால்வாய்ப் பாசன முறையையும் ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம், நீர் வீணாவதைத் தடுப்பதிலும், நீரை உரிய அளவிற்குப் பயன்படுத்துவதிலும், தற்போது அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்நோக்கத்துடன், உலக வங்கி நிதி உதவியுடன் பெரியாறு-வைகை நீர்த் தேக்கத் திட்டத்தை நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் பயன்கள், ஊக்கம் அளிப்பவைகளாக உள்ளன.

3.6. சுமார் ஒரு மில்லியன் ஏக்கருக்குப் பாசனம் அளிக்கும் பொருட்டு, பழைய காவிரிக் கழிமுகப் பாசன ஏற்பாட்டு முறையினை நவீனப்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.7. நடைபெற்று வரும் பாசனத் திட்டங்கள் :**

பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு 1991–92 ஆம் ஆண்டில் 41.05 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் தொடர்பாக 45.00 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1992–93-ம் ஆண்டிற்கு கோரப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு, 46.22 கோடி ரூபாய் ஆகும்.

4. பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் :

4.1. தற்போது பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் கட்டுமானத்தில் இல்லை. பரம்பிக்குளம்–ஆளியாறு நீர்த்தேக்க ஆயக்கட்டு விஸ்தரிப்புத் திட்டம், பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் 70,825 எக்டேர் வறட்சிப்பாதிப்புப் பகுதிகளுக்கு பாசன வசதி கிடைக்கும் வகையில் மூன்று கட்டங்களாக அமைந்துள்ளது. இத்திட்டம், கணிசமான அளவுக்கு முடிக்கப்பட்டுள்ளது.

4.2. விரிவாக்கப்பட்ட பாசன பரப்பான 70,825 எக்டேருக்கும் (1.75 இலட்சம் ஏக்கர்) மற்றும் ஏற்கனவே பாசன வசதி செய்யப்பட்ட 1,01,173 எக்டேருக்கும் (2.50 இலட்சம் ஏக்கர்) சேர்த்து, நீரை சமமாகப் பங்கீடு செய்ய மொத்த நிலங்களையும் நான்கு பாகங்களாகப் பிரித்து, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நீரை வழங்குதல் குறித்த கருத்துரை, அரசின் பரிசீலனையில் உள்ளது.

5. நடுத்தரப் பாசனத் திட்டங்கள் :

1991-92-ம் ஆண்டு திட்டங்களில் தொடங்கியபோது பின்வரும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பல நிலைகளில் நடைபெற்று வந்தன :—

1. பெரியார் அணையை வலுப்படுத்துதல்.

2. கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத்திட்டம் (தருமபுரி மாவட்டம்).

3. ஆணைமடுவு நீர்த்தேக்கத் திட்டம் (சேலம் மாவட்டம்).

4. நொய்யல் ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம் (பெரியார், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்).

5. குடகனாறு நீர்த் தேக்க மறு கட்டுமானத் திட்டம் (திண்டுக்கல், அண்ணா, திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்).

6. நன்கஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (திண்டுக்கல் அண்ணா மாவட்டம்).



6. நடைபெற்று வருகின்ற நடுத்தரப் பாசனத் திட்டங்களின் தற்போதைய பணி முன்னேற்ற விவரங்கள்.

6.1. பெரியாறு அணையை வலுப்படுத்துதல் :

தேக்கடிக்கு அருகில் உள்ள பெரியாறு அணை, திண்டுக்கல்-அண்ணா, மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள பெரியாறு ஆயக்கட்டுப் பகுதிகளின் முக்கியமான பாசன அமைப்பாகும். கேரள அரசு, இந்த அணையின் பாதுகாப்புக் குறித்து அச்சம் தெரிவித்துள்ளது. தமிழக அரசு, கேரள அரசு, மத்திய நீர்வளக்குழு ஆகியவை இணைந்து நடத்திய ஆய்விற்குப் பின்னர், (i) 152 அடி வரையில் நீரை கொள்ளும் வகையில் பெரியாறு அணையை வலுப்படுத்தவும், (ii) அணையை வலுப்படுத்துவதற்கான பணிகள் முடிவடையும் வரையில் அணையில் 136 அடி ஆழம் மட்டுமே தண்ணீர் நிரப்பப்பட வேண்டும் எனவும், இக்குழு முடிவு செய்துள்ளது. மத்திய நீர்வளக் குழுவின் ஆலோசனையின் பேரில், பெரியாறு அணையை வலுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு திட்டப் பணிகளின் நிலைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

அணையின் மேற்பகுதியில் சிமிட்டிக் கற்களைக் கொண்டு பூசும் பணியும், கம்பிகளை உள்ளே செருகி அணையைப் பலப்படுத்தும் பணியும், மற்றும் அணையின் 0 அடி முதல் (+) 108 அடி வரையில் பின்புறம் கான்கிரீட் அமைக்கும் பணியும் முடிவடைந்துள்ளன. (+) 108 அடி முதல் (+) 148 அடி வரையில் அணையில் பின்புறம் கான்கிரீட் அடைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கூடுதலாக மூன்று நீர்ப் போக்கிகள் அமைக்கும் பணியில் கதவுகள் பொருத்தும் பணி உட்பட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. உபரி நீரை வெளியேற்றும் மதகுகளில் உள்ள பத்து கதவுகளை மனிதர்கள் மூலம் திறப்பதை விடுத்து மின்சாரத்தின் மூலம் இயங்க வைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வணையில் மேற்புற கைப்பிடி சுவர்களை 30 அடி உயரம் வரை உயர்த்துதல், சிற்றணையின் பின்புறத்தில் கற்காரை இடுதல், மேலும் மண் அணையை பலப்படுத்துதல் போன்ற பணிகள் கேரள அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 1992 ஜூனில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6.2. கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் :

இத்திட்டத்தில் மண் அணை, பயன்பாட்டுக்கோபுரம், வலப்புற கால்வாய் அமைத்தல் ஆகிய இப்பணிகள் முடிக்கப்பட்டன. நீர்வழிந்தோடும் பகுதியைப் பொறுத்தமட்டில், கட்டுமான வேலைகள் முடிவடைந்து கதவுகள் பொருத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளன. இடப்புறக் கால்வாய் தொடர்பான 25.55 கி.மீ. [ நீள] கட்டுமானப் பணியில், 21.35 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிந்துவிட்டன. காட்டுப் பகுதியில் 4.20 கி.மீ.

நீளத்திற்கு இந்த கால்வாய் அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டப்பணி 1992 ஜூன் திங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6.3. ஆணைமடுவு நீர்த்தேக்கத் திட்டம் :

மண் அணை, கற்காரை அணை, நீர்வழிந்தோடும் அமைப்பு, தலைமதகு கட்டும் பணி இவைகள் முடிக்கப்பட்டுள்ளன. நீர்வழிந்தோடும் பகுதியில், கதவுகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டம், 1992 ஜூன் திங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6.4. நொய்யல்–ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம் :

மண் அணை, கற்காரை அணை, மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கைப்பிடிச்சுவர் கட்டுதல், புற்கரணீடு, சாய்சரிவு, மூன்று கி.மீ. நீளத்திற்கு கன்னி வாய்க்கால் அமைத்தல் ஆகிய பணிகளும் நடைபெறு கின்றன. ஆற்று மதகிற்கு கதவுகள் பொருத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது. நீர்வழிந்தோடும் பகுதியில் கதவுகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டம், 1992 ஜூனில் முடியும் என ஏதிர்பார்க்கப்படுகிறது.

6.5. குடகனாறு நீர்த்தேக்கத்தை புனரமைக்கும் திட்டம் :

மண் அணையை சீரமைத்தல், வலதுபுற வாய்க்காலில் பிரதான மதகு அமைத்தல், பிரிவு வாய்க்கால் உட்பட இடது புற வாய்க்கால் அகழ்தல் ஆகிய பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. கூடுதல் மதகு கட்டும் பணி தொடர்பாக, இடது மற்றும் வலது முட்டுச்சுவர் முடிக்கப்பட்டுவிட்டது. தாங்கு சுவர் கட்டும் பணி, கதவுகள் பொருத்துதல் ஆகியவை முடிவுறும் நிலையில் உள்ளன. இத்திட்டம் 1992 ஜூன் திங்களில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6.6. நன் கஞ்சியார் நீர்த்தேக்கத் திட்டம் :

இத்திட்டப்பணி 1990 ஜூலை திங்களில் துவக்கப்பட்டது. துறை இயந்திரங்களைப் பயன்படுத்தி, மண் அணைப் போடும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டம், 1995-ஆம் ஆண்டு மே திங்களில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

7. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் :

(2,000 எக்டேருக்கு குறைவான விளை நிலப் பரப்பிற்கு அணைகட்டு/பாசன வசதியளிப்பன.)



7.1. 1991–92ஆம் ஆண்டில், 14.00 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1992–93ஆம் ஆண்டில், இத்திட்டப் பணிகளுக்கு 18.17 கோடி ரூபாய் மூலதனச் செலவு ஒதுக்கீடு செய்ய கருதப்பட்டுள்ளது.

7.2. இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டு வருகின்றன :

1. சோத்துப்பாறை (வராக நதி) நீர்த்தேக்கம், திண்டுக்கல் (அண்ணா மாவட்டம்).—40 சதவீத வாய்க்கால் பணிகள், இப்போதுதான் முடிக்கப்பட்டுள்ளன.

2. சென்னம்பட்டு (கவுண்டா நதி) அணைக்கட்டு (காமராஜர் மாவட்டம்).— பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

3. மதுராந்தகம் வலதுபுறக் கால்வாய் (செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்).— 75 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தேவையான நிலம் கிடைக்காததால் சில பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

4. சின்னவேடம்பட்டி நீர்த்தேக்கம் (கோயம்புத்தூர் மாவட்டம்).— பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

5. சண்முகா நதி நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்).— நிலத்தைக் கையகப்படுத்துவதில் உள்ள தகராறு காரணமாக பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை.

6. பொய்கையாறு நீர்த்தேக்கம் (கன்னியாகுமரி மாவட்டம்).— 40 சதவீதப் பணி முடிவடைந்துள்ளது.

7. நம்பியாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்).—30 சதவீதப் பணி முடிவடைந்துள்ளது.

8. மோர்தானா நீர்த்தேக்கம் (வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம்).—தொடக்கப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

9. ராஜா தோப்புக் கண்ணாறு (வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம்).—தொடக்கப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

10. அடவிநயினார் கோயில் நீர்த்தேக்கம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்).—தொடக்கப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

7.3. கீழ்க்கண்ட திட்டங்கள் தொடங்கப்பட்டு தொடக்கப் பணிகள் நடந்தேறி வருகின்றன:—

1. கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

2. கிருதமால் ஆற்றின் குறுக்கே அம்பலத்தடி கிராமத்திற்கருகில் அணை கட்டுதல்.

7.4. 1991–92 ஆம் ஆண்டில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலமாக கூடுதலாக 3,975 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க இலக்கிடப்பட்டுள்ளது. சிறு பாசனத் திட்டங்கள் (2,000 எக்டேருக்குக் குறைவான விளை நிலப் பரப்பிற்கு பாசன வசதியளிக்கும் அணைக்கட்டுகள்/நீர்த்தேக்கங்கள்) மூலமாக 490 எக்டேர் பயிரிடு நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கப்படும்.

8. 1991–92 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது:—

மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் :

8.1. இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்பட்டி கிராமத்தில் மலட்டாற்றின் குறுக்கே ரூ. 17.25 கோடி செலவில் மலட்டாறு அணைக்கட்டு கட்ட திட்டமிடப்பட்டு உள்ளது. தொழில்நுட்பச் சாத்தியக் கூறுகள் குறித்து விரிவாக மீண்டும் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இத் திட்டம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தேவையான நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னர் இத் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், ஏற்கெனவே பாசன வசதி பற்றாக் குறையாக உள்ள 395 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கப்படுவதுடன், 4,341.42 ஏக்கர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதி அளிக்கப்படும்.

8.2. சிறுமலை அருவி நீர்த்தேக்கத் திட்டம் :

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக் கோட்டை கிராமத்தில் சிறுமலை அருவியின் குறுக்கே ரூ. 19.15 கோடி செலவில் இத் திட்டத்தைச் செயல் படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. பொதுப் பணித் துறையின்



13–12–1991 ஆம் நாளிட்ட 2037 ஆம் எண் அரசாணையில் இத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், 377.46 ஏக்கர் நிலங்கள் நிலையான பாசன வசதி பெறுவதுடன், புதிதாக 2,000 ஏக்கர் புன்செய் நிலங்களும் பயனடையும். பாசன வசதி பற்றாக்குறையாக உள்ள 61.86 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெற இத் திட்டம் வகை செய்கிறது.

தற்போதைய அட்டவணை விதங்களின்படி மதிப்பீடு திருத்தி அமைக்கப்பட்டு, செலவு ரூ. 25.83 கோடியாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு ஒப்புதலுக்காக அரசின் பரிசீலனையில் உள்ளது.

தேசிய நீர் நிருவாகத் திட்டம்.

9.1. கடைக்கோடிப் பகுதிகளுக்குப் போதுமான அளவு ர் அளிக்காததாலும், பல ஆண்டுகளாக போதுமான அளவுக்கு பராமரிக்கப்படாததால் பழைய நீர்ப்பாசன அமைப்புகள் சீர்கேடு அடைந்துள்ளதாலும், பழைய நீர்ப்பாசன அமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாசன வாயில்கள் முழுவதுமாகப் பயன்படுத்தப்படவில்லை. இப்பழைய நீர்ப்பாசன அமைப்பைச் சீர்படுத்துவதன் மூலம் அதனை மேம்படுத்த, உலக வங்கியின் நிதி உதவியுடன், இந்திய அரசின், நீர் ஆதார அமைச்சரவை வழிகாட்டுகின்றபடி "தேசிய நீர் நிருவாகத் திட்டத்தை" தமிழ்நாடு மேற்கொண்டுள்ளது.

9.2. பெரிதும் நம்பத்தக்கதும், முன்கூட்டியே அறியத்தக்கதும், சமமான பாசன நீர் வழங்கும் திட்டம் மூலமாக தற்போதுள்ள நீர்ப்பாசன முறைகளில் "உற்பத்தித் திறனையும் பண்ணை வருமானத்தையும்" அதிகப்படுத்துவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந் நோக்கத்தை எய்துவதற்காக, பாசனப் பகுயின் தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்ய அவசியமான இடங்களில் நீர்ப்பாசன முறை சீரமைக்கப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் வருகிறது. புதிய குறுக்கு மதகுகள் அமைத்தல், நீர்வழங்கு ஏற்பாட்டு முறையைச் சீரமைத்தல், நீர் வழிந்தோடும் கட்டுமானங்கள், மதகுகள், நீரை வெளியேற்றும் அமைப்புகள் முதலியவற்றைச் சீரமைத்தல் காலத்தே நீர் அளிப்பதை உறுதிப்படுத்த ஏரிகளுக்கு நேரடியாக நீர்வழங்கு கால்வாய்களுக்கும் கிளைக் கால்வாய்களுக்கும் வகை செய்தல், தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் கால்வாய்க் கரைகளுக்குக் காரை பூசுதல் முதலிய பணிகள் இத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன.

9.3. பல்வேறு நீர்ப்பாசன ஏற்பாட்டு அமைப்புகளின்கீழ் மொத்தம் 1,53,140 எக்டேர் ஆயக்கட்டுப் பகுதிக்குப் பாசன வசதி அளிக்க ஒட்டு மொத்தமாக ரூ. 52.70 கோடிக்குத் தமிழ்

நாடு அரசு நிருவாக ஒப்புதல் அளித்தது. முதன்மைத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் துணைத் திட்டங்கள் நிறைவேற்றப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(1) சாத்தனூர் துணைத் திட்டம்,

(2) கோதையாறு துணைத் திட்டம்,

(3) தாமிரபரணி துணைத் திட்டம்,

(4) அமராவதி துணைத் திட்டம்,

(5) கம்பம் பள்ளத்தாக்குத் துணைத் திட்டம்,

(6) சேத்தியாத் தோப்புத் துணைத் திட்டம்,

(7) மருதாநதித் துணைத் திட்டம்.

9.4. நடந்தேறி வரும் திட்டங்கள் பற்றிய விவரங்கள்.—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | ஜனவரி, 1992 வரை செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) | சாதனை. (3) (சத விதத்தில்.) |
|---|---|---|
| 1 சாத்தனூர் துணைத் திட்டம் .. | 335.18 | 74 |
| 2 கோதையாறு துணைத் திட்டம் .. | 426.53 | 46 |
| 3 தாமிரபரணி துணைத் திட்டம் .. | 477.73 | 42 |
| 4 அமராவதி துணைத் திட்டம் .. | 341.10 | 61 |
| 5 கம்பம் பள்ளத்தாக்குத் துணைத் திட்டம். | 162.54 | 80 |
| 6 மருதாநதி துணைத் திட்டம் (மே, 1991-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது). | 0.45 | 20 |
| 7 சேத்தியாத் தோப்புத் துணைத் திட்டம் (மே, 1991-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது). | 13.82 | |
| மொத்தம் .. | 1,757.35 | |

* முகவரமைப்பு எது என்று முடிவு செய்யப்பட்டு வருகிறது. ஏப்ரல், 1992-ல் பணிகள் தொடங்கப்படும்.



9.5. மேலே கூறப்பட்டுள்ள ஏழு துணைத் திட்டங்களுள் சாத்தனூர் துணைத் திட்டப் பணி ஏறத்தாழ முடிவடையும் நிலையில் உள்ளது. நடப்பு பாசனக் காலத்தில் செயல்படுமெனத் தெரிகிறது. கம்பம் பள்ளத்தாக்குத் துணைத் திட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மற்ற துணைத் திட்டங்களில் பணிகள் நடந்தேறி வருகின்றன. இத் திட்டத்தின்கீழ் வரும் அனைத்துப் பணிகளையும் 1994 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

9.6. அமெரிக்க டாலர்களின் மதிப்பு அதிகரித்ததன் காரணமாக, தேசிய நீர் நிருவாகத் திட்டத்திற்குத் தற்போது கிடைக்கப் பெறும் அதிகப்படியான கடன் தொகை ரூ. 17.50 கோடியாகும். இவ்வாறு கிடைத்த கூடுதல் நிதியைப் பயன்படுத்தி, சுமார் ரூ. 11.84 கோடி செலவில், பின்வரும் கூடுதல் துணைத் திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது:—

(1) தொழுதூர் பொறி மதகு பாசன ஏற்பாடு.

(2) திருக்கோயிலூர் அணைக்கட்டு, எல்லிஸ் சத்திர அணைக்கட்டுப் பாசன ஏற்பாடுகள்.

(3) கிருஷ்ணகிரி நீர்த் தேக்கப் பாசன ஏற்பாடு, நெடுங்கல் அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு.

9.7. மேற்சொன்ன மூன்று திட்டங்களில், தொழுதூர் பொறி மதகு பாசனத் திட்டத்திற்கு உலக வங்கி இசைவு பெறப்பட்டு, இப்பணிநிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றது. உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் ஏனைய இரு துணைத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

10. பெரியாறு–வைகை நீர்த்தேக்கப் பாசன ஏற்பாட்டு முறையை நவீனப் படுத்தும் திட்டம் :

10.1. முன்னாள் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில், சுமார் 60,000 எக்டேர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதி அளிக்கும் பொருட்டு, மேற்கு நோக்கிப் பாயும் கேரள மாநிலத்தில் உள்ள பெரியாற்றின் நீரைக் கிழக்கு பக்கமாகத் திருப்பி விடுவதற்கென அதன் குறுக்கே 1895ஆம் ஆண்டில் பெரியாறு அணை கட்டப்பட்டது. வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கேற்படும் போது வரும் நீரைச் சேமித்து வைப்பதற்கும், இதை மேற்சொன்ன இரு மாவட்டங்களில், வைகை ஆற்றின் பழைய ஆயக்கட்டுப் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்க திறந்து விடுவதற்கும், 1959ஆம் ஆண்டில் வைகை அணை கட்டப்பட்டது.

10.2. பேரணை மதகுப் பொறி, பெரியாறு முதன்மை கால்
வாய் அமைப்பு நீர் வழங்கு கால்வாய்கள் ஆகியவற்றைக் கொண்
டிருக்கும் பெரியாறு பாசன ஏற்பாட்டின் பாசனத் திறனை மேம்
படுத்த அதற்கு முக்கிய பழுது பார்ப்புப் பணிகளையும், சீர
மைப்புப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமா
கிறது. எனவே, பெரியாறு பாசன ஏற்பாட்டினை நவீனப்படுத்
துவதற்குரிய திட்டம் வகுக்கப்பட்டு, 1977ஆம் ஆண்டில், உலக
வங்கியின் நிதியுதவியுடன் இத் திட்டப் பணிகள் நிறைவேற்று
வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இத் திட்டம் இரு நிலை
களில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

10.3. முதல் நிலைப்பணி :

இத் திட்டத்தின் முதல் நிலைப்பணிகள், உலக வங்கியின்
நிதியுதவியான 23 மில்லியன் அமெரிக்க டாலர்களை முழு அள
விற்குப் பயன்படுத்தி, ரூ. 46.40 கோடி செலவில், 1977ஆம்
ஆண்டு ஜூலைத் திங்களில் மேற்கொள்ளப்பட்டு, 1984ஆம்
ஆண்டு ஆகஸ்டு திங்களில் முடிக்கப்பட்டன. சிமிட்டி கற்களைக்
கொண்டு பெரியாறு முக்கியக் கால்வாயின் கரை முழுவதற்கும்
காரை பூசுதல், 10 எக்டேர் பகுதிகளிலுள்ள நீர் வழங்குக் கால்
வாய்களின் கரைகளுக்குக் காரைப்பூசுதல், பண்ணை மேம்பாட்டுப்
பணிகள், பெரியாறு மதகுப் பொறி மேம்பாட்டுப் பணிகள்
முதலிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. கால்வாய்கரை
களுக்குக் காரை பூசுவதன் மூலம், கால்வாயில் ஏற்படும் கசிவைக்
குறைத்து, அதனால் சேமிக்கக்கூடிய நீரைப் பயன்படுத்தும் வகை
யில், இத் திட்டத்தின் கீழ்வரும் ஆயக்கட்டுப் பகுதி சுமார்
10,305 எக்டேருக்குப் பாசனவசதி நீட்டிக்கப்பட்டு, நீட்டிக்கப்
பட்ட இப்பகுதிக்குத் தேவையான கால்வாய் அமைப்புப் பணி
களும் நிறைவேற்றப்பட்டன.

10.4. இரண்டாம் நிலைப்பணி :

இத் திட்டத்தின் இரண்டாம் நிலைப்பணி, 35.00 மில்லியன்
அமெரிக்க டாலர் உலக வங்கி நிதி உதவியுடன், முதல் நிலைப்
பணி நடைபெற்று வந்தபோதே, அதாவது 1983 அக்டோபர்
திங்களிலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்த இரண்டாம் நிலை
பணியில் பாசனத்திற்கு நீரைச் சுழற்சி முறையில் அளித்தல்,
பண்ணை மேம்பாட்டுப் பணிகள், பாசனத்திற்கு நீர் விடுவதை
கணிப் பொறிமயமாக்குதல், நீர் பயன்பாடு குறித்த நவீன உத்தி
களில் உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றின் மூலம்
இத் திட்டத்தின் கீழ்ப் பாசன வசதி பெறும் பகுதியில் சிறந்த
முறையில் நீரைப் பயன்படுத்துவதற்கான உத்திகள் குறித்து,
சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்த நிலையில்,
மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்
களில், பெரியாறு பாசன ஏற்பாட்டின் கீழ், 9,647 எக்டேர்
ஆயக்கட்டுப் பகுதிகள் நீட்டிக்கப்பட்டன. இவ்வாறு கூடுதலாக்
கப்பட்ட பகுதிகளுக்குரிய கால்வாய்ப் பாசன ஏற்பாடுகள்



தொடர்பான பணிகள் நிறைவேற்றப்பட்டன. இந்த இரண்
டாம் நிலைப் பணியில் மற்றொரு முக்கிய கூறு, வைகை அணைக்
குச் சற்றுக் கீழேயுள்ள நீர்ப்பிடிப்பு அணைக்கும் பேரணை மத
குப் பொறிக்கும் இடையே இணைப்புக் கால்வாய் வெட்டுதல்,
வைகை நீர்த்தேக்கத்திலிருந்து திறந்துவிடப்படும் நீரை வைகை
ஆற்றில் விட்டுக் கொண்டு செல்வதற்குப் பதிலாக கரைகளுக்குக்
காரை பூசப்பட்ட இந்த இணைப்புக் கால்வாய் மூலம் கொண்டு
சென்று பெரியாறு முதன்மைக் கால்வாய்க்கும், திருமங்கலம்
முதன்மைக் கால்வாய்க்கும் வழங்குதல். இந்த இணைப்புக்
கால்வாய் மூலம் நீர் எடுத்துச் செல்லப்படுவதால் வைகை ஆற்
றுப்படுகையில் தற்போது கசிவினால் ஏற்படும் நீர் இழப்பு நீக்கப்
படும். மேலும், வைகை அணைக்கும், பேரவை மதகுப்
பொறிக்குமிடையே வைகை ஆற்றில் வந்து இணையும் கிளை நதி
கள், அதிக அளவில் வண்டலைக் கொண்டு வருவதால், பேரணை
மதகுப் பொறிக்கு முன்பக்கத்தில் அதிக அளவில் வண்டல் சேர்ந்து
விடுகிறது. இதனால், பெரியாறு முதன்மைக் கால்வாயில்
போதிய அளவு நீரைவிடுவதில் கணிசமான இடர்ப்பாடுகள் ஏற்
படுகின்றன. இந்த இணைப்புக் கால்வாய் வெட்டுவதன் மூலம்
இந்த இடர்ப்பாடும் நீக்கப்படலாம்.

32.38 கி.மீ. நீளத்திற்கு இணைப்புக் கால்வாய் வெட்டும்
பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. திண்டுக்கல்-அண்ணா
மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திலும், மதுரை
மாவட்டம், பெரியகுளம் வட்டத்திலும் 1,620 ஹெக்டேர் நிலப்
பரப்பிற்குப் பாசன வசதிகள் வழங்கவும் கருதப்பட்டுள்ளது.

திட்டத்தின் இரண்டாம் நிலை பணி குறித்த மொத்தச்
செலவு ரூ. 95 கோடியாக இருக்கும். 1992 ஆம் ஆண்டு மார்ச்
திங்கள் இறுதி வரையில் ரூ. 84.79 கோடி செலவிடப்படும் என
எதிர்பார்க்கப்படுகிறது. 1992–93ஆம் ஆண்டில் ரூ. 12.65
கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

11. ஐரோப்பிய பொருளாதார குழுவின் நிதி உதவியுடன் தமிழ்
நாட்டிலுள்ள ஏரிப்பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல் :

11.1. மாநிலத்தில் உள்ள ஏரிப் பாசன அமைப்புகள் தொன்
மையானவையாகும். தற்போது சுமார் 39,200 ஏரிகள் உள்ளன;
ஆனால், இவற்றில் பெரும்பாலானவை, 40 எக்டேர் ஆயக்
கட்டுப் பகுதியைவிடக் குறைந்த ஆயக்கட்டுப் பகுதியைக்
கொண்ட சிறிய ஏரிகளாகும். 40 எக்டேருக்கு அதிகமான ஆயக்
கட்டுப் பகுதியைக் கொண்ட சுமார் 8,900 ஏரிகள், பொதுப்
பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. தொன்மையான
ஏரிப்பாசன அமைப்புகள் பல ஆண்டுகளாகப் போதிய அளவில்
பராமரிக்கப்படாததால் சீர்குலைந்து விட்டன. இந்த ஏரிகளை
உரிய அளவுக்குச் சீரமைத்து, அவற்றை மேம்படுத்த வேண்டி
யது உடனடித் தேவையாகும். எனவே, ஏரிப் பாசன அமைப்பு
களை வெளிநாட்டு நிதியுதவியுடன் நவீனப்படுத்தும் பணியை
தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

11.2. ஏரிப்பாசன அமைப்புகளை நவீனப்படுத்தும் திட்டம், 1989ஆம் ஆண்டிலிருந்து ஐரோப்பிய பொருளாதார குழுவின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

11.3. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், காமராசர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 28,780 எக்டேர் நிலப்பரப்பிற்குப் பயனளிக்கும் வகை யில், முதல்நிலைப் பணியின் கீழ் ஒவ்வொன்றும் 200 எக்டே ருக்குக் குறைவான ஆயக்கட்டுப் பகுதியைக் கொண்ட 206 ஏரி களை நவீனப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒரு ஏரி தொடர்பான பணி இரண்டாம் நிலைப்பணியில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. திட்டப் பணி தொடக்கப்பட்டதிலிருந்து முதல் நிலைப்பணியின் கீழ் ஏற்பட்ட செலவு ரூ. 52.0 கோடி யாகும்.

11.4. இரண்டாம் நிலைப் பணியின் கீழ், மொத்தம் 2.,332 எக்டேர் நிலப்பரப்பிற்குப் பயனளிக்கும் வகையில் 150 வான வாரி ஏரிகளையும், மொத்தம் 2080 எக்டேர் நிலப்பரப்பிறகுப் பயனளிக்கும் வகையில் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளையும் நவீனப் படுத்தும் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இரண் டாம் நிலைப் பணிக்கு ரூ. 50.0 கோடி வழங்க அனுமதிக்கப் பட்டது. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு-அம்பேத் கார், திருவண்ணாமலை-சம்புவராயர், தென் ஆர்க்காடு, புதுக் கோட்டை, திருச்சி, மதுரை, திண்டுக்கல்-அண்ணா, காமராசர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திரு நெல்வேலி-கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் ஆகிய மாவட் டங்களிலுள்ள ஏரி பாசனப் பகுதிகள் பயனடையும். இதுவரை யில், நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படவுள்ள 150 ஏரி களில், 103 ஏரிகளை நவீனப்படுத்தும் பணி ரூ. 2,527 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது,

இத்திட்டம் 1989ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் தொடங்கப் பட்டு, 1995ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

11.5. இந்தியப் பணத்தின் மதிப்பு குறைந்ததன் காரணமாக கூடுதலாகக் கிடைத்த ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவித் தொகையைப் பயன்படுத்தி, கூடுதலாக 175 ஏரி களை நவீனப்படுத்துவதற்குரிய ஒப்புதலைப் பெற ஐரோப்பிய பொருளாதாரக் குழுவை அணுகுமாறு மத்திய அரசின் நிதித் துறை அமைச்சகத்தை, மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

11.6. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

மத்திய அரசு வழங்கிய ஒரு பகுதி நிதியுதவியுடன் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறை ஒதுக்கிய நிதியைக்



கொண்டு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல் முதலிய பணிகளை இத்துறை செயல்படுத்தி வரு கிறது. கோயம்புத்தூர், பெரியார், திண்டுக்கல்-அண்ணா, மதுரை, காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியா குமரி ஆகிய மாவட்டங்களின் தெரிந்தெடுக்கப்பட்ட 24 வட்டங் களில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை இத்துறை மத்திய அரசின் முழு அளவு நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

12. கிருஷ்ணா நதி நீர் வழங்கல் திட்டம் :

12.1. சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடி நீர் அளவை அதிகரிக்க 15 டி.எம்.சி. (T.M.C.) நீரைக் கிருஷ்ணா நதியிலிருந்து தமிழ்நாடு அரசு 1983-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஆந்திரப் பிரதேச மாநில அரசுடன், கூட்டுத் திட்டம் என்ற வகையில் தெலுங்கு-கங்கைத் திட்டத்தைச் செயற்படுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. இத்திட்டம் தொடர்பாக ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளுக் காகும் செலவில் விகிதப்படியான செலவை இந்த ஒப்பந்தத்தின் படி, தமிழ்நாடு அரசு ஏற்க வேண்டும். மேலும், சென்னைக்குக் குடிநீர் வழங்கும்பொருட்டு, நீர் வரும் வழியில் ஏற்படும் இழப்பு நீங்கலாக ஆண்டு ஒன்றுக்கு 12 டி.எம்.சி. அளவு நீரை ஆந்திர-தமிழக எல்லையில் வழங்க வேண்டும்.

12.2. 1990-91-ஆம் ஆண்டில் நிலவிய விலை விதங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட ''சோமசீலா'' நிலை பணிகள் உட்பட, ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் மேற்கொள்ளப் படும் பணிகளுக்காகும் மொத்தச் செலவு 1,255 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தெலுங்கு கங்கைத் திட்டச் செலவில் தமிழ்நாட்டின் பங்கு 292 கோடி ரூபாய் எனக் கணக் கிடப்பட்டது. ஆந்திரப் பிரதேச அரசு 1991 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை செலவிட்ட மொத்தம் 439 கோடி ரூபாயில் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகை 112 கோடி ரூபா யாகும். இதுவரையில், தமிழ்நாடு அரசு 132 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. ஆந்திரப் பிரதேச மாநில அரசு, தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளுக்காக 1992-93-ல் 130 கோடி ரூபாயை ஒதுக்க உத்தேசித்துள்ளது. தமிழ்நாடு அரசும் தெலுங்கு-கங்கைத் திட்டத்திற்காகும் செலவில் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகை என்ற வகையில் 1992-93 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

12.3. ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் பாசனம் அளிப்பதன் மூலமும் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதன் மூலமும் பயன்பெறவும், நிறைவேற்றப்பட வேண்டிய சில இன்றி யமையாப் பணிகள் 1985-ஆம் ஆண்டு ஜுன் திங்களுக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் என 11-2-1992 ஆம் நாளன்று

ஐதராபாத்தில் ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மாநிலங்களின் முதல்வர்களுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

**12.4** தமிழ்நாடு எல்லைக்குள் நடைபெறும் பணிகள் :

தமிழ்நாடு அரசு பின்வரும் பணிகளை முதற்கட்ட பணிகளாக நிறைவேற்ற எடுத்துக்கொண்டுள்ளது :—

(1) தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டிவரை கடலேறு-பூண்டி கால்வாய் வெட்டுதல்.

(2) பூண்டியிலிருந்து செம்பரம்பாக்கம் வரை இணைப்புக் கால்வாய் வெட்டுதல்.

(3) செங்குன்றத்திற்கு (Red Hills) நீர் வழங்கு கால்வாய் வெட்டுதல்.

(4) பூண்டி நீர்த்தேக்கத்தின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல்.

(5) செம்பரம்பாக்கம் ஏரியின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல்.

(6) செங்குன்றம் ஏரியின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல்.

12.5. மேற்சொன்ன இத்திட்டப் பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன. கடலேறு-பூண்டி கால்வாய் வெட்டும் பணியில் சுமார் 92 சதவீதப் பணிகள் முடிந்துவிட்டன. இதே போன்று, பூண்டி நீர்த்தேக்கத்தின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது. இணைப்புக் கால்வாய், நீர் வழங்கு கால்வாய் ஆகியவற்றை வெட்டும் பணி 1991-92 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அவை நடைபெற்று வருகின்றன. கடலேறு-பூண்டி கால்வாய் வெட்டுதல், 10.5 கி.மீ. வரை இணைப்புக் கால்வாய் வெட்டுதல், நீர்வழங்கு கால்வாய் வெட்டுதல், அனைத்து நீர்த்தேக்கங்களின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல் ஆகிய அனைத்துப் பணிகளையும் 1993-ம் ஆண்டுக்குள் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

12.6. கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டத்திற்கான அண்மைக் கால மதிப்பீட்டுச் செலவு 1989-90 ஆம் ஆண்டில் கணக்கிட்ட விதத்தின்படி ரூபாய் 18,180 (ரூ. 11,180 + 7,000) இலட்சமாகும். 1991-ஆம் ஆண்டு டிசம்பர்வரை செய்த மொத்தச் செலவு ரூபாய் 3,564 இலட்சமாகும்.

1992-93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 4,450 இலட்சமாகும்.



**13. காவிரி நதிநீர்ப் பிரச்சினை :**

13.1. இறுதி ஆணை வெளியிடப்படும் வரை தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 205 டி.எம்.சி. நீர் கிடைப்பதற்கு உறுதி செய்யும் வகையில் கருநாடக அரசு கருநாடகத்திலுள்ள தங்களுடையநீர்த்தேக்கங்களிலிருந்துஆண்டொன்றில் ஜூன் திங்கள் முதல் மே திங்கள் வரையிலான கால அளவில் மாதாந்திர முறையில், வாரத் தவணைகளில் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்றும், இந்த உத்தரவு 1—7—1991-ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என்றும் குறிப்பிட்டு, காவிரி நதிநீர்ப் பிரச்சினை நடுவர் மன்றம், 25—6—1991-ஆம் நாளன்று தங்களுடைய இடைக்கால உத்தரவுகளைப் பிறப்பித்தது.

13.2. நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவுகளைச் செயல் திறனற்றதாகவும், காவிரி ஆறு அதன் கிளை ஆறுகள் ஆகியவற்றின் மூலம் பாசனம் பெறும் காவிரி வடிநிலப்பகுதியின் பாசனத்தைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் வேண்டும் என்று கூறிக்கொண்டு கருநாடக அரசு, 25—7—1991-அன்று அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது.

13.3. கருநாடக அரசு பிறப்பித்துள்ள அவசரச் சட்டம் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு இணங்க உள்ளதா என்பது தொடர்பாக கீழ்க்கண்டவை குறித்து ஆலோசனை நல்குமாறு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 143-ஆம் பிரிவின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெறும் பொருட்டு (மத்திய அரசு கேட்டுக் கொண்டதன் பேரில்) உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்:-

(i) கருநாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் (தற்போது சட்டமாக ஆக்கப்பட்டுள்ளது) செல்திறனுள்ளதா ?

(ii) காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்த நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவு 1956-ஆம் ஆண்டு பன் மாநில நீர்த்தகராறுகள் சட்டத்தின் 5 (2) பிரிவின் ஆய்வு வரம்புக்குள் வருகிறதா ?

(iii) நடுவர் மன்றம் இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்க இயலுமா ?

குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 22—11—1991 ஆம் நாளன்று உச்ச நீதி மன்றம் தனது கருத்தைத் தெரிவித்ததைத் தொடர்ந்து , 1956-ஆம் ஆண்டு பன் மாநில நீர்த்தேக்கத் தகராறுகள் சட்டத்தின் 6-ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இந்திய அரசின் நீர்வள அமைச்சகம், காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை 10—12—1991-ஆம் நாளிட்ட இந்திய அரசிதழில் வெளியிட்டது.

13.4. நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைத் தள்ளு படி செய்யக் கோரி கருநாடக அரசு உச்ச நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றையும், சிறப்பு அனுமதி மனு ஒன்றையும் தனித் தனியாகத் தாக்கல் செய்துள்ளது. இதற்குத் தமிழ்நாடு அரசு, அதன் எதிர் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. வழக்கும், சிறப்பு அனுமதி மனுவும் உச்ச நீதி மன்றத்தில் இன்னும் தீர்ப்பளிக்கப்படாமல் உள்ளது.

13.5. மேலும், காவிரி நீர்த் தகராறு நடுவர் மன்ற இடைக் கால ஆணைக்கு விளக்கம் கேட்டும், திருத்தம் செய்யவும், வழி காட்டவும் கோரி, 1956-ஆம் ஆண்டு பன்மாநில நீர்த் தகராறு சட்டத்தின் 5 (3) பிரிவின் விதித்துறைகளின் கீழ், சிவில்பல்வகை மனுவை (சி.எம்.ப்பி.-எண். 15(1991), 25—11—1991-ஆம் நாளன்று கருநாடக அரசு தாக்கல் செய் துள்ளது. நடுவர் மன்றம் இடைக்கால ஆணையைப் பிறப் பித்த நாளான 25—6—1991-லிருந்து மூன்று திங்கள் கால அளவுக்குள் சிவில் பல்வகை மனுவை கருநாடக அரசு தாக்கல் செய்யவில்லை என்று தமிழ்நாடு அரசு தனது எதிர் மனுவில் சுட்டிக் காட்டியுள்ளது. மேற்கண்ட சிவில் பல்வகை மனு, காவிரி நீர்த் தகராறு மன்றத்தால் 28—2—1992-ஆம் நாளன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆணை் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை.

13.6. இதற்கிடையில் காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி விவா திக்க காவிரி வடிநி ப்பகுதியைச் சேர்ந்த மாநிலங்களின் முதல் அமைச்சர்களுடன் 17-2-1992 ஆம் நாளன்று புதுடில்லியில் பிரதம மந்திரியால் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. தமிழ்நாடு மாநில முதலமைச்சர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டார். கூட்டத்தின் முடிவில் காவிரி நீர்த் தகராறு குறித்து கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதன்படி நடுவர் மன்றத் தின் முன் உள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு கள் விரைந்து முடிக்க வசதி செய்வதென ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது.

**14.0. நிலத்தடி நீர் ஆய்வு, நுண் ஆய்வு, ஆராய்ச்சி :**

14.1. நம் மாநிலத்தில் கிடைக்கக் கூடிய நிலத்தடி நீர் ஆதாரத்தினைப் பற்றி மதிப்பிடவும், மேம்படுத்தவும், நிறுவங்க்கவும் இந்தத் துறையின் நிலத்தடி நீர் பிரிவு, நிலத்தடி நீர் ஆய்வு, நுண் ஆய்வு பணிகளை முறையாகவும் அறிவியல் அடிப்படையிலும் மேற்கொண்டு வருகிறது.

இம்மாநிலத்தில் மீண்டும் நீர்ச்செறிவு ஏற்படத்தக்க, நிலத்தடிநீர் ஆதாரம் 30.162 இலட்சம் எக்டேர் மீட்டர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. குடிநீர் வீட்டுப்பயன்,



தொழிற்சாலைப்பயன், பிற பயன்கள் ஆகியவற்றிற்கு நீரை ஒதுக்கியது போக பாசனத்துக்காக கிடைக்கும் நீர் ஆதாரம் 25.636 இலட்சம் எக்டேர் மீட்டராகும். இதில் 11,987 இலட்சம் எக்டேர் மீட்டர் நீர்ப்பரப்பு ஏற்கனவே பயன் படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 385 வளர்ச்சி வட்டாரங்களில் 85 சதவீதமும் அதற்கு மேற்பட்டும் நீரைப் பயன்படுத்தும் 48 வளர்ச்சி வட்டாரங்கள் " கருப்பு நிறம் " என்றும் 65 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரை நீரைப் பயன்படுத்தும் 76 வளர்ச்சி வட்டாரங்கள் " சாம்பல் நிறம் " என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேற் கொண்டும் நிலத்தடி நீரை எடுக்கக்கூடிய பகுதிகளைக் கண் டறியவும், கிணறுகளை வெட்டும்போது ஒரு கிணறுக்கும் பிறிதொரு கிணறுக்குமிடையே எவ்வளவு தூரம் இருக்க வேண்டும் என்பதை வரையறுக்கவும். இம்மாநிலம் முழுவதும் தீவிரமான நிலத்தடி நீர் ஆய்வு, நிலத்தடி நீர் அளவைக் கண்காணித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

14.2. பூண்டியிலுள்ள நீரியல்-நீர் அழுத்தவியல் நிறு வனத்தில், பாசன அமைப்புகள் கடலரிப்பு முதலியவை தொடர்பான பிரச்சினைகளை ஆராயவும், மேற்கண்ட பிரச்சினைகளுக்கு அதிகச் செலவு பிடிக்காத வகையில், தீர்வு காண்பதற்கான வழிவகைகளை உருவாக்கவும் மாதிரி ஆய்வு கள், மூலம் ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இம்மாநிலத்தில் மேற்பரப்பிலும், நிலத்தடியிலும் கிடைக்கக்கூடிய நிலத்தடிநீர் வளங்கள் குறித்து வடிநிலப்பகுதி வாரியாக ஆய்வு செய்தல், அவற்றின் தற்போதைய பயன் பாட்டின் அளவு, எஞ்சியவை ஏதேனுமிருப்பின் அதனை மேற் கொண்டும் மேம்படுத்தல் ஆகியவை குறித்த ஆய்வுகள் தரமணி யிலுள்ள நீர்வள ஆராய்ச்சி நிறுவனத்தில் மேற்கொள்ளப் படுகின்றன. பதினாறு வடிநிலப்பகுதிகளில் ஒன்பது வடி நிலப்பகுதி இத்தகைய ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன. எஞ் சியுள்ள வடிநிலப்பகுதிகளில் மேற்கொண்டும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

**திட்டமிடுதல் வடிவமைப்புப் பிரிவு :**

15.1. பயன்படுத்துவதற்காகக் கிடைக்கின்ற உபரி நீரின் அளவை மதிப்பீடு செய்ய, உத்தேசிக்கப்பட்ட இடங்களில், நீரோடைகளிலும் ஆறுகளிலும் உள்ள நீரின் அளவைக் கண்டறிவ துடன், திட்டமிடுதல் வடிவமைப்புப் பிரிவு, பெரிய நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்கள், சிறுபாசன சிறப்புத் திட்டங் கள் ஆகியவை தொடர்பாக ஆய்வு செய்து திட்டங்களை உருவாக்குகிறது. ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதி யுதவியுடன் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்ட மதிப்பீடுகளும் தயாரிக்கப்படுகின்றன.

**15.2. நடுத்தர, சிறு பாசனத் திட்டங்களை ஆய்வு செய்தல் :**

உருவாக்கப்பட்டு வருகின்ற 12 புதிய திட்டங்கள் குறித்தும், ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்ட 12 பழைய திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்வதும், திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதும் 1992–93 ஆம் ஆண்டில் இறுதியாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவை தவிர, புதிய திட்டங்களைத் தயாரிக்க, உபரி நீர் ஏதேனும் கிடைக்குமா என்பதைக் கண்டறியவும் தமிழ்நாட்டிலுள்ள 33 வடிநிலப்பகுதிகளில் நீரியில் ஆய்வும் விரிவான முறையில் மேற்கொள்ளப்படும்.

**15.3. சிறுபாசன சிறப்புத் திட்டங்கள், தூர்வாரிச் சீரமைக்கும் திட்டங்கள், ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டங்கள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தல் :**

ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன் 1992–93 ஆம் ஆண்டில், சிறுபாசன சிறப்புத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தூர்வாரிச் சீரமைத்தல், ஏரிகளை நவீனப் படுத்தும் திட்டங்கள் போன்ற 75 புதிய திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யவும், திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**16.0. பாசன நீர்த்தேக்கங்கள் குறித்த அறிக்கை பருவ நிலைகள் :**

16.1. 1991–92 ஆம் ஆண்டில், தென்மேற்குப் பருவ மழை குறித்த நாளில் தொடங்கி அதிக மழையைத் தந்தது. தமிழ் நாட்டின் தென் மாவட்டங்கள் அதிக மழையைப் பெற்றன. நீர்த்தேக்கங்களில் போதிய அளவு நீர் நிரம்பியது.

16.2. கருநாடகத்திலுள்ள காவிரி நீர்பிடிப்புப் பகுதியிலும் நல்ல மழை பெய்தது. பெய்த மழை நீர் முழுவதும் கருநாடக நீர்த் தேக்கங்களில் தேக்கி வைக்கப்பட்டதால், தொடக்கத்தில், மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு நீர் வரத்து இல்லை. கருநாடக நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழியத் தொடங்கிய பின்னரே ஜூலைத் திங்கள் 10 ஆம் நாளிலிருந்து மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு அதிக அளவு நீர் வரத்தொடங்கியது.

16.3. தமிழ்நாட்டிற்கு சாதாரணமாக நற்பயன் அளிக்கும் வடகிழக்குப் பருவ மழை காலதாமதமாக அதாவது அக்டோபர் திங்கள் 20–ஆம் நாளில்தான் பெய்யத் தொடங்கியது. பெரும்பாலான மாவட்டங்களில் பெய்த மழை இயல்பாக இருந்தது. கோயம்புத்தூர், திண்டுக்கல் அண்ணா, காமராசர், புதுக்கோட்டை இராமநாதபுரம், சிதம்பரனார், திருநெல்வேலி–கட்டபொம்மன் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த மழை அளவு போதிய அளவுக்கு இல்லை.



**17.0. பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்ட நீர்த்தேக்கங்கள் : மேட்டூர் நீர்த்தேக்கம் :**

17.1. சாதாரணமாக மேட்டூர் நீர்த்தேக்கம், பாசனத்திற்கு ஜூன் திங்கள் 12 ஆம் நாளில்தான் திறந்து விடப்படும். 1991 ஜூன் திங்களில் கருநாடகம், காவிரி ஆற்றின் நீர் முழுவதையும் தங்களுடைய நீர்த்தேக்கங்களில் தேக்கி வைத்ததால், ஜூன் திங்களில் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீரின் அளவு அதிகரிக்கவில்லை. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் இல்லாததால், குறித்த நாளில் அதாவது ஜூன் திங்கள் 12 ஆம் நாளன்று பாசனத்திற்காக மேட்டூர் நீர்த்தேக்கம் திறந்து விடப்படவில்லை. இதனால், சுமார் 5 இலட்சம் ஏக்கருக்கு மேல் உள்ள பரப்பில் இயல்பாகச் சாகுபடி செய்யப்படும் குறுவைப் பயிர் தொடர்ந்து ஆறாவது ஆண்டிலும் சாகுபடி செய்ய இயலவில்லை.

கருநாடக நீர்த்தேக்கங்கள் ஜூலை திங்களிலிருந்து நிரம்பி வழிய தொடங்கின. இதனால் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு அதிக அளவு நீர்வரத் தொடங்கியது. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீரின் அளவு அதிகரித்ததால், காவிரி டெல்டா பகுதி பாசனத்திற்கு 21—7—1991 ஆம் நாள் முதல் மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து நீரைத் திறந்துவிட அனுமதிக்கப்பட்டது. மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து வரும் நீரைச் சார்ந்துள்ள கீழ்க்காணும் பாசன ஏற்பாடுகளுக்கும் அவற்றுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் நீர் திறந்து விடப்பட்டது.

| | |
|---|---|
| 1. புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய் புள்ளம்பாடி கால்வாய் (திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்கள் பயன் பெறும் வகையில்) .. .. .. | 1–8–1991 |
| 2. மேட்டூர் கால்வாய்கள் (சேலம், பெரியார் மாவட்டங்கள் பயன்பெறும் வகையில்) | 3–8–1991 |

கருநாடக நீர்த்தேக்கங்கள் உபரி நீரை வெளியேற்றத் தொடங்கியதால், மேட்டூர் நீர்த்தேக்கம் 30—7—1991 ஆம் நாளிலிருந்து அதிக அளவு நீரைப் பெற்றது. 3—8—1991 ஆம் நாளன்று இதன் முழு நீர்த்தேக்க அளவான 120 அடியை எட்டியது.

மறுபடியும் 18—8—1991 ஆம் நாளன்று மேட்டூர் அணை நீர்மட்டம் அதன் முழு நீர்த்தேக்க அளவான 120 அடியை அடைந்தது. 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் காவிரி நீர்பிடிப்புப் பகுதியில் அதிக அளவு மழை பெய்தது. மேட்டூர் நீர்த்தேக்கத்திலும் கணிசமான அளவு தண்ணீர் வரத்து இருந்தது. 16—11—1991ல் மேட்டூர் நீர்த்தேக்கம் மூன்றாவது

முறையாக அதன் முழு நீர்த்தேக்க அளவான 120 அடியை எய்தியது. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் அதிக அளவில் நீர்வரத்து பெறப்பட்டு, ஆண்டில் மூன்று முறை முழுநீர்த்தேக்க அளவை எய்தியதானது பத்து வருடங்களுக்குப் பிறகு நடைபெற்ற ஒரு சாதனையாகும் என்பது சுட்டிக்காட்டப்படலாம்.

1991 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் காவிரி கழிமுகம் பகுதியில் நல்ல மழை பெய்தது இந்த ஆண்டில் காவிரி கழிமுகப் பகுதியில் குறிப்பிடத்தக்க வகையில் உணவுத்தானிய உற்பத்தியை எய்த இது உதவியுள்ளது.

காவிரி கழிமுகப் பகுதிகளுக்குத் தண்ணீர் விடுவது 28-1-1992-ல் நிறுத்தப்பட்டது.

17.2. பவானிசாகர் நீர்த்தேக்கம் :

பவானி ஆற்றின் கீழ் உள்ள பழைய வாய்க்கால்களில், கீழ்க் கண்டவாறு தண்ணீர் திறந்து விடப்பட்டது;—

| | |
|---|---|
| அரக்கன்கோட்டைமற்றும் தடப்பள்ளி வாய்க்கால்கள். | 25-4-1991 |
| காளிங்கராயன் வாய்க்கால் | 26-6-1991 |

இந்த ஆண்டில் பவானிசாகரில் திருப்திகரமாக நீர் இருந்ததால் ஆகஸ்டு 15 ஆம் நாள் முதல் பாசனத்திற்கு நீர் பெற வேண்டிய கீழ்பவானி திட்டத்தின் கீழ் பாசனம்பெறும் முதல்முறை பாசன ஆயக்கட்டுக்கு வழக்கமாக முதல் முறை பாசனத்திற்கு திறந்து விடப்பட வேண்டிய நாளாகிய 15—8—1991 ஆம் நாளுக்கு 15 நாளுக்கு முன்னரே திறந்துவிடப்பட்டது. 23—12—1991 அன்று தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டது. கீழ்பவானியில் முக்கிய வாய்க்காலில் இரண்டாவது முறை பாசனத்திற்கு 1992 ஜனவரி முதல் தேதியிலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

17.3. அமராவதி நீர்த்தேக்கம் :

இந்த நீர்த்தேக்கத்தில் போதிய அளவு தண்ணீர் இருப்பு இல்லாததால், பழைய பாசனப் பகுதிகளுக்கு வழக்கமாகத் தண்ணீர் திறந்து விடப்பட வேண்டிய நாளாகிய ஜூன் முதல் தேதிக்குப் பதிலாக 24—6—1991 அன்று முதல்தான் திறந்து விடப்பட்டது. அமராவதி நீர்த்தேக்கத்தின் முதன்மை கால்வாய் வழக்கமாக ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று திறந்துவிடப்படும் என்பதற்கு மாறாக அது ஒரு மாதம்கழித்து அதாவது 1-9-91 அன்றுதான் திறந்து விடப்பட்டது. அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால், பாசனத்திற்கு விட்டுவிட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது நீர்த்தேக்கத்தில் குறைந்த அளவே தண்ணீர் உள்ளதால் அதிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது.



17.4. பெரியாறு-வைகை நீர்த்தேக்கங்கள் :

இந்நீர்த்தேக்கங்களைச் சார்ந்த கீழ்க்காணும் பல்வேறு பாசன ஏற்பாடுகளுக்கு அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

| | |
|---|---|
| (அ) கம்பம் பள்ளத்தாக்கு : | 9-6-1991 |
| (ஆ) பெரியாறு முக்கிய கால்வாய்— இருபோகம் பயிரிடபபடும் பகுதி : | 14-6-1991 |
| (இ) பெரியாறு முக்கிய கால்வாய் ஒருபோகம் பயிரிடப்படும் பகுதி : | 22-8-1991 |
| (ஈ) விரிவாக்கப் பகுதி உட்பட திருமங்கலம் முக்கியக் கால்வாய் : | 15-9-1991 |

இவற்றுடன், உலகவங்கியின் உதவியுடன் மேம்படுத்தப்பட்ட விரிவாக்கப்பட்ட பகுதியில் உள்ள சுமார் 20,000 ஏக்கர் பரப்பளவிற்கு ஏரியில் உள்ள நீரைப் பயன்படுத்தி ஏற்கனவே பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதற்கு 30-11-1991 முதல் தண்ணீர் வழங்கப்பட்டது.

17.5. பாபநாசம் நீர்த்தேக்கம் :

இந்நீர்த்தேக்கத்திலிருந்து தாமிரவருணி பாசன ஏற்பாட்டிற்குத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் முன்பருவக் கார் பயிருக்காக சுமார் 19,500 ஏக்கர் பாசனப் பரப்பிற்கு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் தண்ணீர் வழங்கப்பட்டது. இது தவிர சுமார் 2800 ஏக்கர் பாசனப்பரப்பிற்கு முன்பே பயிரிடப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு தண்ணீர் வழங்கப்பட்டது.

முதல் ஐந்து கால்வாய்ப்பகுதிகளில் கார் சாகுபடி செய்ய முறையாக ஜூன் 1 ஆம் நாள் முதல் தண்ணீர் வழங்கப்பட்டது. பின்னர், 6 ஆவது 7 ஆவது கால்வாய்களில் 6—6—1991 முதற் கொண்டும், 8 ஆவது 9 ஆவது கால்வாய்களில் 20—6—1991 ஆம் நாள் முதற்கொண்டு தண்ணீர் பாசனத்திற்காக வழங்கப்பட்டது. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் தேசியத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் வகையில் கார் சாகுபடிக்கு பாசனம் அளிக்க கடைசி இரண்டு கால்வாய் களில் தண்ணீர் திறந்துவிடப்படவில்லை.

தற்போது 11 கால்வாய்களிலும் பாசன சாகுபடிக்காக தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

**17.6. மணிமுத்தாறு நீர்த்தேக்கம் :**

பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டின் முதலாம், இரண்டாம் பகுதிகளில் உள்ள சுமார் 10,000 ஏக்கர் ஆயக்கட்டு பகுதி பயனடையும் வகையில் 1—11—1991 முதல் மணிமுத்தாறு முதன்மைக் கால்வாய்க்கு நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. இதைத் தவிர மணிமுத்தாறு முக்கியக் கால்வாயின் மிக அருகில் அமைந்துள்ள ஆயக்கட்டின் மூன்றாம், நான்காம் பகுதிகளில் உள்ள ஏரிகளை நிரப்புவதற்காக ,தனியாக நீர் திறந்துவிட அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு தனியாக நீர் திறந்து விடப்பட்டதன் மூலம் சுமார் 6,600 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடைந்தது.

இதைத்தவிர, உப்பு நீர் ஊடுருவலைத் தடுக்கும் பொருட்டும் புத்தன் தருவை ஏனைய பகுதிகள் ஆகியவற்றின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்யவும், 18—7—1991 முதல், தனியாக, நீர் திறந்து விட அனுமதிக்கப்பட்டது. மேலும், ஆயக்கட்டின் மூன்றாம் நான்காம் பகுதிகளிலுள்ள சில தெரிந்தெடுக்கப்பட்ட ஏரிப் பாசனத்தின் கீழ் பயிரிடப்பட்ட பயிர்களைக் காக்கும் பொருட்டும், இப்பகுதியின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யவும் 5—9—1991 முதல் தனியாக நீர் திறந்துவிடப்பட்டது.

**17.7. பேச்சிப்பாறை-பெருஞ்சாணி நீர்த்தேக்கங்கள் :**

இந்நீர்த்தேக்கங்களைச் சார்ந்துள்ள கோதையாறு, பட்டணங்கால் பாசன ஏற்பாடுகளுக்கு பாசனத்திற்காக 12—6—91 முதல் நீர் திறந்து விடப்பட்டது. இராதாபுரம் கால்வாயில் 19—6—1991 முதல் பாசனத்திற்காக நீர் திறந்து விடப்பட்டது. தற்போது, கோதையாறு, பட்டணங்கால் பாசன ஏற்பாடுகளுக்கு இரண்டாம் போகச் சாகுபடிக்காக நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

**17.8 கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் :**

நீர்த்தேக்கத்தில் போதுமான அளவு நீர் இருப்பு இல்லாததால் வழக்கமாக நீர் திறந்துவிடப்படும் நாளான ஆகஸ்ட் 1-ஆம் தேதி பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்படவில்லை. நீர்த்தேக்கத்திற்கு 1991 செப்டம்பர் திங்களில் நீர்வரத்து அதிக அளவு இருந்தது. 1991 அக்டோபர் 30ஆம் நாள் நீர்த்தேக்கம் அதன் முழு கொள்ளளவை எட்டியதைத் தொடர்ந்து உபரி நீர் வழிந்தோடத் தொடங்கியது. நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு சாதகமாக இருந்ததன் காரணமாக கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் கீழ் வரும் சுமார் 9,000 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதிக்கு 11—11—1991 முதல் பாசனத்திற்காக நீர் திறந்து விடப்பட்டது.



**17.9. சாத்தனூர் நீர்த்தேக்கம் :**

வடகிழக்குப் பருவமழையினால் பொன்னியாற்றில் வரப்பெற்ற மிக அதிகமான நீர் வரத்தினால் சாத்தனூர் நீர்த்தேக்கம் சுமார் 10 வருடங்களுக்குப் பின் அதன் நீர்மட்ட அளவை 16—11—1991 அன்று எட்டியது. தேசிய நீர் நிருவாகத் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்பட்டதால் தொடர்ந்து சாத்தனூர் வலது, இடது கரைக் கால்வாய்களில் ஏற்கனவே நீர் திறந்துவிடப்படும் முறையில் மாற்றம் செய்யப்பட்டு, இரண்டு கால்வாய்களிலும், ஒரே சமயத்தில் நீர் திறந்து விட முடிவெடுக்கப்பட்டது. இப்பகுதி உழவர்களின் வேண்டுகோளின்படி 10—1—1992 முதல் சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

**17.10. பரம்பிக்குளம்-ஆளியாறு நீர்த்தேக்கம்:**

தென் மேற்குப் பருவ மழை இப்பகுதியில் நன்கு பெய்ததால் சோலையாறு, பரம்பிக்குளம் நீர்த்தேக்கங்கள் முறையே 27—7—1991 அன்றும், 25—8—1991 அன்றும் முழு நீர்மட்ட அளவை எய்தின. இப்பாசன ஏற்பாட்டின் கீழ்வரும் அனைத்து நீர்த்தேக்கங்களிலும் நீர் இருப்பு சாதகமாக இருந்ததால், திருமூர்த்தி நீர்த்தேக்கத்திலிருந்து பரம்பிக்குளம் முக்கியக் கால்வாயின் இரண்டாம் பகுதியில் ஏறத்தாழ 75,256 ஏக்கர் நிலப் பரப்பிற்குப் பாசனமளிக்க 1—8—1991 முதல் 28—12—1991 முடிய நீர் திறந்து விடப்பட்டது. இரண்டாம் முறையாக, பரம்பிக்குளம் முக்கிய கால்வாயின் மூன்றாம் பகுதியில் ஏறத்தாழ 59,877 ஏக்கர் நிலப்பரப்பிற்கு 15—12—1991 முதல் பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. ஆளியாறு நீர்த்தேக்கத்திலிருந்து பொள்ளாச்சி கால்வாய் ''ஆ'' மண்டலம், வெட்டைக்காரன்புதூர் கால்வாய் ''அ'' மண்டலம், ஆளியாறு நீர் வழங்கும் கால்வாய் முதலியவற்றின் வாயிலாக ஏறத்தாழ 22,348 ஏக்கர் நிலப் பரப்பிற்கு பாசனத்திற்காக 25—12—1991 முதல் நீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

**18. 1991-92 ஆம் ஆண்டின் சிறப்புக் கூறுகள் :**

(அ) மேட்டூர் நீர்த்தேக்கத்தில் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நீர்த்தேக்கத்தின் முழு நீர் மட்ட அளவினை எட்டியதுடன், உபரியாக நீர் வழிந்தோடியது. இதுபோன்று முதலில் 3—8—1991-ஆம் நாளன்றும், பின்னர் 18—8—1991-ஆம் நாளன்றும், அதன் பின்னர் 16—11—1991-ஆம் நாளன்றும் மூன்று முறை உபரியாக நீர் வழிந்தோடியது.

(ஆ) கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து 17-11-1991ஆம் நாள் முதல் உபரியாக நீர் வழிந்தோடியது. இந்நிலை ஏறத்தாழ 15 நாட்களுக்கு மேல் நீடித்தது.

(இ) சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்தும் நவம்பர் மாதத்தில் உபரி நீர் வழிந்தோடத் தொடங்கியதுடன், இந்நிலை அம் மாதம் முழுவதும் நீடித்தது.

(ஈ) சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு சாதகமாக இருந்ததால், சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, திருக்கோவிலூர் அணைக்கட்டுப் பாசனப் பகுதியின் கீழ் வரும் சுமார் 5,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு 23—2—1992 முதல் இரண்டாம் போக சாகுபடிக்காக நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

19. கட்டடங்கள் :

19.1. அரசின் பல்வேறு துறைகளுக்கான எல்லாக் கட்டடங்களையும், திட்டமிட்டு வடிவமைத்துக் கட்டுதல், பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவின் பொறுப்பாகும். மேலும், குறிப்பிட்ட சதவீதக் கட்டணம் பெற்று, நகராட்சி மன்றங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கான கட்டடங்களையும் இப் பிரிவு ஒப்பளிப்பு முறையில் கட்டுகிறது.' மத்திய அரசுக்கென தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம், ஒருங் கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், மலைப் பகுதி மேம் பாட்டுத் திட்டம் இவற்றுக்கான கட்டடப் பணிகளையும் இத் துறை செயலாக்குகிறது. எல்லா அரசுக் கட்டடங்களையும் பராமரித்தல், அவற்றுக்கான சாதாரண மற்றும் சிறப்பு பழுது பார்க்கும் பணி, புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுதல் ஆகியவை யும் பொதுப்பணித் துறையின் பொறுப்பாகும்.

19.2. கிராமப்புறக் கட்டுமானப் பணிகளில் சிக்கன உத்தி களையும் புதிய வடிவமைப்புகளையும் பரிந்துரைப்பதற்கென 16-7-1990 நாளிட்ட பொதுப்பணித் துறை அரசாணை எண் 1473-ல், சென்னை திட்டம் மற்றும் வடிவமைப்பு மேற் பார்வைப் பொறியாளரின் தலைமையில், பொறியாளர் குழு ஒன்றினை அரசு அமைத்தது. இக் குழு தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. குழுவின் பரிந்துரையின்படி, கட்டுமானப் பணிகளில் சிக்கன உத்திகளையும் வடிவமைப்புக் களையும் செயல்படுத்தும் வகையில் அரசு சில வழிமுறைகளைக் கூறியுள்ளது.

19.3. 1991-92ஆம் நிதிஆண்டில் 949 கட்டடங்களை கட்டி முடித்து பயன்பெறும் துறைகளிடம் ஒப்படைக்க வேண்டும் என திட்டமிடப்பட்டது. அவற்றில் 921 கட்டடங்கள் 31-3-1992-க்குள் முடிக்கப்படும். இவற்றில் ஒரு கோடிக்கும் அதிகமான. 14.76 கோடி மதிப்புள்ள ஏழு வேலைகள் அடங்கும்.



19.4. ரூபாய் ஒரு கோடிக்குமேல் மதிப்புள்ள கீழ்க்கண்ட முக்கியமான வேலைகளை 31-3-1992-க்குள் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது :

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (1) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் குழந்தைகள் நலப் பிரிவுக்கான கட்டடம் கட்டுதல் .. .. .. .. .. | 1.99 |
| (2) சென்னை பொது மருத்துவமனையில் விபத்துக் கான அவசர சிகிச்சை பிரிவுக் கட்டடத்தின் மேல் கூடுதலாக ஏழு மாடிகள் கட்டுதல் .. | 1.26 |
| (3) சேலம் மோகன் குமாரமங்கலம் அரசாங்க மருத்துவக் கல்லூரிக்கான கட்டடம்கட்டுதல். | 3.75 |
| (4) மாநிலத்தில் 40 இடங்களில், பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான விடுதிகள் கட்டுதல் .. | 4.11 |
| (5) மாநிலத்தில் 14 இடங்களில் இளைஞர் சீர் திருத்த இல்லங்கள், கண்காணிப்புக்கால இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்கள் கட்டுதல் .. .. .. .. .. | 1.19 |
| (6) மாநிலத்தில் ஊரக வளர்ச்சி திட்டங்களுக் கான கட்டடம் கட்டுதல் .. .. .. | 1.42 |
| (7) கோயம்புத்தூரில் தொழிலாளர் காப்பீட்டுக் கழக மருத்துவமனைப் பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல் .. .. .. ... | 2.54 |

19.5. கீழ்க்கண்ட முக்கிய வேலைகள் தற்போது நடந்து வருகின்றன :—

| | |
|---|---|
| (1) ஓசூரில் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுதல் .. .. .. .. .. | 1.90 |
| (2) மதுரையில் தொழிலாளர் ஈட்டுறுதித்திட்டத் தின் கீழ் மருத்துவமனை அலுவலர்களுக் காக கூடுதல் குடியிருப்புகள் கட்டுதல் .. | 1.89 |
| (3) 120 இடங்களில் ஆரம்பச்சுகாதார நிலையங் கள்மற்றும் மருத்துவ அலுவலருக்கென குடி யிருப்புகள் கட்டுதல் .. .. .. | 8.10 |
| (4) முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சமாதியைத் திருத்திக் கட்டுதல் .. .. | 1.25 |

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (5) திருச்சி மாவட்டம் குமுளூரில் வேளாண்மைக் கல்லூரிக்கான கட்டடம் கட்டுதல் .. | 1.91 |
| (6) சிதம்பரனார் மாவட்டம், கிள்ளிகுளத்தில் வேளாண்மைக் கல்லூரிக்கான கட்டடம் கட்டுதல் .. .. .. .. .. | 1.39 |
| (7) சேலம் மாவட்டம் நாமக்கல்லில் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்துக்கான மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டுதல் .. .. | 1.93 |
| (8) புதுக்கோட்டையில் கால்நடை மருத்துவத் துறைக்கென கட்டடங்களும், மருத்துவ அலுவலர்க்கென குடியிருப்புகளும் கட்டுதல் .. | 1.15 |
| (9) சென்னை அய்யனாவரத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அலுவலர் குடியிருப்பு கட்டடம் கட்டுதல் .. .. | 3.69 |

19.6. 1992-93-ல் புதிதாக அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்கும், ஏற்கனவே உள்ள கட்டடங்களைப் பராமரிப்பதற்கும் மொத்தம் ரூ. 77 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

19.7. 1992-93-ல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள சில சிறப்புப் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| (1) சென்னையில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்துக்கென புதிய கட்டடம் கட்டுதல் .. | 6.32 |
| (2) தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்துக்கென புதிய கட்டடம் கட்டுதல் .. | 2.81 |
| (3) திண்டுக்கல்லில் அரசு அலுவலருக்கென குடியிருப்புகள் கட்டுதல் .. .. .. | 3.68 |
| (4) மாநிலத்தில் 43 இடங்களில் ஆரம்பசுகாதார நிலையங்கள் கட்டுதல் .. .. .. | 2.63 |
| (5) டாக்டர் எம். ஜி. ஆர். பல்கலைக் கழகத்திற்கென புதிய கட்டடங்கள் கட்டுதல் .. .. | 1.05 |
| (6) மாநிலத்தில் 15 இடங்களில் போஸ்ட் பார்ட்டம் திட்டத்தின் கீழ் புதிய கட்டடங்கள் கட்டுதல். | 1.16 |
| (7) உலக வங்கித் திட்டத்தின் கீழ், விபத்துக்கான அவசர சிகிச்சைக் கட்டடங்கள் கட்டுதல் .. | 4.25 |



| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (8) வட ஆற்காடு மாவட்டம் முகுந்தராயபுரத்தில், ஆடு வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்திற்கான கட்டடங்கள் கட்டுதல் .. .. | 1.17 |
| (9) சேலத்தில், ஒருங்கிணைந்த நீதிமன்றங்களுக்கான கட்டடம் கட்டுதல் .. .. .. | 3.25 |
| (10) திருச்சியில், சட்டக் கல்லூரிக்கென புதிய கட்டடங்கள் கட்டுதல் .. .. .. | 1.02 |
| (11) சேலம், மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் மாணவியருக்காக விடுதிகள் கட்டுதல் .. .. .. .. .. | 1.07 |

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்.

20. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் "கூட்டுறவு, சங்கங்களின் பதிவு" சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, 1985 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் இயங்கி வருகிறது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன :

(1) புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி ஆதாரங்களின் பயன்களை பிரபலப் படுத்துதல்.

(2) எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகளை பிரபலப்படுத்துதல்.

(3) புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடியஎரிசக்தி ஆதாரங்களின் மீதான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

மத்திய அரசின் மரபுவழி சாரா எரிசக்தித்துறை மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மாநிலம் முழுவதும் செயற்பாட்டுத் திட்டங்களையும் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி ஆதாரங்கள் அடிப்படையிலான அமைப்புகளை விரிவாக்கம் மேற்கொள்ளுவதையும் செயற்படுத்தி வருகிறது. அவை :

(1) மின் உற்பத்திக்கும், நீர் இறைக்கும் பணிகளுக்கும் காற்றாலை நிறுவுதல்.

(2) தொழில் நிறுவனங்கள் மற்றும் வீட்டு உபயோகத்திற்காக சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் அமைத்தல்.

(3) நிறுவனங்களுக்காகவும், கிராமங்களுக்கும், பெரிய அளவிலான சாண எரிவாயு சாதனங்கள் நிறுவுதல்.

(4) நீர் இறைக்கும் பணிகட்கும், மின்சக்தி உற்பத்திக்கும், உயிரியல் சார்ந்த வளியாக்கிகளை நிறுவுதல்.

(5) எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

6) எரிசக்தி தாவரங்கள் பயிரிடுதல்.

(7) மற்றும் இதர பணிகள்.

**20.1 காற்றுசக்தி திட்டங்கள் :**

இத்திட்டங்களின் முக்கிய முயற்சி மின் உற்பத்தியே. தமிழ்நாடு போதுமான அளவிற்கு காற்றுச் சக்தியை பெற்றிருக்கிறது. அதனால் 2,000 மெகாவாட் மின் உற்பத்தியை எட்ட முடியும். இது வரையிலும், மத்திய அரசின் மரபுவழிச் சாரா துறை மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடனும் 14.085 மெகாவாட் திறன் கொண்ட மொத்தம் 95 காற்றுச் சுழல்வான்கள் நிறுவப்பட்டு உள்ளன. சுமார் 63 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கனரகச் செலவுகளாக காற்றுச் சுழல்வான்கள் மற்றும் அவற்றின் போக்குவரத்துச் செலவுகளை மரபுவழி சாரா எரிசக்தி துறையும், உள்ளூர் செலவுக்காகத் தேவைப்படும் நிலங்களின் விலை, அடித்தளப் பணிகள், கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் மின்வாரிய இணைப்பு ஆகியவை தமிழ்நாடு மின்வாரியமும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும் சமமாகவும் மேற்கொள்கின்றன. கீழ்காணும் திட்டங்கள் 31— 3— 92-க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(1) 1.5 மெகாவாட் மின்உற்பத்தி :**

ஒவ்வொன்றும் 250 கி.வா. திறனுள்ள 6 காற்றுச் சுழல்வான்களை கோட்டைக் கருங்குளம் கிராமத்தில் நிறுவுதல். இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 392.35 லட்சமாகும். இதில் மாநிலத்தின் பங்கு ரூ. 92.60 லட்சமாகும். மீதமுள்ளது மரபுவழி சாரா எரிசக்தித் துறையினரால் மேற்கொள்ளப்படும்.

**(2) 4.53 கி.வா. மின்உற்பத்துதி :**

சிதம்பரனார் மாவட்டம் நாலாட்டின்புதூருக்கும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டானுக்கும் இடையே, தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள மின் வாரியத்தின் மின்பகிர்வு டிரான்ஸ்பார்மர்களுக்கு அருகிலே, ஒவ்வொன்றும் 55 கி.வா. திறனுள்ள 4 காற்றுச் சுழல்வான்களை தனித்தனியே நிறுவுதல். இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 89.46 லட்சமாகும். இவற்றில் மாநிலத்தின் பங்கு ரூ. 8.36 லட்சமாகும். மீதமுள்ளது மரபுவழி சாரா எரிசக்தித் துறையினால் மேற்கொள்ளப்படும்.



நீர் இறைக்கும் பணிகளுக்காக காற்றுச் சக்தியயை பயன்படுத்திட மரபுவழி சாரா எரிசக்தித்துறை நிதி உதவியளிக்கிறது. இதுவரை 669 நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப் பட்டுள்ளன. இவற்றில் மேம்பட்டது இழுவை வகை காற்றாலைகள்.

**20.2 சூரிய சக்தி திட்டங்கள் :**

சூரிய சக்தியை பயனாக்குவதில், வீட்டு உபயோகத்திற்கும் தொழில் நிறுவன உபயோகத்திற்கும் சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் நிறுவுவதே முக்கிய முயற்சியாகும். 1991—92-ம் ஆண்டில் 253 வீட்டு உபயோக சூரியசக்தி சுடுநீர் அமைப்புகள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன. இதுவரை நிறுவப்பட்டுள்ள இத்தகைய அமைப்புகள் மொத்தம் 1,268 ஆகும். மேலும் 1991—92 ஆம் ஆண்டின் செயல்திறன் 31—3—1992-க்குள் 500-ஐ எட்டும் என்று எதிர்பார்க்கலாம். 31—1—1992 அன்று வரை 13 பெரிய அளவிலான சூரியசக்தி சுடுநீர் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. 31—3—1992-க்குள் மேலும் 15 நிறுவப்பட்டு முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை மொத்தம் 215 பெரிய அளவிலான சூரியசக்தி சுடுநீர் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கான மான்ய உதவி பின்வருமாறு :—

| | தமிழ்நாடு மாநில மானியம். | மரபுவழிசாரா எரிசக்தி துறை மானியம். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| வீட்டு உபயோகத்திற்காக சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகளுக்கு | 1,500 | 3,000 |
| பெரிய அளவிலான சூரியசக்தி சுடுநீர் அமைப்புகளுக்கு | இல்லை. | 30 சதவீதம் அல்லது 40 சதவீதம் பயனடைவோரைப் பொறுத்து. |

தற்போது இந்த சூரியசக்தி சுடுநீர் அமைப்புகள் தமிழ்நாட்டில் பிரபலமடைந்து வருகின்றன.

சூரிய அடுப்புகள் வழங்குதல் மற்றொரு திட்டமாகும். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திடம் இப்பணி இருந்து வந்தது. 1990—91 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திடம் இது ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் இந்த சூரிய அடுப்பை பிரபலப்படுத்துவதில் பெருமுயற்சி மேற்கொண்டுள்ளது. இதன் பயனாக சூரிய அடுப்பு பற்றிய விவரங்கள் கேட்பு அதிகரித்திருக்கிறது. துரதிருஷ்டவசமாக, இந்த அடுப்பை தயாரிக்கும் தயாரிப்பாளர்

எவரும் நமது மாநிலத்தில் இல்லை. தற்போது வேலூருக்கருகில் உள்ள ''உஷா என்ஜினியரிங் ஒர்க்ஸ்'' கம்பெனி இந்த அடுப்பை தயாரிக்கும் முயற்சியில் இறங்கி உள்ளது. அவர்களிடம் லோன் முதல் உத்திரவு இடப்பட்டுள்ளது. 31-3-1992-க்குள் சுமார் 100 அடுப்புகள் வழங்கப்பட்டு விடும். ஒவ்வொரு அடுப்பிற்கும் தமிழ்நாடு அரசு ரூ. 250 மான்யம் அளிக்கிறது.

மேலும் இன்னொரு புதிய திட்டமானது சூரிய போட்டோ வோல்டெக் மூலம் இயங்கும் மருந்து தெளிக்கும் கருவி, இது நமது நாட்டிலேயே முதலானது. அரசு ஒரு கருவிக்கு ரூ. 1,500 வீதம் மான்யம் வழங்க முன்வந்துள்ளது. இந்த மருந்து தெளிக்கும் கருவியின் பயனை பிரபலமடையச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**20.3 சாண எரிவாயு சாதனங்கள் :**

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனங்கட்கும் கிராமங்களுக்கும் பெரிய அளவிலான சாணஎரிவாயு சாதனங்களை நிறுவி வருகிறது. இதுவரை 39 கலன்கள் நிறுவப்படுகின்றன. இத்தகைய நிறுவனங்களுக்கான சாணஎரிவாயு கலன்கள் திருப்திகரமாக இயங்குகின்றன என்பதும், கிராமங்களில் நிறுவப்படும் கலன்களில் மேற்கொண்டு கவனம் செலுத்த வேண்டும் என்பதும் பயனடைவோரிடமிருந்து பெறுகிற தகவலிலிருந்து புலனாகிறது. பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் பின்னத்தூர் கிராமத்திலுள்ள சமூக சாண எரிவாயு கலன் மாட்டுச் சாணத்தினால் அல்லாமல் கரும்புச்சாறு கழிவினைக் கொண்டு இயங்கி வருகிறது. இது போன்று கரும்புச்சாறு கழிவினைக் கொண்டு இயங்கும் எரிவாயு கலன்களை அமைப்பதில் மேலும் முக்கிய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் மான்யமாக, மொத்தச் செலவில் 70 சதவீதம் நிறுவனங்களுக்கான கலன்களுக்கும், 90 சதவீதம் கிராமப்புற சமூக கலன்களுக்கும் வழங்கப்படுகிறது.

நீர் இறைக்கும் பணிகட்கும், மின்சக்தி உற்பத்திக்கும் பயனுள்ள மற்றொரு இயந்திரம் வளியாக்கி ஆகும். இது இரட்டை எரிபொருளாலும் இயங்க வல்லது. தாவரக் கழிவுகளை எரிபொருளாகக் கொண்டு, அவை எரிகிறபோது உருவாகும் வாயு டீசலால் இயங்க ஆரம்பித்த என்ஜினைத் தொடர்ந்து இயக்குகிறது. இதனால் டீசல் மிச்சம் ஏதுவாகிறது. 1991-92 ஆம் ஆண்டில் 4 வளியாக்கிகள் நிறுவப்பட்டுள்ளன. கணிசமான மான்யமும் கிடைக்கிறது. இது ஒரு மத்திய அரசின் செயற்பாடாகும்.

எரிசக்தி மேலாண்மையை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் வற்புறுத்துகிறது. ஒவ்வொரு தொழில் நிறுவனமும் எரிசக்தி தணிக்கையை கொள்ள வேண்டும். எரிசக்தி வீணாக உபயோகப்படுத்துவதை தடுத்து நிறுத்திட முயல வேண்டும்.



பெரு தொழில்நிறுவனங்களில் எரிசக்தி தணிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அவைகளுக்கு மானியமாக ரூ 20,000 வரை தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் வழங்குகிறது. எரிசக்தி தணிக்கையை சட்டபூர்வமாக அமுல்படுத்த வேண்டும்.

தரம் தாழ்ந்த பயிரிட முடியாத தரிசு நிலங்களில் எரிபொருளாக பயனாகிற மரங்களை பயிரிட்டு வளர்க்கும் திட்டமாகும். இதன் பொருட்டு பயிரிடும் மரங்கள் குறுகிய காலத்தில் சீக்கிரம் வளரக்கூடியவை. இத்திட்டத்தின் பயனாக அனுமதியில்லாது மரம் வெட்டுவது ஓரளவுக்கு குறைகிறது மற்றும் தரிசு நிலமும் பயிரிடும் நிலமாகப் பயனாக ஏதுவாகிறது.

1991-92ம் ஆண்டில் செங்கம் வட்டத்தில் 100 ஹெக்டேர் நிலப்பரப்பில் எரிசக்தி தாவரம் பயிரிடுதல் மேற்கொள்ளப்படுகிறது. 'இது மத்திய அரசின் திட்டமாகும். ஒரு ஹெக்டேருக்கு ரூ. 10,000 என்னும் அளவில் மத்திய அரசு மான்யும் கிடைக்கிறது. மேலும் இத் திட்டம் அரசுடமை நிலங்களில் மட்டும் நடத்திட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**20.4 இதர திட்டங்கள் :**

**ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டமிடுதல் :**

வட்டார அளவில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டமிடுதல், திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. உள்ளூர் மக்களின் எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்யுமளவில், சூடாக்கவும், விளக்கெரிக்கவும், சமையல் செய்யவும் தேவையான எரிசக்தி வளங்களை உகந்த விகிதத்தில் அளிப்பதே இத்திட்டம். மத்திய அரசின் திட்டக்குழு மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. தற்போது 13 வட்டாரங்களில் இத்திட்டம் நடைபெறுகிறது.

இதேபோன்று மற்றுமொரு திட்டம், கிராம அளவில் நடைபெறுகிற ''ஊர்ஜா கிராமம்''. இதுவும் மரபுவழி சாரா எரிசக்தி துறை மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 45 கிராமங்களில் தற்போது இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களது நூற்றாண்டு விழாவினை நினைவுறும் வகையில், தமிழ்நாட்டில் நான்கு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு ''ஊர்ஜா கிராமம்'' திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இது மரபு வழி சாரா எரிசக்தி துறையின் முழு நிதி உதவியுடன் நடைபெறுகிறது. கடைசியாக சொல்லப்பட்ட இரண்டும் முடிவுறும் தருவாயில் உள்ளன.

மேற்சொன்ன 3 திட்டங்களிலும் மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள், உலோக அடுப்புகள், பலநோக்கு இழுவை வண்டிகள், புட்வால்வுகள், சூரிய அடுப்புகள், நீரிறைக்கும் காற்றாலைகள், போட்டோ வோல்டிக் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகிய மரபுவழி சாரா எரிசக்தி உபகரணங்கள் அளிக்கப்படுகின்றன.

செயற்பாட்டு விளக்கங்களுக்காக மரபுவழி சாரா எரிசக்தி துறையிடமிருந்து வரப்பெற்ற 100 பலநோக்கு இழுவை வண்டிகள் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திடம் தற்போது உள்ளன. இது ஒரு மேம்படுத்தப்பட்ட மாட்டு வண்டி. பல காரியங்களுக்கு பயனாகும் விதத்தில் அமையப் பெற்றது. இவை 75 சத வீதம் மானியத்துடன் வழங்கப் பெறுகிறது.

பெட்ரோலியம் பொருட்களின் மீதான பற்றாக்குறை யினால் ஏற்படும் கஷ்டங்களை சரிசெய்ய, மின்கலத்தால் ஓடுகிற வண்டிகள் தற்போது தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன. இவை பெட்ரோல் இல்லாமலும், இரைச்சல் ஏதுமின்றியும், சுற்றுப்புறச் சூழல் மாசு படாமலும் செயலாற்று கின்றன. மத்திய அரசின் மான்யமாக சுமார் ஒரு லட்சம் வழங்கப்படும். இத்தகைய வண்டிகள் 3 தற்போது மாநிலத்தில் ஓடுகின்றன.

புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி சாதனங்களை விளக்கும் வகை யில் ஒரு நடமாடும் விளக்க ஊர்தி ஒன்று தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் வாங்கப்பட்டு உள்ளது. இதில் போட்டோவோல்டிக் தொலைக்காட்சிப்பெட்டி. பம்ப் மற்றும் விளக்கு, சூரியசக்தி சுடுநீர் அமைப்பு, சூரிய அடுப்பு, மேம் படுத்தப்பட்ட மண் அடுப்பு, வளியாக்கி, சாண எரிவாயு கலன், நீரிறைக்கும் காற்றாலை ஆகியவை உள்ளன. இந்த ஊர்தி தற்போது தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் செயல் விளக்கத்திற்காகவும், மக்களிடையே மாற்று எரிசக்தி வளங்களை பற்றிய விவரங்களை அறிமுகப்படுத்திடவும் எடுத்து செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1992-93-ம் ஆண்டில், பின்வரும் திட்டங்கள் மேற்கொள் ளப்படவுள்ளன :—

1. கோயம்புத்தூரிலுள்ள கேத்தனூரில் 2 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுக்காக காற்றாலைத் தொகுப்பு நிறுவிடல்.

2. சிதம்பரனார் மாவட்டத்தில் கயத்தாறில் இரண்டாவது முறையாக ஒரு 1.5 மெகாவாட் மின் உற்பத்திக்கான காற்றா லைத் தொகுப்பு நிறுவிடல் : 10 மெகாவாட் மின் உற்பத்திக்கு தக்க இடங்களில் காற்றாலைத் தொகுப்புகள் அமைத்தல்.



3. சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் சுமார் 1,000 வரை நிறுவிடல்.

4. மேலும் 2 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த ஊரக எரி சக்தி திட்டமிடல் திட்டம் விரிவுபடுத்தல்.

5. நடைமுறையிலுள்ள திட்டங்களை தொடர்ந்து செயலாக்குதல்.

6. சூரியசக்தி ரேடியேஷன் கண்காணிப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல்.

56-- ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## பொதுப்பணித் துறை

### கட்டடப் பிரிவு

### 1991-92ஆம் ஆண்டின் பணிகள் பற்றிய ஆய்வுரை :

மருத்துவம், கல்வி, வருவாய், காவல், சிறை, நீதி, வர்த்தக வரி, கருவூலம் மற்றும் கணக்கு, போக்குவரத்து பதிவு, நிய மைப்பு, பொது, சட்டமன்றம், விவசாயம், கால்நடை பராமரிப்பு போன்ற எல்லா அரசுத் துறைகளுக்கான கட்டடங்களையும், திட்டமிட்டு வடிவமைத்துக் கட்டி முடித்தல் பொதுப் பணித்துறையின் கட்டடப் பிரிவின் பொறுப்பாகும். மேலும், ஒப்பளிப்பு முறையில் (1) அரசு சார்பு நிறுவனங்கள், நகரப் பஞ்சாயத்து போன்ற உள்ளாட்சி மன்றங்கள், (2) விவசாயப் பல்கலைக் கழகம், கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், (3) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முன்னாள் இராணுவ வீரர் நல வாரியம், தொழிலாளர் நல வாரியம், காப்பி வாரியம் போன்ற வாரியங்கள் மற்றும் கழகங்கள் மற்றும் முகமை முறையில், (4) மைய அரசின் தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம் மற்றும் பொறியியல் கழகங்கள் இவற்றுக்கென, சேவைக் கேற்ப நூற்று விகிதக் கட்டணம் வசூலித்துக் கட்டடங்கள் கட்டும் பணியையும் இப்பிரிவு மேற்கொள்ளுகிறது. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வுத் திட்டங்களுக்கான கட்டடப் பணிகளும் இத்துறையால் மேற் கொள்ளப்படுகின்றன.

2. கிராமப்புறக் கட்டுமானப் பணிகளில் சிக்கன உத்தி களையும் புதிய வடிவமைப்புக்களையும் பரிந்துரைப்பதற்கென 16-7-1990 நாளிட்ட பொதுப்பணித் துறை அரசாணை எண் 1473-ல், சென்னை திட்டம் மற்றும் வடிவமைப்பு மேற் பார்வைப் பொறியாளரின் தலைமையில், பொறியாளர் குழு ஒன்றினை அரசு அமைத்தது. இக்குழு தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. குழுவின் பரிந்துரையின்படி, கட்டுமானப் பணிகளில் சிக்கன உத்திகளையும் வடிவமைப்புக் களையும் செயல்படுத்தும் வகையில் அரசு சில வழிமுறைகளைக் கூறியுள்ளது.

3. பல்வேறு துறைகளுக்கென கட்டப்பட்டு வருகின்ற, ஒவ் வொன்றும் ரூ. 5 இலட்சத்துக்குக் கூடுதலான மதிப்புடைய கட்டடங்களின் எண்ணிக்கை கீழ்க்கண்ட அட்டவணையில் தரப் பட்டுள்ளது :

| | |
|---|---|
| 1. வருவாய்த் துறை .. | 17 |
| 2. பொதுப்பணித் துறை .. | 4 |



| | |
|---|---|
| 3. உள் துறை .. | 16 |
| 4. வணிக வரித் துறை .. | 5 |
| 5. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீரமைப்புத் துறை. | 4 |
| 6. கல்வித் துறை .. | 9 |
| 7. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை | 156 |
| 8. வீட்டு வசதித் துறை .. | 10 |
| 9. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை ... | 9 |
| 10. ஆதித் திராவிடர்/பழங்குடியினர் நலத் துறை. | 4 |
| 11. சமூக நலத் துறை .. | 4 |
| 12. விவசாயத் துறை | 6 |
| 13. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை. | 13 |
| 14. ஒப்பளிப்புப் பணிகள் ... | 130 |

அரசின் பல்வேறு கட்டடங்கள் கட்டுவதற்கென 1991-92 ஆம் ஆண்டில், திட்டப்பணிகளின்கீழ் ரூ. 23.99 கோடியும், திட்டத்தில் சேராப்பணிகளின்கீழ் ரூ. 19.16 கோடியும், ஒப் பளிப்புப் பணிகளின்கீழ் ரூ. 25 கோடியும் பணம் செலுத்து முறைப் பணிகளின்கீழ் ரூ. 2.39 கோடியும் செலவிடத் திட்ட மிடப்பட்டது.

4. நடைபெற்று வரும் கட்டடப் பணிகளின் விபரமும் அவற்றின் மதிப்பும் கீழே தரப்பட்டுள்ளன :

(ரூபாய் கோடியில்.)

| | |
|---|---|
| 1. மருத்துவக் கல்வித் துறையின்கீழ் பல் வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் .. .. .. | 16.47 |
| 2. குடும்பநலம், மருத்துவப் பணிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், இந்திய மருத்துவம் ஹோமியோபதி பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு | |

(ரூபாய் கோடியில்.)

| | |
|---|---|
| மருத்துவம், சுகாதாரப் போக்குவரத்து ஆகிய துறைகளின்கீழ், மருத்துவ மனைகள், நீள் அறைகள், சுகாதார நிலையங்கள், பணிமனைகள் போன்றவை .. | 11.88 |
| 3. பல்வேறு மருத்துவ மனைகளில், குளிர் சாதன வசதி செய்தல், உயர் அழுத்த மின் இணைப்பு தருதல், ஜெனரேட்டர்கள் பொருத்துதல் போன்ற சிறப்பு மின் பணிகள் .. | 3.00 |
| 4. வருவாய்த் துறைக்கென மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் .. | 16.46 |
| 5. காவல் துறைக்கென காவல் நிலையங்கள் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் .. | 11.88 |
| 6. நீதித் துறையின்கீழ் நீதிமன்றங்கள் | 6.05 |
| 7. கல்வித் துறைக்கென கல்லூரிகட்கும் பள்ளிகளுக்கும் வகுப்பறைகள். | 3.14 |
| 8. பொதுப்பணித் துறைக்கென அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் .. | 0.32 |
| 9. ஏனைய துறைகளுக்கெனப் பல்வேறு கட்டடங்கள் .. .. .. .. | 12.07 |

<u>ஒப்பளிப்புப் பணிகள் :</u>

| | |
|---|---|
| 10. ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நகரப் பஞ்சாயத்துக்களுக்கென பல்வேறு இடங்களில் பேருந்து நிலையங்கள், கடைகள் வாராந்தர/தினசரிச் சந்தைகள் .. .. | 9.48 |
| 11. பல்கலைக்கழகங்களுக்கெனக் கட்டடங்கள் .. .. | 9.89 |
| 12. தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் தொழில்நுட்பக் கழகத்துக்கென உள்ளூர் அலுவலகங்கள், மருத்துவ மனைகள், குடியிருப்புகள் போன்றவை .. | 11.57 |



(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| 13. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், டானிடா திட்டம், மற்றும் இதரத் துறைகளுக்கென, துணை சுகாதார நிலையங்கள், திறந்தவெளி விளையாட்டரங்கம், நீலகிரியில் திட்ட அலுவலருக்கென குடியிருப்புகள் போன்ற கட்டிடங்கள் .. .. | 7.96 |
| 14. மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்திற்கான கட்டடங்கள். | 0.72 |

1991-92ஆம் ஆண்டில், பல்வேறு துறைகளுக்கென ரூபாய் 23.30 கோடி மதிப்புள்ள பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 1991-92 ஆம் ஆண்டில் 949 கட்டடங்களைக் கட்டி முடித்து, பயன்படுத்தும் துறைகளிடம் ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டது. அவற்றில் 921 கட்டடங்கள் 31—3—1992 குள் முடிக்கப்படும். இவற்றில், ஒவ்வொன்றும் ரூபாய் ஒரு கோடிக்குக் கூடுதலான மதிப்புடைய 7 பணிகளும் அடங்கும்.

5. ஒவ்வொன்றும் ரூ. 50 இலட்சத்துக்குக் கூடுதலான மதிப்புடைய, தற்போது நடைபெற்றுவரும் பெரிய பணிகளின் விபரம் வருமாறு :—

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| 1. சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவ மனையில் குழந்தைகள் நலப்பிரிவு கட்டடம் .. .. | 1.99 |

கட்டுமானப் பணிகள் முடிந்துவிட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. திட்டம் மார்ச் 92-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2. சென்னை பொது மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவின் மேல், கூடுதலாக ஏழு மாடிகள் கட்டுதல் மற்றும் இருதய நோய்ப் பிரிவுக் கட்டடம், விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைக்கான நீள் அறை .. .. | 1.26 |

கட்டுமானப் பணிகள் முடிந்துவிட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. திட்டம் மார்ச் 92-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்.)

3. சேலத்தில் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மற்றும் தற்போதுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனையை மருத்துவக் கல்விக் கூடமாக மாற்றுதல் .. .. 3.75

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட கட்டடங்கள் அடங்கும் :—

(1) நிர்வாக அலுவலகம், பொதுக்கூட்ட அறை மற்றும் உணவு விடுதி.

(2) பல்வேறு துறைக் கட்டடங்கள்.

(3) விரிவுரைக் கூடங்கள்.

(4) நூல் நிலையம்.

(5) அடித்தளத்தில் செயல்முறைக் கூடம் மற்றும் விரிவுரைக் கூடம் முதல் தளத்தில் மாநாட்டுக் கூடம்.

(6) பிணப் பரிசோதனைக் கூடத்தின் மேல் முதல் மாடி.

துறைக் கட்டிடத்தைத் தவிர, ஏனைய பணிகள் முடிந்து விட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. துறைக் கட்டடம் மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. பிற்பட்ட வகுப்பினர் பழங்குடியினருக்கென பல்வேறு இடங்களில் 40 விடுதிகள் கட்டுதல் .. .. 4.11

ஏறத்தாழ எல்லா விடுதிகளும் முடிவடையும் நிலையில் உள்ளன. அனைத்துப் பணிகளும் மார்ச் 92-ல் முடிவடையும்.

5. அரசு இளைஞர் சீர்திருத்தப்பள்ளி, கண்காணிப்பு இல்லம், சிறப்பு இல்லம் இவற்றுக்கெனக் கூடுதல் கட்டடங்கள். .. .. 1.19

ஏறத்தாழ எல்லாப் பணிகளும் முடிவடையும் நிலையில் உள்ளன. அனைத்துப் பணிகளும் மார்ச் 1992-ல் முடிவடையும்.



(ரூபாய் கோடியில்.)

6. ஓசூரில் 50 படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனை .. 1.91

பணி நடைபெறுகிறது. 1992 மே மாதம் முடிவடையும்.

7. மதுரை இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கூடுதல் குடியிருப்புகள் .. 1.81

பணி நடைபெறுகிறது. 1992 டிசம்பரில் முடிவுறத் திட்டமிடப்பட்டுள்ளது.

8. கோயம்புத்தூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை வளாகத்தில் 190 கூடுதல் குடியிருப்புகள் .. ..

கட்டுமானப் பணி முடிந்து விட்டது. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

9. சென்னை அயனாவரத்தில் கூடுதல் குடியிருப்புகள் .. .. .. 3.68

அஸ்திவாரத்துக்கான தூண்கள் அமைக்கப்படுகின்றன. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

10. சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கென, முன்னாள் உயர்நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டடம் .. 6.32

அஸ்திவாரத்துக்கான தூண்கள் நிறுவப்படுகின்றன. ஆரம்பப் பணிகள் நடைபெறுகின்றன.

11. திருச்சி மாவட்டம் குமுளூரில் வேளாண்மைக்கல்லூரிக் கட்டடம் .. .. 1,91

இத்திட்டத்தில் கீழ்க்கண்டவை அடங்கும் :—

(அ) கல்விக் கூடம்

(ஆ) அலுவலர் குடியிருப்புகள்

(இ) மாணவர் விடுதி

(ஈ) ஏனைய சிறிய கட்டிடங்கள்

(ரூபாய் கோடியில்.)

கல்விக் கூடம் மற்றும் குடியிருப்புகளுக்கான கட்டடங்கள் நடைபெறுகின்றன. 1992 நவம்பரில் முடிவடையத் திட்டமிடப் பட்டுள்ளது. மாணவர் விடுதியும் ஏனையச் சிறு கட்டடங்களும் விரைவில் துவக்கப்படும்.

12. வ. உ. சி. மாவட்டம், கிள்ளிகுளத்தில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனக் கட்டடங்கள் .. 1.39

எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன. 1992 செப்டம்பரில் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

13. சேலம் மாவட்டம் நாமக்கல்லில் கால் நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துக்கென கல்விக் கூடம், அலுவலர் குடியிருப்பு மற்றும் மருத்துவக் கட்டடம் .. 1.94

எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன, 1992 நவம்பரில் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

14. பல்வேறு இடங்களில் ஊரக மேம்பாட்டுத் துறைக்கென அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் .. 1.43

எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

15. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் அலுவலகக் கட்டடம், மாணவர் விடுதி மற்றும் அலுவலர் குடி யிருப்பு .. 1,16

எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன. அக்டோபர் 1992-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

16. சென்னை அண்ணா நகரில் காது, மூக்கு, தொண்டை மருத்துவ மனை .. 0.55

கட்டுமானப் பணிகள் முடிந்து விட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப் பட்டுள்ளது.

17.. சென்னை அண்ணா நகர் புறநகர் அரசு மருத்துவமனையில் கூடுதல் தளம் கட்டுதல் 0.58



(ரூபாய் கோடியில்)

கட்டுமானப் பணிகள் முடிந்து விட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப் பட்டுள்ளது.

18. மதுரை அரசு மருத்துவ மனையில் கண்ணப்ப நாயனார் கண் மருத்துவப் பிரிவுக் கட்டடத்தின் மேல் இரண்டு மாடிகள் .. 0.57

கட்டுமானப் பணிகள் முடிந்து விட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப் பட்டுள்ளது.

19. கோயம்புத்தூரில் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மற்றும் நரம்புப் பிரிவுக்கெனக் கட்டடம் .. 0.55

பணி நடைபெறுகிறது. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்ட மிடப்பட்டுள்ளது.

20. சென்னையில் பல்வேறு இடங்களில் தீயணைப்புத் துறை அலுவலருக்கென குடியிருப்புகள் கட்டுதல் .. 0.65

கட்டுமானப் பணிகள் முடிந்துவிட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப் பட்டுள்ளது.

21. சென்னையில் திட்ட நிர்வாக அலுவலகம் மற்றும் ஆடுகளுக்கான பரிசோதனைக் கூடம் .. 0.60

கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப் பட்டுள்ளது.

22. ஆறு இடங்களில், பழங்குடியினர் தங்கிப் பயிலும் கல்விக் கூடங்கள் .. 0.58

பணிகள் நடைபெறுகின்றன மார்ச் 1992-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்.)

23. டாக்டர் எம். ஜி. ஆர். சமாதியைத் திருத்தி அமைத்தல் .. 1.25

பணிகள் நடைபெறுகின்றன. ஜூன் 1992-ல் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

24. கீழ்க்கண்ட இடங்களில் உலக வங்கி உதவி பெறும் ஐ. பி. பி. வி. திட்டப் பணிகள் :

(1) அம்பத்தூர்

(2) தாம்பரம்

(3) பல்லாவரம்

(4) ஆவடி

(5) நங்கநல்லூர்

(6) முகப்பேர்

(7) ஆலந்தூர்

(8) திருவொற்றியூர்

(9) கத்திவாக்கம்

(10) மாதவரம் 1.24

மேற்கண்ட 10 பணிகளில் 6 முடிந்து விட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. மற்றவை மார்ச் 1992-க்கு முன்னர் முடிவடையும்.

6. கீழ்க்கண்ட பெரிய கட்டிடப் பணிகள் விரைவில் மேற் கொள்ளப்பட உள்ளன:—

(1) தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகப் புதிய கட்டிடம் 2.81

நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் பணி துவங்கும்.

(2) திண்டுக்கல் பெருந்திட்ட வளாகத்தில் 276 அரசு அலுவலர் குடியிருப்புகள் 3.68



(ரூபாய் கோடியில்)

வசதிக்கேற்ப பணி, பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு டெண்டர் கோரப்பட்டுள்ளது. டெண்டர் இறுதியானவுடன் பணி மேற் கொள்ளப்படும்.

(3) தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுகா சாத்தூரில் தமிழ்நாடு சிறப்புக் காவல் துறையின் பிரிவு அமைப்பதற்கான கட்டடம். 1.50

திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசு ஏற்பளித்தவுடன் பணி துவங்கும்.

(4) சேலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் 3.25

திருத்திய வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

(5) சென்னை கிரீம்ஸ் சாலையில், வணிக வரித் துறைக்கென இணைப்புக் கட்டடம் (1+6) மாடிகள். .. 2.07

திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

(6) 16 இடங்களில் போஸ்ட்-பார்ட்டம் திட்டத்துக்கான கட்டடங்கள் .. 1.16

14 பணிகள் நடைபெறுகின்றன. டெண்டர்கள் ஏற்கப்பட்டவுடன் மற்றவை மேற்கொள்ளப்படும்.

(7) திருச்சி சட்டக் கல்லூரி .. 1.20

டெண்டர்கள் ஆய்வில் உள்ளன. விரைவில் பணி மேற் கொள்ளப்படும்.

(8) 120 இடங்களில் ஆரம்ப சுகாதார மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவர் குடியிருப்புகள் .. 8.10

89 பணிகள் வெவ்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன. மற்ற பணிகளுக்கான டெண்டர்கள் பரிசீலனையில் உள்ளன.

(9) 26 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ மனைகள் .. 2.08

பணி விரைவில் துவங்கும்.

(ரூபாய் கோடியில்)

(10) 17 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ மனைகள் .. 1.03

ஹட்கோ நிறுவனத்தின் கடன் உதவியுடன் பணி விரைவில் துவங்கும்.

(11) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகக் கட்டடங்கள் .. 1.05

அரசு ஏற்பு அளித்துள்ளது. ஆரம்பப் பணிகள் நடைபெறுகின்றன.

(12) சென்னை நகரில், விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பணித் திட்டத்துக்கென கட்டடங்கள் .. 5.25

9 பணிகளில் 3 பணிகள் துவங்கி விட்டன. டெண்டர்கள் ஏற்கப்பட்டவுடன் ஏனைய 6 பணிகள் மேற்கொள்ளப்படும்.

(13) 10 இடங்களில் காவல் நிலையங்கள் 0.72

8 பணிகள் நடைபெறுகின்றன. டெண்டர்கள் ஏற்கப்பட்டவுடன் ஏனைய இரண்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

(14) 10 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் .. 0.54

9 இடங்களில் பணி நடைபெறுகிறது. எஞ்சியுள்ள ஒரு இடத்தில் நிலம் இன்னும் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்படவில்லை.

(15) 10 இடங்களில் 6 படுக்கைகள்கொண்ட குடும்பக் கட்டுப்பாடு அறுவை அரங்குகள் மற்றும் நீள் அறைகள் .. 0.61

7 பணிகள் நடைபெறுகின்றன. முகவர் முடிவு செய்யப்பட்டவுடன் ஏனைய 3 பணிகளும் துவங்கும்.

(16) சென்னை பொது மருத்துவ மனையில் 24 மணி நேர எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவுக் கட்டடம். .. 0.50

டெண்டர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

(17) சென்னை பெரம்பூரில் ஆடு அறுப்பதற்கென நவீனக் கட்டடம் .. 0.70



(ரூபாய் கோடியில்)

டெண்டர் முடிவு செய்யப்பட்டுள்ளது, பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

(18) புதுக்கோட்டையில் ஒருங்கிணைந்த கால்நடைப் பராமரிப்புத் திட்டக் கட்டடம் .. 0.58

கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

(19) தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் மலையில் கரியலூரிலுள்ள மோவாடுப் பட்டியில் சமூகச் சுகாதார நிலையம் .. 0.77

டெண்டர் முடிவு செய்யப்பட்டுள்ளது. பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

(20) வட ஆற்காடு மாவட்டம் முகுந்தராயபுரம் ஆடு வளர்ப்புப் பண்ணை கட்டடங்கள் .. 1.17

டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன. டெண்டர் ஏற்கப்பட்டவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

(21) சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மாணவியர் விடுதி .. 1.07

டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன டெண்டர் ஏற்கப்பட்டவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

7. 1991-92 ஆம் ஆண்டில், கட்டி முடிக்கப்பட்ட ஒவ்வொன்றும் ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புடைய கட்டடங்களின் விபரம்.

1. சென்னை உயர்நீதிமன்றத்தில் கூடுதல் கட்டடம். .. 4.13
2. விருதுநகரில் காவலர் குடியிருப்புகள் .. 1.67
3. விருதுநகரில் ஆயுதக் காவல் படையினருக்கான குடியிருப்புகள் .. 2.15
4. இராமநாதபுரத்தில் காவலர் குடியிருப்பு .. 2.29
5. சிவகங்கையில் காவலர் குடியிருப்புகள் .. 2.30
6. பயல் பாதுகாப்பு இல்லங்கள் .. 1.27

56-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க [1992 மார்ச் 31

**தமிழ் நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1991–92-ஆம் ஆண்டிற்கான ஆய்வும், 1992–93-ஆம் ஆண்டிற்கான திட்டமும்.**

ஒரு நாட்டில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முன்னேற்றமடையச் செய்யும் திறமையான வழிகளில் சாலைகளை சரிவர அமைத்து அவற்றை மேம்பாடு செய்வதும் ஒன்றாகும். அப்படிப்பட்ட வளர்ச்சிக்கு சாலைகளும் சாலைப் போக்குவரத்தும் இன்றியமையாத அடிப்படைத் தேவையாக விளங்குகின்றன. ஒரு நாட்டின் சாலை அமைப்பும், அதன் பொருளாதார வளர்ச்சியும் நெருங்கிய தொடர்பு உள்ளன.

நமது நாட்டில் சுமார் 80 விழுக்காடு மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். அக்கிராமங்களுக்கு எல்லாம் சாலைகள்தான் போக்குவரத்துக்கு முக்கிய சாதனமாக விளங்குகின்றன. இந்நிலைமையை பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு மேலும் சிறப்பாகப் பொருந்தும்.

அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்வரும் திட்டங்களின் கீழ் தமிழ் நாட்டில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையானது பாலம் மற்றும் சாலைப் பணிகளை இம்மாநிலத்தில் மேற்கொள்கின்றது:—

(அ) மாநில சாலைகள் திட்டம் :

(1) மாநில நெடுஞ்சாலைகள்.

(2) மாவட்டப் பெருஞ்சாலைகள்.

(3) இதர மாவட்டச் சாலைகள்.

(ஆ) இதர சாலைகள் திட்டம்.

(இ) தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்.

(ஈ) கருவிகளும் தளவாடங்களும்.

(உ) நிழற் சாலைகள்.

(ஊ) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பாலங்கள் கட்டுதல்.

மாநில சாலைகள் திட்டம் :

(1) தற்போதுள்ள உறுதியற்ற கட்டுமானங்களை உறுதிப்படுத்துதல், (2) பாலம் கட்டப்படாத குறுக்கீடுகளில் சிறு பாலங்கள்/பாலங்கள் கட்டுதல், (3) சாலைத் தளங்களை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் (4) சாலைகளின் வடிவமைப்பினை மேம்பாடு செய்தல் போன்ற மூலப் பணிகள் பெருகி வரும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.



[stamp]

மாநில நெடுஞ்சாலைகள்

இத்திட்டத்தின்கீழ் மாநில நெடுஞ்சாலைப் [illegible] முதல் முக்கியத்துவம் வாய்ந்த பணிகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 1–4–1991-ஆம் நாளைய நிலவரப்படி மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1,915 கி.மீ. ஆகும். 1991–92-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் மாநில நெடுஞ்சாலைகள் திட்டத்தின்கீழ் மூன்று சாலைப் பணிகள் ரூ. 75.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும் மூன்று பாலப் பணிகள் ரூ. 109.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும் எடுத்துச் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1992–93-ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் ஐந்து பாலப் பணிகள் ரூ. 128.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும், இரண்டு சாலைப் பணிகள் ரூ. 60.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும் எடுத்துச் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட உள்ளது.

1992–93-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 171.93 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்டப் பெருஞ்சாலைகள் :

1–4–1991-ஆம் நாளைய நிலவரப்படி மாவட்டப் பெருஞ்சாலைகளின் மொத்த நீளம் 13,930 கி.மீ. ஆகும். 1991–92-ஆம் ஆண்டில் நான்கு பாலப் பணிகள் ரூ. 124.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும், ஆறு சாலைப் பணிகள் ரூ. 201.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும் எடுத்துச் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1992–93-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் பதினொரு பாலப் பணிகள் ரூ. 144.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் எடுத்துச் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட உள்ளது.

1992–93-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 470.02 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதர மாவட்ட சாலைகள் :

1–4–1991-ஆம் நாளைய நிலவரப்படி இதர மாவட்ட சாலைகளின் மொத்த நீளம் 33,110 கி.மீ. ஆகும். 1991–92-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் இதர மாவட்ட சாலைகள் திட்டத்தின்கீழ் ஏழு பாலப் பணிகள் ரூ. 189.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும், ஐந்து சாலைப் பணிகள் ரூ. 93.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும் எடுத்துச் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1992–93-ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் பத்து பாலப் பணிகள் ரூ. 201.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும், இரண்டு சாலைப் பணிகள் ரூ. 56.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலும் எடுத்துச் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1992–93-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 456.65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதர சாலைகள் திட்டம் :

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் ரூ. 50,000-க்கு மேல் மதிப்பிடப்பட்ட பெரிய, சிறிய பாலங்கள், தாம்போதிகள், சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற மூலப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சாலைகளையும் பாலங்களையும் பராமரிப்பதில் ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ. 50,000-மும் அதற்கு மேல் மதிப்பிடப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் சாலை மற்றும் பாலப் பணிகள் முடிக்கப்பட்டவுடன் அச்சாலை மற்றும் பாலங்களை அரசு நிதியில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை பராமரிக்க வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1992–93-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 174.82 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேம்பாலங்கள் கீழ்ப்பாலங்கள் :

ஒரு இலட்சத்தை மிஞ்சிய இரயில் ஊர்தி அலகுகள் அடைந்த அரசு சாலைகளில் தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காக இத்திட்டம் வழி கோலுகின்றது. நிதி வளம் மற்றும் பணிகளின் முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கால முறைப்படி இரயில்வே வேலைகள் இத்திட்டத்தில் கீழ் செயற்குறிப்புகள் சேர்க்கப்படுகின்றன.

அணுகு சாலைகள் உட்பட இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவை மாநில அரசும், இரயில்வே துறையும் சரி சமமாக 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இந்திய அரசின் இரயில்வே அமைச்சகம் 'இரயில்வே பாதுகாப்புப் பணிகள் நிதி' என்கிற ஒரு நிதியினை ஏற்படுத்தி அதிலிருந்து ஆளில்லாத இருப்புப் பாதைக் கடவுகளை பராமரித்தல் தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளை தரம் உயர்த்துதல் மற்றும் தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல் ஆகியவற்றிற்காக மாநில அரசால் முன்னதாக செலவு செய்யப்படும் தொகையை திரும்பப் பெற வழிவகை செய்துள்ளது.



இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகவும், ஆளில்லாத இருப்புப் பாதைக் கடவுகளுக்கு ஆட்களை நியமிப்பதற்காகவும் மேற்கூறிய நிதியிலிருந்துஎட்டு விழுக்காடு தொகை மாநில அரசுக்கு கொடுப்பதற்காக ஒதுக்கப்படுகின்றது.

பரங்கிமலை இரயில் நிலையம் அருகாமையில் இரயில்வே கி.மீ. 15/20–21-ல் தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவிற்குப் பதிலாகசாலை கீழ்ப்பாலம் கட்டும் பணி நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இப்பணியானது நிலம் கையகப்படுத்தி முடிக்கப்பட்டவுடன் எடுத்துச் செய்யப்படும்.

அதுபோன்றே பழவந்தாங்கல் இரயில் நிலையம் அருகாமையில் நங்கநல்லூர் சாலை கி.மீ. 0/6-ல் கீழ்ப்பாலம் கட்டும் பணியும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால், எதிர்பார்த்த இப்பணியில் முன்னேற்றத்தை அடைய இயலவில்லை. தற்போது இவ்வழக்கு முடிவடைந்து விட்டது. நிலம் கையகப்படுத்துதவற்கான செயல்முறைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

அரக்கோணம் சந்திப்பிற்கு அருகாமையில் சாலை மேம்பாலம் கட்டும் பணிக்கு இரயில்வே துறை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கு ரூ. 9.25 கோடி செலவாகும். இந்த பாலத்தில் இரயில்வே மேற்கொள்ள வேண்டிய பகுதி வேலைகள் இரயில்வே துறையினரால் தொடங்கப்பட்டுள்ளது. அணுகு சாலைகள் அமைக்கும் பணிகள் மாநில அரசால் மேற்கொள்ளப்படும்.

நாகல் நகர் அருகாமையில் திண்டுக்கல்-வட்டாணம் சாலை கி.மீ. 2/4-ல் சாலை மேம்பாலம் கட்டும் பணிக்கு இரயில்வே துறை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கு ரூ. 320.00 இலட்சம் செலவாகும்.

1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 100.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கருவிகளும் தளவாடங்களும் :

ஆண்டுதோறும் பராமரிக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் அதிகரித்து வருகின்றது. அதிகரித்து வரும் வேக வாகனப் போக்குவரத்துக்கு ஈடு செய்ய வாகன ஓடுதளத்தை மேம்பாடு செய்ய வேண்டும். பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தியதைத் தொடர்ந்து நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் சாலை அமைப்புப் பணிகள் அதிகரித்துள்ளது. இதனால், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை

துறையின் கருவிகளையும் தளவாடங்களையும் மேம்பாடு செய்வதும், நவீனப்படுத்துவதும் அவசியமாகின்றது. பழைய கருவிகள் மற்றும் தளவாடங்களில் பல அவற்றின் கால வரம்பினைக் கடந்து பயனற்றுவிட்டதால் அவற்றிற்குப் பதிலாக புதியவற்றை வாங்க வேண்டியது அவசியமாகிறது. புதிய கருவிகளும் தளவாடங்களும் படிப்படியாக வாங்கப்பட்டு வருகின்றன.

1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 12.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிழற்சாலைகள் :

சூழலியலை பராமரிப்பதற்காகவும், சாலையை பயன்படுத்துவோருக்கு நிழற் தருவதற்காகவும், சாலை ஓரங்களில் பெருமளவில் நிழல் தரும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இப்படி வளர்க்கப்படும் மரங்கள், அவற்றின் கனிகளின் வாயிலாக அரசுக்கு வருவாயையும் தருகின்றது. இது ஊரக வேலை வாய்ப்பினையும் ஊரக தொழில் வளர்ச்சியினையும் உருவாக்குகிறது. தற்சமயம் பல இலட்சக்கணக்கில் பனை மரங்கள் மற்றும் மற்ற வகை மூங்கில் மரங்கள், எரிபொருள், எண்ணெய், கனிகள் மற்றும் பூ பூக்கும் மற்ற வகை மரங்களையும் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒழுங்கான கண்காணிப்பிற்கும், ஆயுள் வீதத்தை அதிகரிக்கச் செய்ய உத்தரவாதம் அளிப்பதற்கும் தொகுநி வளர்ப்பு தொழில் நுட்பங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. 1992–93 ஆம் ஆண்டில் ரூ. 155 இலட்சம் பனை மரங்களும், 82,000 இதர மரங்களையும் வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் பனை மரங்களையும், இதர நிழல் தரும் மரங்களையும் வளர்ப்பதற்காக ரூ. 40.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பாலங்கள் கட்டுதல் :

ஊரக சாலைகளை மேம்பாடு செய்யும் பணிகள் பல்வேறு திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த சாலைகள் இயல்பாகவே குறுக்கு வடிகால்கள் ஏதுமின்றி உள்ளன. அத்தகைய சாலைகளை எல்லா பருவ காலங்களுக்கும் ஏற்ற வகையில் கடந்து செல்ல வசதியாக இருக்கும்வண்ணம் போதுமான குறுக்கு வடிகால்கள் ஓர் காலக்கெடு அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும். 1990–91 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 100 பாலங்கள் கட்டுவதற்காக ரூ. 6.36 கோடி தொகைக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. 1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கூறிய 100 பாலங்களை கட்டி முடிப்பதற்காக ரூ. 31.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



உயர் செறிவு சாலைகள் :

நாளொன்றுக்கு 1500-க்கும் அதிகமான வர்த்தக வாகனங்கள் செல்லும் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டப் பெருஞ்சாலைகள் ஆகிய அரசு சாலைகளில் சாலைகள்/சாலைப் பகுதிகள் உயர் செறிவு சாலைகளாக இனம் பிரிக்கப்படுகின்றன. 1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 9.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு சாலைகள் பராமரிப்பு :

சாலைகளைப் பராமரிக்கும் செலவு (அ) பொருட்களின் உயர்நிலை (ஆ) தார் விலை உயர்வு மற்றும் (இ) சாலை பராமரிப்புப் பணியில் ஈடுபட்டு வரும் சாலைத் தொகுதியாட்களின் கூலி மற்றும் படி உயர்வு ஆகிய காரணங்களினால் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற வகையில் நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பெருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம், மலைக் குடியினர் துணைத் திட்டம், மேற்கு மலைத் தொடர் சாலை மேம்பாட்டுத் திட்டம், ஊரக சாலைகள் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் மொத்தம் சுமார் 1,000 கி.மீ. நீளத்திற்கு பெரும் செலவில் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இதனால் ஆண்டுக்கு ஆண்டு பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் நீளம் கூடிக்கொண்டு வருகின்றது. இச்சாலைகள் எல்லாம் நிரந்தர சொத்தாகும். இச்சாலைகளை கால முறைப்படி புதுப்பித்தும்/பராமரித்தும் காக்கப்பட வேண்டியது அவசியம் ஆகும். நிதி நிலைக்கேற்ப அரசு ஒவ்வொரு ஆண்டும் பராமரிப்புத் தொகையை ஒதுக்கீடு செய்து வருகின்றது.

1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 113.37 கோடி தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பொறியியல் நிர்வாக வட்டம் :

தமிழ்நாட்டில் போக்குவரத்து குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளதால், போக்குவரத்து மற்றும் போக்குவரத்துப் பொறியியல் ஆகிய துறைகள் தனித் தன்மைப் பெற்று விளங்குவது இன்றியமையாததாக உள்ளது. இப்பிரச்சினையின் தன்மையை உலக வங்கி ஆராய்ந்தறிந்து போக்குவரத்துப் பொறியியல் மற்றும் நிர்வாகத்திற்காக தனி வட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று பரிந்துரையும் செய்தது. அதன்படி சென்னையை தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துப் பொறியியல் மற்றும் நிர்வாக வட்டம் ஒன்றை மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த வட்டம் கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில், சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கும் இரண்டு கோட்டப் பொறியாளர்களின் உதவியுடன்

செயல்படுகின்றது. தமிழ்நாட்டில், சென்னை மாநகரிலும் மற்றும் உள்ள முக்கிய நகரங்களிலும் போக்குவரத்து சைகை விளக்குகளை அமைப்பது, போக்குவரத்து கட்டுப்பாடு அமைப் பிற்கு வகை செய்வது, போக்குவரத்துத் தீவுகளை கட்டுவது, போக்குவரத்துப் பாதைகளில் அடையாளக் குறிகள் பொறிப்பது போன்றவை மூலம் போக்குவரத்துப் பாதுகாப்பாகவும், முறை யாகவும் நடைபெறுவதற்கு நிர்வாகப் பணியாளர்களுக்கு இவ் வட்டம் ஆலோசனை கூறுகின்றது. இம்மாநிலத்தில் அமைந் துள்ள சாலைகளின் போக்குவரத்து பளுத் திறனை உயர்த்திட வும் இவ்வட்டம் உதவுகிறது.

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையானது சிக்க லானதும், அதிக செலவிலுமான பணிகளை செயலாக்குகிறது. இதற்கு நேர்த்தியான தரக்கட்டுப்பாடு தேவைப்படுகிறது. இத் துறையின் தலைமைப் பொறியாளரின் கீழ் தரக்கட்டுப்பாட் டினைக் கண்காணிக்க, கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் தரக்கட்டுப்பாடு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தெரிந் தெடுக்கப்பட்ட மதிப்பீடுகளை சரி பார்ப்பதும், செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு போதுமானதா என்பதை தொழில் நுட்ப ரீதியாக கண்டறிவதும், பணிகளை நிறைவேற்றுவதில் குறிப்பிடப்பட் டுள்ளவை உரியவாறு செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதுமே இக்குழுமத்தின் பொறுப்புகளாகும். வடி வமைப்பின் தரத்தை உயர்த்துவதற்கும், பெரும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் கட்டுமான செலவில் சிக்கனத்தை ஏற் படுத்துவதற்கும் இது உதவுகிறது.

சாலைகளை தனியார் மூலம் மேம்படுத்துதல் :

அரசு, சாலைகளை தனியார் மூலம் மேம்படுத்தும் கோட் பாட்டினை முதற்கட்டமாக நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் செயல்படுத்தவும், , அஃது வெற்றியடைந்தால் இதர பகுதிகளுக்கு விரிவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய கோட்பாட்டினை செயல்படுத்த, பகுதிக் கோட்பாட்டின் அடிப்படையில் தனியார் மூலம் அந்த மாவட்டத்தில் சாலை மேம்பாட்டுப் பணிகளை எடுத்துச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, திருவாளர்கள் இன்ப்ராஸ்டிரக்சர் லீசிங் அண்டு பினான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட் (ஐ. எல். மற்றும் எப். எஸ்.) பம்பாய் நிறுவனத்தாருடன் தமிழக அரசானது ஓர் உடன் பாட்டு குறிப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, மேற்கூறிய நிறுவனம் அந்த மாவட் டத்தில் சாலைகளை மேம்பாடு செய்வதற்காக சுமார் ரூ. 30 கோடி நிதியை ஒதுக்கும். இந்த வகையான திட்டம் செய லாக்கப்பட விருப்பது இதுவே முதல் முறை என்பதால், மேல் விவரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.



தேசிய நெடுஞ்சாலைகள்.

தேசிய நெடுஞ்சாலைகள் பிரிவு 1971-ஆம் ஆண்டு ஏற்படுத் தப்பட்டு தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைகள்) அவர்களின் அதிகாரத்தில் கீழ் செயல்பட்டு வருகின்றன. தற்சமயம் தேசிய நெடுஞ்சாலைகள் பிரிவால் செயலாக்கப் படும் திட்டப் பணிகள் விவரம் பின்வருமாறு :—

(1) தேசிய நெடுஞ்சாலைகள் திட்டம் (மைய அரசு திட்டம்).

(2) தேசிய நெடுஞ்சாலைகள் நகர்ப்புற இணைப்புகள் (மாநில அரசு திட்டம்).

(3) மைய சாலை நிதித் திட்டம் (மாநில அரசு திட்டம்).

(4) நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். (மைய அரசால் நடத்தப்படும் திட்டம்).

(5) பழங்குடியினர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மைய அரசு நிதி உதவியுடன் செயலாக்கப்படும் மாநில அரசு திட்டம்).

மற்றும்

(6) மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் (மைய அரசால் நடத்தப்படும் திட்டம்).

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் மேற்கொள்ளப்படும் நட வடிக்கைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :—

1. தேசிய நெடுஞ்சாலைகள் திட்டம் :

தேசிய நெடுஞ்சாலைகள் இந்திய அரசின் சொத்துகளாகும். தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு தேவைப்படும் முழு நிதியும் மைய அரசால் அதன் சொந்த நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது. நெடுஞ் சாலைத் துறையின் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவானது தேசிய நெடுஞ்சாலைகளில் பணிகளை செயலாக்குவதற்கான இந்திய அரசின் செயல்துறை முகவராகும். அதற்காக இந்திய அரசானது நிறைவேற்றப்பட்ட பணிகளின் மதிப்பில் 9 விழுக்காடு தொகையை முகவர் கட்டணமாக வழங்குகிறது. தமிழ் நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 2002 கி.மீ. ஆகும். அதில் 125.86 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் நகர் பிரிவுகளும் உள்ளடங்கும். இந்த நகரப் பிரிவுகளில், 29.55 கி.மீ. சென்னை மாநகர எல்லைக்குள் அமைந்துள்ளது. அவை நெடுஞ்சாலைப் பிரிவின் வசம் உள்ளது.

**தேசிய நெடுஞ்சாலைகள்—மூலப்பணிகள் :—**

பின்வரும் இனங்களைச் சார்ந்த மூலப் பணிகள் செயலாக்கத்திற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன :—

(1) இருவழித் தடங்களாக அகலப்படுத்ததுதல்.

(2) உறுதியற்ற இருவழித்தட சாலைப் பகுதிகளை உறுதிப்படுத்துதல்.

(3) ஒரு வழித்தடங்களை இருவழித் தடங்களாக அகலப்டுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல்.

(4) வடிவ இயலை மேம்பாடு செய்தல்

(5) மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்.

(6) புறவழிசாலைகள் அமைத்தல்.

(7) பெரிய மற்றும் சிறிய பாலங்கள் கட்டுதல்.

(8) சிறுபாலங்கள் கட்டுதல்.

புறவழிச்சாலைகள் :

பின்வரும் இரண்டு புறவழிச்சாலைகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன :

| | ஒப்புதல் வழங்கப்பட்ட மதிப்பு. | முடிப்பதற்காகக் கூடிய செலவு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. தேசிய நெடுஞ்சாலை 46-ல் வாணியம்பாடி புறவழிச்சாலை : | | |
| 1. கட்டுமானம் .. .. .. | 21.12 | 24.35 |
| 2. தளம் .. .. .. | 24.70 | 25.00 |
| 2. தேசிய நெடுஞ்சாலை 46-ல் வேலூர் புறவழிச்சாலை : | | |
| 1. கட்டுமானம் .. .. | 49.20 | 49.20 |
| 2. தளம் .. .. .. | 39.00 | 50.00 |

தேசிய நெடுஞ்சாலை 7-ல் புகலூர் புறவழிச்சாலை ரூ. 63.83 இலட்சம் செலவில் முடிவுறும் தறுவாயில் உள்ளது. இந்த திட்டப் பணியை முடிப்பதற்கு ஆகக்கூடிய செலவு ரூ. 89.89 இலட்சமாக இருக்கும்.



தேசிய நெடுஞ்சாலை 47-ல் கோயம்புத்தூர் புறவழிச்சாலை அமைப்பதற்காக ரூ. 11.40 கோடி மதிப்பீடும், கோயம்புத்தூர் புறவழிச் சாலையில் குறுக்கு வடிகால் பணிகளுக்கான தொழில் நுட்ப பிரேரணைகளும் ஒப்புதலுக்காக இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தேசிய நெடுஞ்சாலை 45, 4 மற்றும் 5-யை இணைக்கும். சென்னை புறவழிச் சாலைக்காக நிலம் கையகப்படுத்துவதற்கு ரூ. 398.00 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டு முன்னேற்றத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன. அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் கடும் எதிர்ப்பை கருத்தில் கொண்டு, அம்பத்தூர் தொழிற்பேட்டை வழியாக செல்லும் சென்னை புறவழிச் பகுதியை கைவிடுவதற்கும், தென்பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 45-க்கும் 4-க்கும் இடைப்பட்ட பகுதியில் மட்டும் புறவழிச்சாலை அமைப்பதற்கும் பிரேரேபிக்கப்பட்டுள்ளன. தென்பகுதியில் இடம் பெறும் கிராமங்கள் 11 ஆகும். அந்த 11 கிராமங்களில், 10 கிராமங்களில் நிலம் கையகப் படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள வானகரம் கிராமத்தில் நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

விழுப்புரம் புறவழிச்சாலை, நாமக்கல் புறவழிச்சாலை மற்றும் உளுந்தூர்பேட்டை புறவழிச்சாலை ஆகியவற்றுக்கான தொழில் நுட்பப் பிரேரணைகள் இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

சாலை மேம்பாலங்கள் :

சேலம் புறவழிச்சாலை கி.மீ. 2/8-ல் ரூ. 172.63 இலட்சம் செலவிலும் மேட்டூர் வாயில் அருகே 'தேசிய நெடுஞ்சாலை-7' கி.மீ. 395/2ல் ரூ. 133.77 இலட்சம் செலவிலும் சாலை மேம்பாலங்கள் முன்னேற்றத்தில் உள்ளன. கண்டம்பாக்கம் (தென் ஆற்காடு மாவட்டம்) அருகே தேசிய நெடுஞ்சாலை-45 கி.மீ. 165/4-ல் ரூ. 332.19 இலட்சம் (பாலப் பகுதி ரூ. 67.89 இலட்சம் மற்றும் அணுகு சாலைகள் ரூ. 264.30 இலட்சம்) மதிப்பில் சாலை மேம்பாலம் கட்டும் பணிக்கான விரிவான மதிப்பீடு ஒப்புதலுக்காக இந்திய அரசுக்கு அனுப்பப் படுகின்றது.

சமயநல்லூர், உளுந்தூர்பேட்டை மற்றும் புச்சக்குப்பம் ஆகிய இடங்களில் கட்டப்படவிருக்கும் இதர சாலை மேம்பாலங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ள நிலம் கையகப் படுத்தி முடிக்கப்பட்ட பின்னர் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். தலா ஒன்றும் ஒரு கோடி ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட மூன்று அகலப்படுத்தும் பணிகளும், மூன்று உறுதிப்படுத்தும் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

1991–92-ஆம் ஆண்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 6,855 இலட்சம் மதிப்பிலான சாலைப் பணிகளும், ரூ. 1,095 இலட்சம் மதிப்பிலான பாலப் பணிகளும் ஒப்புதல் அளிப்பதற்காக இந்திய அரசால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 1990–91-ஆம் ஆண்டுத் திட்டத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் பணிகள் உட்பட, ரூ. 749.62 இலட்சம் மதிப்பிலான 4 சாலைப் பணிகள் மற்றும் ரூ. 65·67 இலட்சம் மதிப்பிலான 2 பாலப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு இந்திய அரசு அங்கிகாரம் வழங்கியுள்ளது. இப்பணிகள் யாவும் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். 4 சாலை மதிப்பீடுகளும், 7 சாலைப் பணிகள், 11 பாலப் பணிகளுக்குமான தொழில் நுட்பப் பிரேரணைகளும் ஒப்புதலுக்காக இந்திய அரசிடம் நிலுவையில் உள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக (1992–97 ரூ. 1,101.84 கோடி மதிப்பிலான சாலைப் பணிகள் மற்றும் ரூ. 18.66 கோடி மதிப்பிலான பாலப் பணிகளுக்கான பிரேரணைகள் அங்கிகாரத்திற்காக இந்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. 1991–92-ஆம் ஆண்டிற்காக ரூ. 1,150 இலட்சம் தொகை தேசிய நெடுஞ்சாலைகள்—மூலப் பணிகளின் கீழ் கோரப்பட்டுள்ளது.

2. தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகள் :

20,000-மும் அதற்கு மேற்பட்ட மக்கட்தொகையும் கொண்ட நகராட்சி எல்லைப் பகுதிகளில் அமைகின்ற தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகள் தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகள் என்று இனம் பிரிக்கப்படுகின்றன. தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகளின் மொத்த நீளம் 125.86 கி.மீ. ஆகும். மேற்கூறிய தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகளை தரத்திற்கு வைத்திருக்க இந்த, சாலைப்பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகள் மாநில அரசு திட்டமான பகுதி-2 திட்டத்தின்கீழ் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகள் நகர்ப்புற பராமரிப்பு :

தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகளை பராமரிப்பதற்காக இந்திய அரசிடமிருந்து நிதி உதவியாக ஆண்டொன்றுக்கு ஒரு கி.மீ.க்கு ரூ. 16,000 வீதம் அளிக்கப்படுகின்றது. மைய அரசு நிதி உதவிக்கும் மேலாக மாநில அரசு தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகளை பராமரிப்பதற்காக கூடுதல் நிதியை ஒதுக்குகிறது.

ரூ. 45.00 இலட்சம் தொகையை சென்னை மாநகருக்கு அப்பாற்பட்ட தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்புகளை பராமரிப்பதற்காக 1991–92-ஆம் ஆண்டிற்காக ஒதுக்கியுள்ளது.



1992–93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை ரூ. 10.11 இலட்சமாகும்.

மைய சாலை நிதிப் பணிகள் :

13—5—1988 ஆம் நாளன்று மக்களவை மற்றும் மாநிலங்களவைகளால் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி, மோட்டார் ஸ்பிரிட் டீசல் ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் சுங்கத் தீர்வை, ஆயத் தீர்வை அடிப்படை விலையில் 5 விழுக்காட்டிற்கு குறையாமல் ஒதுக்கப்பட்டு சாலைகள் மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் அனுமதிக்கப்படும்.

அவ்வாறு சேர்க்கப்படும் சாலை நிதியானது மைய அரசால் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படும் :—

| | சேர்க்கப்படும் நிதியில் விழுக்காடு. |
|---|---|
| (1) நிதியை நிர்வகிக்க | 1/2 |
| (2) தேசிய நெடுஞ்சாலைகளை மேம்பாடு செய்யவும் பராமரிக்கவும். | 35 1/2 |
| (3) மாநில சாலைகளை மேம்பாடு செய்யவும் பராமரிக்கவும். | 64 |

மைய சாலை நிதியானது மைய அரசு அனுமதிக்கும் சாலை தொடர்புடைய திட்டங்களுக்கு நிதி உதவியளிக்க பயன்படுத்தப்படுகிறது.

மேற்கூறிய திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட பின்வரும் நான்கு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன :—

(1) கிர்காகண்டி அருகே கொல்லேகல்-செல்லம்பாளையம் சாலை கி.மீ. 54/6-ல் பாலாற்றின் குறுக்கே உள்ள பாலத்திற்கு தமிழ்நாடு பக்கத்தில் அணுகு சாலை அமைத்தல்.

(2) மதுரை மாவட்டத்தில் தடியன்குடிசை-ஆடலூர் சாலை கி.மீ. 13/2-ல் பிரிந்து பாச்சலூர் செல்லும் மலைச் சாலை (கி.மீ. 0/0-9/680)யை மேம்பாடு செய்தல்.

(3) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் போளூர் முதல் ஜவ்வாது மலை உச்சிக்கும் அங்கிருந்து ஆலங்காயத்திற்கு செல்லும் மலைச்சாலை (கி.மீ. 6/4-40/535) யை மேம்பாடு செய்தல். மதிப்பு ரூ. 187.70 இலட்சம்) முடிப்பதற்காகக்கூடிய செலவினம் ரூ. 215.70 இலட்சம்).

(4) திருநெல்வேலி மாவட்டத்தில் செவல்பேரி அருகே பாளையங்கோட்டை-நாகலாபுரம் சாலை கி.மீ. 11/8-ல் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல். [மதிப்பு ரூ. 49.30 இலட்சம் (முடிவுறும் தறுவாயில்) முடிப்பதற்காகக் கூடிய செலவினம் ரூ. 50.88 இலட்சம்].

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பணிகளை எடுத்துச் செய்வதற்காக தேசிய நெடுஞ்சாலை புறவழிச் சாலைகளுக்கு இணை உபசாலைகள் அமைப்பதற்காகவும், தேசிய நெடுஞ்சாலைகள் நகர் பகுதி இணைப்புகளை மேம்பாடு செய்வதற்காகவும் ரூ. 18.77 கோடி மதிப்பிலான பிரேரணைகள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த திட்டம் 1990-91 ஆம் ஆண்டு முதற்கொண்டு திட்டம்சாரா பணிகளின் கீழ் வரும்.

1991-92 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்தின்கீழ் ரூ. 56.44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை ரூ. 52.14 இலட்சமாகும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே உரியது. இத்திட்டத்தின் நோக்கங்கள் மலை கிராமங்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல், வெவ்வேறு திட்டக் கூறுகளான வேளாண்மை, கால்நடை, வனங்கள், தொழில்கள், சுற்றுலா ஆகியவற்றின் கீழ் செயலாக்கப்படும் இடங்களுக்கு தொடர்பு வழி ஏற்படுத்துதல், சமூக பொருளாதார நடவடிக்கைகள் உள்ள வளர்மையங்களுடன் பழங்குடியினர்/ஆதிதிராவிடர் காலனிகளை இணைத்தல் ஆகியவையாகும். இந்தத் திட்டம் 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகிறது.

1991-92 ஆம் ஆண்டில் ரூ. 58.68 இலட்சம் செலவில் மொத்தம் 61.21 கி.மீ. நீளமுள்ள ஏழு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

"குண்டா-எடக்காடு-எமரால்டு சாலை கி.மீ. 11/4 முதல் தக்கரபாபா ஆதிதிராவிடர் காலனி சாலை கி.மீ. 0/0-1/6-யை மேம்பாடு செய்தல்" என்ற பணி ரூ. 3.85 இலட்சம் மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது.

நடப்பு 1991-92 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 93.02 இலட்சம் ஆகும்.

அடுத்த 1992-93 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 70.18 இலட்சம் ஆகும்.



பழங்குடியினர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

நலிந்த பிரிவினரில் முக்கியமான, பழங்குடியினரின் முன்னேற்றம் குறித்து தனிக் கவனம் செலுத்த வலியுறுத்தப்பட்டு வருகிறது. நிறைய பழங்குடியினர் குடும்பங்கள் வறுமைக் கோட்டை கடக்கும் வகையில் ஒட்டுமொத்த திட்டங்கள் தீட்டி விரைவுபடுத்தவும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினரின் சமூகப் பொருளாதார சிக்கல்களை சீர்செய்ய வெவ்வேறு உள்ளமைப்பு வசதிகளுக்கு வழிகோலப்பட்டுள்ளது. பழங்குடியினர் பகுதிகள் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டு அடிப்படை வசதிகள் அளிக்க குறிப்பிட்ட திட்டங்கள் தீட்டப்பட்டன. அவற்றில் சாலைத் தொடர்பே இல்லாத பழங்குடியினர் வாழ் பகுதிகளுக்கு சாலைத் தொடர்பு அளிப்பதுதான் முதன்மையானது. ஆகையால், சாலைகள் அமைப்பு மிக முக்கிய பங்கேற்கின்றது.

இத்திட்டத்தின்கீழ் சேலம், வட ஆற்காடு-அம்பேத்கார், தென் ஆற்காடு, தர்மபுரி மற்றும் திருச்சி மாவட்டங்களில் பழங்குடியினர் பகுதிகள் இனம் காணப்பட்டு சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1976-77 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏற்காடு, பச்சமலை, சித்தேரி, சவ்வாது, கொல்லி மற்றும் கல்ராயன் மலைகள் உள்ளடங்கியுள்ளன.

1991-92 ஆம் ஆண்டில் 143.20 கி.மீ. மொத்த நீளமுள்ள ஏழு பணிகள் ரூ. 1,001.82 இலட்சம் மதிப்பில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், 80 கி.மீ. நீளம் உள்ளடக்கிய 5 பணிகள் ரூ. 610 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னர் அப்பணிகள் செயலாக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தில் பச்சைமலைகளில், மணலோடை முதல் நாகூர் (வழி) தோனூர் சின்ன இலுப்பூர், பெரிய இலுப்பூர், புத்தூர், பரத்தல் சாலை கி.மீ. 0/0-13/0 அமைத்து மேம்பாடு செய்யும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அண்மையில் ரூ. 137.50 இலட்சத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் செயலாக்கப்படும்.

1991-92 பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ. 678 இலட்சம் மதிப்பில் 8 பணிகள் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. அப்பணிகள் 1992-93இல் செயலாக்கப்படும்.

நடப்பு 1991-92ஆம் ஆண்டில் ரூ. 190.17 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

1992-93 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 191.14 இலட்சம் ஆகும்.

## மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டம் :

இத்திட்டத்தின் நோக்கம், மேற்கு மலைத் தொடர் பகுதியில் மலை விளைப் பொருட்களை மலையிலிருந்து சமவெளிக்கு வணிக வாய்ப்பிற்காக கொண்டு செல்ல சாலைத் தொடர்பு ஏற்படுத்தலாகும். இத்திட்டம், திண்டுக்கல் அண்ணா மாவட்டம், மதுரை மாவட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கம்புத்தூர் மாவட்டம், காமராஜர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்முறையில் உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கீழே விவரிக்கப்பட்டுள்ள இரண்டு சாலைப்பணிகளும், ஒரு பாலப்பணியும் முன்னேற்றத்தில் உள்ளன.

| | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1 பூண்டி முதல் வெள்ளிங்கிரி வரை (கி.மீ. 0/0—5/6) நடைபாதை ஏற்படுத்துதல் | 5.50 |
| 2 வெல்லோனை முதல் தலநார் வரை (கி.மீ. 0/0—22/6) நடைபாதை ஏற்படுத்துதல் | 10.00 |
| 3 பாக்கோடு கிராமத்தில் கடம்ளகோட்டில் முல்லையாற்றின் குறுக்கே ஓர் பாலம் கட்டுதல் | 27.50 |

'' வருசநாடு முதல் வள்ளிப்பாறை சாலை கி.மீ. 0/0—9/3-யை மேம்பாடு செய்தல் ''என்ற பணி ரூ. 55.00 இலட்சம் மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது. பகுதி வேலைகள் முடிக்கப்பட்ட இரண்டு சாலைப் பணிகள் திருத்திய நிர்வாக ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும் எடுத்துச் செய்யப்படும்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலமான 1992-97இல் ரூ. 35.14 கோடி மதிப்பில் 503.50 கி.மீ. நீளம் உள்ளடக்கிய 45 பணிகளை எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

## ஊரக சாலைகள் திட்டம் :

இத்திட்டம் மைய அரசால் நடத்தப்படும் ஓர் திட்டமாகும். இத்திட்டத்திற்கான செலவினத்தில் 30 விழுக்காட்டை இந்திய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது. மாநிலத் திட்டக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டடுள்ள பிரேரணைகளின்படி, 1981 மக்கட் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் எஞ்சியுள்ள 1,500-ம் அதற்கு மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட கிராமங்களும் முழுவதுமாக தார் சாலைகளால் 8ஆவது திட்டக் காலத்தில் இணைக்கப்பட்டுவிடும். 1990-91இல் செய்யப்பட்ட செலவினம் ரூ. 10.883 கோடியாகும். 1991-92 தொடக்கத்தில் எஞ்சியுள்ள பணிகளின் மதிப்பு ரூ. 11.98 கோடியாகும். 1991-92இல் அரசானது தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி ஓர் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1,000க்கும் மேற்பட்ட மக்கட் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு இணைப்பை ஏற்படுத்துவதற்காக ஊரகச் சாலைகள் செயல் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 1991-92ற்கான ஒதுக்கீடு ரூ 15.36 கோடியாகும். இந்த ஒதுக்கீட்டின் அடிப்படையில் ரூ. 15.36 கோடி மதிப்பில் 512.20 கி.மீ. நீளமுள்ள 186 பணிகள் மேம்பாடு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1992-93 ற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 15.00 கோடியாகும். வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் ரூ. 15.00 கோடி மதிப்பில் 505.40 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்வதற்கான எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1981 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 452 கிராமங்கள் இணைக்கப்பட வேண்டும். அதில் 366 கிராமங்கள் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் விநேகமாக எல்லா மாவட்டகளிலும் முழுமையாக இணைக்கப்படும்.

## சிறப்பு உறுப்புத் திட்டம் :

இந்த திட்டமானது ஊரக சாலைகள் திட்டத்தின் ஓர் அங்கமாகும். இத்திட்டம் குறைந்தபட்சத் தேவைகள் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பிரதான கிராமங்களின் மக்கட் தொகையில் 50 விழுக்காட்டிற்கு மேற்பட்ட ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கு சாலைகள் அமைக்கப்படுகின்றன. 1990–91இல் செய்யப்பட்ட செலவினம் ரூ. 2.5061 கோடியாகும். 1991–92இன் தொடக்கத்தில் எஞ்சியுள்ள பணிகளின் மதிப்பு ரூ. 2.179 கோடியாகும். மேலும், இத்திட்டம் 1991–92இல் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ. 5.12 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. நிருவாக ஒப்புதலின் அடிப்படையில் ரூ. 5.12 கோடி மதிப்பில் 166.80 கி.மீ. நீளமுள்ள 52 பணிகள் மேம்பாடு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1992–93ற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 3.50 கோடியாகும். வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில், ரூ. 3.50 கோடி மதிப்பில் 168.40 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்வதற்காக எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெருந்து தடச்சாலைகள் மேம்பாடு மற்றும் ஏந்புத் திட்டம் :

இத்திட்டம் 1961–62ஆம் ஆண்டில் ஓர் திட்டம் சாரா பணியாகத் தொடங்கப்பட்டது. ஏழாம் திட்டம் முடிந்ததை அடுத்து 1990–91ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் திட்டப்பணிகளின் கீழ் கொணரப்பட்டது. தற்போது 1991–92-ல் இத்திட்டம் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது. 1991–92ஆம் ஆண்டு தொடக்கத்தில் எஞ்சியுள்ள பணிகளின் மதிப்பு ரூ. 10.1334 கோடியாகும்.

1991 92-ற்காக ஆண்டுத் திட்டம் :

1991–92இல் ரூ. 22.86 கோடி மதிப்பில் 765 கி.மீ. நீள சாலைகளை மேம்பாடு செய்வதற்காக 305 பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியது. சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1992–93ற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 20.00 கோடியாகும். வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் ரூ. 20.00 கோடி மதிப்பில் 530.80 கி.மீ. நீளச் சாலைகளை மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்தத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் ஆறாம் திட்டக் காலத்தில் கிழக்குக் கடற்கரை சாலையில் ரூ. 300.00 இலட்சம் மதிப்பில் 17 பாலங்கள் கட்டுவதற்காக இந்திய அரசு ரூ. 150.00 இலட்சம் கடனுதவியுடன் அனுமதி அளித்துள்ளது. 17 பணிகளில் 16 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள ஒரு பணியும் தற்போது முடிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நுகர்ப்பொருள் விநியோக மையங்களுக்கு செல்லும் ஊரகச் சாலைகளை மேம்பாடு செய்தல் :

இத்திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் முக்கிய நுகர்ப்பொருள் விநியோக மையங்களையும், வேளாண்மை விளைபொருள் உற்பத்தி மையங்களையும் இணைத்து ஊரகச் சாலைகளையும் அவற்றின் தரத்தையும் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் பிரதான நோக்கம், விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு மிகுதியாக விளைப்பொருட்கள் உற்பத்தியாகும் கிராமங்களை நுகர்ப்பொருள் விநியோக மையங்களுடன் குறிப்பாக, இணைப்புச் சாலைகள் இல்லாததால் விளைப்பொருட்கள் சிரமமாக கொண்டு செல்ல தடையாக உள்ள இடங்களில், சிறப்புச் சாலைகளால் இணைத்து படிப்படியாக ஒழுங்கமைக்கப்பட்ட நுகர்பொருள் விநியோக மையங்களை பெருமளவில் பெருக்குவதாகும்.



இத்திட்டம் செங்கற்பட்டு-எம். ஜி. ஆர்., வட ஆற்காடு-அம்பேத்கார், தென் ஆற்காடு, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 19 விற்பனை மையங்களை உள்ளடக்கி ரூ. 45.28 கோடி மதிப்பில் 800 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்ய வழிகோலுகிறது. இத்திட்டம் 1992–92இல் திட்டப்பட்டு 4 ஆண்டுகளில் முடிக்கப்படும். 1991–92ற்கான ஒதுக்கீடு ரூ. 150.04 இலட்சமாகும். செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். வட ஆற்காடு அம்பேத்கார், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் விற்பனை மையங்களுக்குச் செல்ல ஊரகச் சாலகைள் அமைப்பதற்கு தேவையான நிலங்களை வாங்கத் தனியார் நில உடைமையாளர்களுடன் உடன்படிக்கை செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அரசு ஓர் குழுவை அமைததுள்ளது.

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் :

தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் தற்போது 27 சர்க்கரை ஆலைகள் அரசு, கூட்டுறவு மற்றும் தனியார் துறையில் நிர்வகிக்கப்படுகிறது. இததிட்டத்தின்கீழ் சர்க்கரை ஆலைப்பகுதிகளில் புதியதாக சாலைகள் அமைக்கப்படும், ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

கிழக்குக் கடற்கரை சாலை :

சென்னை முதல் கன்னியாகுமரி வரையுள்ள கிழக்குக் கடற்கரை சாலையின் நீளம் 737 கி.மீ. ஆகும். இச்சாலை மகாபலிபுரம், பாண்டிச்சேரி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருச்செந்தூர் வழியாகச் செல்கின்றது. பகுதியின் அபிவிருத்திக்கும், நடைமுறைத்திறன் அடிப்படையிலும் இச்சாலையின் இன்றியமையாத முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இச்சாலை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று இந்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. இந்திய அரசானது எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக்கப்பட்ட பிறகு இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று இறுதியாக தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் முதற்கட்டமாக திருவான்மியூர் முதல் கடலூர்வரையுள்ள 166 கி.மீ. நீள சாலைப்பகுதி ரூ. 75 கோடி மதிப்பில் இருவழித் தட அகலத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகள் தரததிற்கு மேம்படுத்தப்படும் இப்பணியை நான்கு ஆண்டுகளில் அதாவது 1995-96-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

1992-93-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

எட்டாவது திட்டத்திற்கான முன்னோட்டம் :

மாநில அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப் பட்டு இன்னமும் முடிக்கப்படாமல் எஞ்சியுள்ள சாலை மற்றும் பாலப் பணிகளை எடுத்துச் செய்து முடிப்பதே எட்டாம் திட்டத்தின் முதன்மைப் பணியாகும். இத்திட்டத்திற்காக வரைவு முடிவுறும் தருணத்தில் உள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலைப் பிரிவிற்காக ரூ. 400.00. கோடி மூலதனம் தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் :

. 1957-ஆம் ஆண்டு நிருவப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் டெல்லியிலுள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத் திற்கு இணையாக முழுமை பெற்றுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையும் தமிழ்நாட்டில் அமைந்துள்ள சாலைகள், பாலங்களுக் கான புலனாய்வு, கட்டுமானம், பராமரிப்பு தொடர்பாக செயல் முறை சார்புடைய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படு கிறது.

இந்த ஆராய்ச்சி நிலையம் கீழ்க்கண்ட பிரிவுகளில் தன்னிறைவு பெற்ற ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.

(1) மண் மற்றும் அடிதளப் பொறியியல்.

(2) கற்கலவை மற்றும் கட்டுமானம்.

(3) நிலக்கீல், சரளைக் கற்கள் மற்றும் தளப் பொறியியல்.

(4) போக்குவரவு மற்றும் போக்குவரத்து.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை உயர்த்தும் பொருட்டு, கட்டுமானத்தின் போது தரக்கட்டுப்பாட்டை பரா மரிப்பதற்காக பொருட்களை சோதனை செய்வதற்காக தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூரிலும் மண்டல ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

பல மண்டல ஆய்வகங்கள் நிருவ திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறையைச் சார்ந்த பொறியாளர்களுக்கு சாலைகள் பாலங்கள் கட்டுமானத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன புதிய முன்னேற்றங்களை அறிந்து கொள்ளப்பணியிடைப் பயிற்சி அளிக்க பயிற்சி நிலையம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

31—3—1991 முடிய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 53 ஆராய்ச்சி வெளியீடுகளையும், 102 தொழில் நுட்பக் கட்டுரை களையும் வெளியிட்டுள்ளது.



1991-92 ஆம் ஆண்டில், 23 மாநில ஆராய்ச்சி திட்டங்களும் 7 இந்திய அரசுத் திட்டங்களும் முன்னேற்ற நிலையில் உள்ளது. அவற்றில் 3 மாநிலத் திட்டங்களும் 1 இந்திய அரசுத் திட்டமும் முடிவடைந்துள்ளது. 1992-93-ல் முன்னேற்ற நிலையில் உள்ள திட்டங்களின் பட்டியல் இணைப்புப் அ' -வில் கொடுக்கப் பட்டுள்ளது.

ரூ. 70 இலட்சம் செலவில் 50 சதவிகிதம் மத்திய சாலை நிதியின் ஈடான மானிய உதவியுடன் கனரக சோதனைத் தளம் அமைக்கும் பணி தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்தால் தொடங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு 1991-92-ல் பகுதி-2 திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 17.49 இலட்சங்கள் ஆய்வகங்களுக்கு கூடுதல் உபகரணங்கள் வாங்குவதற்காக ஒதுக் கப்பட்டது.

1992-93 ஆம் ஆண்டிற்காக ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணி களுக்காக பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ. 25 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

1992-93 ஆம் ஆண்டில் 5 மாநில ஆராய்ச்சி திட்டங்களும் 1 இந்திய அரசுத் திட்டமும் எடுத்துக்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.

(1) களிமண் கலந்த தளத்தை சிமெண்ட்டும் நிலக்கீலும் சேர்த்து உறுதிப்படுத்துதல் குறித்த ஆய்வு.

(2) மாநிலத்திலுள்ள பாலங்களை பற்றிய தகவல்களை சேகரித்து வழங்கும் விவர மையம் அமைத்தல்.

(3) பாலங்களின் புனரமைப்பு பற்றிய ஆராய்தல்.

(4) சாலையின் அடித்தள அடுக்கிற்கு மூல பழுப்பு நிலக் கரித்தாரை பிணைப்பானாக பயன்படுத்துதல் குறித்த ஆராய்ச்சி.

(5) சாலைத் தளங்களின் செயலாக்கம் தொடர்புடைய வரன்முறை அளவீடுகள் குறித்த ஆராய்ச்சி.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டப் பணிகள் உலக வங்கி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி ... கடனுதவியுடன் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல் வேலி, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் செயலாக்கப்படுகின்றது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டக் கூறுகளில் போக்குவரத்து மற்றும்

போக்குவரத்து மேலாண்மை செயல் திட்டமும் (டிராம்ப்) ஒன்றாகும். இந்த கூறானது நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டப் பிரிவால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் 1988-89 ஆம ஆண்டு முதல் செயல்பட தொடங்கி 1995 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடிக்கப்பட உள்ளது.

டிராம்ப் கூறின் மொதத மதிப்பு ரூ. 100.30 கோடியாகும்.

டிராம்ப் திட்டத்தின் நோக்கங்கள் :

நகர்ப்புற சாலைகளின் திறனை மேம்பாடு செய்வதன் மூலம் சீரான போக்குவரத்து நெறிமுறைகள் செயலாக்கப்படுவதை மேம்படுத்துவதையும், போக்குவரத்து பாதுகாப்பினையும் பிரதான நோக்கங்களாக கொண்டு இத்திட்டத்தின் கீழ் பணிகள் தெரிவு செய்யப்படுகின்றன.

திட்டப்பணிகள் நேர்வு மற்றும் நோக்கம் :

போக்குவரத்து மற்றும் பொருளாதார மதிப்புரையுடன் சமூக நன்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு இத்திட்டத்தின் கீழ் பணிகள் தெரிவு செய்யப்படுகின்றன. ஓர் திட்டப் பணிக்கான பல்வேறு தேர்வுரிமைகள் குறித்து பொருளாதார மதிப்பிடு செய்து, அவற்றில் எது 12 விழுக்காடு உள்விகிதப் பலன் கொடுக்குமோ அது தெரிவு செய்யப்படுகிறது. எல்லா பணிகளுக்கும் உலக வங்கியின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

செயலாக்கப்படும் பணிகளின் தன்மை :

இத்திட்டத்தின் கீழ் வட்ட சாலைகள், புறவழிச்சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், இருப்புப் பாதைக் கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலங்கள் அல்லது சாலை கீழ்ப் பாலங்கள் கட்டுதல், ஏற்கனவே உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை மேம்பாடு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

பணிகள் ஒப்புதல் :

ரூ. 10,621 லட்சம் மதிப்பில் 26 பணிகளுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.



ஒவ்வொரு மாநகரத்திலும் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளின் விவரக் கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | பணிகள். | ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 9 | 5,203 |
| 2. | கோயம்பத்தூர் | 3 | 1,390 |
| 3. | மதுரை | 3 | 820 |
| 4. | திருச்சி | 2 | 960 |
| 5. | சேலம் | 1 | 230 |
| 6. | திருநெல்வேலி | 1 | 500 |
| 7. | தூத்துக்குடி | 2 | 540 |
| 8. | வேலூர் | 1 | 200 |
| 9. | ஈரோடு | 2 | 200 |
| 10. | திருப்பூர் | 1 | 510 |
| 11. | சென்னை மாநகர போக்குவரத்து காவல் பணியாளர்களுக்கு உபரணங்கள் விநியோகித்தல் | 1 | 68 |
| | மொத்தம் — | 26 | 10,621 |

பணிகளின் முன்னேற்றம் :

ரூ. 197.70 லட்சம் செலவில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 4,452.80 லட்சம் மதிப்பில் 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மீதமுள்ள பணிகள் செயல்பாட்டின் வெவ்வேறு நிலைகளில் உள்ளன. அப்பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1991-92-ற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 1,500.00 லட்சமாகும்.

1992-93-ற்கான செயல் திட்டம் :

ஒப்புதல் அளிக்கப்பட்டு எஞ்சியுள்ள எல்லா பணிகளும் 1992-93 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப் படும்.

1992-93 ஆம் ஆண்டின் 5 பணிகளை முடிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

1992-93 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 2,000.87 லட்சமாகும்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Son, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

**சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம்—1 மற்றும் 2 :**

இத்திட்டப் பணிகள் சென்னை மாநகரில் மட்டும் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் உலக வங்கி கடன் உதவியுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. செயல் திட்டத்திற்கான கால வரம்பு முடிவடைந்துவிட்டதால் இத்திட்டப் பணிகளின் கீழ் எஞ்சியுள்ள பணிகள் மாநில அரசு நிதியிலிருந்து செயலாக்கப்பட்டு வருகிறது.

**சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம்—1 :**

பணிகளின் நிலைமை :

சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 1-ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளில், உள் வட்ட சாலையில் நிலம் கையகப்படுத்த இயலாத நிலையில் உள்ள ஒரு சிறிய பகுதியையும், தண்டையார் பேட்டையில் வைத்தியநாதமுதலி தெருவில் சாலை மேம்பாலம் கட்டும் பணியையும் தவிர்த்து ஏனைய எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. சாலை போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

**1992—93-ற்கான செயல் திட்டம் :**

1992-93-ல் தண்டையார்பேட்டை வைத்தியநாத முதலி தெருவில் சாலை மேம்பாலம் கட்டும் பணி முடிக்கப்படும்.

சென்னை நகர்புற வளர்ச்சி திட்டம் 2 :

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த மாநகர வளர்ச்சி திட்டம் :

பெருநகரப் பகுதிக்குள் நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை மற்றும் சென்னை மாநகராட்சி வசமுள்ள சாலைகளில் தெரிவு செய்யப்பட்ட சாலைகளை மேம்படுத்துவதற்கு இத்திட்டம் வழி கோறுகிறது.

பணிகளின் நிலைமை :

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளில், வேளச்சேரி, புறவழிச் சாலையில் நிலம் கையகப்படுத்தப்படா மல் நிலுவையில் உள்ள 325 மீட்டர் சிறிய பகுதியையும், தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 7/6-ல் ஓர் சிறிய பாலமும் தவிர்த்து ஏனைய எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.



**தேசிய நெடுஞ்சாலை—45 உலக வங்கிநிதியுதவி திட்டம் :**

தாம்பரம் முதல் விழுப்புரம் வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை-45ல் கி.மீ. 27/8 முதல் 160/2 வரையிலான சாலைப் பகுதியைமேம்பாடு செய்யும் பணி உலக வங்கி நிதியுதவியின் கீழ் இத்திட்டத்தின் மூலம் இப்பிரிவில் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 7,229 லட்சமாகும். இத்திட்டம், செங்கல்பட்டில் புறவழிச்சாலை அமைப்பது உட்பட தேசிய நெடுஞ்சாலை-45ல் கி.மீ. 27/8 முதல் 67/0 வரை (தாம்பரம் முதல் புக்கத்துறை) யுள்ள சாலையை நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்தவும் கி.மீ. 67/0 முதல் 160/2 வரை புக்கத்துறை முதல் விழுப்புரம்) யுள்ள சாலையை உறுதிப்படுத்தவும் மேம்பாடு செய்யவும், செங்கல்பட்டு அருகே பாலாற்றின் குறுக்கே ஓர் பெரிய பாலம் கட்டவும், தாம்பரம் பரனூர் மற்றும் செங்கலபட்டு புறவழிச்சாலையில் இரயில்வே மேம்பாலங்கள் கட்டவும், மதுராந்தகத்தில் புறவழிச்சாலை அமைக்கவும் வழி கோலுகிறது.

1991-92 ஆம் ஆண்டிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.750 லட்சமாகும். 1992, சனவரியில் நடைபெற்ற பணிவாரி கருத்தாய்வுக் கூட்டத்தில் இந்திய அரசு தரைப் போக்குவரத்து அமைச்சகத்தின் இசைவுப்படி, 1992-93-ம் ஆண்டிற்கான ரூ. 1,352.37 லட்சம் ஒதுக்குமாறு பிரேரேபிக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு அருகே பாலாற்றின் குறுக்கே ஓர் பெரிய பாலமும், தாம்பரம், பரனூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில், இரயில்வே மேம்பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு தொகுதிகள் (கி.மீ. 67/0—104/0 மற்றும் கி.மீ. 104/0—160/2) அடங்கிய புக்கத்துறை முதல் விழுப்புரம் வரையுள்ள பகுதி வேலைகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

D
V211,31'N92
N92.21.3
164973
சென்னை-600 008